இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள்: 56

சுடர் 32 | கதிர் 197 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 28 ஞாயிற்றுக்கிழமை 11.06.2017

## தேர்தலை பின்தள்ள ஞானசார தேரரை பயன்படுத்தும் அரசு

சாடுகிறது மகிந்த அணி

கொழும்பு, ஜூன் 11
தேர்தல்களை ஒத்தி வைப்பதற்கு அரசு பொதுபல சேனா வின் பொதுச் செய லாளர் ஞானசார தேர ரைப் பயன்படுத்துவ தாகக் கூட்டு எதிர்க் கட்சி குற்றம் >> 53

## சொன்னதைச் செய்யாத மைத்திரி

*ஒவ்வொரு மாதமும் வருவேன் என்றவர் 3 மாதங்களின் பின்னரே வருகின்றார்*

யாழ்ப்பாணம், ஜூன் 11
ஒவ்வொரு மாதமும் யாழ்ப்பா ணத்துக்கு வருகை தந்து அபிவி ருத்தி தொடர்பில் கலந்துரையாடு வேன் என்று தெரிவித்திருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறி சேன. அவ்வாறு தெரி >> 53

# திடீரென யாழ். வரும் மைத்திரி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடன் முக்கிய சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11
திடீர்ப் பயணமாக யாழ்ப்பாணத்துக்கு நாளை திங் கட் கிழமை வருகை தரும் அரச தலைவர் மைத் திரிபால சிறிசேன, காணாமல் ஆக்கப்பட்டவர் களைத் தேடும் உறவினர்களைச் சந்தித்துப் பேசவுள் ளார். இந்தச் சந்திப்பு நாளை மதியம் 2 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளதா கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர் கள் கிளிநொச்சியில், ஏ9 தேசிய நெடுஞ்சாலையை மறித்து பெரும் கவனயீர்ப்புப் போராட்டத்தை மே மாதம் 30 ஆம் திகதி முன்னெடுத்திருந்தனர். இதன்போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, காணாமற்போனோ ரின் உறவினர்களை இரு வாரங்க >> 53

## 15 லட்சம் பேர் புகைப் பழக்கம் உடையவர்கள்

கொழும்பு, ஜூன் 11
நாட்டின் மொத்தச் சனத்தொகையில் 15 லட்சம் பேர் புகைத்தல் பழக்கம் உடையவர்கள் எனத் தேசியப் புகை யிலை மற்றும் மது அதிகார >> 05



## மதவாதச் செயல்கள் தடுக்கப்படவேண்டும்

*இலங்கையிடம் வலியுறுத்துகிறது ஐ.நா.*

கொழும்பு, ஜூன் 11
இலங்கை முன்னோக்கிச் செல்வ தற்கு ஐக்கியமே ஒரே வழி. மத ரீதியிலான தாக்குதல்களையும் அதனை மேற்கொள்பவர் >> 05

## மகிந்த அரசால் இராணுவத்துக்கு ரூ 750 கோடி நட்டம்

கொழும்பு, ஜூன் 11
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் எடுக் கப்பட்ட தீர்மானத்தால் இராணுவத் துக்கு 750 கோடி ரூபா நட்டம் ஏற் பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்ப டுகின்றது. >> 53

## நாடு திரும்பினார் தலைமை அமைச்சர்

கொழும்பு, ஜூன் 11
அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்ட தலைமை அமைச் சர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பிற்பகல் நாடு திரும்பினார். நேற்றுப் பிற்பகல் 3.55 மணியள வில் தலைமை அமைச்சர் கட்டு நாயக்க வானூர்தி நிலை >> 05



## சிமெந்து ஆலையில் இரும்பு வெட்டியெடுத்த மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 11
காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் இருந்து மூவரை நேற்றுப் பொலிஸார் கைது செய் துள்ளனர். ஆலையின் இயந்திரங்களை களவாக வெட்டி விற்க >> 53

## கற்பித்தல் திருப்தியளிக்காவிடில் நியமனம் மறுபரிசீலனை செய்யப்படும்

ஆசிரிய நியமனம் வழங்கும் நிகழ்வில் வடக்கு முதலமைச்சர் இடித்துரைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11
புதிதாக நியமனம் பெறுகின்ற கணித, விஞ்ஞான, தொழில்நுட்ப ஆசிரியர்கள் கற்பித்தல் நடவடிக் கைகளை உரிய முறையில் மேற்கொள்கின்றார்களா என்பதை அறியவும், மதிப்பீடு செய்யவும் கல்வித் திணைக்களத்தின் >> 53



## 70 பவுண் நகைகளும் ரூ.25 லட்சமும் கொள்ளை

பெண்ணைத் தாக்கி மயக்கிக் கைவரிசை

அச்சுவேலி, ஜூன் 11
அச்சுவேலி தெற்கு வைத்திய சாலை வீதியில் உள்ள வீட் டில் தனியே இருந்த பெண்ம ணியைத் தாக்கிக் காயப்ப டுத்தி மயக்கமடையச் செய் துவிட்டு 70 பவுணுக்கு மேற் பட்ட தங்க நகைகளும், 25 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பணம் மற்றும் வெளிநாட்டு நோட்டுகளும் கொள்ளைய டிக்கப்பட்டுள்ளன. >> 53

## விபத்தில் சிக்கியது அம்புலன்ஸ்: சாரதி சம்பவ இடத்திலேயே சாவு

கிளிநொச்சி மருத்துவமனையிலிருந்து நோயாளரை ஏற்றிச் சென்றபோது பரிதாபம்

கிளிநொச்சி, ஜூன் 11
கிளிநொச்சி வைத் தியசாலையில் இருந்து அங் கொடை வைத்திய சாலைக்கு நோயா ளரை ஏற்றிச் சென்ற நோயாளர் காவு வண்டி விபத் துக் குள்ளானது. சாரதி சம்பவ இடத்தி லேயே உயிரிழந்தார். இந்த விபத்து >> 53



## அமெரிக்காவுக்கு பயணமானார் சரா எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூன் 11
வொஷிங்டனில் நடைபெற வுள்ள சிறப்புச் செயலமர்வில் பங்குபற்றுவதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் அமெரிக்கா பயணமானார். ஜனநாயக பங்கேற்றல் மற் றும் பொருளாதார அபிவி ருத்தி ஊடாகப் பொதுமக்களின் பாதுகாப்பை வலு >> 53

## சுழற்சிமுறை ஆசனம் யாருக்கு? தமிழ் அரசு, புளொட் கடும் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 11
வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிய மன ஆசனத்தை இந்த ஆண்டு, சுழற்சி முறையில் யாருக்கு வழங்குவது என்பது தொடர்பில் ஒருமித்த நிலைப் பாடு இன்னமும் எட்டப்பட வில்லை என்று அறிய முடி கின்றது.
புளொட் அமைப்பு தமக்கே அந்த ஆசனம் வழங்கப்பட வேண்டும் என்று பகிரங்கமா கக் கோரிக்கை விடுத்துள்ளது. ஏற்கனவே எட்டப்பட்ட உடன் பாட்டுக்கு அமைவாக இலங் கைத் தமிழ் அரசுக் >> 53



## 56 கிலோ கஞ்சாவுடன் இருவர் தொண்டமானாற்றில் சிக்கினர்!

ரோந்தில் ஈடுபட்ட கடற்படையினரிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 11
தொண்டமானாறு கடற்பரப்பின் ஊடாக கடத்தப்பட்ட 56.5 கிலோ கிராம் கேரள கஞ்சா கடற்படையின ரால் நேற்றுக் கைப்பற் றப்பட்டது. கடத்தல்தொடர் பில் இரு சந்தேக நபர் கள் கைதுசெய் >> 53




SDB முதலீட்டு கணக்கு

- உயர் வட்டி வீதம்
- 10 வருடங்கள் வரையிலான முதலீட்டுத் திட்டங்கள்
- உங்களின் விருப்பத்திற்கேற்ப முதலீட்டு திட்டங்களை தெரிவு செய்யக் கூடிய வாய்ப்பு

மேலதிக தகவல்கள் அருகிலுள்ள SDB வங்கியில் அல்லது அழையுங்கள் 0115 411 411

011 5 411 411

Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ

SDB வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரால் சின்னாபின்னமான முல்லையில் மக்களைக் கவரும் தேவை ஏன் ஏற்பட்டது?

**வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.தியாகேந்திரன், எஸ்.பரமராஜா மற்றும் ஓய்வுபெற்ற மாவட்டச் செயலாளர் எஸ்.பத்மநாதன் ஆகியோர் அடங்கிய விசாரணைக் குழுவின் அறிக்கையின் நான்காம் பகுதி**

சுற்றுச் சூழல் என்பது அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் கொழும்பு அரசும், மாகாண சபைகளுக்கும் இடையேயான ஒருமைப்பாடு (concurrence) விடயம். அந்தச் செயற்பாட்டின் ஒரு பகுதியை மாகாண சபைகளுக்கு வழங்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் அல்லது அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றோ நிறைவேற்றப்பட வில்லை. அத்துடன், இந்த விடயம் மாகாண ஆளுகைக்குள் வர வேண்டுமென்ற அடிப்படையில் வடக்கு மாகாண சபை நியதிச் சட்டம் ஒன்றை இதுவரை இயற்றி அனுமதி பெறப்பட்டதாகவும் தெரியவில்லை. எனவே இந்த நிலையில் விவசாய அமைச்சர் தான் சுற்றுச் சூழல் அமைச்சராக வடக்கு மாகாணத்தில் செயற்பட்டு வருகிறார் எனத் தெரிவிப்பதையும் இவ் விசாரணைக் குழு சட்டபூர்வமற்றதென்று கருதுகின்றது.

இந்த நிலையில் மூங்கில் நடுகைத் திட்டத்தை நிராகரித்தமை சட்டபூர்வமற்றதெனவும் முதலீட்டாளரைத் தன்னை வந்து சந்திக்கும்படி கேட்டுக் கொண்டதை அவர் நடத்தை மீது சந்தேகத்தை ஏற்படுத்தவதாகவும் விசாரணைக் குழு கருதுகின்றது.

தனியார் காணியில் எந்தப் பயிரையும் செய்வதற்கு வடக்கு மாகாண விவசாய அமைச்சரின் அல்லது விவசாயத் திணைக்களத்தில் அனுமதி அல்லது ஆலோசனை பெற வேண்டிய தேவை இல்லை என்ற அமைச்சரின் இறுதி விளக்கம் மேற்படி சந்தேகத்தை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

### முதலீட்டாளர்களுக்கு முட்டுக்கட்டை போட அமைச்சரால் முடியாது

மல்லிகைச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் முதலீட்டாளர் விவசாய அமைச்சரை அணுகிய பொழுது சரியான நடைமுறையின்படி தன்னை அணுகாத காரணத்தால் அதனை அங்கீகரிக்கவில்லை என்று அமைச்சர் கூறுகின்றார். அத்துடன், ஆரம்ப விழாவுக்குத் தனக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதும் அமைச்சர் தான் அந்த நிகழ்வுக்கு செல்லவில்லை எனத் தெரிவித்துள்ளார். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வடக்கு மாகாண சபையின் அனுமதி பெற வேண்டிய தேவை இல்லாத பொழுதும் அமைச்சர் அனுமதிக்காத காரணத்தால் முதலீட்டாளர் வடக்கு மாகாண ஆளுநரின் அனுமதியைப் பெற்று திட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

அனுமதிபெறத்தேவையற்றவிடயங்களுக்கெல்லாம் அனுமதி பெறவேண்டுமென்று வலியுறுத்துவதும் தங்களது அமைச்சு, திணைக்களங்கள் தொடர்பான எல்லா விடயங்களும் விவசாய அமைச்சருக்கு தெரிய வேண்டுமென திணைக்கள மாவட்ட உதவிப் பணிப்பாளர்களுக்கு உத்தரவிட்டு அதனை நடைமுறைப்படுத்த நினைப்பதும் முதலீட்டாளர்களையும் விவசாய ஆர்வலர்களையும் விவசாயத் துறையில் முதலீடு செய்வதற்கு, போரினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளது வாழ்வாதாரத்தை உயர்த்த முனைபவர்களுக்கு ஒரு முட்டுக்கட்டையாகஉள்ளதெனவும்இதுஅமைச்சரின் அதிகார முறைகேடு எனவும் இந்த விசாரணைக் குழு அபிப்பிரயாயப்படுகிறது.

எள் விநியோகத் திட்டம் வவுனியா மாவட்டத்தின் அமெரிக்க நிறுவனம் ஒன்றின் உதவித் திட்டத்தின் கீழ் செயற்படுவதற்கு பிரதேச தெரிவு, பயனாளிகள் தெரிவு மற்றும் அறுவடைக்குப் பின்னரான சந்தைப்படுத்தல் நடைமுறைகள் பிரதேச செயலர், பிரதேச விவசாயப் போதனாசிரியர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ஆகியோருடைய மேற்பார்வையில் ஒழுங்குபடுத்தப்பட்ட நிலையில் விவசாய அமைச்சரின் ஒப்புதலை பெற வேண்டுமெனத் தெரிவித்த குற்றச்சாட்டை பிரதி விவசாயப் பணிப்பாளர் தனது சாட்சியத்தில் ஏற்றுக் கொண்டதுடன், மாவட்டத்தில் நடைபெறுவதை தனது கவனத்துக்கு கொண்டு வரவேண்டும் என்ற அமைச்சரின் பணிப்பரையின் அடிப்படையிலேயே தனது ஆலோசனையை அவ்வாறு தெரிவித்துள்ளதாக்வும் குறிப்பிட்டார்.

அமைச்சரும் அதனை ஏற்றுக் கொண்டதுடன், எழுத்தில் தந்தால் அனுமதிக்கிறேன் என தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளமை இந்தக் குற்றச்சாட்டில் சுமத்தப்பட்டதற்கான காரணத்தை விசாரணைக்குழு தெளிவாக விளங்கிக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

### வீண் நிதி விரயம்

4.2) கண்காட்சிகள், உழவர் விழா எனப் பல விழாக்களை பெருந்தொகைப் பணத்தைச் செலவழித்து நடத்தியதன் மூலம் மாகாண சபையின் பெரும் அளவிலான நிதியை வீண் விரயம் செய்தமை.

வடக்கு மாகாணம் கடந்த 30 வருட போரால் பாதிப்படைந்த மாகாணம். மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாய, கடற்றொழில் கட்டுமானங்கள் அழிவடைந்துள்ளன. போர் முடிவுக்குப் பின்னர் மாகாண விவசாய அமைச்சு விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக விவசாய கால்நடைத் திணைக்களத்தின் மூலம் வருடந் தோறும் சிறந்த விவசாயிகள், நவீன தேவைக்கேற்ப தொழில்நுட்பத்தை பிரயோகித்து விவசாயம் செய்வோர், வீட்டுத் தோட்டங்கள், பாடசாலை மட்டத் தோட்டங்கள் என்பவற்றை ஊக்குவிப்பதற்காக போட்டிகளை நடத்தி பரிசுகளை வழங்கி கௌரவித்து வந்ததாக வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளரது சாட்சியங்களிலிருந்து வெளியாகின்றது.

இந்த நிகழ்ச்சிகள் மாவட்ட மட்டத்தில் ஆடம்பரமின்றி நடைபெற்று வந்தன. ஆனால் 2016ஆம் ஆண்டிலிருந்து மாகாண ரீதியாக இந்த நிகழ்வு விவசாய அமைச்சால் அமைச்சரினால் ஒழுங்குபடுத்தப்பட்டுச் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் விவசாயத் திணைக்களத்தின் ஆலோசனைப்படியே இந்த விழா ஒழுங்கு செய்யப்பட்டதென்ற அமைச்சரின் விளக்கம் ஏற்றுக்கொள்ள முடியாத தொன்றாகும். ஏனெனில் குழுவின் முன் சாட்சியமளித்த மாகாண விவசாயப் பணிப்பாளர் எல்லாம் அமைச்சினால்தான் செய்யப்பட்டன என்று தனது சாட்சியத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதை இந்த விசாரணைக்குழு கவனத்தில் எடுத்துள்ளது.

இந்த விழாவுக்கு தென் இந்தியத் திரைப்படக் கவிஞர் வைரமுத்துவை அழைக்கும் எண்ணம் தனக்கிருக்கவில்லைஎனவும் இது தனது திணைக்கள கட்டளைகளில் இல்லை எனவும் இதனை ஒழுங்கமைத்தது அமைச்சு தான் எனவும் மாகாண விவசாயப் பணிப்பாளர் தனது சாட்சியத்தில் மேலும் குறிப்பிட்டார்.

மக்களைக் கவருவதற்காக வைரமுத்து அழைக்கப்பட்டார் எனவும் அவருக்கான செலவு ரூபா 28,000 மாத்திரமே எனவும் மாகாண விவசாய அமைச்சர் தனது விளக்கத்தில் தெரிவித்திருப்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டியுள்ளது. இறுதிப் போரில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்தக் களியாட்டம் மக்களைக் கவரும் தேவை ஏன் ஏற்பட்டது? என்ற கேள்விக்கு அமைச்சரது விளக்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

எவ்வாறெனினும் இந்த விழாவுக்குச் செலவு செய்யப்பட்ட மொதத நிதியான ரூபா 2.5 மில்லியனில் ரூபா 1.9 மில்லியன் விவசாயிகளுக்கான பரிசிற்காகவும் கேடயங்களுக்காகவும் செலவு செய்யப்பட்டன என்று அமைச்சரின் செயலாளரது சாட்சியையும் அவரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தையும் விசாரணைக்குழு ஏற்றுக் கொள்கின்றது.

எவ்வாறெனினும், பல வருடங்களாக விவசாயத் திணைக்களத்தால் மாவட்ட ரீதியில் சாதாரண நிகழ்ச்சியாக நடைபெற்ற விவசாயிகளின் கௌரவிப்பு நிகழ்வை பிரமாண்டமான நிகழ்ச்சியாக மாற்றி மக்களை வசீகரிக்கக் கூடிய தென்னிந்தியக் கலைஞரையும் அழைத்து விவசாய அமைச்சர் தலைமை தாங்கி இந்த நிகழ்வு அமைச்சரது பெருமையை வெளிக்கொண்டு வருவதற்குஒழுங்கு செய்யப்பட்ட விழாவா? அல்லது விவசாயிகளை கௌரவிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட விழாவா? என்ற சந்தேகம் முறைப்பாட்டாளருக்கு ஏற்பட்டிருப்பது தவிர்க்க முடியாத தொன்றாகும்.

எவ்வாறெனினும் இந்த நிகழ்வுக்குச் செலவு செய்யப்பட்ட பணத்தில் 76% பரிசுக்காக செலவிடப்பட்டமை முழுநிதியும் வீண் விரயம் செய்யப்பட்டுள்ளதென்ற குற்றச்சாட்டை இந்த விசாரணைக் குழு முன் எண்பிப்பதற்கு முறைப்பாட்டாளர்கள் தவறிவிட்டனர். எனினும், தேர்தல் கால வாக்குத் திரட்டல், மக்களைக் கவருதல், தன்னைப் பிரபல்யப்படுத்துதல் போன்ற மனவியல்பான எண்ணங்களைக் குறைத்து விவசாய அமைச்சர் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளில் அக்கறை காட்ட வேண்டும் என்று இந்தக் குழு விதந்துரைக்கிறது.

4.3) மாகாண சபை உறுப்பினர்களினதும், மாகாண சபை ஆலோசனைக் குழுக்களினதும் ஆலோசனைகளைப் பெறாமல் திட்டங்களை முன்னெடுத்தமை.

விவசாய அமைச்சருக்கு எதிராக மேற்படி குற்றச்சாட்டை எண்பிப்பதற்கு ஆவணச் சான்றுகளோ அல்லது முறையான வாய்மொழிச் சான்றுகளோ விசாரணைக் குழுவிடம் வழக்குத் தொடுநரால் முன்வைக்கப்படவில்லை என்பதுடன் இவை மாகாண சபை பேரவை (Council) தொடர்பான விடயமாக இருப்பதனால் இந்தக் குற்றச்சாட்டை விசாரணை செய்வது இந்தக் குழுவின் அதிகார வரம்புக்கு உட்பட்டதா? என்பதில் முழுத் திருப்திப்பாடு காணமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகையால் இந்தக் குற்றச்சாட்டிலிருந்து விவசாய அமைச்சரை விடுவிக்க விசாரணைக்குழு தீர்மானித்துள்ளது.

### பண மோசடிக் குற்றச்சாட்டு விசாரணை

4.4) Beta Power (Pvt)Ltd.&Joule Power (Pvt)Ltd. நிறுவனங்களிடமிருந்து 2015 ஆம் ஆண்டு முதல் வருடம் ஒன்றுக்கு ரூபா 20 மில்லியன் வீதம் 2016 வரை பெறப்பட்ட ரூபா 40 மில்லியன் பணத்தை மோசடி செய்தல்.

Beta Power (Pvt)Ltd.&Joule Power (Pvt)Ltd. நிறுவனங்கள் தனியார் நிறுவனங்களாகும். 16 காற்றாலைகள் அரச காணிகளில் அமைப்பதற்கு, முறையான குத்தகை அனுமதியைப் பெறுவதற்கு மாகாண முதலமைச்சரின் ஒருமைப்பாட்டை (Concurence) பெறுவதற்கு அந்த நிறுவனத்தினர் அவரை அணுகியுள்ளனர். அந்தக் கலந்துரையாடலில் விவசாய அமைச்சரும் கலந்துகொண்டு, அவர்களோடு ஒரு புரிந்துணர்வு உடன்பாட்டை, மாகாண சபைச் செயலாளரைக் கொண்டு கையொப்பமிடப் பண்ணியுள்ளனர்.

முதலாவது உடன்படிக்கை 19.03.2014 இலும் திருத்தப்பட்ட புதிய உடன்படிக்கை பின்னர் தலைமைச் செயலாளருடன் 07.11.2014 இலும் செய்யப்பட்டிருந்தன. இதற்கான பேச்சில் Corporative Social Responsibility நிதி மூலம் வருடம் தோறும் முதல் 10 வருடங்களுக்கும் வருடாந்தம் 20 மில்லியன் ரூபாவும், 10 வருடங்களுக்கு பின்னர் வருடம் ஒன்றுக்கு 23 மில்லியன் ரூபாவும் வடக்கு மாகாண சபைக்குப் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிப்பதற்காக உபயோகிக்கப்படுவதற்கும், மாகாண விவசாய அமைச்சுக்கு இந்த நிதியை வழங்குவதற்கும், உடன்படிக்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சர் ஆரம்பத்திலிருந்தே இந்தப் பேச்சுக்களில் ஈடுபட்டு வந்தமை, விவசாய அமைச்சுக்கு வாழ்வாதார உதவியாக இந்த நிதியை வழங்க ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டமை, பீட்டா மற்றும் ஜூலி நிறுவனத்தால் செய்யப்பட்ட பரிந்துரையின் அடிப்படையிலேயே என்பது விசாரணை யின் பொழுது வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது. அதில் அமைச்சரின் நேரடியான சட்டபூர்வ மற்ற பங்களிப்பை எண்பிப்பதற்கான சாட்சிகள் எதனையும் விசாரணையின் பொழுது முன்வைக்கப்பட வில்லை.

அத்துடன் 2015இல் பெறப்பட்ட 20 மில்லியன் ரூபாவும், 2016 இல் வருட 10 மில்லியன் ரூபாவுமாக 30 மில்லியன் ரூபா செலவில் விவசாய திணைக்களத்தின் மூலம் 252 விவசாயக் கிணறுகள் யாழ். மாவட்டத்திலும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவிலும் சீரமைக்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும், இந்தத் திட்டத்தை விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கமக்கார அமைப்புகள், பயனாளிகள் ஒன்றாகச் செயற்படுத்துவதாக விசாரணையின் பொழுது முன்வைக்கப்பட்டன.

### அமைச்சுக் கொடுத்தது வெறும் 60,000 ரூபா

ஆயினும் விசாரணைக்குழு கோண்டாவில், இணுவில், கைதடி ஆகிய பகுதிகளுக்குச் சென்று இந்தத் திட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட விவசாயக் கிணறுகளின் உரிமையாளர்களைச் சந்தித்து நடத்திய கள ஆய்வின்போது, குறித்த கிணற்று உரிமையாளர் ஒவ்வொருவரும் தமக்குக் கிணற்றை திருத்தியது தொடர்பில் ரூபா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் செலவு ஏற்பட்டதாகவும் 2016ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ரூபா 60 ஆயிரம் வரையில் பணமாகத் தமது விவசாயச் சம்மேளத் தலைவர் (அல்லது செயலாளர்) ஊடாகச் செலுத்தப்பட்டது என்றும் மிகுதிப் பணம் செலுத்தப்படவில்லை என்றும் கூறியிருந்தனர்.

### எவ்வளவு நிதி கிடைக்குமென விவசாயிகளுக்குத் தெரியாது

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த ஒரு விவசாயி மட்டும் தனக்கு ரூபா ஒரு இலட்சத்து 17 ஆயிரம் செலுத்தப்பட்டதாகக் கூறியிருந்தார். வேலைகளைத் தாமே தமது பணத்தில் செய்ததாகவும் எவ்வளவு தொகை தமது கிணற்றுக்கு ஒதுக்கப்பட்டது என்பது தமக்குத் தெரியாது என்றும் கேள்வி கோரல் இன்றியே இந்த வேலை செய்யப்பட்டதாகவும் விவசாயிகள் கூறியிருந்தனர்.

ஒவ்வொரு கிணற்றுக்கும் ரூபா 150,000 செலவு ஏற்பட்டதாகக் கிணற்று உரிமையாளர்கள் கூறியபோதும் அதற்கான பற்றுச்சீட்டுகள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. செய்யப்பட்ட திருத்த வேலைகளும் அத்தொகைக்கு ஏற்றதாகத் தென்படவில்லை. மேலும் இப்பணம் விவசாய சங்கங்களுக்குக் காசோலையாகக் கொடுக்கப்பட்டு அதன் தலைவர் அல்லது செயலாளர் அதனை மாற்றித் தமக்குப் பணமாகத் தந்தனர் என எமக்குக் கூறப்பட்டது.

### கேள்வி கோரலும் நடக்கவில்லை

வடக்கு மாகாண விவசாய அமைச்சுச் செயலாளர், விவசாயக் கிணறுகள் சீரமைப்புச் செய்யப்பட்ட விடயத்தில், விவசாயத் திணைக் களத்தால் உரிய நடைமுறை பின்பற்றப்பட்ட தெனக் கூறிய வேளையிலும் கள ஆய்வின்போது கேள்வி கோரல் இன்றித் தமது பணத்தில் தாமே இந்த வேலையைச் செய்ததாகவும் தமக்கு ஒதுக்கப்பட்ட பணம் எவ்வ ளவு என்பது தமக்குத் தெரியாது என்றும் விவ சாயிகளால் கூறப்பட்டமை இங்கு ஒரு நிதி மோசடி தொடர்பில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி மோசடிகள் குறித்த உண்மை நிலையை வெளிக்கொண்டுவர கணக்காய்வு அவசியம்

**கணக்காய்வை நடத்தி தவறிழைத்தோரை தண்டிக்கவேண்டும்**

எனவே இவ்விடயம் தொடர்பில் ஒவ்வொரு விவசாயிகள் சங்கத்துக்கும் கொடுக்கப்பட்ட காசோலையின் தொகை எவ்வளவு? ஒவ்வொரு விவசாயிகள் சங்கத்தாலும் கிணற்று உரிமையாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு? என்பதைத் திருத்தப்பட்ட 252 கிணற்று உரிமையாளர்களையும் சம்பந்தப்பட்ட விவசாய சங்கத் தலைவர்களையும் அமைச்சு உத்தியோகத்தர்களையும் அழைத்து விசாரித்து அறிய வேண்டிய தேவை எம்மால் உணரப்பட்ட போதிலும் இதற்கான கால அவகாசம் போதாமையால் அதனைச் செய்ய இந்த விசாரணைக் குழுவால் முடியவில்லை.

இதன் காரணமாக உண்மைநிலையை வெளிக் கொண்டுவர இந்த விடயம் தொடர்பில் உடன் ஒரு கணக்காய்வு நடத்தப்பட வேண்டும்எனவும்எவராவது தவறு இழைத்திருப்பது தெரியவரின் அவர்களுக்கெதிராகத் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் முதலமைச்சருக்கு இந்த விசாரணைக்குழு பரிந்துரைக்கின்றது.

**நிதி மோடி குறித்து விவசாய அமைச்சரிடம் விசாரணை நடத்தவேண்டும்**

இந்தப் பரிந்துரைக்கு அமைவாக அமைச்சரின் நிதி மோசடி குறித்து நேரடிச் சாட்சியம் இல்லாமையால் அமைச்சரை இந்தக் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கின்றோம்.

அதே நேரத்தில் விவசாயக் கிணறுகள் திருத்தப்பட்டமை தொடர்பில் செய்யப்பட்ட செலவுகள் குறித்து மேலதிக முழு விசாரணை நடத்துமாறு முதலமைச்சரை விசாரணைக் குழு கேட்டுக்கொள்கின்றது.

மேலும் மேற்படி இரு நிறுவனங்களிடமிருந்து வருடந்தோறும் ரூபா 20 மில்லியன் விவசாய அமைச்சுக்குப் பெறுவதும் அதன் செலவும் தற்பொழுது சட்டரீதியாக்கப்பட்டுள்ளதாயினும் 2014 ஆம் ஆண்டுக் கொடுப்பனவில் இருந்து இந்த இரண்டு நிறு வனங்களிடமிருந்து ரூபா 19.5 மில்லியன் பெறுமதியான 06 பவுசர் வாகனங்களைப் பெற்றதும் அந்த வாகனங்களுக்கு இயக்குவதற்கான நிதி, சாரதி உதவியாளர் வேதனத்தை நிர்வாக ஒழுங்கு விதிகளுக்கு முரணானதாக மாகாண நீர்ப் பாசனத் திணைக்கள நிதியைப் பயன்படுத்தி கொடுப்பனவு செய்வதும் அந்த வாகனங்களைத் தொடர்ந்தும் திருநெல்வேலி விவசாயப் பண்ணையில் அமைச்சு சார்பாக வைத்திருப்பதும் மாகாண சபை நிதியை வீண்விரயம் செய்வதாக விசாரணைக்குழு அபிப்பிராயப்படுகிறது. ஏனெனில் நீர் விநியோகம் கொழும்பு அரசின் கீழ் செயற்படும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினதாகும். அத்தோடு உள்ளூராட்சி மன்றங்களுமாகும். அது அவ்வாறே செயற்பட்டு வருகிறது.

**நிதி வீண் விரயம் செய்யப்பட்டுள்ளது**

அது அவ்வாறிருக்க நீர் விநியோகம் என்ற அமைச்சின் பெயரைத் தவிர நிதிக்குழுவாலோ அல்லது மாகாண சபை பாதீட்டிலோ நீர் விநியோகத்துக்கு எந்தவித நிதி ஒதுக்கமும் பெறாத விவசாய அமைச்சர் 19.5 மில்லியன் ரூபாவை வீண் விரயம் செய்து 6 பவுசர்களைக் கொள்வனவு செய்வித்து குறிப்பிட்ட பணியை செயற்படுத்த அதிகாரம் மற்றும் நிதி, மனிதவளம் அற்ற விவசாய அமைச்சில் கடந்த 2 வருடங்களாக தாமே வைத்திருப்பது எப்படி வீண்விரயம் அல்ல என்று தீர்மானிக்க முடியும்? ஆகையால் இந்த பவுசர் வாகனங்கள் உரிய தேவையான உள்ளூராட்சி அமைப்புகளுக்கு கையளிக்கப்படவேண்டும் என விசாரணைக் குழு கருதுகின்றது.

அதே நேரத்தில் இந்தப் பணத்தை அமைச்சர் அவர்கள் மோசடி செய்தார் என்பதை எண்பிப்பதற்கான சாட்சிகள், சான்றாவணங்கள் விசாரணைக் குழுவுக்கு முன் வைக்கப்படாத காரணத்தால் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை. எனவே இந்தக் குற்றச்சாட்டிலிருந்து அமைச்சரை விடுவிக்க விசாரணைக்குழு தீர்மானிக்கின்றது.

4.5) பாதீனிய ஒழிப்பு நடவடிக்கை என்ற பெயரில் மாகாண நிதியை மோசடிசெய்தமை.

பாதீனியம் 1987ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படையுடன் வந்த மிருகங்கள் மூலம் கொண்டுவரப்பட்ட செடியாகும். இந்திய அமைதிப்படை இலங்கையைவிட்டுச் சென்ற பின்னர் இச் செடியால் ஏற்படும் பாதிப்பு இனங்காணப்பட்டு மக்களுக்கு விழிப்பூட்டலை ஏற்படுத்தும் நோக்கத்தோடு பல இடங்களில் அறிவித்தல் பலகைகள் போடப்பட்டு இந்தச் செடியை ஒழிப்பதற்கு விவசாய திணைக்களத்தால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. உண்மையில் பாதீனியத்தின் தாக்கம் விவசாயிகள் மட்டத்தில் முழுமையாக உணரப்படாமையால் அவர்களால் அந்தச் செடிகளை அழிக்கும் நட வடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. ஆனால் இந்தச் செடியின் பரவல் தொடர்ந்து அதிகரித்து வந்தது. இந்த நிலையில் மாகாண விவசாயத் திணைக்களம் கடந்த சில வருடங்களாக பாதீனிய ஒழிப்பு நடவடிக்கையைநடைமுறைப்படுத்தவில்லை.

**பாதீனியம் ஒழிப்பு திட்டத்திலும் நிதி வீண் விரயம்**

2014ஆம் ஆண்டு பாதீனியம் ஒழிப்பு என்ற பெரிய அளவிலானதிட்டம், மாகாண விவசாய அமைச்சினால் முன்னெடுக்கப் பட்டது. ரூபா 50 இலட்சமளவில் செலவு செய்யப்பட்டுள்ளது. விசாரணைக் குழுவின் முன்னர் விளக்கமளித்த விவசாய அமைச்சரது விளக்கத்தின்படி செலவழிக்கப்பட்ட பணம் மனிதவலு என்பன நியாயபூர்வமான தாக இருக்கவில்லை என்பது ஒப்புக்கொள்ளப் பட்டது.

இந்த நிலையில் சிறப்பாக நடைமுறைப்படுத்த முடியாத, ஏற்கனவே விவசாயத் திணைக்களத்தால் கைவிடப்பட்ட திட்டத்தை எவ்வாறு நிறைவேற்றலாம் என விவசாய அமைச்சர் தீர்மானித்து முதலமைச்சர் தலைமையில் பெரிய விழாவாக ஆரம்பித்து அதற்காக ரூபா 5 மில்லியன் அளவில் செலவு செய்த இந்தத் திட்டத்தை இடை நடுவில் கைவிட்டது விவசாய அமைச்சும், முதலமைச்சரும், மாகாண சபை நிதியை செயல்படுத்த முடியாத திட்டங்களுக்கு செலவு செய்து வீண் விரயம் செய்கிறார்கள் என்ற எண்ணத்தை அல்லது அபிப்பிராயத்தை வடக்கு மாகாண மக்கள் மத்தியில் ஏற்படுத்துவது தவறென விசாரணைக் குழு கருதவில்லை.

ஆனால் இந்தப் பணம் மோசடி செய்யப்பட்டதாக சாட்சிகள் முன்வைக்கப்படாத நிலையில் இச் செலவை ஓர் திட்டமிடப்படாத செலவு எனவும், ஆனால் பொது மக்களுக்கு நன்மை கிடைக்காத காரணத்தால் வீண் விரயம் எனவும் விசாரணைக் குழு கருதுகின்றது. அதற்கு விவசாய அமைச்சரே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

4.6 அ). நொதேர்ன் பவர் (Northern Power) என்ற மின் உற்பத்தி நிலையம் சுன்னாகத்தில் தொழிற்பட்ட வேளையில் அதனது கழிவு எண்ணெய் குடிதண்ணீரில் கலந்த விடயத்துக்கு, ஆய்வுக் குழு ஒன்றை நியமித்து அந்தக் குழுவின் அறிக்கை மூலம் நிறுவனத்துக்குச் சாதாகமாக அறிக்கையை வெளிப்படுத்தி உண்மைகளை மறைத்தமை.

நொதேர்ன் பவர் என்ற நிறுவனம் இலங்கை மின்சார சபையோடு செய்யப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையிலேயே சுன்னாகத்தில் இயங்கி வந்தது. இலங்கை மின்சார சபை கொழும்பு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஓர் நிறுவனமாகும். இந்த நிறுவனத்தின் செயற்பாட்டால் ஒயில் கசிவை ஏற்படுத்தி நிலத்தடி நீரை மாசுபடுத்தியுள்ளது என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. நிலத்தடி நீர் நிர்வாகம் கொழும்பு அரசின் கீழ் நிர்வகிக்கப்படும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் நீர் வளச் சபையின் நிர்வாகத்துக்குட்பட்டது.

எனவே நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்திருந்தால், இலங்கை மின்சார சபை, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, இலங்கை நீர்வளச் சபை என்பன நொதேர்ன் பவர் நிறுவனத்தோடு, அவர்களுக்கு இலங்கை மின்சார சபையுடன் ஏற்படுத்தப்பட்டிருந்த எழுத்திலான உடன்படிக்கை அடிப்படையில் நடவடிக்கை எடுத்து அந்தப் பிரச்சினையை மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய பொறுப்பு அந்த நிறுவனங்களுக்கும், அந்த நிறுவனங்களை நீர்வகிக்கும் கொழும்பு அரசுக்கும் இருந்தது. அவர்கள் அந்தப் பொறுப்பை சரியான முறையில் செயற்படுத்தினர்.

அத்தோடு மக்கள் பாதிப்பை உணர்ந்து, கொழும்பு அமைச்சர், அமைச்சரவைக்கு பத்திரமூலம், அரசின் அனுமதியைப் பெற்று அதற்கான செயற்பாட்டுக் குழுவை அமைத்து பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்க உடன் நடவடிக்கையையும் நீண்ட கால நோக்கில் இந்தப் பாதிப்பை நீக்க நடவடிக்கையும் எடுத்துள்ளார். ஏனெனில் அந்த நடவடிக்கைகளுக்கு தேவையான மனிதவளம், இயந்திர சாதனங்கள் மற்றும் நிபுணத்துவ அறிவு என்பன அவர்களுக்கு இருந்ததனால் இந்த இடர் அறிவிக்கப்பட்ட உடனேயே இதற்கான குழுவொன்றை நியமித்து மேற்படி நிறுவனங்களின் உதவியுடன் உண்மையை, பாதிப்பை கண்டறியும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருந்தன.

அதே நேரத்தில் வடக்கு மாகாண சபை விவசாய அமைச்சு தமக்கு சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்படாததும், நிர்வாக ரீதியாக தொடர்பற்றதுமான இந்த விடயத்தில் தலையிட்டு இதற்கான நிபுணத்துவம், தொழில் நுட்ப வளம், தேவையான உபகரணங்கள் இல்லாத நிலையில் விவசாய அமைச்சர் தன்னிச்சையாகவே ஓர் குழுவை அமைத்தார். பின்னர் அதற்கு மாகாண சபை அனுமதியைப் பெற்று கொழும்பு அரசால் செய்யப்பட்ட ஆய்வுத் தரவுகளை மாத்திரம் கொண்டு அந்தக் குழு பகுப்பாய்வு செய்து நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலப்பு இல்லை என ஓர் அறிக்கையை தயாரித்து சிறு வட்டத்துக்குள் அதனை வெளியிட்டது.

**கழிவு ஒயில் விவகாரத்தில் மக்களுக்கு ஏற்பட்ட சந்தேகம் நியாயமானதே**

இதன்மூலம் நொதேர்ன் பவர் நிறுவனம் அதனைப் பாராட்டும் அளவுக்கு செயற்பட்டு, நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலக்கப் பட்டுள்ளது என்ற அடிப்படையில் கொழும்பு அரசால் வெளியிடப்பட்ட அறிக்கையோடு முரண்பாட்டை ஏற்படுத்தியமை, விவசாய அமைச்சால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் தகுதியிலும், அவர்களது அறிக்கையின் மீதும் அந்தக் குழுவை நியமித்த விவசாய அமைச்சர் மீதும் ஒட்டு மொத்தமாக வடக்கு மாகாண சபை மீதும், பொது மக்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியமை நியாயபூர்வமானது என இந்த விசாரணைக்குழு கருத்துகின்றது.


இதற்காகச் செலவிடப்பட்ட நிதி வீண் விரயம் என விசாரணைக் குழு கருதுகின்றது. இந்த நிபுணர் குழுவின் அறிக்கை பொதுமக்களுக்கு வெளியிடப்படாமை இந்தச் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துவதாக உள்ளது.

3.6. ஆ). நிலத்தடி நீர் விடயம் தொடர்பில் எந்தவித அதிகாரமும் அற்ற நிலையில் நிலத்தடி நீரில் எண்ணெய் கசிவு தொடர்பில் விசாரணைக்காக நிபுணர் குழுவை நியமித்து மாகாண சபையின் நிதியை வீண்விரயம் செய்தமை.

மேற்படி குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்ட நிலத்தடி நீர் தொடர்பான நிர்வாகம் மாகாண சபைக்கு இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் பாராதீனப்படுத்தப்பட்ட விடயமல்ல. அதனை அமைச்சின் செயலாளர், தனது சாட்சியத்தின் பொழுது ஏற்றுக்கொண்டுள்ளார். அவர்தான் மாகாண நிதிக்கான அமைச்சின் கணக்கு உத்தியோகத்தர் ஆவார். அதே நேரத்தில் விசாரணைக் குழுவின் முன்தோன்றி விளக்கமளித்த அமைச்சரும் இந்த விடயத்தை ஏற்றுக்கொண்டுள்ளார். நிலத்தடி நீரில் ஒயில் கலந்தமை ஓர் சூழல் பிரச்சினை என்றதால் சுற்றுச் சூழல் அமைச்சர் என்ற அடிப்படையில் தான் தலையிட்டு, மாகாண சபை அனுமதியளித்த காரணத்தால்தான் அந்த விடயத்தில் ஈடுபட்டதாகவும் விசாரணைக் குழுவுக்கு அமைச்சர் விளக்கமளித்தார். **(நாளை தொடரும்)**

## மரண அறிவித்தல்

## இராசையா பாலச்சந்திரன்



தாவடிதெற்கைப்பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பாலச்சந்திரன் கடந்த (09.06.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - துரையம்மா தம்பதியரின் அன்பு மகனும் அருந்தவநாயகியின்(பிறேமா) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - பவளம் தம்பதியரின் அன்பு மருமகனும் மகாதேவா (கனடா), காலஞ்சென்ற செல்வரட்ணம் (தெய்வேந்திரம்), காலஞ்சென்ற இராசேந்திரம், துரைராசா (கனடா), இந்திராணி, இந்திரராசு (நல்லூர், ப.நோ.கூ.ச), மல்லிகா (அழகுராணி கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் தீபிகா (கனடா), பார்த்தீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நிஷாந்தன் (கனடா) இன் அன்பு மாமனும் மிருத்விகன், சாயிமித்ரா ஆகியோரின் அன்புப் பாட்டனும் சந்திரமதி, சோமசேகரம்பிள்ளை, சிவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். திகதி பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சின்மய பாரதி பாடசாலை வீதி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
0778448803

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறையிலிருந்து வற்றாப்பளைக்கு இ.போ.ச.வினரும் பேருந்துப் பணி

வடமராட்சி, ஜூன் 11
பிரசித்தி பெற்ற வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோயில் பொங்கலையொட்டி பருத்தித்துறையில் இருந்து வற்றாப்பளை வரை சிறப்புப் பேருந்துகள் நாளை பணியில் ஈடுபடுத்தப்படும்.
நாளை திங்கட்கிழமை அதிகாலை 5மணி தொடக்கம் பயணிக்கும் பக்தர்களின் வருகைக்கேற்ப மாலை வரை பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயிலுக்கு சிறப்புப் போக்குவரத்து இடம்பெறும்.
பொங்கல் நிறைவடைந்ததும், மறுநாள் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை தொடக்கம் வற்றாப்பளையில் இருந்து பருத்தித்துறைக்குத் தொடர்ச்சியாக பேருந்துகள் பணியில் ஈடுபடுத்தப்படும் என்று என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலை முகாமையாளர் முகாமையாளர் கே. கந்தசாமி தெரிவித்தார். (4-173)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை சின்னம்மா



சரவணை கிழக்கு 9ஆம் வட்டாரம் வேலணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சின்னம்மா நேற்று (10.06.2017) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மருதனையார் இளைபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் நாகாத்தை தம்பதியரின் அன்பு மருகளும் காலஞ் சென்ற உதயகுமார் மற்றும் உசாமதி, உமாவதி (சுவிஸ்), உதய கீதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சியாமளா, சண்முகதாஸ் (கிரி), உதயசங்கர் (சுவிஸ்), குமுதினி ஆகியோரின் அன்பு மாமி யாரும் அரவிந்தன், ஜெயப்பிரியன், மதுப்பிரியன், அனித்தா, அனுஷ்கா(சுவிஸ்), பவிசான், அவிசான், அஸ்வினி ஆகியோ ரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான முத்துப் பிள்ளை, நாகரெத்தினம், சுப்பிரமணியம், பொன்னம்பலம், முருகேசு, செல்லம்மா, லோகேஸ்வரி, சொர்ணம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமார், பார்வதி, அன்னம்மா மற்றும் முத்தாச்சி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சரவணை புன்னம்புட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சரவணைகிழக்கு,**
**வேலணை.**

**தகவல்:**
**மகன் - உதயகீதன்**
**குடும்பத்தினர்.**

**தொடர்பு - 077 677 2111**

# தமிழ் அமுதம் 9

யாழ்ப்பாணம், ஜூன் 11
தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் தமிழ் அமுதம் 9 இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு தமிழ்கோட்டம் சாவகச்சேரி சங்கத்தானை கம்பன் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.
மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ஓய்வுநிலை அதிபர் மு.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் எழிலுரையை வண. கலாநிதி எஸ்.ஜெபநேசன் வாழிய செந்தமிழ் வாழ்க நற்தமிழர் எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார். (ற-10)



### திருமதி தனலட்சுமி மகாலிங்கம் (ரதி)

**(108, தாமரை வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)**

**மலர்வு 12.12.1956**    **உதிர்வு 08.06.2017**

தாமரை வீதி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி மகாலிங்கம் 08.06.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னம் தம்பதிகளின் அன்புப்புதல்வியும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-இராசம்மா தம்பதியரின் அன்புமருமகளும் இளையதம்பி மகாலிங்கத்தின் அன்பு மனைவியும், அகிலா, ரஜீந்திரன் (மயூரன் - பிரான்ஸ்), றஜிதா (லண்டன்), ரேகா, செந்தூரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயக்குமார் (பிரான்ஸ்), அசோக்குமார் (லண்டன்), சுதன் ஆகியோரின் அன்பு மாமியாரும்,கோபிகா, கோபிஷன், கிதுஷன் (லண்டன்), கிம்ஷன் (லண்டன்), கிபிஷன் (லண்டன்),யஷ்மிதா ஆகியோரின் பேர்த்தியும், தியாகராஜா (ஜேர்மனி), காலஞ்சென்ற நாகேஸ்வரி பரமராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற அரியராசா மற்றும் சிங்கராசா, காலஞ்சென்ற தெய்வேந்திரம் மற்றும் ராசேந்திரம், குணேஸ்வரன், விசயலட்சுமி, கனகலட்சுமி, விக்கினேஸ்வரி, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுரேஸ்குமார் (ஜேர்மனி), ராஜ்குமார் (பிரான்ஸ்), பிறேம்குமார் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், தீபன் (ஜேர்மனி), ஜெகன் (லண்டன்), சுதன் (ஜேர்மனி), தீபனா (ஜேர்மனி), ஆகியோரின் அன்புச் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:- இ.மகாலிங்கம் (கணவர்). குடும்பத்தினர்.**

**077 580 3825**

# புலிகளை நினைவு கூரும் உரிமையை மறுக்கமுடியாது

## மனிதஉரிமைகள் ஆணைக்குழு அரச தலைவருக்குக் கடிதம்

கொழும்பு, ஜூன்11
விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் என்பதற்காக அவர்களை நினைவு கூருவதற்கான உரிமையை அவர்களின் உறவினர்களுக்கு மறுக்கமுடியாது. அது நல்லிணக்க முயற்சிகளுக்கு குந்தகத்தை ஏற்படுத்தும். உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கான உரிமை சகல குடிமக்களுக்கும் பொதுவானது.
இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை அரசுக்குச் சுட்டிக் காட்டியுள்ளது.
ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி தீபிக்கா உடகம, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
இறுதிப்போரில் உயிரிழந்தவர்களுக்காக முள்ளிவாய்க்கால் நினைவுகூரலுக்குத் தடைவிதித்ததுடன், நினைவுத் தூபியில் விடுதலைப் புலிகளின் பெயர்களும் பொறிக்கப்படுமா என்பது தொடர்பில் இலங்கை அரச படைகள் தீவிரமாக ஆராய்ந்துவரும் நிலையில், நினைவுகூரல் மற்றும் நல்லிணக்கம் எனத் தலைப்பிட்டு கடந்த புதன்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்படி கடிதத்தை அரச தலைவருக்கு அனுப்பியுள்ளது.
முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியில்பெயர்கள் பொறிக்கப்படும் செயற்பாடு தொடர்பில் அருட்தந்தை எழில் இராஜேந்திரன் பல தடவைகள் வவுனியா மற்றும் முல்லைத்தீவுப் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.
பொலிஸாரால் உயிரிழந்தவர்களின் பெயர்ப்பட்டியலும் பெறப்பட்டது. அது மாத்திரமன்றி உயிரிழந்தவர்களின் முகவரியும் அருட்தந்தையிடம் கோரப்பட்டது. அருட்தந்தை எழில் இராஜேந்திரனின் வீட்டுக்கு பொலிஸார் இரவுவேளைகளிலும் சென்று விசாரணை என்றபேரில் துருவித்துருவி ஆராய்ந்தனர். அவரது வயோதிபப் பெற்றோரும் விசாரிக்கப்பட்டனர்.
உயிரிழந்தவர்களை நினைவுகூரும் செயற்பாட்டில் பொலிஸாரின் அத்துமீறிய செயற்பாடுகள் மற்றும் மனித உரிமைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தல் மற்றும் முட்டுக்கட்டைகள் தொடர்பில் அருட்தந்தை கடந்த மே மாதம் நடுப் பகுதியில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.
அந்த முறைப்பாட்டில் அவர் பொலிஸாரின் தலையீடுகளை முறைப்படி கோடிட்டும் காட்டியிருந்தார்.
முறைப்பாட்டைத் தீவிரமாகப் பரிசீலனை செய்த மனித உரிமைகள் ஆணைக்குழு அது தொடர்பில் கடந்த புதன்கிழமை அரச தலைவருக்கு இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளது.
அந்தக்கடிதத்தின்முழுவிவரம் வருமாறு:
ஆயுதப்போராட்டத்தின் இறுதிக்கட்டத்தின்போது உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்காக முல்லைத்தீவு இயேசு சங்கத்தின் அருட்தந்தை எழில் இராஜேந்திரனால் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவுகூரல் செயற் பாடு சம்பந்தமாக விசாரிப்பதற்காகப் பல சந்தர்ப்பங்களில் பொலிஸார் அவரை அழைத்ததாக அவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளார். முள்ளிவாய்க்காலில் அமைக்கப்படும் நிரந்தர நினைவுத் தூபியில் உயிரிழந்தோரின் பெயர்களைக் கல்வெட்டில் பதித்து நினைவுகூரல் செயற்பாட்டை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.
பொலிஸார் அந்த நினைவுகூரலைத் தடை செய்ய நீதிமன்ற தடையுத்தரவொன்றையும் பெற்றுக்கொண்டனர். இந்த தடையுத்தரவின் பின்னர் கல்வெட்டில் பதிப்பதற்கு பிரேரிக்கப்பட்டுள்ள பெயர்களிடையே புலி உறுப்பினர்களின் பெயர்கள் இல்லையென்பதனை உறுதி செய்துகொள்வதற்காக அனைத்துப் பெயர்களையும் சமர்ப்பிக்குமாறு பொலிஸார் அருட்தந்தையிடம் கோரியுள்ளனர்.
இந்த நினைவுகூரல் நிகழ்வு சம்பந்தமாக பல பொலிஸ் நிலையங்களிலும், வீட்டிலும் அவர் திரும்பத் திரும்ப விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.
முப்பது வருடகால உள்நாட்டுப்போருக்குப்பின்னர் இலங்கையானது இனங்களுக்கிடையிலான உறவுகளைக் கட்டியெழுப்பி நல்லிணக்கத்தை அடைந்துகொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இவ்வாறான வேளையில் போரில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூரு வதற்கான வாய்ப்பு சகல குடிமக்களுக்கும் இருத்தல் முக்கியமாகும்.
நினைவுகூருதல் என்பது நல்லிணக்கச் செயற்பாட்டின் போது மிகமுக்கியமானதும், ஒருங்கிணைந்ததுமான செயற்பாடாகும். ஆயுதப் போராட்டத்தின்போது உயிர் நீத்த இராணுவத்தினரை நினைவுகூருவதற்காகப் பல நினைவுத்தூபிகள் இந்த நாட்டில் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறே குடும்ப அங்கத்தவர்கள் தமது உறவுகளை நினைவுகூருவதற்காக நினைவுத்தூபிகளை அமைத்துக் கொள்ளும் உரிமை சகல குடிமக்களுக்கும் இருத்தல் வேண்டும். தம்மை விட்டுப்பிரிந்த உறவுகளை நினைவுகூருவதற்கான உரிமையை ஒரு குடும்பத்துக்கு மறுப்பதற்கு இறந்த நபர் புலி உறுப்பினராக இருந்தார் என்பதைக் காரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. உயிரிழந்தவரின் தராதரம் மற்றும் அரசியல் கருத்துகளுக்கு அப்பாற்பட்டு தமது உறவுகளின் பிரிவை நினைவுகூருவதற்கான உரிமை அனைத்துக் குடும்பங்களுக்கும் உண்டு.
அவ்வாறான செயற்பாட்டுக்கு வாய்ப்பை வழங்குவதன் ஊடாக இலங்கையின் குடிமக்கள் என்ற வகையில் தமது உரிமைகளை அனுபவிப்பதற்கு முடியும் என்ற நம்பிக்கையை குறிப்பிட்ட குடும்பங்களிடையே கட்டியெழுப்ப முடியும். அது நல்லிணக்கத்தை நோக்கிய பயணத்தின் ஒரு அங்கமாகவும் இருக்கும். அந்த வாய்ப்பை மறுப்பதனால் இனங்களுக்கிடையிலான பிரிவு மேலும் விருத்தியடைந்து நல்லிணக்கத்திற்கான முயற்சியில் பின்னடைவு ஏற்படும்.
எனவே, அரசதலைவரிடம் முக்கியமாக தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அமைச்சர் என்ற முறையில், குடும்பங்களின் நினைவுகூருவதற்கான உரிமை மற்றும் நினைவுகூரலில் பங்குபற்றுவோரின் பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டும் என ஆணைக்குழு வேண்டிநிற்கின்றது என்றுள்ளது. (த-ய)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



### அமரர் கந்தப்பிள்ளை தர்மகுலசிங்கம்

**மலர்வு 07.09.1948**    **இறப்பு 14.05.2017**

கடந்த 14.05.2017 ஆம் திகதி இறைபதம் எய்திய எங்கள் குடும்பத்தலைவரின் துயரச் செய்தி கேட்டு வந்து சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (11.06.2017) ஞாயிற்றுக் கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். 13.06.2017 செவ்வாய்க் கிழமை நவாலியிலுள்ள அன்னாரது இல்லத்தில் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளும் மதியபோசனமும் இடம் பெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விவசாயிகளுக்கு ஆதரவைத் தெரிவித்து மத்திய பிரதேச முதல்வர் உணவொறுப்பு

புதுடெல்லி, ஜூன் 11

இந்தியாவின் மத்திய பிரதேச விவசாயிகள் தாக்கப்பட்மையைக் கண்டித்து, அந்த மாநில முதல்வர் சிவராஜ் சிங் நேற்றுமுதல் காலவரையற்ற உணவு ஒறுப்பில் ஈடுபட்டு வருகிறார்.

விவசாயப் பொருள்களுக்கு உரிய விலை நிர்ணயம், கடன் தள்ளுபடி உள்ளிட்ட கோரிக்கைளை வலியுறுத்திக் கடந்த 2 ஆம் திகதி முதல் மத்தியப் பிரதேசத்தில் விவசாயிகள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதனிடையே, கடந்த 6 ஆம் திகதி மத்தியப் பிரதேசத்தில் உள்ள மான்ட்சர் மாவட்டத்தில், விவசாயிகள் பேரணி சென்றனர். அப்போது, ஆளும் பி.ஜே.பி அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பியவாறு, பேரணியாக வந்த விவசாயிகளைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். தடுப்பை மீறிச் சென்றவர்களைக் காட்டுமிராண்டித்தனமாக பொலிஸார் சுட்டு வீழ்த்தினர். இந்தத் தாக்குதலில் இதுவரை 6 விவசாயிகள் உயிரிழந்தனர்.

இதையடுத்து, அங்கு விவசாயிகள் போராட்டம் நாளுக்கு நாள் வலுவடைந்து வருகிறது. அங்கு அமைதி நிலவவும், விவசாயிகள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் வலியுறுத்தி, நேற்றுமுதல் மத்திய பிரதேச மாநில முதல்வர் சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார். (ம)

## மாதாந்த திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாண பொது நூலக வாசகர் வட்டத்தின் மாதாந்தத் திரைப்படக் காட்சி 2, பியாசா தாகம் 146 இன் காட்சிகள் இன்று யாழ்ப்பாணம் பொது நூலக சிறிய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. அனுமதி இலவசம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ற-12)

## கொக்குவிலில் இன்று பரிசளிப்பும் பட்டிமன்றமும்

யாழ்ப்பாணம், ஜூன் 11

கொக்குவில் கிருபாகர சுப்பிரமணிய ஆலயத்தில் பரிசளிப்பு விழாவும் சிறப்பு பட்டிமன்றமும் இன்று இடம்பெறும்.

இந்த நிகழ்வு க்கு முதன்மை விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் சொ.லொகேஸ்வரன் கலந்துகொள்வார்.

தற்கால எமது சமூகத்தை மேம்படுத்துவதில் பெரிதும் முன்னிற்பது ஆன்மீகமா? அறிவியலா? என்ற தலைப்பில் இடம்பெறும் பட்டி மன்றத்தின் நடுவராக தமிழருவி த.சிவகுமாரன் பங்கேற்பார். (4,8)

### முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

*நாடு...*

யத்தை வந்தடைந்தார்.

இந்தப் பயணத்தின்போது ரணில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் மற்றும் பொதுநலவாய நாடுகளின் பொதுச் செயலாளர் ஆகியோரைச் சந்தித்தார். (த)

*மதவாதச்...*

களையும் தடுத்து நிறுத்தவேண்டும்.

இவ்வாறு இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி உனா மக்குலே தெரிவித்துள்ளார்.

மழை வெள்ளத்தின்போது இலங்கையின் அனைத்துச் சமூகத்தினரும் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஐக்கியப்பட்டனர். அந்த ஐக்கியமே இலங்கை முன்னோக்கி நகர்வதற்கு ஒரேயொரு வழி. மத ரீதியிலான தாக்குதல்களையும் அதனை மேற்கொள்பவர்களையும் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த-5)

*15 லட்சம்...*

சபையின் தலைவர் மருத்துவர் பாலித அபேக்கோன் தெரிவித்துள்ளார்.

புகைத்தல் பழக்கமுள்ளவர்கள் நாட்டின் மொத்தச் சனத்தொகையில் 17 வீதமானவர்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு புகைபிடிப்பவர்களில் ஒருவர் ஒரு நாளைக்கு ஐந்து சிகரெட்டுக்களைப் பயன்படுத்துவதாகவும் அவர் கூறினார்.

புகைபிடிப்பவர்களின் அருகிலுள்ளவர்கள், புகையை சுவாசிப்பவருக்கும் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாக சிறப்பு மருத்துவ நிபுணர் அஜித் அழகியவன்ன தெரிவித்தார். (த)

## தலைக்கவச தடையை நீக்க முடிவு

முகத்தை முழுமையாக மூடும் தலைக்கவசம் பயன்படுத்துவதை தடைசெய்ய முன்னெடுத்த தீர்மானத்தை இடைநிறுத்த அரசு முடிவெடுத்துள்ளது.

மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் சங்கம் உள்ளிட்ட சங்கங்கள் பல, போக்குவரத்து அமைச்சில் முன்னெடுத்த கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## கோலப் போட்டிக்கு விண்ணப்பங்கோரல்

வலிகாமம் கல்வி வலயத்தால் பாடசாலை மாணவர்களிடையே வருடாந்தம் நடத்தப்படும் கோலப்போட்டி இந்த வருடமும் நடத்தப்படவுள்ளது. அதற்கான விண்ண ப்பங்கள் பாடசாலை அதிபர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.


தரம் 6,7,8 ஆம் வகுப்பு மாணவர்களிடையே 16 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை மட்டப் போட்டியை நடத்தி முடித்து விண்ணப்பங்களை வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. கோட்ட மட்டக் கோலப்போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதியும், வலய மட்டக் கோலப் போட்டி 30 ஆம் திகதி யும் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ - 28)

**கல்லீரல் பாதிப்பிலிருந்து மீட்சி**

கல்லீரல் கொழுப்பு, ஹெபடைடீஸ், மஞ்சள் காமாலை, கல்லீரல் இளைநார் வளர்ச்சியடைதல், கல்லீரல் புற்றுநோய் போன்ற கல்லீரல் பாதிப்புகள், மதுபானப்பாவனையினால் அல்லது வேறுகாரணிகளினால் உருவாகும் வைரஸ் தொற்று அல்லது வீக்கத்தினால் ஏற்படும்.

அறிகுறிகள்: கல்லீரலில் ஏற்படும் வலி, களைப்பு, பசியின்மை, குமட்டல், கண்கள் மஞ்சள் நிறமாதல், நிறை குறைதல், நீர்க்கோவை, அரிப்பு

எமது நிரூபிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்துகளை உட்கொள்வதன் மூலம் பாதிக்கப்பட்ட கல்லீரல் கலங்கள் மீளமைக்கப்படும்.




Hotline:
0777555600
0777708310
0777708330

FAIR PHARMA (PVT) LTD

செலிங்கோ ஹவுஸ்,10வது மாடி கிழக்கு,இல:69,ஜனாதிபதி மாவத்தை,கொழும்பு - 01.

Tel:0114 388200, 4 388 100, 4 388 101, 4 388 102

Web: www.ayurveda.lk E-mail: fairpharmasrilanka@yahoo.com

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001: 2008 QMS CERTIFIED COMPANY

**IDM NATIONS CAMPUS இனால் வடக்கில் 100% இலவசப் பாடநெறிகள்**

IDM INTERNATIONAL
DIPLOMA IN
- COMPUTING
- HOTEL MANAGEMENT
- QUANTITY SURVEYING
- CCTV AND MOBILE PHONE REPAIRING
- GRAPHIC DESIGNING

பாடநெறிகளின் முடிவில் தெரிந்த பாடப்பகுதியில் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படும்.



TVEC மற்றும் ISO தரச்சான்றிதழ்கள் பெற்ற IDM NATIONS CAMPUS நிறுவனத்தினால் வழங்கப்படும் சான்றிதழ் EdHat International - UK நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டு சர்வதேச தரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

குறிப்பு:
நேர்முகப் பரீட்சைக்கு வரும் பொழுது வதிவிடச் சான்றிதழ் மற்றும் கல்வி தராதரச் சான்றிதழ்களை தங்களுடன் எடுத்துவரவும்.

ISO 9001 : 2015 CERTIFIED ORGANISATION
TVEC REGISTERED INSTITUTE TVEC No. - P01/0727

HOTLINE
இலவசப் பதிவுகளுக்கு
0771 118 446

IDM® Nations Campus Since 1981

வகுப்புக்கள் நடாத்தப்படும் இடங்கள்.

VAVUNIYA BRANCH
No- 19, Vairavar Kovil Road,
Vairavapuliyamkulam, Vavuniya
E-mail : vavuniya@idmedu.lk
Tel : 024-222 2313 / 0771118446

JAFFNA BRANCH
No - 216,
Nawalar Road, Jaffna.
E-mail : jaffna@idmedu.lk
021 222 9901 / 0774 419 901

MANNAR BRANCH
No - 70, Main Street,
Pettah, Mannar.
E-mail : mannar@idmedu.lk
024 493 0087

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

யாழ். நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து பணிபுரிவதற்கு பணிப் பெண் தேவை.

தொடர்பு - 076 636 7091

## விற்பனைக்குண்டு

தரமான சணல் விதை விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 837 5832

## கடை வாடகைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் கடை வாடகைக்குண்டு.

தொடர்பு - 077 7111 214

## யாழ்.உணவு/ பாரம்பரிய உற்பத்தி பொருள்கள் வழங்குநர்கள் தேவை

கொழும்பிலுள்ள நிறுவனத்துக்கு கொழும்பு வாழ் தமிழர் விரும்பும் யாழ் உணவு/ பாரம்பரிய உற்பத்திப் பொருள்கள் மற்றும் பனை உற்பத்திகள் உற்பத்தி செய்து மொத்தமாகவும் சில்லறையாகவும் வழங்குபவர்கள் தேவை.

077 363 8511

## ஓட்டுமடத்தில் காணி விற்பனைக்குண்டு

ஓட்டுமடம்.மானிப்பாய் பிரதான வீதிக்கு அண்மையில் யாழ்நகருக்கு மிகவும் அண்மையில் உள்ள 2 - 3/4 பரப்பு காணி (சுற்றுமதில்,கிணற்றுடன்) உடன் விற்பனைக்கு உண்டு

CALL : 0776 071 781

max adz

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம்.நல்லூர் கோயிலிற்கு 3 நிமிடம் வாகன தூரத்தில் 90 பேர்ச்சஸில் அமைந்துள்ள இரு வீடுகளும் கராச்சும் கொண்ட காணியொன்று உடனடியாக விற்பனைக்கு உண்டு. வியாபாரஸ்தலமாகவும் பாவனைப்படுத்தலாம்.

தொடர்பு-077 672 4477, Address: 235/2. பருத்தித்துறை வீதி.ஆனைப்பந்தி . யாழ்ப்பாணம்

## தேவை

கட்டட நிர்மாணப்பணிகளை மேற்கொண்டு வருகின்ற எமது நிறுவனத்திற்கு தினக்கூலி (நாள் சம்பளம்) அடிப்படையில் வேலை செய்யக்கூடிய மேசன்கள், லேபர்கள் அத்துடன் மாதச்சம்பள அடிப்படையில் வேலை செய்யக்கூடிய லேபர்கள் தேவை. 077 3614638, 076 316 5730

## சேவை

கொழும்பு நகரில் Property வாங்க வேண்டுமா? அல்லது விற்க வேண்டுமா? 10 வருடத்துக்கு மேல் அனுபவமுள்ள S.இந்திரகுமார்

077 737 3083

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள்
மலிவு விற்பனை
தொடர்பு: 076 590 1625

(J/8726)(10)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்.திருநெல்வேலி Farm School இற்கு முன்பாக பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. சிறந்த நிலையத்தில் அமைந்துள்ள இந்தக் காணி தோட்டம் செய்வதற்கோ, வீடு, வியாபார நிலையங்கள், கல்யாண மண்டபம், Doctor's Clinic போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மிகவும் பொருத்தமான காணி.

Email:- jennyjeba@hotmail.com
Viber / Whatsapp - 416 668 3541

## தேவை

கட்டடத்துறைசார் எமது நிறுவனத்திற்கு கட்டடதுறைசார் பொருள்களை நன்கு தெரிந்த, ஓரளவு கணினியறிவு உடைய களஞ்சியக்காப்பாளர் (SK) தேவை.

தொடர்பு - 077 361 4638,
076 316 5730

## வேலைவாய்ப்பு

மின்சார உபகரணங்களை இறக்குமதி செய்து நாடுபூராகவும் விற்பனை செய்யும் பிரபல நிறுவனமொன்றின் வவுனியா மற்றும் மன்னார் பிரதேசத்துக்கு விற்பனையினை மேம்படுத்துவதற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. க.பொ.த. சாதாரண தரத்துடன் விற்பனை அனுபவம் உள்ளவராகவும் 20 தொடக்கம் 45 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையினை acc lighting@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது

## அலுவலக வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம்.கொக்குவிலில் அமைந்துள்ள கணக்காய்வு நிறுவனத்தில் (Audit Firm) இணைந்து கணக்குத்துறையில் முன்னேற ஆர்வமுள்ள கணக்காய்வு பயிலுநர்கள் தேவை. (Audit Trainees). CA, CIMA,AAT மற்றும் HNDA படிக்கும் மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

Email:- viravindran@gmail.com

## நாகபூஷணி திருமண சேவை

எம்மிடம் ஏராளமான மணமக்கள் உள்ளனர். மிகப் பொருத்தமாக உடன் நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் தரப்படும். ஏழு நாள் களும் திறந்திருக்கும்.

383/14B கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(நல்லூர்க் கோயில் வடக்குப் பக்கம்)
077 138 7596, 021 222 9306

## நெஞ்சை விட்டகலாத 13ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
08
04
1972



விண்ணில்
11
06
2004

### அமரர் அம்புரோஸ் அலெக்ஸ்புறுஸ்ரன் (ஜெனி)

மென்மையாய் பேசுபவரே - அப்பா
பணிவினை கற்பித்தவரே - அப்பா
அன்பு ஒன்றையே நிலையாக தந்து
எப்போதும் எம் நெஞ்சில் வாழ்கின்றீர்கள் - அப்பா

உதவி புரிவதற்கு நீ என்றும் சிந்தித்தவனில்லை
உனக்கு உபத்திரவம் செய்தவரை நீ என்றும் வெறுத்ததுமில்லை

ஆண்டவன் உம்மை அதிகம் நேசித்து விட்டானோ?
அதனால் தான் உன்னை விரைவாய் அழைத்துக்கொண்டானோ?
எங்களை இவ்வுலகிற்கு அளித்தவரே
இன்று உம் பிரிவால் தவிக்கின்றோம் நாளும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எந்நாளும் வேண்டுகின்றோம் இறைவனிடம்.

வெற்றிலைக்கேணி,
முள்ளியான்.

நீங்கா நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்.

(C/2918)(10)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2888 திகதி: 10.06.2017

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 05 28 50 61 L
போனஸ் இல: 72
திங்கட்கிழமை ஜக்பொட்: ரூ.65, 557, 682/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919

நீல நிற டிக்கட்டுக்கள் 2017.06.12 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

உத்தியோகபூர்வ முடிவுகள்

Development Fortune
அபிவிருத்தி அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு வாரம் 47
சீட்டிழுப்பு திகதி 10.06.2017 சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 05 10 25 61
சுப்பர் இலக்கம்: 05
அதிர்ஷ்ட மாதம்: ஜூன்

அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் 12, 348, 290/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் 2, 632, 715/=
அடுத்த ஜக்பொட் 1,079, 272/=

15.06.2017 திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

IELTS கற்பதுடன் எங்களது
கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்
கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற

Now prepare for your Academic / General
IELTS
Next exam date in Jaffna. 24 June 2017
29 July 2017
idp www.idp.com/srilanka
BRITISH COLLEGE of Education
More information 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124

## மரண அறிவித்தல்

### சண்முகராசா மனோகரன்



நெட்டிலிப்பாய் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராசா மனோகரன் நேற்று (10.06.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

நெட்டிலிப்பாய், கோண்டாவில். தகவல்: குடும்பத்தினர்.

## Vacancies

காப்புறுதி துறையில் IBSL பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு ARPICO INSURANCE இல் அடிப்படைச் சம்பளத்துடன் (EPF, ETF) கூடிய உடனடி வேலைவாய்ப்பை 10 பேருக்கு வழங்கவுள்ளது.

அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.

காலம் - 12.06.2017 - 10.00 -11.00
இடம் -86, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு -077 532 8536

மதுரா அழகுக்கலைக் கல்லூரி அழகுநிலையம்

10 வருடம் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்



புதிய பிரிவுகள் ஆரம்பம் 12.06.2017
மிகக்குறைந்த கட்டணம்
நிறைந்த பயிற்சிகள்!
பதிவுகளுக்கு முந்துங்கள்
077 936 2642
Advance Diploma in Beauty culture
பயிற்சி நிறைவில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

[Course Period 3 Months]
Give that Registar Certificate

01. HD Make up
02. Face Make up 10
03. 3D Make up
04. 3D Lips and Eye Make up
05. Air Freshener Make up (Machinery)
06. Facial 20
07. Facial Machinery 05
08. Skin Pigmentation Permanent
09. Skin bleaching
10. Saree dropping 25
11. Skin care
12. Hair styling 15
13. Hair Straightening
14. Perming 05
15. Hair colouring
16. Hair curling 05
17. Hair cutting 05
18. Hair bleaching
19. Hair pigmentation permanent
20. Pedicure
21. Manicure
22. Nail art
23. Mehandi design
24. threding eyebrows and face
25. Machinery threding
26. Waxing
27. Mole art
28. Black spot treatment
29. Face colostral removing
30. Pimple treatment
31. Ultrasonic pimple treatment
32. Henna treatment
33. Hair spa treatment
34. Hair dandruff treatment
35. Hair hot oil treatment
36. Auntyagen Treatment
37. Wart removing
38. Hair reponding
39. Smoothing hair

(C/8727)(10)

தையல், கேக் ஐசிங் டிப்ளோமா கோர்ஸ்
தொடர்பு : மகளிர் மட்டும் 077 93 62 642
ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
பருத்தித்துறை றோட், இருபாலை சந்தி, கோப்பாய்.

## மரண அறிவித்தல்

### மகேஸ்வரி சிவசுப்பிரமணியம்



தோற்றம் 13.04.1925
மறைவு 10.06.2017

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி சிவசுப்பிரமணியம் (10.06.2017) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமு - லட்சுமி தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்புச் சகோதரியும் செல்வநாயகியின் மைத்துனியும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி, இராஜேந்திரன் (இந்தியா), மகேந்திரன், இந்திராணி (ஜேர்மனி), யோகராணி ஆகியோரின் அன்புத்தாயாரும் புஸ்பராணி, சிவனேஸ்வரி காலஞ்சென்றவர்களான சிவராசா, குணசிங்கம், யோகரட்ணம் ஆகியோரின் பாசமிகு மாமியும் குணாநந் (லண்டன்), குணாளினி (ஜேர்மனி), ஜேர்மானந் (ஜேர்மனி), பாஸ்கரன், சுபாஜினி, ஜசிந்தினீ, ரஜீதா, தினேஸ்குமார், சங்கீதா, பிரகாசினி, ஆகியோரின் பேர்த்தியும் தர்சினி, சஞ்சீவன், சகானா, ஜசாக் சச்சின், ஆரணியா, கரிஷான், தாருகா, அஸ்வின், பாரதி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2017) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 11.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துக்கட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொத்துக்கட்டி வீதி.
நவாலி தெற்கு, மானிப்பாய்.
077 9797 454

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணல் ஏற்றிய சாரதிக்கு மறியல்

தென்மராட்சி, ஜூன் 11
அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய உழவு இயந்திரத்தின் சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார்.
கச்சாய்ப் பகுதியில் கடந்த புதன்கிழமை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த யாழ்ப்பாணம் சிறப்பு அதிரடிப் பொலிஸார், உழவு இயந்திரம் ஒன்றில் மணல் ஏற்றிவரப்படுவதைக்கண்டு அதனை நிறுத்திச் சோதனையிட்டனர். சாரதி மணல் ஏற்றுவதற்கானஅனுமதிப் பத்திரத்தை வைத்திருக்கவில்லை. அதனையடுத்து சாரதி கைதுசெய்யப்பட்டார். உழவு இயந்திரத்தையும் பொலிஸார் கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுவந்தனர். விசாரணைகளின் பின்னர் சாரதி மன்றில் முற்படுத்தப்பட்டிருந்தார். (ஐ-9)

## காலநடைகளுக்கு மாத்திரமன்றி மனிதருக்கும் குடிதண்ணீர் சிக்கல்

*வவுனியாவில் இந்த நிலை*

வவுனியா, ஜூன் 11
வவுனியாவில் தொடரும் கடும் வரட்சியான காலநிலை காரணமாக மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளுதல் முதல் விவசாய நடவடிக்கைகளிலும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர். வவுனியா மாவட்டத்தில் 24 ஆயிரத்து 507 குடும்பங்களைச் சேர்ந்த 85 ஆயிரத்து 771பேர் வரட்சியால்பாதிக்கப்பட்டுள்ளனர்.
வவுனியா மாவட்டத்தில் கடந்த கால போக நெற்செய்கைக் காலப்பகுதியில் இருந்து கடுமையான வறட்சியான காலநிலை நீடித்து வருகிறது. இதனால் விவசாயிகளின் தோட்டச் செய்கை நடவடிக்கைகள், சிறுபோக நெற்செய்கை என்பன பாதிப்படைந்துள்ளன. கடுமையான வெப்பம் காரணமாக பயிர்கள் கருகிக் காட்சியளிக்கின்றன. மக்கள் நாளாந்த குடும்பச் செலவுகளை போக்குவதற்குக் கூட சிரமப்படுகின்றனர்.
விவசாயத்துடன் இணைந்ததாக கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் மக்கள் தமது கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரை இன்றி அவதிப்படுவதையும், வறட்சி காரணமாக மைதானம் போன்று காட்சியளிக்கும் குளப்பகுதிகள் கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரைகளாக பயன்படுத்துவதையும் அவதானிக்க முடிகிறது. வவுனியாவின் பல பகுதிகளில் மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதிலும் பிரச்சனைகளை எதிர்நோக்கியுள்ளனர் என்றுபிரதேசமக்கள்கவலை தெரிவிக்கின்றனர். (4-21)

# எமது கோரிக்கைகளை உடன் நிறைவேற்றுங்கள்

### *வட கடற்றொழிலாளர் இணையம் அமைச்சர் அமரவீரவுக்குக் கடிதம்*

மன்னார், ஜூன் 11
இந்திய இழுவைப்படகுகளை விடுவிப்பதற்கு முன்னர் இலங்கை மீனவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள். இந்திய படகுகளை விடுவிப்பதை நிறுத்துங்கள்.
இவ்வாறு கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் அவசர கோரிக்கை விடுத்துக் கடிதம் அனுப்பியுள்ளதாக வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.
அந்தக்கடிதம்தொடர்பில்தெரிவித்திருப்பதாவது:
வடக்கு மாகாண மீனவர்கள் விடயத்தில் கரிசனையுடன் செயற்படும் தங்களின் இந்த அமைச்சரை மாற்ற வேண்டாம் என்று நாம் அரச தலைவரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். எமது கோரிக்கை நிறைவேறியதில் எமக்கு மகிழ்ச்சியே.
ஆனால் கடந்த சில நாள்களுக்கு முன்னர் தங்களால் விடுக்கப்பட்ட ஊடகங்களுக்கான அறிவிப்பில் தங்களால் முன்வைக்கப்பட்ட விடயங்களில் எம்து கோரிக்கைகள் புறந்தள்ளப்பட் டிருப்பதை நாம் அறிகின்றோம்.
குறிப்பாக இந்திய மீனவர்கள் விடுதலை, இந்திய இழுவைப்படகு விடுவிப்பு விடயங்களில் வடபகுதி மீனவர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்த படகுகள் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என்ற கொள்கையிலிருந்து சற்று விலகியுள்ளீர்கள். அதாவது தங்களின் வேண்டுகோளுக்கு இணங்க மனிதாபிமானமாக எமது நல்லிணக்கத்தை வெளிக்காட்டும் விதமாக சில தீர்மானங்களை எடுத்திருந்தோம். அவற்றின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான எமது நிலைப்பாட்டை தங்களுடன் நாம் நடத்திய பலசுற்றுப்பேச்சுகளின் போது பல நிபந்தனைகளையும் சில கோரிக்கைகளையும் முன்வைத்திருந்தோம்.
அதில் முதன்மையானது, இந்திய மீனவர்களின் படகுகள் விடுவிப்பு. 2015 ஆம் ஆண்டளவில் கைப்பற்றப்பட்ட படகுகள் மாத்திரம் விடுவிக்கப்பட வேண்டும். அவ்வாறு விடுவிப்பதாயின் இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்புக்குள் நுழைய மாட்டார்கள் என்ற உத்தரவாதம் பெறப்பட வேண்டும்.
அவர்கள் தொடர்ந்து வருவார்கள் எனில் அவர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட வேண்டும். அவர்களது படகுகளும் பறிமுதல் செய்யப்பட வேண்டும். ஏனைய படகுகள் விடுவிப்பானது நிறுத்தப்பட வேண்டும்.
இந்திய மீனவர்களின் படகுகளால் சேதமாக்கப்பட்ட எமது மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் வலைகளுக்கான இழப்பீடுகள் வழங்கப்படவேண்டும்.
பன்னாட்டுப்படகுகள்திருத்தச்சட்டம்நாடாளுமன்றில் விரைவர்க நிறைவேற்றப்பட வேண்டும்.
உள்ளூர் இழுவைமடி கொண்டு செய்யப்படும் தொழில்முறைக்கான திருத்தச்சட்டம் நாடாளுமன்றில்நிறைவேற்றி இத்தொழில்முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தல் வேண்டும்.
தென்பகுதி மீனவர்களின் மிதமிஞ்சிய வருகையைக் கட்டுப்படுத்துவதுடன் அவர்களால் செய்யப்படும் தடை செய்யப்பட்ட தொழில் முறைகளை நிறுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
நலிவுற்றுள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சமாசங்களுக்கு நிதி மூலங்களை வழங்கி அந்தச் சங்கங்கள் திறம்பட இயங்க நடவடிக்கை எடுத்தல்வேண்டும்.
அரச தலைவர் மற்றும் அயலுறவு அமைச்சுடன் வடபகுதி மீனவ பிரதிநிதிகளுடனான சந்திப்பு ஒன்றை ஏற்படுத்தல் வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு இவற்றை நிறைவேற்றித்தருவதாக உறுதி மொழி தங்களால் தரப்பட்டது.
ஆனால் இந்தியப் படகுகள் விடுவிப்புக்கான அறிவிப்பு வடபகுதி மீனவ தலைவர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் கவனத்தில் எடுக்கப்படாது படகு விடுவிப்புத் தொடர்பான தங்களது அறிக்கை வடபகுதி மீனவர்களாகிய எம்மை ஆச்சரியப்படவைத்துள்ளது.
இந்திய தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை ஆழ்கடல் மீன்பிடிக்கு உள்ளீர்க்கும் செயற்பாட்டை நிறைவேற்ற காலவரையறை எனும் போர்வையில் 3 வருடங்களில் நடைமுறைப்படுத்தக் கூடியவாறு தீர்வுத் திட்டம் ஒன்றை வரைந்து தங்களது இணக்கத்துக்காகத் தரப்பட்டுள்ளதாக அறிகின்றோம்.
இது தீர்வு திட்டம் என்பதை விட வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தின் மீது வைக்கப்பட்டுள்ள பொறி என்றே கூறவேண்டும்.
இது விடயத்தில் தாங்கள் மீளவும் வடபகுதி மீனவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டு இந்திய தரப்புக்கு உரிய பதில் வழங்குவதுடன் விடுவிப்புக்கு முன்னர் எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்களை நிறைவேற்றித்தர முன்வர வேண்டும். என்று கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளதாக ஆலம் மேலும் தெரிவித்தார். (4,56)

# ஏன் ஓடுகிறோம் என்றே தெரியாது இன்னும் ஓடிக்கொண்டிருக்கிறோம்

### முதலமைச்சர் விக்கினேஸ்வரன் கூறுகிறார்



முல்லைத்தீவு, ஜூன் 11
எம்முடைய பழைய வாழ்க்கை முறைமைகளில் ஊதியம் குறைவாக இருந்தாலும் போதிய ஓய்வுடன் கூடிய நிறைவான வாழ்க்கை எமக்குக் கிடைத்தது. ஆனால் இன்று அனைத்தும் தலைகீழாகிவிட்டன. ஏன் ஓடுகின்றோம் என்று தெரியாமல் ஓடுகின்றோம் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.
முல்லைத்தீவு, தண்ணீர் ஊற்று மேற்கு பொதுமக்கள் சந்தைக் கட்டடத் தொகுதி திறப்புவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,
"எம்முடைய பழைய வாழ்க்கை முறைமைகளில் ஊதியம் குறைவாக இருந்தாலும் போதிய ஓய்வுடன் கூடிய நிறைவான வாழ்க்கை எமக்குக் கிடைத்தது. பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் சிறப்பாக அமைந்திருந்தன. ஒரு வீட்டில் ஒரு சைக்கிள் இருந்தால் அவரை சைக்கிள் வைத்திருக்கும் பணக்காரர் என்றும் தற்செயலாக ஒரு கிராமத்தில் ஒரு கல்வீடு இருந்துவிட்டால் அவரைக் 'கல்வீட்டு ஐயா' என்றும் ஏனையவர்கள் விழிக்கத் தலைப்பட்டனர். ஏனென்றால் தாமும் சைக்கிள் வாங்க வேண்டும், கல்வீடு கட்ட வேண்டும் என்ற அவா இன்றி மக்கள் அன்று மனத்திருப்தியுடன் வாழ்ந்தார்கள். பெரிதாக எதையும் எதிர்பார்க்கவில்லை. இருந்ததை வைத்துத் திருப்திப் பட்டார்கள். உங்களையும் அவ்வாறே மாறும்படி நான் கூறவில்லை. மனமகிழ்ச்சிக்கு வழி கூறுகின்றேன்.
ஆனால் இன்று அனைத்தும் தலைகீழாகிவிட்டன. வீட்டுக்கு இரண்டு அல்லது மூன்று மோட்டார் வாகனங்கள். தந்தை, தாய் இருவரும் உழைக்கின்றார்கள். பிள்ளைகள் ஆயாவின் கவனிப்பில் விடப்படுகின்றார்கள். இதுதான்பட்டணவாழ்க்கை. அகலக்கால் வைக்கப்போய் இறுதியில் பெற்றுக் கொண்டது கடன் தொல்லை. கடனை அடைக்க மாடாய் உழைக்க வேண்டியிருக்கின்றது. ஓய்வு ஒழிச்சல் இல்லை. மனநிம்மதி இல்லை. ஏனோதானோ என்ற இறை வழிபாடு, பிள்ளைகளின் முறைதவறிய நடைமுறைகள் என அனைத்தையும் கைக்கொண்டபடி நாம் ஏன் ஓடுகின்றோம் என்று எமக்குத் தெரியாது. மனைவி ஏன் ஓடுகின்றாள் என்று அவருக்குத் தெரியாது பிள்ளை ஏன் படிக்கவில்லை என்றுபிள்ளைக்குத்தெரியாது. ஆனாலும் ஓடுகின்றோம். ஏனென்று தெரியாது ஓடுகின்றோம். இந்த நிலைதான் இன்றைய யதார்த்தம். வாழ்க்கையின் வேகம் கூடிவிட்டது. ஆறஅமர இருந்து சிந்திக்க முடியாது தவிக்கின்றோம். இந்த வேகம் கிராமங்களுக்குப்பரவமுன் அது பற்றி அறிந்திருப்பது நல்லதென்பதாலேயே இவற்றைக் கூறுகின்றேன்.
எனவே நாம் எமது பண்பாடு, கலாசாரம், வாழ்க்கை முறைமை, வருங்காலச் சந்ததிக்குச் சுகாதாரமான சுற்றுப்புறச் சூழலை விட்டுச் செல்லுகின்ற விடயங்களில் கூடிய அக்கறை காட்ட வேண்டும். புண்பட்ட இந்தச் சமூகம்இறைபக்தியுடன்கூடிய அமைதியான வாழ்க்கை முறைக்கு திரும்ப நாம் அனைவரும் பாடுபடுவோம்" - என்றார். (4-21)

# பலாலி வடக்கில் மீள்குடியேறியும் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை

### *பிரதேச மக்கள் மாவை எம்.பியிடம் முறைப்பாடு*

யாழ்ப்பாணம், ஜூன் 11
பலாலி வடக்குப் பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டு ஒரு வருடம் கடந்தநிலையிலும், இதுவரை அடிப்படை வசதிகளான பாடசாலை, மயானம், போக்குவரத்து எவையுமே எமக்குக் கிட்டவில்லை என்று அந்தப் பிரதேச மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசாவிடம் சுட்டிக்காட்டினர். இது குறித்துச் சம்பந்தப்பட்ட தரப்புடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்தார்.
பலாலி வடக்கில் மீளக்குடியமர்ந்த மக்களைச் சந்தித்து அவர்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டபோதே மேற்படி குறைகள் சுட்டிக் காட்டப்பட்டன.
பலாலி வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசத்தில் படையினரால் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் 120 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்து விட்டனர். அவர்களில் 86 குடும்பங்களுக்கான நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் 21 குடும்பங்கள் தங்கி வாழ்பவர்கள். எஞ்சிய 13 குடும்பங்களும் தமக்கான நிரந்தர வீடுகளைக் கோருகின்றனர்.
மீளக்குடியமர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தமது கல்விக்காக தினமும் 15 மைல் தூரம் அலையும்நிலை காணப்படுகிறது. அவ்வாறு பயணம் செய்யும் 15மைல் தூரத்துக்கும் ஒழுங்கு செய்யப்பட்ட [illegible] நாள் பாடசாலைக்குச் செல்லமுடியாது.
பலாலி வடக்கு சித்தி விநாயகர் பாடசாலை, வாழ்விடத்தில் இருந்து வெறும் 200 மீற்றர் தூரத்தில் உள்ளது. அந்தப் பாடசாலை இன்னமும் படையினரின் ஆக்கிரமிப்புக்குள் தான் உள்ளது. இந்தப் பாடசாலையை விடுவித்து மாணவர்களின் கல்விக்கு படையினர் உதவினால் மாணவர்களின் கல்விக்காக மாணவர்களுடன் தினமும் சென்றுவரும் பெற்றோருக்கும் வீண் அலைச்சல் இராது.
தற்போது இங்கு குடி யேறிவிட்டோம்; வாழ்வாதாரம் இல்லாத நிலமையோடு உயிரிழப்போரைத் தகனம் செய்யவேண்டிய மயானமும் கடற் படையினர் பிடியில் உள்ளது. அண்மையில் உயிரிழந்த முதியவரின் உடலம் சுமார் 6 மைல் தூரத்துக்குக் காவிச் சென்றே கிரியைகள் செய்யப்பட்டன. இந்தப் பிரதேசத்துக்கு போக்குவரத்து வசதி கிடையாது. ஆரம்பத்தில் வீதிக் குறைபாடு தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. இருப்பினும் தற்போது முதன்மைச் சாலை சீர் செய்யப்பட்ட நிலையிலும், போக்கு வரத்து சீர்செய்து தரப்படவில்லை. என்றனர்.
இவற்றைக் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் பாடசாலையையும், மயானத்தையும் உடனடியாக விடுவித்தல் தொடர்பாகவும் போக்குவரத்துத் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி அதற்கான முயற்சிக ளில் ஈடுபடுவதாகவும் உறுதியளித்தார். (4-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி பொதுச் சந்தையில் வாகனத் தரிப்பிடம் சரியில்லை

## சினக்கின்றனர் நுகர்வோர் விரைவில் தீர்வு என்கிறார் செயலர்



கிளிநொச்சி, ஜீன் 11

கிளிநொச்சிப் பொது சந்தைக்கு வருகை தரும் பொதுமக்கள், அங்கு துவிச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கு வாகன பாதுகாப்பு நிலையம் இல்லாதமை தொடர்பில் விசனம் தெரிவித்துள்ளனர். அங்கு திருடப்பட்ட துவிச்சக்கர வண்டிகள் எதுவும் இன்னமும் மீட்கப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டினர்.


கிளிநொச்சி பொதுசந்தை வளாகத்தைச் சுற்றி நான்கு பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நான்கு பாதைகளிலும் நான்கு பேர் நின்று சந்தை வளாகத்தில் இருந்து வெளியே எடுத்துச் செல்லும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளின் உரிமையாளர்களிடம் பாதுகாப்பு பணம் எனக்கூறி பணம் அறவிடுகின்றனர். சந்தை வளாகத்தினுள் பாதுகாப்பு நிலையம் அமைக்கப்படாமையினால் எவருடைய துவிச்சக்கர வண்டிகள் எனத்தெரியாமல் அவற்றைக் கொண்டு வரும் நபர்களிடம் பணத்தை அறவிட்டு வெளியேற்றுகின்றனர். சந்தை வளாகத்தினுள் 16 கண்காணிப்புக் கமராக்கள் கரைச்சிப்பிரதேச சபையினரால் அண்மையில் பொருத்தப்பட்ட நிலையில், 7 கண்காணிப்புக் கமராக்கள் மாத்திரமே இயங்கி வருகின்றன. 100 இற்கும் மேற்பட்ட துவிச்சக்கரவண்டிகள் சந்தை வளாகத்தினுள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றில் சில காணாமல் போயுள்ளன. இது தொடர்பில் பல முறை எழுத்து மூலமாகச் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்திய போதிலும், எந்தவிதமான நடவடிக்கைகளும் பெற்றுத்தரப்படவில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

"தற்போது பதிய கட்டிடம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதன் அமைவிடத்துக்கு ஏற்றவாறே துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் அமைக்க வேண்டும். துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு ஒப்பந்த (குத்தகைக்கு) அடிப்படையில் தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர் தான் அந்தத் துவிச்சக்கர வண்டிகளுக்கான பாதுகாப்பாளர். எமக்கு களவு தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறின், அதனை ஆராய்ந்து பெற்றுக்கொடுப்போம். சி.சி.ரி கமராக்கள் மூலம் அவதானிக்கப்பட்டு திருடர்களைக் கண்டு பிடித்திருக்கின்றோம். அண்மையில் ஒரு மோட்டார் சைக்கிள் களவுகூட இவ்வாறு கண்டறியப்பட்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கி உரியவரிடம் மோட்டார் சைக்கிள் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே சந்தையில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக பாதிக்கப்பட்ட வாழைப் பழ வியாபாரிகளுக்கு எனப் புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டடத்தை முதலமைச்சர் நாளை திறந்து வைக்கவுள்ளார். இது வரை அவர்கள் வியாபாரம் செய்த தற்காலிக கொட்டகை அதாவது 100 அடி கட்டடம் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்திற்கு வழங்கப்பட உள்ளது. சில சி.சி.ரி கமராக்கள் மரம் முறிந்து விழுந்ததால் பாதிக்கப்பட்டுள்ளன. இன்னும் சில நாள்களில் அவை சீர் செய்யப்படும்." என கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் கம்சநாதன் தெரிவித்தார்.

(4 - 21)

## பொதுமக்களின் காணிகளைக் கபளீகரம் செய்யும்

# அதிகாரிகள் வடக்கை விட்டு துரத்தப்படுவர்



## வடக்கு முதலமைச்சர் கடும் எச்சரிக்கை

முல்லைத்தீவு, ஜீன் 11

அப்பாவிப் பொதுமக்கள், விபரம் அறியாதவர்களின் பெறுமதி மிக்க காணிகளைக் கபடத் தன்மைகளால் தமக்கு வேண்டியவர்களுக்கும், பணம் படைத்தவர்களுக்கும் மாற்றிக் கொடுத்து விட்டு, அந்த மக்களை நடையோ நடையாக அலுவலகங்களை நோக்கித் தினமும் படையெடுக்கச் செய்கின்ற உத்தியோகத்தர்கள் எமக்குத் தேவையற்றவர்கள். அவர்கள் இனங்காணப்பட்டால் வடக்கு மாகாணத்தை விட்டு வெளியேற்றப்படுவார்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மணற்குடியிருப்பு, முல்லைத்தீவு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அலுவலர்களுக்கான விடுதியைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"வடக்கு மாகாணம் கடந்த 30 வருடங்களாக போரினால் உயிர் இழப்புக்கள், பொருள் இழப்புக்கள், வீடு வாசல்கள், சொத்துச் சுகங்கள் என்று அனைத்தையும் இழந்த நிலையில் உள்ளது. எஞ்சியிருக்கும் எமது மக்களுக்கு நாம் வழங்குகின்ற சேவைகள் அர்ப்பணிப்புடன் கூடியவையாக அமைந்திருத்தல் அவசியம். சில அலுவலகங்களில் அலுவலர்களின் மேன்மையான சேவைகளை நாம் யாவரும் அவதானித்திருக்கின்றோம். குறிப்பிட்ட ஒரு பிரதேச செயலகத்தில் தற்செயலாக ஒரு பொதுமகன் ஒரு சேவையைப் பெறுவதற்காக அங்கு போடப்பட்டிருக்கும் இருக்கைகளில் தாமதித்திருப்பதை அந்தப் பிரதேச செயலர் அவதானித்து விட்டால், உடனடியாக அவரே எழும்பி வந்து அவர்களுக்கான சேவையின் விபரங்களை அறிந்து அவரின் படிவங்களை உரிய பகுதிக்குத் தானே எடுத்துச் சென்று அவரின் சேவைகளை நிறைவு செய்து அவரை வழியனுப்பி வைத்த பின்னர் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை அறிவுறுத்திய சம்பவங்கள் பற்றிப் பலர் கூற நான் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

இவ்வாறான அதிகாரிகளையும் உத்தியோகத்தர்களையும் நாம் விரும்புகிறோம். அத்தகையோரே எமக்கு வேண்டியவர்கள். மாறாக பொதுமக்களின் காணிகளை கபளீகரம் செய்பவர்கள், அப்பாவிப் பொதுமக்கள், விபரம் அறியாதவர்கள் ஆகியோரின் பெறுமதி மிக்க காணிகளைத் தமது கபடத் தன்மை மூலமாகத் தமக்கு வேண்டியவர்களுக்கும் பணம் படைத்தவர்களுக்கும் மாற்றிக் கொடுத்துவிட்டு அந்த மக்களை நடையோ நடையாக அலுவலகங்களை நோக்கி தினமும் படையெடுக்கச் செய்கின்ற உத்தியோகத்தர்கள் எமக்குத் தேவையற்றவர்கள். சிலர் தமது சமூகம் சாராத, தமது மதம் சாராத வேற்று மக்களுக்கு, மந்திரிமார்களுக்கு மண்டியிட்டு அவர்கள் கோரும் சகலவற்றையும் சட்டத்துக்குப் புறம்பான வகையில் செய்து கொடுக்கின்றார்கள். இப்பேர்ப்பட்டவர்களின் சேவைகள் வடக்கு மாகாணத்துக்குத் தேவையற்றவை. இவ்வாறான உத்தியோகத்தர்கள் இனங்காணப்படுவார்களேயாயின் அவர்களுக்கு எதிராக எவ்வித தயவு தாட்சண்யமும் காட்டப்படமாட்டாது. அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்வதுடன் அவர்களை வடக்கு மாகாணத்துக்கு வெளியே அனுப்புவதற்கும் எமது சிபார்சுகள் மேற்கொள்ளப்படும் என்பதனையும் அத்தகையவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். எனவே அன்பார்ந்த வடக்கு மாகாண உள்ளூராட்சி உத்தியோகத்தர்களே, ஊழியர்களே, நீங்கள் அனைவரும் எமது மக்களின் இன்றைய தேவைகளை உணர்ந்துகொண்டு அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிய சிறந்த உத்தியோகத்தர்களாக மிளிர்வீர்கள் என எதிர்பார்க்கின்றேன்" - என்றார்.

(4, 21)



நாவாந்துறை வடகரையான குடாக்கரையிலிருந்து தெற்கு நோக்கி வில்லூன்றி முனை தொடக்கம், அதிலிருந்து கிழக்காக கொட்டடியிலிருந்து குருநகர், பாசையூர், கொழும்புத்துறை வரை கரையோரங்களில் நிறைந்தும், குவிந்தும் ஏராளமான குப்பைகள் காணப்படுகின்றன. இதில் பிளாஸ்ரிக் கழிவுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து சுத்தப்படுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (21)

## டெங்குக் குடம்பி: 9 பேருக்கு தண்டம்

தென்மராட்சி, ஜீன் 11

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏதுநிலையில் குடியிருப்புகளை வைத்திருந்த ஒன்பது பேருக்கு நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.

கடந்த வாரம் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட சிறப்பு டெங்குக் கட்டுப்பாட்டு செயற்றிட்டப் பரிசோதனைகளின் போது குடியிருப்புகளில் டெங்கு நுளம்பின் குடம்பிகள் காணப்பட்டதையடுத்து அவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராக பொலிஸார் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர். வழக்குகளை தனித்தனியாக விசாரித்த நீதிவான் ஒன்பது பேருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்தார்.

(ற -9)

# அனுமதியற்ற சிறுபோகச் செய்கைகளில் எஞ்சியவையும் நாளை அழிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜீன் 11

இரணைமடுக்குள நீர்ப்பாசனத்தின் கீழ் சட்டவிரோத நெற்செய்கையில் ஈடுபட்டவர்களின் மேலும் 52 ஏக்கர் நெற் செய்கைகள் நாளை அழிக்கப்படவுள்ளன. இந்த முடிவு மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் எடுக்கப்பட்டு சகல தரப்புக்களும் அனுமதியளித்துள்ளன.



இந்த ஆண்டு விதைப்புக்காக அனுமதிக்கப்பட்ட 890 ஏக்கர்களை விடவும் அதிகமாக விதைக்கப்பட்ட அனைத்து நெற்பயிர்களையும் அழிப்பதான முடிவினை கமக்கார அமைப்புக்கள், மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் இரணைமடுக்குளத்தின் கீழான மேலதீக விதைப்பில் கடந்த வாரம் 82 ஏக்கர் அழிப்புச் செய்யப்பட்டுள்ளதாக உத்தியோக பூர்வமாகக் கண்டறியப்பட்டது. [illegible] அதற்கான நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பில் நேற்று முன்தினம் மீண்டும் ஆராயப்பட்டது.

அதன்படி நீர்ப்பாசனப் பகுதிக்குள் அத்துமீறிப் பயிரிடப்பட்ட 52 ஏக்கர் நெற்பயிர் அழிக்கப்பட வேண்டும். அவ்வாறு அழிக்கப்பட்டால் மட்டுமே அனுமதியுடன் விதைக்கப்பட்ட 890 ஏக்கர் பயிரையும் பாதுகாக்க முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. இதனால் உழவு இயந்திரம் கொண்டு செல்ல முடியாமல் கடந்த வாரம் அழிக்காது விடப்பட்ட குறித்த 52 ஏக்கர் நெற்பயிர்கள் நாளை சிறிய உழவு இயந்திரங்கள் மூலமாக அழிக்கப்படவுள்ளன.

குறித்த 52 ஏக்கர் வயல் நிலங்களும் மாவட்டச் செயலகப் பிரதிநிதிகள், கமநல சேவைத் திணைக்கள மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் பொலிஸார் முன்னிலையில் நாளை அழிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(4 - 101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்காயத் திருடர்களை பிடிப்பதற்கு இரவுக் காவல்

*வலி.கிழக்கில் முன்னெடுப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 11

வலி.கிழக்குப் பிரதேசத்தில் வெங்காயத் தோட்டங்களில் திருடர்களின் கைவரிசை அதிகரித்துள்ளது. அதனால் விவசாயிகள் தோட்டங்களில் இரவுக் காவலில் ஈடுபட்டுள்ளனர்.

வெங்காயத் தோட்டங்களில் விளைந்திருக்கும் வெங்காயத்தைத் திருடர்கள் இரவில் அறுவடை செய்து கொண்டு தப்பிச் செல்கின்றனர்.

தற்போது குடாநாட்டில் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது.

இந்த வெங்காய விலை அதிகரிப்பைப் பயன்படுத்தி திருடர்கள் வெங்காயத் தோட்டங்களில் கண் வைத்துள்ளனர். நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர், உரும்பிராய், கோப்பாய், புன்னாலைக்கட்டுவன் போன்ற பகுதிகளில் உள்ள தோட்டங்களில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

திருடர்களின் இந்த வெங்காயத் திருட்டுச் சம்பவங்களை அடுத்து விவசாயிகள் தமது வெங்காயத் தோட்டங்களில் இரவு வேளைகளில் காவல் கடமையிலும் ஈடுபட்டு வருகின்றனர். சந்தேகத்துக்கு இடமாக எவராவது நடமாடினால் அவர்கள் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (4 -17)

# வேப்பங்குளம் கடவையில் காப்பாளரில்லை

வவுனியா, ஜூன் 11

வவுனியா, ஓமந்தை, வேப்பங்குளம் அரச ஊழியர் வீட்டுத்திட்டப் பகுதியில் அமைந்துள்ள தொடருந்துக் கடவையில் மாலைநேரங்களில் தொடருந்துக் கடவைக் காப்பாளர் எவரும் கடமையில் இருப்பதில்லை. தொடருந்து வரும் வேளைகளில் அவதானமாகப் பயணிக்குமாறு பயணிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என பொதுமக்கள் கேட்டுக் கொண்டனர்.

குறித்த தொடருந்துக் கடவையில் பணியில் இருந்த காப்பாளர் 7 ஆயிரத்து 500 ரூபா சம்பளம் போதாது என்றுகூறிக் கடமையிலிருந்து விலகியுள்ளார். பதில் காப்பாளர்கள் எவரும் அந்தக் கடவையில் இதுவரை நியமிக்கப்படவில்லை. இந்தநிலை தொடர்பில் இந்தக் கடவை உள்ளடங்கும் ஓமந்தைப் பொலிஸாருக்கும் அறிவித்துள்ளதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர். எனினும் இதுவரை புதிதாக எந்தவொரு காப்பாளரும் குறித்த கடவையில் பணியை ஏற்றிருக்கவில்லை. எனவே ஓமந்தை உயர்தொழில்நுட்பக்கல்லூரிக்கு வருகின்ற மாணவர்கள், ஓமந்தை அரசஊழியர் வீட்டுத் திட்டபகுதியில் வசிப்போர், ஓமந்தை வேப்பங்குளத்தில் வசிப்போர், வேலைக்குச் சென்று திரும்புவோர் உட்பட்பலரும் தொடருந்துவருகின்ற நேரங்களில் இப்பாதையைக் கடக்கும்போது அவதானமாகக் கடக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4- 402)



கோப்புப்படம்

## வடக்கு மரநடுகை:

# திட்டமோ 5 லட்சம் நட்டது 14 ஆயிரம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் 2015ஆம் ஆண்டில் 5 லட்சம் மரம் நடுகை செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இருப்பினும் 14 ஆயிரம் மரங்களே நடுகை செய்யப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு வழங்கிய பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 8 லட்சத்து 39 ஆயிரத்து 700 ரூபா இந்தத் திட்டத்துக்காக அமைச்சு செலவு செய்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

'இந்த் ஆண்டு மரநடுகை மாதத்தில் 5 லட்சம் மரக்கன்றுகளை நட வேண்டும் என்று முதலமைச்சர் தெரிவித்திருந்தார். அவரது கோரிக்கைக்கு அமைவாக ஐந்து மாவட்டங்கள் ஐந்து லட்சம் மரக்கன்றுகள் என்பதை இந்த ஆண்டின் கருப்பொருளாகக் கொண்டு 5 லட்சம் மரக்கன்றுகளை நடுகை செய்வதற்குத் தீர்மானித்துள்ளோம்' என்று விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், 2015ஆம் ஆண்டு இந்தத்திட்டம்தொடர்பில்அனுப்பிய பத்திரிகைச்செய்திக் குறிப்பில் தெரிவித்திருந்தார்.

இந்தத் திட்டத்தின் தொடக்க நிகழ்வு, 2015ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் திகதி நாவற்குழி நீரேரிக்கு அண்மையில், வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றிருந்தது.

மரம்நடுகைத் திட்டம் தொடர்பில் வடக்கு மாகாண விவசாய அமைச்சிடம், தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஊடாக கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

'ஒவ்வொரு மாவட்டங்களிலும் எவ்வகையான மரங்கள், எத்தனை நடப்பட்டன ? இதற்கானசெலவீனம்என்ன?' என்று கேட்கப்பட்ட கேள்விக்கு,

'2015ஆம் ஆண்டில் 5 லட்சம் மரங்கள் நாட்டப்பட வேண்டும் என்று பிரகடனப்படுத்தப் பட்டமையானது. மரம் நடுதலைஅரசதிணைக்களங்கள், பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களிடையே ஊக்குவிப்பதற்காக விவசாய அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டம்.

விவசாய அமைச்சினால் மரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு மாவட்டங்கள் ரீதியாக நடுகை செய்யப்படவில்லை. மரம் நடுகை மாத ஆரம்ப நிகழ்விலேயே அரியாலை செம்மணியில் வீதியோரங்களில் மருத மரங்கள் விவசாய அமைச்சினால் நேரடியாக நாட்டப்பட்டன.

2015ஆம் ஆண்டு பொது அமைப்புக்கள், கோயில்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் 14 ஆயிரத்து 82 மரக்கன்றுகள் கொள்வனவு செய்து வழங்கப்பட்டன. இவை அவர்களினாலேயே நடுகை செய்யப்பட்டது.

'மரங்கள் கொள்வனவு செய்வதற்குப் பகிரங்கக் கேள்வி கோரல் நடைமுறை பின்பற்றப்பட்டதா ? ஆம் எனில், கேள்வி கோரலுக்கு விண்ணப்பித்தவர்களது விபரங்கள் என்ன? எனக் கேட்டகப்பட்ட கேள்விக்கு வழங்கப்பட்ட பதில்.

'அனுமதிக்கப்பட்ட அரச பெறுகை நடைமுறைக்கு அமைய மரக்கன்றுகளைக் கொள்வனவு செய்வதற்கு மரக்கன்றுகளை விற்பனை செய்யும் 18 வழங்குனர்களிடம் இருந்து கூறுவிலை கோரப்பட்டு பெறுகைத் தீர்மானத்தின் அடிப்படையில் 18 வழங்குனர்களிடம் இருந்தும் மரக்கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டன என்று - தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)



கோப்புப்படம்

| மரங்களின் வகை | எண்ணிக்கை |
|---|---|
| தேக்கு | 2,844 |
| மகோகனி | 2,237 |
| சமண்டலை | 138 |
| கொய்யா | 1,563 |
| கமுகு | 556 |
| மாதுளை | 384 |
| சவுக்கு | 1,965 |
| மரமுந்திரி | 215 |
| தேசி | 1,338 |
| அம்பிரலா | 305 |
| நெல்லி | 244 |
| பலா | 682 |
| ஜம்பு | 1,359 |
| பப்பாசி | 25 |
| சுந்தரவேம்பு | 190 |
| தோடை | 20 |
| விளாத்தி | 17 |

# வீட்டுத் தோட்டத்தினுள் கசிப்புக் காய்ச்சும் இடம்

## மருதங்கேணியில் இருவர் கைது

கிளிநொச்சி, ஜூன் 11

வீட்டுத்தோட்டத்தின் ஒரு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாக பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி, மாமுனைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பளை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அங்கு மேற்கொண்ட திடீர் சோதனையின்போது வீட்டுத்தோட்டத்தின் பின்புறமாக கசிப்பு உற்பத்தி நிலையமொன்று செயற்பட்டு வந்தமை தெரியவந்தது.

அந்தக் கசிப்பு உற்பத்தி நிலையம் அழிக்கப்பட்டது. அதில் 315 லீற்றர் கோடாவும் 19 லீற்றர் கசிப்பும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன. கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டு விசாரணையிலுள்ளனர்.

அவர்கள் நீதிவானிடம் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4-6)

# மணல் கடத்தியவருக்கு 80 ஆயிரம் ரூபா தண்டம்

## முன்னரும் தண்டிக்கப்பட்டவர்

கிளிநொச்சி, ஜூன் 11

மணல் கடத்தியதற்காக ஏற்கனவே நீதிமன்றினால் தண்டிக்கப்பட்ட நபரொருவர் பின்னரும், அனுமதிப்பத்திரமின்றி மணல் கடத்தியதற்காக 80 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது கிளிநொச்சி நீதிமன்று.

அதுமட்டுமன்றி, குறித்த சாரதி 10 நாள்களுக்கு சமூக சேவையில் ஈடுபடவேண்டும் என்றும் தீர்ப்பில் சுட்டிக்காட்டியது மன்று.

கிளிநொச்சி பளையில் அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து உழவு இயந்திரத்தை மணலுடன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்து பின்னர் நீதிமன்றில் கடந்த புதன் கிழமை பாரப்படுத்தப்பட்டது. அன்றைய தினம் அதன் சாரதியும் பளைப் பொலிஸாரால் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரணை செய்த நீதிமன்று, 80 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துச் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைச் சட்டத்தின் கீழ் 10 நாள்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் உத்தரவிட்டது. (4 - 21)

# வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் குடிதண்ணீர் விநியோக ஏற்பாடு

## வடக்கு மாகாண முதலமைச்சர் ஆரம்பித்து வைத்தார்

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கலுக்கு வரும் அடியவர்கள் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில், 8.78 மில்லியன் ரூபா செலவில் புதிய திட்டம் நேற்று முன்தினம் அறிமுகப்படுத்தப்பட்டது.

வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ள நீர்த்தாங்களில் இருந்து குடிநீரை நிலத்தடிக் குழாய்களினூடாக ஆலயம் வரை எடுத்துச் சென்று அங்கு நிறுவப்பட்டுள்ள தண்ணீர்த் தாங்கிகளில் நிரப்புவதே அந்தத் திட்டம்.

இந்தத் திட்டத்தை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார் அதில் கருத்துரைத்த அவர்.

"வடக்கு மாகாணத்தின் குறித்தொதுக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி நன்கொடை நிதியின் 8.78 மில்லியன் ரூபா செலவில் இவ் அபிவிருத்திப் பணி முன்னெடுக்கப்பட்டது. கடந்த காலங்களில் வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் வைகாசி விசாக உற்சவத்தின் போது பொங்கல் நிகழ்வுகளுக்கும், அம்மனை தரிசிப்பதற்கும் சுமார் 8 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஒன்று கூடுவது வழமை. அந்தத்தினத்தில் இந்த ஆலயத்துக்குவரும் அடியார்கள் தங்கள் பொங்கல் நிகழ்வுகளை நிறைவேற்று வதற்குத் தேவையான குடி தண்ணீரை வழங்குவதில் கரைதுறைப்பற்று பிரதேச சபை மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வந்தது. எவ்வளவு தண்ணீர்த் தாங்கிகளை வைத்து நீரை நிரப்பினாலும் சிறிது நேரத்தில் அனைத்துத் தாங்கிகளும் வெறுமையாகிவிடும். மக்கள் கூட்டம் திரளத்தொடங்கிய பின்னர் நீரைக் குறிப்பிட்ட தாங்கிகளுக்கு நிரப்புவதற்கு தண்ணீர் பௌசர்களைஉள்ளேகொண்டுவருவது கடினமாக இருந்தது. இதனால் பிரதேச சபைக்கு அதிகூடிய செலவு ஏற்பட்டதோடு 100 வீத சேவையைத் திருப்தியாக வழங்க முடியாத நிலை ஏற்பட்டது" - என்றார். (4 - 21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதாரத்தை மேம்படுத்த மறுசீரமைப்புக்கள்

## அவசியம் என்கிறார் உலக வங்கியின் துணைத் தலைவர்



கொழும்பு, ஜூன் 11
இலங்கையின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் அதன் பொருளாதாரத்தை மேலும் போட்டித்தன்மைமிக்கதாக மாற்றுவதற்கும் மறுசீரமைப்புக்கள் தேவையாகவுள்ளன என உலக வங்கியின் துணைத் தலைவர் ஜான் வலிஸர் வலியுறுத்தினார்.

சமத்துவ வளர்ச்சி, நிதி மற்றும் நிறுவனங்களுக்கான உலக வங்கியின் துணைத்தலைவர் ஜான் வலிஸர், அண்மையில் இலங்கைக்குப் பயணமொன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது அரசின் மூத்த அதிகாரிகள், முக்கிய தனியார் துறை பிரதிநிதிகள் மற்றும் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இதன் பின்னர் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வியாபாரச் சூழ்நிலையை முன்னேற்றுவதனூடாகவும், முதலீட்டு ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் அவதானம் செலுத்துவதனூடாகவும், வளர்ந்துவரும் நிலைபேறான சுற்றுலாத் துறையில் அக்கறை காண்பிப்பதன் மூலமாகவும் இலங்கை மேலும் அதிகமான வெளிநாட்டு முதலீடுகளை உள்ளீர்க்க முடியும்.

புதிதாக நிறைவேற்றப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டமானது, வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுமிடத்து மறுசீரமைப்புக்களுக்கு மேலும் ஏற்புடையதான சூழ்நிலையை உருவாக்குவதற்குத் துணையாக அமையும்.

அதிகமான தனியார் துறை தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதுடன் பெறுமதி சேர் உற்பத்தி திறன்களை மேம்படுத்துகின்றமையானது அரசின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலாக இருக்கின்ற அதேவேளை அதிகமான ஏற்றுமதிகளைச் செய்வதற்கான தூண்டுதலை ஏற்படுத்துவதாகவும், மேலும் அதிகமான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை உள்ளீர்த்துக்கொள்வதை நோக்காகக் கொண்டுள்ளது.

இந்த நோக்கத்தை அடைய வேண்டுமானால் அரசானது பொருளாதாரத்தைத் தயார்ப்படுத்துவதுடன் மேம்பட்ட போட்டித்தன்மையை ஊக்குவிக்க வேண்டும்.

உலகின் பெறுமதி பொருளாதாரக் கட்டமைப்பின் ஓர் அங்கமாக இலங்கை திகழ்வதற்கு நாட்டு மக்களின் திறன்களையும் வல்லமைகளையும் பயன்படுத்திக்கொள்ளமுடியும். இது அதிகமான தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு வழிகோலும். இந்த இலக்கை அடைவதற்கு வர்த்தக உடன்படிக்கைகள் துணையாக அமையக்கூடும் .

தனியார் துறையினருக்கு நிதி கிடைக்கக்கூடிய மேம்பட்ட வசதிகளை வழக்குதல் போன்ற நடவடிக்கைகளானது இலங்கையின் வியாபாரச் சூழ்நிலையை முன்னேற்றுவதற்கு துணையாக அமையும்.

அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஏற்றுமதிகளை மேற்கொள்வதை இலகுபடுத்துகின்றதற்காக போதுமான வரிக்குறைப்புக்களை வழங்குகின்ற ஜி.எ.ஸ்.பி பிளஸ் வரிச்சலுகை போன்ற சர்வதேச வர்த்தக உடன்படிக்கைகள் நீண்ட காலப்பகுதியை எடுத்து நோக்கினால் மிகவும் பெறுமதி வாய்ந்ததாகும்.

இருப்பினும் வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு மூலோ பாயரீதியான சிந்தனையே உண்மையில் அவசியத் தேவையாகவுள்ளது.

தனியார் துறையிரினர் மத்தியில் ஏற்பட்டுவரும் தேவைப்பாடுகளைச் சந்திக்கத்தக்கவாறு புதிய பட்டதாரிகள் பெறுமதிமிக்க தொழில்களை தேடிக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களை அதிகரித்துக்கொள்ள கல்வித்துறையில் முன்னெடுக்கப்படும் முதலீடுகள் அமையவேண்டும்.

சேவைத் துறையை ஊக்குவிப்பதானது தகவல் தொழில்நுட்பம் போன்ற தொழில் தருநர்களால் அதிகமாக நாடப்படும் துறைகளில் இலங்கையர்கள் பயற்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கான அதிகமான சந்தர்ப்பங்களை உருவாக்கும்.

அரசின் சரியான ஒத்துழைப்புமிக்க கொள்கைகள் மூலமாக உலக சந்தையில் பெரிதான பங்கை பெற்றுக்கொள்வத்றகான சரியான நிலையில் இலங்கை காணப்படுகின்றது.

முதலீட்டு ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் கவனத்தைக் குவித்து செயற்படுவதன் மூலமாக இலங்கை நாடுகின்ற இலக்கை நோக்கி நகரமுடியும். உட்கட்டுமான முதலீட்டு தேவைப்பாடுகள் மற்றும் வரையறைகள் என்பதை அடையாளங்கண்டு முன்னெடுக்கும் அர்ப்பணிப்பு மிக்க சுற்றுலாத்துறை மூலோபாயத் திட்டத்தின் மூலமாக இலங்கையின் துரித வளர்ச்சி கண்டுவரும் சுற்றுலாத் துறையை நிலைபேறானதாகக் கட்டியெழுப்ப முடியும்.

தகவல்அறியும்உரிமை சட்டமானது இலங்கையர்கள் வேண்டிநிற்கும் பொறுப்புக்கூறும் தன்மையையும் வெளிப்படைத்தன்மையையும் கொண்டுவரும்

மேலும் வெளிப்படைத் தன்மை உடையதும் மேம்பட்ட ரீதியில் அணுகக்கூடியதுமான அரசை மக்கள் கோரியதிலிருந்தே தகவல் அறியும் உரிமைச் சட்டம் கருக்கொண்டது. இந்தச் சட்டத்திற்கு நாடாளுமன்றமும் பச்சைக்கொடி காண்பித்தது.

தற்போது பொதுமக்களிடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் தொடர்பில் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பாகத் தகவல் அதிகாரிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. எந்தத் தகவல்களை எவ்வாறாகப் பகிரங்கமாக வெளிப்படுத்த முடியும் என்பது தொடர்பாக இவர்கள் அரசுக்கு ஆலோசனை வழங்குவார்கள். தகவல் அறியும உரிமைச் சட்டத்தின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலானது இலட்சியகரமான சீர் திருத்தங்களுக்கான பரந்துபட்ட ரீதியிலான ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புவதற்கு வழிகோலும் என்றார். (த)


## மரண அறிவித்தல்



பிறப்பு 21 . 03 . 1947

இறப்பு 08 . 06 . 2017

**சண்முகரெத்தினம் பூங்காவனம்**
**(சின்னம்மா)**

புங்குடுதீவு, ஏழாம் வட்டாரம், ஊரதீவைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு முதலாம் வட்டாரம் பெருங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னம்மா என அழைக்கப்படும் சண்முகரெத்தினம் பூங்காவனம் 08.06.2017 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
**சபாபதி குடும்பம்**
(லக்ஸனா'மிக்சர்)

**முதலாம் வட்டாரம்,**
**புங்குடுதீவு.**

**077 266 9902/ 077 899 4886**












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### விற்பனைக்கு
நல்ல நிலையிலுள்ள Honda Super Cup 90 (WP.GR இலக்கமுடைய) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
**077 660 0178**

### விற்பனைக்கு
YA, HQ
இரண்டு முச்சக்கரவண்டிகள் விற்பனைக்குண்டு.
**077 844 6089**

### விற்பனைக்கு உண்டு
வைத்தியரின் பாவனையிலுள்ள Maruthi SUZUKI Alto 2011 கார் விற்பனைக்குண்டு.
**077 613 9559**

### காணி விற்பனைக்கு
பிரதான வீதி, கோண்டாவில் பழனியாண்டவர் ஆலயத்துக்கு அருகில் 05 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு.
**077 308 6837**

### காணி விற்பனைக்கு
உரும்பிராய் சந்திக்கு அண்மையில் 1 ¾ பரப்புக் காணியும் சந்தியிலிருந்து 1 km தூரத்தில் கோப்பாய் வீதியில் 3பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
**076 697 2287** (C 8691) (14)

### காணி விற்பனைக்கு
உடுவில் கிழக்கு சபாபதிப்பிள்ளை வீதியில் வாழ்வகத்துக்கு அண்மித்ததாக 12 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு.
பகுதி பகுதியாகவும் பிரித்துக்கொடுக்கப்படும்.
வீடு கட்டவும் உகந்தது.
**077 273 0627**

### கார் விற்பனைக்கு
EN தொடர் இலக்க 1956 ஆம் ஆண்டு தயாரிப்பு பியட் FIAT 600 கார் விற்பனைக்குண்டு.
**பார்வையிடும் இடம் :-**
சிங்கம் கராஜ், ராஜா கிறீம் ஹவுஸ் பின்புறம், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
தொடர்புக்கு :- சிங்கம் - **075 553 9897**

### காணி விற்பனைக்கு
மானிப்பாய் லோட்டன் வீதி (புளியடிச்சந்தை ஒழுங்கை)யில் உள்ள 6 பரப்புக் காணி மின்சாரம், கிணறு, சுற்றுமதில், தென்னை, பலா பிரயோசனங்களுடன் விற்பனைக்கு உண்டு தரகர் தேவையில்லை.
**076 804 5556**

## தேவை

### வேலையாள் தேவை
யாழ்.நகரில் இயங்கும் வர்த்தக நிறுவனம் ஒன்றில் பணியாற்ற வேலை ஆள்கள் தேவை.
**077 188 2518**

### வேலையாள்கள் தேவை
யாழ் நகரிலுள்ள பான்சிக்கடை ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.
(ஆண், பெண் இருபாலாரும்)
**077 765 1590** (J 8695) (14)

### தேவை
கொழும்பில் உள்ள சில்லறை கடைக்கு 19- 21 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்கள் தேவை.
நல்ல கவர்ச்சிகரமான சம்பளம் தரப்படும்
தங்குமிடம் இலவசம்
**075 800 5057**

### வீடு வாடகைக்குண்டு
**யாழ் கச்சேரிக்கண்மையில் சகல தளபாடங்களுடனும் வாகன தரிப்பிடத்துடன் கூடிய வீடு மாதாந்த வாடகைக்குண்டு**
தொடர்பு: 0769 622 256, 0755 907 769

### வேலையாள் தேவை
பிரபல்யமான தளபாடக் காட்சியறை ஒன்றுக்கு விற்பனையாளர் தேவை. (ஆண்கள் மட்டும்)
**077 793 6060**

### மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பம். 1987 ஆம் ஆண்டு, சித்திரை நட்சத்திரம், கன்னி ராசி மூன்று சுற்று பாவம் 38 சொப்வெயார் என்ஜினியர் ( Software ) மணமகனுக்குப் பொருத்தமான மணமகள் தேவை.
**071 861 8213, 077 618 4649**

### உடன் தேவை
**திறமை வாய்ந்த**
Mobile, app, Web app Developers, Google API, GPS Platform and Server இல் அனுபவம் உள்ளவர்கள் உடன் நிரந்தரமாகத் தேவை.
**80,000/- + 20% Increment Per Month**
**077 030 3834**

## ஏனையவை

### வேலைவாய்ப்பு
நாள் சம்பளம் 1200/-, 1400/-, 1600/- மேலதிக (OT) வழங்கப்படும். எமது தொழிற்சாலைகளான பாம்மா.பிஸ்கட், Milo, Nestamolt, Nescafe, பழச்சாறு போன்ற கம்பனிகளுக்கு உடனடி ஆண்/ பெண் இருபாலாரும், வயது 18 - 60 வரை, பொதியிடல், லேபல் போன்ற பிரிவுகளுக்கும் தேவை.
**071 999 9881, 076 418 0555**

### கடை வாடகைக்கு உண்டு
22 அகலம் 45 அடி நீளம் கொண்ட கடை வாடகைக்கு கொடுக்கப்படும்.
இடம் இல: 295, அரசடி வீதி, கந்தர்மடம் (பிரேமச்சந்திரன் திருமணசேவை முன்)
**077 466 8148** (J 8721) (14)

### வீடு விற்பனைக்கு
நல்லூர் ஆலயத்துக்கு அண்மையில் அமைதியான சூழலில் இரண்டு அறைகள் மற்றும் 1 ¾ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.
**075 258 3407**

### விற்பனைக்கு
கடந்த மாதம் ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட Hand tractor (சிறிய டிராக்டர்கள்) Paddy Harvesting Machine (நெல் அறுவடை இயந்திரம்) Paddy Transplantor Machine (நாற்று நடும் இயந்திரம்) Cement mixer (சிமெண்ட் கலவை இயந்திரம்) ஆகிய இயந்திரங்கள் மிகவும் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. இந்த இயந்திரங்களைப் புத்தளத்தில் பார்வையிடலாம்.
**076 689 1791**

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு
புறொயிலர் குஞ்சு 50/-, சேவல் குஞ்சுகள் 40/-, ஊரக்குஞ்சுகள் 75/-. தனி கழுத்துவெட்டிக் குஞ்சு 85/-. அனைத்து கோழிக்குஞ்சுகளையும் ஓடர்செய்து பெற்றுக்கொள்ளலாம்.
கோழி மருந்துகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
**மானிப்பாய் 077 408 1155**
**077 307 2064**

### மல்லாகம் வீடு விற்பனைக்கு உண்டு
மல்லாகம் K.K.S வீதியில் அமைந்துள்ள விசாலாட்சி வித்தியாசாலைக்கு அருகில் 20 3/4 பரப்பு காணியுடன் அமைந்த வீடு விற்பனைக்கு உள்ளது. இந்தக் காணி தோட்டம் செய்யவோ அல்லது மண்டபங்கள் கட்டுவதற்கோ மிகவும் உகந்தது.
**தொடர்பு கொள்ள.**
**021 321 9802/ 077 871 4374**

### வேலைவாய்ப்பு
சந்தைப்படுத்தல் (ஆண்/பெண்) இருபாலரும் தேவை.
**077 017 9574** (CS 4786) (14)

### Vacancy
நாடு பூராவும் பிரசித்தி பெற்ற புரொய்லர் (Broiler Chicken) கம்பனியின் யாழ்.கிளையில் வேலைவாய்ப்பு.
- **விற்பனைப் பிரதிநிதி** (Sales Rep)
- **காசாளர் (பெண்)**
- **விற்பனை நிலைய உதவியாளர்** (ஆண்/பெண்)

077 454 6371 - robert69tdo@gmail.com

### காணி விற்பனைக்கு
யாழ்.நகருக்கு அண்மையிலுள்ள மின்சார நிலைய வீதி, 2ஆம் ஒழுங்கையில் கிட்டத்தட்ட ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. சகல வசதிகளும் ஒரே இடத்தில் அமையப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.
077 187 8213, 077 555 7899

### தேவை
திருநெல்வேலியில் இயங்கும் வியாபார நிலையத்துக்கு விற்பனையாளர், சிட்டை எழுதுநர் தேவை.
அனுபவம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு கொள்ள வேண்டிய நேரம்
பி.ப 1.00 -6.00PM
தொடர்புக்கு: **077 224 7599** (J8724)(10)

### வேலை ஆள்கள் தேவை
யாழ். Clock Tower Lane இல் புதிதாக ஆரம்பிக்க இருக்கும் UK பொறியியல் கல்வி நிறுவனத்திற்கு Receptionist.Administrative . Assistant தேவை. A\L தகுதியுடன் கணினி அறிவுள்ளவர்கள்(அனுபவம்தேவையில்லை) விண்ணப்பிக்கலாம்.
**தொடர்பு . 077 386 7695**
apssengineer@gmail.com

### காணி உடனடி விற்பனைக்கு
உரும்பிராய் குடியிருப்புப் பகுதியில் 10 பரப்புக்காணி உடனடி விற்பனைக்கு உண்டு. உரும்பிராய் / பலாலி வீதி சந்தியில் இருந்து 150 மீற்றர் தூரத்தில் அமைவிடம் எதிர்பார்க்கும் விலை பரப்பிற்கு 9 இலட்சம். பேசித்தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு:
077 444 0165

### அனெக்ஸ் வாடகைக்கு
ஆனைப்பந்தியடியில் அனெக்ஸ் வாடகைக்கு உண்டு. உத்தியோகத்தர்களுக்கு உகந்தது.
**New No: 371/3,**
**நாவலர் வீதி, யாழ்ப்பாணம்**

### பணிப்பெண் தேவை
ஏழாலை மத்தியில் உள்ள வீட்டில் பணிபுரிய 50-60 வயதுக்கிடைப்பட்ட பணிப்பெண் தேவை.
தொடர்புக்கு:
**071 49 666 58 / 077 483 6307** (J/8723)(10)

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்



மஜெஸ்டிக் பிளாட்டினம் 10.30 / 1.30 / 4.30 / 7.30 / 9.30



சில்வர் 10.30 / 1.30 / 4.30 / 7.30






10.30 AM / 1.30 PM பிறொன்ஸ் 4.30 PM
Bahubali 2 7.30 PM
விசாரணை ☎ 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

### அறைகள் வாடகைக்கு உண்டு
யாழ் பல்கலைக்கழகம் அருகில் பலாலிறோட்டில் பல்கலைக்கழக மாணவிகள்/ படிக்கும் மாணவிகள்/ உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கு அறைகள் வாடகைக்கு உண்டு. (CS 4795) (14)
**077 930 0148/ 021 222 7069**

### வீடு வாடகைக்கு
வெள்ளவத்தையில் 42 ஆம் வீதியில் இரண்டு அறைகள் இணைந்த குளியலறைகளுடன் (AC/Non AC) கூடிய தொடர்மாடி வாடகைக்குண்டு.
**077 837 8597** (J 8722) (14)

### வீடு வாடகைக்குண்டு
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் (சத்திரச்சந்திக்கு அண்மையில்) சிறியகுடும்பம் ஒன்று வசிக்கக்கூடிய வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.
**077 977 3254** (J 8707) (14)

## விஷேட பல் வைத்திய சேவை
- **பல் முக சீராக்கல்** (Consultant Orthodontist)
- **முக சத்திரசிகிச்சை** (Consultant Facio Maxillary Surgeon)

**மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்**
- **மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)**
- **ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்**
- **நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல்** (Crown & Bridges, Implants)
- **வேர்முறை சிகிச்சை** (Root Canal Filling)
- **நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்**
- **பற்களை வெண்மையாக்குதல்** (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 934 7687(லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் கட்ட டெங்குக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் அடுத்த வாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

ஜூன் மாதத்தின் இரண்டாவது டெங்குக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை, 16 ஆம் வெள்ளிக்கிழமை ஆகிய இரு தினங்களும் நாடு முழுவதும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பரவி வரும் டெங்கு நுளம்பின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அரச தலைவரின் பணிப்புரைக்கமைவாக நடுவண் சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் ஜூன் மாதத்தில் மூன்று கட்டங்களாக டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அறிவித்திருந்தனர். முதலாவது செயற்பாடுகள் கடந்த முதலாம், இரண்டாம், மூன்றாம் திகதிகளில் நடைபெற்றன. இரண்டாம் கட்டச் செயற்பாடுகள் எதிர்வரும் 15ஆம் மற்றும் 16ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தினரால் எதிர்வரும் 15 மற்றும் 16 திகதிகளில் நடாத்தப்படவுள்ள பொது சுகாதாரப் பரிசோதகர் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளின் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட சரசாலைக் கிழக்கு, மீசாலை மேற்கு, மண்டுவில் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும், 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நகரம் கோயிற்குடியிருப்பு சங்கத்தானை ஆகிய பிரிவுகளிலும் டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் இடம்பெறமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் திணைக்களத்தினருடன் பொலிஸார், படையினர் , பிரதேச செயலகத்தினர் உள்ளுராட்சி சபையினர், கிராமிய டெங்குக் குழுவினர் மற்றும் தொண்டர்களுடன் மூன்று தினங்களில் நடத்திய முதலாம் கட்ட டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளில் குடியிருப்புகள், பாடசாலைகள், தனியார் கல்விக் கூடங்கள், அரச தனியார் நிறுவனங்கள், கட்டட நிர்மாண இடங்கள், சமயத்தலங்கள், பொது இடங்கள், வர்த்தக நிலையங்கள் உட்பட 2 ஆயிரத்து 930 இடங்களில் நடத்தப்பட்ட பரிசோதனைகளில் டெங்கு நுளம்பு உருவாகக் கூடிய இடங்கள் காணப்பட்ட 260 பேருக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டது. 13 பேருக்கு எதிராக வழக்குகளும் பதிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

## மாணவியின் தங்கச் சங்கிலி அறுப்பு

தென்மராட்சி , ஜூன் 11

மாணவியைத் தாக்கி தள்ளி வீழ்த்தி விட்டு, அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றனர் மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் அணிந்திருந்த இருவர். குறித்த மாணவி உதவி கோரி சத்த மிட்டார். எனினும் திருடர்கள் தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று காலை 8.10 மணியளவில் சாவகச்சேரி நுணாவில் பொது நூலகத்துக்கு முன்பாக உள்ள ஒழுங்கையில் இடம்பெற்றது.

தேசியக் கல்வியியல் கல்லூரியில் கல்வியை நிறைவு செய்த நுணாவில் மேற்கைச் சேர்ந்த மாணவி, கல்லூரியில் ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பிக்க காலையில் ஒழுங்கையில் நடந்து வந்துள்ளார். சாலை வளைவில் நடந்து வரும் போது பின் தொடர்ந்து வந்த மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், திடீரென மாணவியைத் தாக்கித் தள்ளிவிழுத்திவிட்டு அவர் அணிந்திருந்த ஒரு பவுண் தங்கச்சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர். சங்கிலியை அறுபட்டதில் மாணவிக்குக் கழுத்துப் பகுதியில் காயம் ஏற்பட்டது. காயமடைந்த மாணவி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஐ-9)

**ஏலவிற்பனை**

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தால் பாவித்த பொருள்கள் (தையல் இயந்திரங்கள், அலுவலக மேசைகள், இரும்புக் கட்டில், T.V ) ஏலத்தில் விற்கப்படும். பொருள்களை காலை 9 மணிமுதல் பார்வையிடலாம்.

திகதி :- 14.06.2017 (புதன்கிழமை) நேரம் :- 4.30 pm
இடம் :- இல.47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

ஏலமெடுக்கும் பொருள்கள் 15.06.2017 (வியாழன்) பிற்பகல் 3 மணிக்கு முதல் வெளியே கொண்டு செல்லப்பட வேண்டும்.
தலைவர் / வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்

**இந்திய முறையிலான சாறி பிளவுஸ் கட்டிங்**

★ சாறி பிளவுஸ் கட்டிங் பயிற்சிகள்.
★ ஆறு (6) விதமானவை (பிளவுஸ் 6, பஞ்சாபி 6)
★ வெளிநாடு செல்பவர்களுக்கு உகந்தது.
★ பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
★ றிச்சேக் பயிற்சிகள் நடைபெறுகின்றன.
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம். T.P: 077 3149 386
(CS/4672)(10)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி



➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
ஆரம்பம் - சில தினங்களில் நேரம்:- 8.30AM
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

**வெற்றிகரமான இரண்டாவது வருடத்தில்.......**




இதுவரை எமது சேவைகளை சிறப்பாக வழங்க உதவிபுரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த




நன்றிகளைத் தெரிவிப்பதோடு எதிர்காலத்தில் எமது சேவைகளே வழங்க உங்கள் ஆதரவையும் ஆசியையும் வேண்டி நிற்கின்றோம்.
நிர்வாகத்தினர்
ஹரிபோல் விருந்தினர் விடுதி
342, கே.கே.எஸ். வீதி, மருதனார்மடம்

**Colombo Express**



விமான நிலையத்துக்குச் சென்றுவருதல் மற்றும் இலங்கை பூரான சுற்றுலாவுக்கு எம்மிடம் இருந்து ( Colombo Express ) வான் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.
AC / NON AC
1Km = 40
T.P:-
077 844 9000 (யாழ்),
076 544 1777
(கொழும்பு)



Email :- cityshan1@yahoo.com



**அம்மா பரமேஸ்வரி ஜோதிட நிலையம் பண்டித் துளசிராம் சுவாமி**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார்கள். வம்சாவளியாக அம்மா பரமேஸ்வரி அருள் கொண்டு கைரேகை முகநாடி பிறந்த திகதி நட்சத்திரம் ஜாதகம் ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக நடந்தவை நடக்கின்றவை. நடக்கப் போகின்றவை இவர் பாரம்பரியமாக ஜோதிடம் சொல்பவர். ஆயுள்பூஜை. லட்சுமிகடாச்சப் பூஜைகள். எல்லா தோசங்களுக்கும் பரிகாரம் செய்யப்படும். வியாபார ஸ்தாபனங்களுக்கும் பரிகாரம் செய்யப்படும். படிப்பு. தொழில். திருமண யோகம். குழந்தைப் பாக்கியம். வெளிநாட்டுப் பயணம். வீடு கட்டுதல். கணவன் மனைவி ஒற்றுமை. காதல் பிரச்சினை. பாலியல் பிரச்சினை. கல்யாண யோகம். வாஸ்திரம் மற்றும் பிரச்சினைகள். எதிரிகள் கண்திருஸ்டி. கோட் வழக்குகள். வாகனப் பொருத்தம். பணப் பிரச்சினை. பிள்ளைகள் குடும்பத்துடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல். லொற்றரி பாக்கியம் மற்றும் வசிகரம் செய்யப்படும். ராசிக் கற்கள் பார்த்துச் சொல்லப்படும். எண்கணிதப்படி மணமக்கள் பொருத்தம் பார்க்கப்படும். நம்பிக்கையுடன் இவரை ஒருமுறை சந்தியுங்கள்.

நேரம்: காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (முலவைச் சந்தி அருகில்)
T.P: 077 2186 324

**காணி, வீடு தேவை**

கௌரவமான குடும்பத்துக்கு கொக்குவில், மானிப்பாய், சுதுமலை, தாவடி, இணுவில் ஆகிய இடங்களில் வீடு, காணி தேவை.
விற்க விரும்புவோர் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
077 144 4464

**றோயல் மார்க்கட்டிங் - Vacancy**

- Sales Representative (விற்பனைப் பிரதிநிதி பெண்கள்)
- Promotion Girls (மேம்பாட்டு பெண்கள்)
  * 18 - 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள்.
  * அனுபவம் உள்ளவர்களும், அற்றவர்களும்.
  * தகைமை O/L
  * சம்பளம் - 25,000 இற்கு மேல்
  * தங்குமிடம் இலவசம்.
  * நேர்முகப் பரீட்சை :- 14/06/2017, 10.00 am

இல.83, கதி அபுபக்கர் வீதி, யாழ்ப்பாணம்.
077 388 3879, 076 821 4839

**உடல் எடை குறைய வேண்டுமா ?**

*எடை கூடுகிறதா ?
*உடல் எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா ?
*வயிறு, மார்பு குறைக்க வேண்டுமா ?
*உடல் எடை குறைகிறதேயில்லை என்கிற கவலையா ?
*ஊளைச்சதையா ?
*வயிற்று கோளாறா ?

விலை 3500
5500, 9000

100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் (பால்மா, குளிசை, கிறீம்) 2 வாரங்களில் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள்.

பதிவு இல : 16168
077 2106 155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

**தலைமுடி நீளமாக வளரவேண்டுமா ?**

தலைமுடி வளரவேண்டுமா? *பேன் பொடுகு தொல்லையா?
*முடி கொட்டுகிறதா ? *இள நரையா ?
*தலையிடியா ? *முடி அடர்த்தி இல்லையா?

பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சைவேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்து காய்ச்சிய எண்ணெய் 100 %ஆயுள் வேத முறைப்படி காய்ச்சிய இவ்வெண்ணெய்யை பாவித்து பலனடைய.

பதிவு இல : 16168
077 263 9037 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.






ஸ்ரீராமஜெயம்

**சௌள உபநயன பிரம்மோபதேச சுபமுகூர்த்த அழைப்பு**

அனேக நமஸ்காரம், உபயசெலோபரி
ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் சுபமங்களமிகு
ஹேவிளம்பி வருஷம் வைகாசித்திங்கள்
28 ஆம் நாள் (11.06.2017) ஞாயிற்றுக்கிழமை மூல நக்ஷசத்திரமும்
துதியை திதியும் அமிர்த சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 6.8 மணிமுதல்
8.19 மணி வரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்
பாரத்வாஜ கோத்திரம்
எமது ஜேஷ்ட குமாரனுமாகிய
**சிரஞ்சீவி ஸ்ரீதரசர்மா (ஸ்ரீ)**
அவர்களுக்கு
சௌள உயக் ஞோபவீத தாரண உபநயன பிரமோபதேசம் செய்ய எமது
குருதெய்வங்களின் திருவருளும் குருவருளும் கைகூடியிருப்பதால்
பெரியோர்களின் ஆசியுடன் எமது இல்ல "ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆயலத்தில்"
நிகழ இருப்பதால் தார்ங்கள் தங்கள் இஷ்டமித்ரபந்துக்கள்
சகிதம் குடும்ப சமேரராய் வருகை தந்து சபையினை சிறப்பித்து திருக்குமாரனை
ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றிளோம்.
உபநயன பிரம்மோபதேச குரு:
ஆகம வைதீக சாஸ்திர வித்தகர்
சிவஸ்ரீ குமார சரவணபவக்குருக்கள் (J.P)
இணுவில்
தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்



"பிரியாபவனம்"
இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
தொ.பே. 077 600 2075

சிவஸ்ரீ ந.ஜெகதீஸ்வரக்குருக்கள்
ஸ்ரீமதி ஜெ.ஜெயந்தி
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சுக்களின் கீழுள்ள அரச நிறுவனங்கள் குறித்த வர்த்தமானி வெளிவந்தது

கொழும்பு, ஜூன் 11

புதிதாக ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களின் அடிப்படையில் ஒரு சில அமைச்சுக்களுடன் இணைந்து கொள்ளும் அரச நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் அயலுறவுத்துறை அமைச்சின் கீழாக வெளிநாட்டுத் தூதரகக் குழு, தேசிய லொத்தர் சபை, அபிவிருத்தி லொத்தர் சபை உட்பட்ட 5 நிறுவனங்கள் இணைந்து செயலாற்றவுள்ளன.

நிதி மற்றும் ஊடக அமைச்சின் கீழ் நிதி, தகவல் திணைக்களம், பத்திரிகைப் பேரவை உள்ளிட்டதான 33 நிறுவனங்கள் உள்ளவாங்கப்பட்டுள்ளன.

காணி அமைச்சின் கட்டுப்பாட்டில், காணி சீர்திருத்த ஆணைக்குழு, காணி அளவைச் சபை, கந்தளாய் சீனித் தொழிற்சாலையுடன் 8 நிறுவனங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான அமைச்சின் கீழ், ஊழியர் நம்பிக்கை நிதியம் உட்பட மூன்று நிறுவனங்கள் இணைக்கப்பட்டுள்ளன. (த)

# வைரவர் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தின் இறுதிநாளான இன்று ஞாயிற்றுக்கிழமை வைரவர் உற்சவம் இடம்பெறும்.

மாலை ஆறுமணிக்கு வைரவப் பெருமானுக்கு சிறப்பு பூசைகள், அபிசேகம் இடம்பெற்று தொடர்ந்து வைரவப் பெருமான் வீதிவலம் வருவார். (ற-17)

## அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய வாகனம் பொலிஸாரிடம் சிக்கியது

தென்மராட்சி தெற்குப் பகுதியிலிருந்து அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த வாகனம் சாலைப் பரிசோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்றது. சாவகச்சேரி பொலிஸ் நிலையப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்த வேளையில், சாலையில் வந்த வாகனத்தை நிறுத்திச் சோதனையிட்டனர். அதன் போது வாகனத்தில் சட்ட விரோதமாக மணல் ஏற்றி வந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. வாகனத்தையும் சாரதியையும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## தென்மராட்சிப் பிரதேச கலைஞர்களிடையே உப குழுக்கள் தெரிவு

தென்மராட்சி, ஜூன் 11

தென்மராட்சி பிரதேச செயலகக் கலாசார அதிகார சபையினர் பிரதேசத்தில் உள்ள கலைஞர்களை இனங்கண்டு அவர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் கலைஞர்களுக்கான உப குழுக்கள் தெரிவு செய்யப்படவுள்ளன.

இதன்படி கலை மற்றும் இலக்கியத்துடன் தொடர்புடைய நாடகம், நாட்டுக்கூத்து, இலக்கியம், சித்த மருத்துவம், கவிதை, பறை, தற்காப்புக் கலை, ஒளிப்படம்,ஒப்பனை, உடையலங்காரம், இசை, ஓவியம், சிற்பம், யோகாசனக் கலை, வில்லிசை , கிராமியக் கலை, ஊடகம், நடனம் சினிமா, திரைத்துறை மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றில் குழுக்கள் தெரிவு செய்யப்படவுள்ளன.

உப குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேசத்தின் கலாசார மற்றும் கலை இலக்கிய முயற்சிகளுக்கு பிரதேச கலைஞர்கள் தமது ஒத்துழைப்பை வழங்குமாறு பிரதேச செயலர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ-9)

# அதிபர்களுக்கான கலந்துரையாடல்

தென்மராட்சி, ஜூன் 11

தென்மராட்சி கல்வி வலயத்தின் வகை 1ஏபி 1சி வகை 11 பாடசாலைகளின் அதிபர்களுக்கான கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வலயக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளன. கல்வி அபிவிருத்தி தொடர்பான பல்வேறு விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் பாடசாலைகளின் அதிபர்களை மட்டும் கலந்து கொள்ளுமாறும், அதிபர் இல்லாத பாடசாலைகளில் பொறுப்பாசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ஐ-9)

ஆர்தரைடிஸ்!!!
(Arthritis)

கார்டிலேஜ் தேய்வடைதல் தேய்வடைவதால் ஏற்படும் வலி மற்றும் மூட்டு வலிகளுக்கு!!!



Baraka
ஆரோக்கியமான வாழ்க்கை, நாளாந்தம்

கருஞ்சீரகத்தின் பரிபூரண நற்குணங்களுடன்...

Jointsafe

இயற்கை Glucosamine மற்றும் கருஞ்சீரகம் அடங்கியது

தினமும் 3 வில்லைகள் வீதம் ஏனைய மருந்துகளுடன் பாவிக்கலாம்
30s - Rs. 435/- | 60s - Rs. 680/-
Hotline: 0117772277
www.baraka.lk

Approval Number: 02/01/PB/08/92

- தேய்ந்துபோன கார்டிலேஜினை (Cartilage) மீளமைக்கும்.
- மூட்டுக்களின் அசைவை இலகுவாக்கும்.
- மூட்டு வலிகளுக்கு நிவாரணம் தரும்.

Fair Choice: People and Planet

சகல சுப்பர் மார்க்கட், பாமசி, ஆயுர்வேத மருந்துவ சாலை முகவர்களிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

## மலேசியா வேலைவாய்ப்பு

மலேசியாவில் முன்னணி கம்பனிக்கு பின்வரும் வேலைவாய்ப்புக்காக தொழிலாளர்கள் இணைத்துக்கொள்ளப்பட இருக்கிறார்கள்.

| | | |
|---|---|---|
| Project Engineer | 02 | 4600 - 5750 MYR |
| Manager Quantity Surveyor | 01 | 6000 - 7500 MYR |
| Draftsman | 02 | 2800 - 3500 MYR |
| Cost Controller | 02 | 4600 - 5000 MYR |
| Manager QA/QC - | 01 | 6000 - 5750 MYR |
| Assistant Manager QA/QC | 01 | 4000 - 7500 MYR |
| Procurement Analyst | 01 | 4000 - 5500 MYR |
| Assistant Lifting Supervisor | 01 | 2800 - 3500 MYR |
| Civil Supervisor | 01 | 3200 -4000 MYR |
| Civil Foreman | 01 | 3200 -4000 MYR |
| Carpenter Foreman | 01 | 3200 -4000 MYR |
| Carpenter | 15 | 1800 -1955 MYR |
| Welder | 15 | 1800 -1955 MYR |

( Subject to change according to exchange rate )

1MYR = 34 LKR

* No Charges for Cvs, CV Collection Only

**Terms & Conditions:**

- வயது வருடங்கள் 21 முதல் 45 வரை
- ஒப்பந்த காலம் 2 வருடம்
- தங்குமிட வசதி, மருத்துவ வசதி இலவசம் மற்றும் உணவு வழங்கப்படாது
- நாளொன்றுக்கான வேலை நேரம் 8 மணித்தியாலங்கள் வாரமொன்றுக்கு 6 நாட்கள் மற்றும் 2 மணித்தியாலங்கள் மேலதிக நேர வேலை
- புறப்படுதல் மற்றும் ஒப்பந்த காலம் முடிவடைந்து நாடு திரும்ப, விமானப்பயண டிக்கட் இலவசம்
- ஏனையவை மலேசிய நாட்டு சட்டத்திற்குட்பட்டது.

அரச அங்கீகாரக்கட்டணம் (125,000/- LKR) மட்டுமே அறவிடப்படும்.

மேலதிக விபரங்களுக்கும், பதிவுகளுக்கும் இன்றே அழையுங்கள்:

0779671571 | 0772716777

AL2755/Advt:02/17

Orient Lanka Employment Agency
LIC No:2755
No: 2/A, St.Joseph Road, Nugegoda. Tel: 0113186396
E-mail:cv.orientlankainfo@gmail.com Web: www.orientlanka.org

CF CENTRAL FINANCE COMPANY PLC

பதிவு செய்யப்பட்ட வாகனங்களின்
## மாபெரும் மலிவு விற்பனை

சென்றல் பினான்ஸ் கம்பனி பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் இருப்பினை முடிவுறுத்தும் முகமாக

மாபெரும் விலைக்கழிவில் விற்பனையை மேற்கொள்கின்றது.
குத்தகை (லீசிங் Leasing) அடிப்படையில் பெற்றுக்கொள்ளலாம்.



★ வான்

அனுமதி இலவசம்



★ லொறி

இருப்புள்ள வரை மட்டுமே



★ கார்



★ உழவு இயந்திரம்



★ முச்சக்கர வண்டி

காலம் : ஆனி 15ஆம் ,16ஆம் ,17ஆம் திகதிகளில்

நேரம் : காலை 8.30-மாலை 5.30

இடம் : யாழ்ப்பாண மாநகரசபை மைதானம் (துரையப்பா விளையாட்டு அரங்கு அருகில்)

உங்களிடம் உள்ள வாகனங்களை காட்சிப்படுத்தி விற்பதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்.

✓வாகன (Original) புத்தகம் கையில் உள்ள CAR, VAN மட்டும் அனுமதிக்கப்படும்.

பதிவு செய்ய வேண்டிய இறுதி திகதி 14.06.2017

- நிபந்தனைக்கு உட்பட்டது.

சென்றல் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
யாழ்ப்பாணம் கிளை

Mob: 077 210 8780 / 077 210 6324 / 077 739 3881 / 077 252 0282

(AJA IN 24008 (10)

## ஜாதிக அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 2017-06-09 | 2143 | சிவப்பு |

மகரம்

வெற்றி இலக்கங்கள்: 10 18 24 48

2144 கிழமை வெற்றிப் பொதி ரூ. 4,143,212/-

விஷேட வெற்றி இலக்கத்தினைக் கொண்ட 07 இலக்கங்கள் பொருந்துவதன் மூலம்

| | | விஷேட வெற்றி இலக்கம் | விற்பனை முகவர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | மோட்டார் வாகனம் | 2272963 | கே.குகதாசன்-யாழ்ப்பாணம் |
| 2 ஆம் பரிசு | 2 ஸ்கூட்டர்கள் | 1793159 | ஏ.ஆர்.எம்.நஸார்-அம்பாறை |
| | | 6205883 | கே.சோமன்-மட்டக்களப்பு |
| 3 ஆம் பரிசு | 3 தங்க ஆபரணங்கள் | 6571269 | என்.மகேந்திரன்-மன்னார் |
| | | 5319302 | டி.டி.சாந்தி-அம்பாறை |
| | | 5774106 | ஏ.சுப்பிரமணியம்-வவுனியா |
| 4 ஆம் பரிசு | Apple i Phone | 1859358 | எஸ்.ஞானச்சந்திரன்-கிளிநொச்சி |
| | | 9289985 | எச்.ஏ.பி.யு.பி.நளிந்த-திருகோணமலை |
| | | 5032596 | கே.திலகவதி-யாழ்ப்பாணம் |
| | | 5578186 | என்.மகேந்திரன்-மன்னார் |
| 5 ஆம் பரிசு | 40 தங்க நாணயங்கள் | 1962058 | எஸ்.அழகையா-திருகோணமலை |
| | | 8070765 | எஸ்.சர்வேஸ்வரன்-அம்பாறை |
| | | 2756232 | கே.திலகவதி-யாழ்ப்பாணம் |
| | | 8154752 | என். ருக்மாதவன்-மட்டக்களப்பு |
| | | 6037314 | கே.திலகவதி-யாழ்ப்பாணம் |
| | | 3707809 | அபிவிருத்தி லொத்தர் சபை 5289-யாழ்ப்பாணம் |
| | | 8384024 | அபிவிருத்தி லொத்தர் சபை யாழ்ப்பாணம்-யாழ்ப்பாணம் |
| | | 4835889 | வி.முத்துக்குமார்-மட்டக்களப்பு |
| | | 1538518 | அபிவிருத்தி லொத்தர் சபை 5289-யாழ்ப்பாணம் |
| | | 7474691 | வி.முத்துக்குமார்-மட்டக்களப்பு |
| | | 9242951 | எஸ்.கிஷோகுமார்-யாழ்ப்பாணம் |
| | | 1679804 | அபிவிருத்தி லொத்தர் சபை 5289-யாழ்ப்பாணம் |
| | | 4586739 | வி.தேவராச-அம்பாறை |
| | | 7499436 | எஸ்.ஞானச்சந்திரன்-கிளிநொச்சி |
| | | 8845891 | எஸ்.குமரகுரு-யாழ்ப்பாணம் |
| | | 8355653 | ஈ.ஏ.பி.உபாலி தர்மரட்ண-திருகோணமலை |
| | | 8769958 | அபிவிருத்தி லொத்தர் சபை யாழ்ப்பாணம்-யாழ்ப்பாணம் |
| | | 6905466 | அபிவிருத்தி லொத்தர் சபை 5289-யாழ்ப்பாணம் |
| | | 9170966 | ஏ.சி.அலிபுள்ள-திருகோணமலை |
| | | 6715358 | எஸ்.செல்வராஜா-அம்பாறை |
| | | 6693226 | எஸ்.சர்வேஸ்வரன்-அம்பாறை |
| | | 8646813 | எஸ்.ஞானச்சந்திரன்-கிளிநொச்சி |
| | | 8866422 | அபிவிருத்தி லொத்தர் சபை 5289-யாழ்ப்பாணம் |
| | | 5422153 | கே.ஜீவகன்-யாழ்ப்பாணம் |
| | | 2334870 | பி.பிரதீபன்-மட்டக்களப்பு |
| | | 6258414 | ஏ.எல்.நஸீம்-அம்பாறை |
| | | 2285879 | டி.பி.வி.வீரசிங்க-திருகோண்மலை |
| | | 9446302 | ஆர்.விஜயகுமார்-யாழ்ப்பாணம் |
| | | 6710388 | வி.நடராஜா-யாழ்ப்பாணம் |
| | | 8890972 | என்.மகேந்திரன்-மன்னார் |
| | | 6109165 | வி.நடராஜா-யாழ்ப்பாணம் |
| | | 4701684 | எஸ்.சர்வேஸ்வரன்-அம்பாறை |
| | | 5253449 | பி.பிரதீபன்-மட்டக்களப்பு |
| | | 1934205 | எஸ்.ஞானச்சந்திரன்-கிளிநொச்சி |
| | | 2967169 | கே.ஜீவகன்-யாழ்ப்பாணம் |
| | | 1959882 | டி.ரத்தீஷ்-யாழ்ப்பாணம் |
| | | 4673616 | எஸ்.சர்வேஸ்வரன்-அம்பாறை |
| | | 9488795 | பி.பிரதீபன்-மட்டக்களப்பு |
| | | 8613395 | கே.ஞானரத்தினம்-மட்டக்களப்பு |
| | | 7335313 | எஸ்.குமரகுரு-யாழ்ப்பாணம் |

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919

2017.06.11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊதா நிற டிக்கட்டுகளாகும். வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு 10 . 01 . 1953

இறப்பு 14 . 05 . 2017



கடந்த 14.05.2017 அன்று கைதடி தெற்கு கைதடியில் சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம்

அமரர் கணபதி சண்முகன் (சண்முகநாதன்)

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வு 13.06.2017 செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி தெற்கு, கைதடி.

குடும்பத்தினர்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும்



தோற்றம் 26.09.1960

மறைவு 12.05.2017

கடந்த 12.05.2017 (வெள்ளிக்கிழமை) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

திருமதி. சசிகலா செல்வராஜா

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (11.06.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பு கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

துர்க்கா இல்லம்
முதலாம் ஒழுங்கை, நடராஜா வீதி,
குளப்பிட்டி, கொக்குவில்.

குடும்பத்தினர்.

(8698)(10)

# வர்த்தக நிலையம் தீக்கிரை



கொழும்பு, ஜூன் 11
மகியங்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான வியாபார நிலையம் ஒன்று நேற்றுமுன்தினம் இரவு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. காத்தான்குடியைச் சேர்ந்த ஒருவரின் வர்த்தக நிலையமே இவ்வாறு தீக்கிரையாகியுள்ளது.

தீயை அணைக்க பொலிஸாரும், பொது மக்களும் முயற்சித்தபோதிலும் வர்த்தக நிலையம் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

தீவிபத்துக்கான காரணம் இதுவரை சரியாகக் கண்டறியப்படவில்லை. சேத விபரங்களும் சரியாக கண்டறியபடவில்லை. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மகியங்கனைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற)

ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் அந்தோனி அக்கினேஸ்

பிறப்பு 10.08.1935

இறப்பு 11.06.2016



ஆண்டொன்று ஆனதுவோ ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மாறாத நினைவுகளால் மனம் வெந்து மாய்கின்றோம்
அழகிய உங்கள் சிரித்த முகம்
என்றும் எம் நெஞ்சங்களில் குடியிருக்கும் அன்புத் தெய்வமே!
ஆண்டவனடியில் இளைப்பாற வேண்டுகின்றோம்.

நெடுந்தீவு
10ஆம் வட்டாரம் (நடுக்குறிச்சி)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

அ.மரியதாசன் - கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை.

நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

தம்பு குமாரசாமி

தோற்றம் 11.09.1935

மறைவு 26.05.2013

திதி: துதியை

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் நான்கு சென்றாலும்
ஆறாது உங்கள் நினைவுகள்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
என்றும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்

பருத்தித்துறை றோட்,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

முதலாம் ஆண்டு சிரார்த்த தினம்

தோற்றம் 25.07.1932

மறைவு 24.05.2016



திருமதி காந்திமதி சண்முகசுந்தரம்

"குடும்பம் ஒரு கோயில்" என்று வாழ்ந்த குல தெய்வமே
குறை ஒன்றும் இல்லாமல் எம்மைக் காத்தீர்
எமக்காகவே உம்மை அர்ப்பணித்தீர்
எப்பிறவியிலும் நீவீர தான் எம் தாய்
உம் குரலோ என்றும் எம் செவிகளில்
உம் தோற்றமோ என்றும் எம் கண்களில்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

[illegible]
[illegible] வடக்கு

குடும்பத்தினர்.

(CS 4798)(10)

## தாய்லாந்துடன் இலங்கை திறந்த வர்த்தக ஒப்பந்தம்

கொழும்பு, ஜூன் 11
இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையில் திறந்த வர்த்தக ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்படவுள்ளது.

இதன் மூலம் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு மற்றுமொரு சந்தைவாய்ப்பைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இருப்பதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை நம்பிக்கை தெரிவித்துள்ளது. (கு)

## வற்றாப்பளைக்கு யாழிலிருந்து இருவர் சைக்கிள் பயணம்

யாழ்ப்பாணம், ஜூன் 11
யாழ்ப்பாணத்திலிருந்து துவிச்சக்கர வண்டிஓட்ட வீரர்கள் இருவர் முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு துவிச்சக்கர வண்டியில் செல்லவுள்ளனர்.

ஆலயத்தின் வருடாந்தப் பொங்கலை முன்னிட்டு துவிச்சக்கர வண்டிப் பயணத்தை இவர்கள் நாளை திங்கட்கிழமை காலை 5 மணிக்குச் சித்தன்கேணி சிவன் கோயி லில் இருந்து ஆரம்பிக்கவுள்ளனர்.

சுழிபுரத்தைச் சேர்ந்த வி.கைலைநாதன் (வயது 62) நவாலியைச்சேர்ந்த ப.இராஜசேகரம் (வயது 55) ஆகிய இருவருமே துவிச்சக்கர வண்டியில் ஆலயத்துக்குச் செல்லவுள்ளனர்.

இவர்கள் இருவரும் கடந்த சிவராத்திரி தினத்தன்று மன்னார் திருக் கேதீஸ்வரம் ஆலயத்துக்கு ஆன்மிகச் சுற்றுலா வாகத் துவிச்சக்கர வண்டியில் சென்று திரும்பியிருந்தனர். (ஐ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் அமைச்சர் பிரியங்கர மீது இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வழக்கு

கொழும்பு, ஜூன் 11

முன்னாள்சிவில்விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரட்ண மற்றும் அவரது பிரத்தியேகச் செயலாளர் ஆகியோர் மீது இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நேற்று முன் தினம் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

முன்னாள் அமைச்சர், சிவில் விமானசேவை அதிகாரசபையின்சட்டதிட்டங்களை மீறி அவரது பிரத்தியேகச் செயலாளரான பி.தயாவன்சவை அபிவிருத்தித் திட்ட ஒருங்கிணைப்பு அதிகாரியாக நியமித்ததன் மூலம் அரசுக்குப் பெரும் நட்டத்தை ஏற்படுத்தியுள்ளார் என்று இந்த இருவர் மீதும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள்அமைச்சர்பிரியங்கர மற்றும் அவரது பிரத்தியேகச் செயலாளர் பி.தயாவன்ச ஆகியோர் மீது5குற்றச்சாட்டுக்களை இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு முன்வைத்துள்ளது.

அமைச்சர் பதவியிலிருந்த 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திலேயேபிரத்தியேகச்செயலாளரான பி.தயா வன்சவை அபிவிருத்தித் திட்ட ஒருங்கிணைப்புஅதிகாரியாக நியமித்துள்ளார். இதன்மூலம் அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தியுள்ளாரென இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு குற்றம் சுமத்தி யுள்ளது.

இந்த வழக்கு நாளை மீண்டும்விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (து)

## இலங்கை வெள்ள இடரை 49ஆண்டுகளுக்குமுன்பே கணித்த அமெ. நிறுவனம்



கொழும்பு, ஜூன் 11

மூன்றுபிரதான ஆறுகளுக்கும் குறுக்கே, ஆறு பெரிய அணைகளை அமைக்கும் வரை, இலங்கை பெரிய வெள்ள மற்றும் மண் சரிவு ஆபத்துக்களை எதிர்கொள்ளும் என்று அமெரிக்கப் பொறியியல் நிறுவனம் ஒன்று 49 ஆண்டுகளுக்கு முன்னரே எச்சரித்துள்ளது.

உள்நாட்டுவிவகாரஅமைச்சர்வஜிர அபேவர்த்தன இந்தத்தகவலைவெளியிட்டுள்ளார்.

களுகங்கை, ஜின்கங்கை, நில்வளகங்கைஆகியஆறுகளுக்குக் குறுக்கே, பல்வேறு இடங்களில் ஆறு அணைக்கட்டுகளை அமைக்கவேண்டும்என்று அமெரிக்க நிறுவனம் இலங்கை அரசுக்குத் திட்டம் ஒன்றை முன்வைத்திருந்தது.

இந்தத்திட்டத்தைச்செயற்படுத்துவதன் மூலமே வெள்ள ஆபத்தில் இருந்து பாதுகாப்புத்தேட முடியும்.

கொலராடோவைச் சேர்ந்த ஈசிஜ பொறியியல் ஆலோசனை நிறுவனமே இந்த ஆய்வை மேற்கொண்டிருந்தது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (து)

## சுற்றுலாப் பயணிகளின் வருகை வீழ்ச்சி

கொழும்பு, ஜூன் 11

இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை வீழ்ச்சி கண்டுள்ளதாகத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த மே மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2.5 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. மத்திய கிழக்கு, தெற்காசியா போன்வற்றிலிருந்து வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சி இதற்கான காரணமாகும். (து)




### மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில்

## பொதுநலவாய மாநாட்டால் 400 மில்லியன் ரூபா இழப்பு

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்ற தலைவர்களுக்காகப் புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு வாகனங்களால், இலங்கை அரசுக்கு 400 மில்லியன் ரூபா இழப்புஏற்பட்டதாகக் கணக்காய்வாளர்திணைக்களம் தெரிவித்துள்ளது.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில், 2013ஆம் ஆண்டு பொதுநலவாயத் தலைவர்களின் மாநாடு கொழும்பில்நடைபெற்றது.

இதில்பங்கேற்றவெளிநாட்டுத் தலைவர்களின் பயன்பாட்டுக்காக, 82 சொகுசு வாகனங்களை மகிந்த ராஜபக்ச அரசு இறக்குமதி செய்திருந்தது.

இந்த வாகனங்கள் பின்னர் குறைந்த விலைக்கு விற்கப்பட்டுள்ளன. இதனால்அரசுக்கு400மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டதாக கணக்காய்வாளர் திணைக்களம் கூறி யுள்ளது. (து)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீர்க்கமான முடிவொன்றை எடுக்கும் கட்டாயத்தில் முஸ்லிம் தலைமைகள்

## அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன்11

இலங்கையில் முஸ்லிம்களின் சொத்துக்கள் மீது திட்டமிட்ட வகையில் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் முஸ்லிம்களும் முஸ்லிம் அரசியல்வாதிகளும் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர். குறிப்பாக முஸ்லிம் அரசியல்வாதிகள் சமூகத்தின் நலனை முன்னிறுத்தி அரசியல் நீதியான முடிவுகளை எடுக்கவேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது என அமைச்சர் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.



மகியங்கனையில் நேற்று முன்தினம் முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்று தீக்கிரை யாகியது.

இது குறித்து அமைச்சர் ரிசாத் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தொடர்ச்சியாக முஸ்லிம்களின் வியாபார நிறுவ னங்கள் எரிந்து சாம்பலாகின்றன.

பள்ளிவாசல்கள் பெற்றோல் குண்டுகளால் தாக்கப்படுகின்றன. அதுவும் நள்ளிரவில் மிகவும் திட்டமிட்டு இந்த அராஜகங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீண்டும்மீண்டும் முஸ்லிம் சமூகத்தின் பொருளாதாரத்தை இலக்கு வைத்து வேண்டுமென்றே அழித்து வரும் நாசகாரிகளைக் கண்டுபிடிக்கவேண்டிய பொலிஸாரும் வியாக்கியானம் கூறி வருவது வருந்தத்தக்கது.

மகியங்கனைச் சம்பவத்தைத் தான் எடுத்துரைத்த போது வயர் சோட்டாய் இருக்கலாம் என்று பதிலளிக்கப்படுகிறது.

தொடர்ந்து 2 மாதங்களாக முஸ்லிம்களுக்கு சொந்தமான வியாபார நிறுவனங்கள் எரிந்து சாம்பலாகிக் கொண்டிருக்கின்றன. பள்ளிவாசல்கள் பெற்றோல் குண்டுகளால் தாக்கப்படுகின்றன. அதுவும் நள்ளிரவில் மிகவும் திட்டமிட்டு இந்த அராஜகங்களை இனவாதிகள் புரிந்து கொண்டிருக்கும்போது பொலிஸார் சாக்குப் போக்குச் சொல்லித் தூங்கிக் கொண்டிருக்கின்றனர்.

அரசுமும் காத்திரமான எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

மகியங்கனையில் கடை எரிந்த சமயம் இரண்டு பொலிஸார் அந்தக் கடைக்கு முன்னாலேயே நின்று கொண்டுருந்தனரென அங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

நுகேகொடை கடைகளை எரித்தார் என முன்னாள் சிப்பாய் ஒருவர் ஒப்புக் கொண்டிருக்கின்றார். எனவே பொலிஸார் பொறுப்பற்ற பேச்சுக்களை நிறுத்தி தீயசக்திகளை கண்டுபிடித்துச் சட்டத்தின் முன் கொண்டுவரவேண்டும். இல்லாவிட்டால் நாட்டில் விபரீத விளைவுகளே ஏற்படும் - என்றுள்ளது.

(த-ய)




# தாயின் காய்ச்சல் குளிசைகளை உட்கொண்ட சிறுமி உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 11

தாயார் காய்ச்சலுக்கு வாங்கிய மாத்திரைகளைத் தவறுதலாக உட்கொண்ட நான்கு வயதுச் சிறுமி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கம்பஹா கனேமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தாயார் குளியலறையில் இருந்தவேளையில் மேற்படி சிறுமி தனது தாயார் வைத்திருந்த மாத்திரைகளில் சுமார் 10 வரை எடுத்து உட்கொண்டுள்ளார்.

அந்த மாத்திரைகளில் இருந்த அதிகளவான இரும்புச் சத்து சிறுமியின் உடலில் சேர்ந்தமையே இறப்புக்குக் காரணம் என உடற்கூற்று பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கனேமுல்ல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-ய)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## இலங்கை சுரண்டும் டிக்கட்டுக்களில் அதிக பணப் பரிசுகளை வெற்றியாளர்களுக்கு அள்ளி வழங்கும், அபிவிருத்தி உடனடி

நீங்கள் ஆயிரக் கணக்கில் வெற்றிபெறுவதற்கு, அபிவிருத்தி உடனடி லொத்தர்களை வாங்குங்கள். வெற்றி நிச்சயம்!

**அபிவிருத்தி உடனடி**

**ரூ.500,000/-ஐ வென்ற வெற்றியாளர்கள்**

| | |
|---|---|
| திரு. எல்.சி. குணவர்தன | பிலியந்தல |
| திரு. ஏ.ஜி.என். நஸ்ரின் | அகுரன |
| திருமதி. எச்.ஜி.பீ.ஐ. பிரியந்திக்கா | போகஹ வெவ |
| திருமதி. எச்.எம்.ஐ.பி. ஹேரத் | வத்தளை |
| திரு. எஸ்.ஆர்.டப்.டி.ஜே. சேனாநாயக | மஹவ |
| திரு. ஜே.எம்.சி. குமார | தனமல்வில |
| திருமதி. எம்.ஏ.செவ்வந்தி | இமதூவ |

**ரூ.100,000/-ஐ வென்ற வெற்றியாளர்கள்**

| | |
|---|---|
| திரு. எஸ்.ஏ.எஸ்.எஸ். சமரதுங்க | எலிபிச்சிய |
| திரு. எம்.ஏ.விக்கிரமசிங்க | தலகிரியாகம |
| திரு. எம்.எச்.எல்.எல். சில்வா | இலுக்ஹேன |
| திரு. எஸ்.ஆர்.ஜீ. நந்தசேன | தெலிச்சவில |
| திரு. எச்.எம்.டப். அபேரத்ன | அலவ்வ |
| திரு. எல்.பி.ஜி. சரத்சந்ர | யக்வில |
| திருமதி. எச்.ஏ. சுமனாவதி | கிதுல்கலை |
| திருமதி. ஆர். நாகராணி | வவுனியா |
| திரு. என்.பி.என். செனவிரத்ன | குளியாபிட்டிய |
| திருமதி. எச்.கே. சந்திரலதா | அம்புருகல |
| திரு. எம்.எச்.எல்.எல். சில்வா | இலுக்ஹேன |
| திரு. டி.கே.எஸ்.கே. சந்திரசேகர | கடுபொத |
| திரு. எம்.ஏ. கருணாரத்ன | அவிஸ்ஸாவளை |
| திரு. ஆர்.ஆர்.என். பெரேரா | கொழும்பு 15 |
| திரு. ஏ. பேரின்பராஜா | கல்முனை |
| திரு. டி.என். ஜயசிங்க | முதுன்கொட |
| திரு. ஜே.ஏ.சி.எம். ஜயசிங்க | தும்மலசூரிய |
| திரு. ஆர். குணரத்ன | வீகொவ்வ |
| திரு. என்.எஸ்.என். ஜயவர்தன | ஹோமாகம |
| திரு. எச்.எம்.சி.கே. ஹேரத் | முதுன்கொட |
| திரு. டப்.கே.எஸ்.கே. முனசிங்ஹ | மாவதகம |
| திரு. ஆர்.எம்.என். ரோஹன | பொலன்னறுவை |
| திரு. டப்.எம்.எல்.பி. விஜயகுருப்பு | வாரியபொல |
| திரு. ஏ.எச்.ஆர்.சி. ரஷாங்க . | தொடன்தூவ |
| திரு. டப்.எல்.பி. குமார | வரகாபொல |

**ரூ.50,000/-ஐ வென்ற வெற்றியாளர்கள்**

| | |
|---|---|
| திரு. ஏ.எம்.எம்.பி. அபேகோன் | படல்குபுர |

**ரூ.25,000/-ஐ வென்ற வெற்றியாளர்கள்**

| | |
|---|---|
| திரு. எம்.கே. சந்திரகுமார் | கொழும்பு 10 |
| திரு. ஏ.டி.ஜி.கே. விஜேகுணவர்தன | பானந்துரை |
| திருமதி. பி.எல்.ஆர். ஷாமலி | வெல்லம்பிட்டிய |
| திரு. ஜி.கே.சி.எஸ்.கே. த அல்விஸ் | கடவத்தை |
| திரு. என்.எஸ். அப்புஆராச்சி | கனேமுல்ல |
| திரு. ஆர். வியனகே | கொழும்பு 06 |
| திருமதி. பி.ஐ. குரேரா | சீதுவ |
| திருமதி. எஸ். விஜயலட்சுமி | இரத்மலானை |
| திருமதி. ஏ.பி.எஸ்.சி. பிரியதர்ஷினி | கடான |
| திரு. எச்.எம்.எச். பண்டார | தலாத்துஓய |
| திரு. பிரியந்த சமரரத்ன | கொட்டிகாவத்த |
| திரு. டப்.எம்.டி.டி. பண்டார | மாவனெல்லை |
| திருமதி. எச்.வி.எஸ்.ஜே பெரேரா | தெல்வகுர |
| திரு. எச்.ஏ. ஆரியபால | |
| திரு. எம்.ஏ.சி.எஸ். பார்ணாந்து | கந்தானை |
| திரு. டி.எம்.எம்.எம். திசாநாயக்க | நவகத்தேகம |
| திரு. ஜி.ஏ.எம்.ஏ.எல். குணரத்ன | பேமிமுல்ல |
| திரு. கே. சகாதேவன் | சிலாபம் |
| திரு. எம்.கே.டி. குணதிலக்க | கேகாலை |
| திரு. ஆர். தர்ஷன் | வத்தளை |
| திருமதி. பி.சி. மேரி | ஹொரண |
| திரு. கே.டப்.எஸ்.ஏ. கருணாதிலக்க | அங்குருவாதொட |
| திரு. கே.டப்.ஜி.என். தேசப்பிரிய | பானந்துரை |
| திருமதி. ரி.எஸ். ரூபிகா | ராகம |
| திரு. சி.ஆர்.டப். வணிகசேகர | பன்னிபிட்டி |
| திரு. எம்.ஏ.ஆர்.ஏ பர்ணாந்து | வாத்துவ |
| திருமதி. எஸ்.டி.என்.பி. காந்தி | பிலியந்தலை |
| திரு. எல்.ஜே.எஸ். நிஹால் | உடுகம்பளை |
| திரு. எஸ்.டி. மல்லவஆரச்சி | பொலன்னறுவ |
| திரு. ஏ.ஜி.பி. பண்டார | அப்புத்தளை |
| திரு. எச்.ஜி.ஜே.எஸ். விஜயசிறி | லேவெல்ல |
| திருமதி. எச்.ஏ.டி.ஐ. லக்மினி | கடவத்த |
| செல்வி. கே.ஏ.எம். சேனாரத்ன | பண்டாரகம |
| திரு. ஏ.ஜி.ஜே.கே.அங்கேஹெட்டிகே | கொழும்பு 15 |
| திரு. எஸ்.எம்.பிரேமதிலக்க | பத்தரமுல்ல |
| திரு. ஈ. ரோஹித | கடவத்த |
| திரு. கே.எம். [illegible] | அலவ்வ |
| திரு. எல்.ஜே.[illegible] | இல. 325/[illegible] |
| திரு. டப்.என்.பிரேமரத்ன | தெஹியோவிட்ட |
| திரு. ஏ. வில்சன் | இல. 110 |
| திருமதி. எம்.எல். பின்து | களனி |
| திருமதி. ரி.எஸ். பிரியதர்ஷினி | மொரட்டுவ |
| திரு. எம்.பி. சுமனசேன | பஸ்யால |
| திரு. எம்.பி.ஆர்.யு. குமார | நிட்டம்புவ |
| திரு. பி.டி. ஆனந்தலால் | இல. 18/29 |
| திருமதி. டப்.ஏ. தேவிகா | ராஜகிரிய |
| திரு. எம்.கே.கருணாரத்ன | பலாங்கொடை |
| திரு. யு.டப்.பர்ணாந்து | மங்கொன |
| திருமதி. டப்.வி. மல்லிகா | வெல்லம்பிட்டிய |
| திரு. பி.டி.எஸ்.பி. திசாநாயக்க | கேகாலை |
| திரு. கே.சி.டப். பர்ணாந்து | அம்பகஸ்தொவ |
| திரு. எஸ்.ஈ.வீரக்கொடி | பிலியந்தல |
| திருமதி. ஜே.பி.எல்.ஏ. ஜயசூரிய | அல்கம |
| திரு. டி.ஏ.டி.ஆ.பி. விமலரத்ன | வேபட |
| திரு. கே. உஷாந்தன் | கந்தானை |
| திரு. பி.ஜி.எஸ்.ஆர். குமார | பொலன்னறுவ |
| திருமதி. கே.கே. பத்மாவதி | அங்கொட |
| திரு. என். தவராஜன் | ராஜகதலுவ |
| திரு. எல்.பி. பெரேரா | கோணவல |
| திரு. கே.எஸ். சில்வா | தர்கா நகர் |
| திருமதி. டப்.எம்.பி. குமுதினி | திவுலப்பிட்டிய |
| திரு என்.பி.த சில்வா | நுகேகொடை |
| திரு. எஸ்.எம். பர்ணாந்து | பானந்துரை |
| திரு. ஏ.எஸ். பிரியதர்ஷன | அகரவத்த |
| திருமதி. கிஷாந்தி விதானகே | அக்குருகொட |
| திருமதி. எஸ்.எம்.எஸ். சந்தமாலி | ஜா-எல |
| திரு. ஜீ.டி.பி. பிரேமலால் | பீம்புவ |
| திரு. எல். சமரவீர | களனி |
| திருமதி. கே.ஜி. ஆரியவதி | ஹங்வெல்ல |
| திருமதி. ஈ.எம்.சி.பொடிமெனிகே | கனேமுல்ல |
| திரு. ஐ.எச்.ஏ. அனில் | இங்கிரிய |
| திரு. எல். ஆசீர்வாதம் | நாவலப்பிட்டி |
| திரு. என்.டப்.எம். லொகுலியன | பானந்துரை |
| திருமதி. டி. க்ளேஸ் | இல.195/33 |
| | கசகாவத்தை |
| திரு. ஈ.எம். வில்பட் | ஹிங்குராங்கொட |
| திரு. ஜே.எம்.ரி.சி. ஜயசிங்க . | கடவத்த |
| திரு. ராசதுரை | கொக்கட்டிச்சோலை |
| திரு. [illegible] | அதபான்கொட |
| திருமதி. எஸ். [illegible]க்கியம் | இக்கடுவ |
| திரு. ஆர்.பி.டி. ஆரியரத்ன | கொழும்பு 05 |
| திரு. எம்.ஜே.எம். பர்ஷான் | கொழும்பு 02 |
| திரு. ஜி.டி. மதுஷங்க | வத்தளை |
| திரு. கே.வி.ஐ. லக்மால் | தெலிச்சவில |
| திரு. என். தயாபரன் | ஆரையம்பதி |
| திரு. கே. கருப்பையா | தெஹிவளை |
| திரு. டீ.பி.எச்.ஏ. தியுனுகல | இபுலான |
| திருமதி. டி.எச்.என். நந்தனி | ராஜகிரிய |
| திரு. எச்.பி. பிரேமானந்த | ராகம |
| திரு. ஜே.எம்.சி.டீ. ஜயசிங்க | கடுவலை |
| திரு. ஏ.ஏ.எஸ். கொடிதுவக்கு | ரதாவான |
| திரு. கே.ஏ. குணசிங்ஹ | கொழும்பு 03 |
| திரு. யு.கே.ஆர்.டீ. பெரேரா | கொழும்பு 14 |
| திரு. பி.எம்.டி. பர்ணாந்து | இரத்மலானை |
| திரு. ஆர்.பி.டப். பெரேரா | ரஜவக்க |
| திரு. பி. முத்து | வெல்லம்பிட்டிய |
| திரு. ஆர்.ஏ.எஸ். ரணதுங்க | மண்டாவெல |
| திருமதி. கிறிஷாந்தி விதானகே | தெலிச்சவில |

**சிங்கப்பூர் சவாரி வென்ற வெற்றியாளர்கள்**

| | |
|---|---|
| திரு. கே. அமரகோன் | கொடபொல |
| திரு. எம்.ஏ. சதோராஸ் | நாரம்மல |
| திரு. கே.ஜி.டப்.பி. பெரேரா | பண்டாரகம |
| திருமதி. ஜே.எஸ்.ஜி. நிலந்திகா | அம்பாந்தோட்ட |
| திரு. ஜே.ஏ.கே.ஆர். சந்தருவன் | கம்பஹா |
| திரு. பி.டி.எஸ். வீரசிங்க | ஹிகுரங்கொட |
| திரு. பி.ஏ.யு. நந்தன | கோனபொல சந்தி |
| திரு. ஈ.டப்.எம்.பி.டப்.ஏ.ஐ. விக்ரமசிங்க | இராகலை |

**தொலைக்காட்சிப் பெட்டியை வென்ற வெற்றியாளர்கள்**

| | |
|---|---|
| திரு. எஸ். விஜேந்திரன் | தெஹிவளை |
| திரு. ஆர்.பி.எஸ்.டி. ராஜபக்ச | கெடஹெத்த |
| திரு. எஸ்.ஏ.ஜே. அந்தனி | நாரங்கொட |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
நிதி அமைச்சு

PHOENIX O&M

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# வறட்சிப் பாதிப்புக்கு உதவி உடன் அவசியம்

அண்மைய நாள்களாக தெற்கில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடர் தொடர்பாகவே அரசின் எல்லா மட்டங்களிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. கன மழையால் ஏற்பட்ட மண் சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கில் 200க்கும்மேற்பட்டோர்உயிரிழந்தனர். ஆழிப்பேரலைப் பேரிடருக்குப்பின்னர்இடம்பெற்றமற்றொருஇயற்கைப் பேரிடர் என்ற அடிப்படையில் இலங்கையின் ஒட்டுமொத்தக்கவனமும்அங்குபாதிக்கப்பட்டவர்களை நோக்கித் திரும்பியிருப்பது ஏற்கத்தக்கதே. ஆனால், அதேநேரத்தில் வட்பகுதி வறட்சியால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அது குறித்தும் கொழும்பு அரசு உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

வறட்சியால் வடக்கில் 4 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்என்று பேரிடர்முகாமைத்துவ நிலையம்அறிவித்துள்ளது. குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு மற்றும்தேவைகளுக்கானதட்டுப்பாடு, கால்நடைகளுக்குக் குடிக்கத் தண்ணீர் கிடைக்காத நிலை என்று அன்றாட வாழ்வில் வறட்சி பாதிப்பை ஏற்படுத்துவதுபோக வாழ்வாதாரமான விவசாயமும் பெரும் அழிவையும் பாதிப்பையும் சந்தித்துள்ளது.

கடந்த காலபோகத்தில் நெற்செய்கை, அரைவாசிக்கும் மேலானது வறட்சியால் அழிந்து போயிருக்கிறது. சிறு தானியப் பயிர்களும்கூட வறட்சியால் பாதிப்படைந்திருக்கின்றன. இதனால் 4 லட்சம் பேருக்கும் மேலானவர்களின்வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இது வடக்கு மக்கள் தொகையில் கிட்டத்தட்ட அரைவாசி.

பாதிப்பு அதிகமாக இருக்கின்றபோதிலும் இதுவரைக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் எவையும் கொழும்பு அரசாலோ, மாகாண அரசாலோ வழங்கப்படவில்லை. காலபோகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு சரி. சிறு தானியப் பயிர்களையிட்டு நட்டப்பட்டவர்களுக்கோ, வறட்சியால் வாழ்வாதாரத்தை இழந்துதவிப்பவர்களுக்கோஎந்தஉதவித் திட்டங்களும் அறிவிக்கப்படவில்லை.

அனைவரதுகவனமும்தெற்கில்வெள்ளமற்றும்மண்சரிவுப் பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களின் மீது குவிந்து கிடப்பதால், வடக்கின் வறட்சியைப் பற்றி எவரும் அக்கறைப்படவும் இல்லை, திட்டமிடவும் இல்லை. தெற்கில் நிலமை இப்போது வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில், கொழும்பின் கவனம் வறட்சியால் பாதிக்கப்பட்ட வடக்கு நோக்கியும் திரும்ப வேண்டியிருக்கிறது.

அந்தக் கவனத்தைத் திருப்புவதற்காக நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தனது குரலைஉயர்த்தி இருக்கிறார். ''வடக்குமாகாணத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தி மக்களுக்குஉரியஉதவிகளைவழங்கவேண்டும்'' என்று அவர் வலியுறுத்தியிருக்கிறார். அவரது குரலுக்குச் செவிசாய்த்தாவது வடக்கில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய உதவித் திட்டங்களைக் கொழும்பு விரைந்து ஆரம்பிக்க வேண்டும்.

உதவிகளை வழங்கும்போது, அரசு நேர்மையுடனும் மாற்றாந்தாய் மனப்பான்மை இல்லாமலும் நடந்து கொள்வதும் மிக முக்கியம். தெற்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 25 லட்சம் ரூபா செலவில் வீட்டுத் திட்டம் உட்படப் பல திட்டங்கள் செயற்படுத்தப்படு கின்றன. அதுபோன்ற அக்கறையுடனும், சமமாகவும் வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உதவிகள் வழங்கப்படவேண்டும். எப்போதும் தெற்கு மக்களுக்குஒன்று என்றால்மட்டும்ஓடி ஓடி உதவும்அரசாக மட்டும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுவிடாமல், பாதிக்கப்பட்டுள்ளதமிழ், முஸ்லிம் இன மக்களுக்குமான அரசாகத் தன்னை நிலை நிறுத்திக்கொள்வதில் கொழும்பு கவனமாக நடந்துகொள்ள வேண்டும்.

# எதிர்கால இலங்கையில் இனவாதம் வேண்டாமே!



சேரலாதன்

அரசு மீதும் பொலிஸார் மீதும் நம்பிக்கை இல்லாத காரணத்தினால் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளரான ஞானசாரதேரரைத் தாம் பாதுகாப்பானதொரு இடத்தில் மறைத்து வைத்துள்ளோம் என அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரான டிலந்த விதானகே கூறியிருப்பது வேடிக்கையாகவுள்ளது.

பொதுபல சேனா முழுக்க முழுக்க இனவாதத்தைத் தூண்டி வருமொரு அமைப்பாகும். அதன் பொதுச் செயலாளரான ஞானசாரதேரர். இனவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுவதிலேயே முழு நேரத்தையும் செலவிட்டு வருபவர்.

அண்மையில் குருநாகலில் முஸ்லிம் பள்ளிவாசல் தாக்கப்பட்டதன் பின்னணியில் ஞானசாரதேரர் இருந்ததாகச் சந்தேகம் எழுந்தது. இதன் அடிப்படையில் பொலிஸார் அவரைக் கைது செய்வதற்காகத் தேடி வந்தனர். ஆனால் அவர் தலைமறைவாகிவிட்டார். ஆரம்பத்தில் உடல் நலக்குறைவு காரணமாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சைப் பெறுகிறார் எனக் கூறப்பட்டது. தற்போது ஞானசாரதேரரை ஐ.எஸ் அமைப்பின் மூலமாகக் கொலை செய்வதற்குச் சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஐ.எஸ். பயங்கரவாதக்குழு இலங்கையில் உள்ளதாகவும், அதனைப் பயன்படுத்தி ஞானசாரதேரரைக் கொல்வதற்குச் சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்றும் பொதுபல சேனா அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பகிரங்கமாகக் கூறியமை பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## இனவாதக் குழுக்கள் உருவானமைக்கு நாட்டை நிர்வகித்த அரசுகளே காரணம்

இனவாதக் குழுக்கள் நாட்டில் உருவெடுத்தமைக்கு மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் தான்பொறுப்புக்கூறவேண்டும். இனவாதச் சக்திகளை ஆரம்பத்திலேயே இனம் கண்டு இல்லாமல் செய்திருந்தால் இனப்பிரச்சினை என்பதே நாட்டில் தோன்றியிருக்காது. பெரும்பான்மையின மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சியில் அமர்வதற்கு இனவாதக் கொள்கை அடிப்படையில் செயற்படுவதே மிகச் சிறந்த வழியென்பதை தெற்கி[illegible] கின்ற வரை இனவாதம் [illegible] நாட்டிலிருந்து ஒழிந்துபோகவே மாட்டாது. ஆனால் ஞானசாரதேரர் போன்ற மதத்துறவிகள் இனவாதம் பேசுவதும், இனவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுவதும் எந்த வகையிலும் மன்னிக்க முடியாத குற்றங்களாகும். முன்னாள் அரச தலைவரான சந்திரிகா அம்மையார் இதை வெகு அழகாகக் குறிப்பிட்டுள்ளார். "இனவாதத்தைத் தூண்டுகின்ற பௌத்த பிக்குகளைத் தேரர்கள் என்று அழைப்பதற்கு நான் விரும்பவில்லை. அவர்கள் தேரர்களாக இருப்பதற்கும் தகுதியற்றவர்கள்" என அவர் கூறியுள்ளமை தற்போதைய சூழ்நிலையில் முக்கியத்துவம் பெறுகிறது. சிறுபான்மையினருக்கு ஒருநியாயமும் பெரும்பான்மையினருக்கு வேறொரு நியாயமும் தான் இந்த நாட்டில் காணப்படுகின்றது. சிறுபான்மையினர் என்றாலே ஓர் ஏளனமான பார்வையைத்தான் இங்கு காணமுடிகின்றது. அதிலும் பௌத்த தேரர்கள் பகிரங்கமாக இனவாதச்செயல்களில் ஈடுபடுவதையும் இங்குதான் காணமுடிகின்றது.

## ஞானசாரதேரரது பாதுகாப்புக்கு அரசே பொறுப்பு

ஞானசாரதேரரின் உயிருக்கு ஆபத்து என்றால் அவருக்குப் பூரண பாதுகாப்பு வழங்கவேண்டிய பொறுப்பு அரசைச் சார்ந்ததே. ஒருவர் எத்தகைய குற்றவாளியாக இருந்தாலும் அவரது உயிர் பறிக்கப்படுவது நியாயமானதாகக் கொள்ள இயலாதது. ஆனால் ஞானசாரதேரர் விடயத்தில் முரண்பாடான காட்சிகளையே காணமுடிகின்றது. அமைச்சர் மனோகணேசனின் அலுவலகத்தினுள் அழையா விருந்தாளியாக நுழைந்து அவர் புரிந்த அட்டகாசம் கொஞ்ச நஞ்சமல்ல. அமைச்சர் றிசாத் பதியுதீனின் அலுவலகத்தினுள் நுழைந்து தமக்கு வேண்டாத ஒருவரை முன்பொரு தடவை இவர் தேடியது மறகக்முடியாத சம்பவமாகும். இவ்வாறான ஒருவரின் உயிருக்கு முஸ்லிம் பயங்கரவாத அமைப்பொன்றினால் ஆபத்து இருப்பதான செய்தி, பொலிஸார் அவரைக் கைது செய்வதற்காகத் தேடும் போதுதான் வெளிவந்துள்ளது. தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகின்ற நாடகங்களில் வருகின்ற நம்ப முடியாத காட்சிகள் போன்றே ஞானசாரதேரரின் நடவடிக்கைகளும் அமைந்துள்ளன.

## முஸ்லீம் நாடுகளைப் பகைக்க முயலாது இலங்கை அரசு

இலங்கையில் இடம்பெறுகின்ற முஸ்லிம் மக்களுக்க எதிரான நடவடிக்கைகள் உலகளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்திவிடக்கூடியவை. ஏனென்றால் முஸ்லிம்கள் இல்லாத நாடே இல்லையெனும் அளவுக்குத் தற்போதைய உலக நிலைமை காணப்படுகின்றது. இலங்கை அரசும் பொருளாதார நலன்கருதி முஸ்லிம்நாடுகளுடன் உறவைப்பேணிவருகின்றது. இலங்கையின் எண்ணெய்த் தேவைகளையும் முஸ்லிம் நாடுகளே நிறைவேற்றி வருகின்றன. இந்த நிலையில் அந்த நாடுகளின் அதிருப்தியைச் சம்பாதிப்பது இலங்கைக்கு நல்லதல்ல. மியன்மார் நாட்டிலும் பௌத்தர்களே பெரும்பான்மையினராக உள்ளனர். முஸ்லிம்கள் அங்கும் சிறுபான்மையினர் என்ற வகையிலேயே வாழ்ந்து வருகின்றனர். அங்கும் பௌத்தர்களால் முஸ்லிம் மக்கள் துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர். இது ஏனைய நாடுகளில் வாழ்கின்ற முஸ்லிம்களால் பலத்த கண்டனங்களுக்கு ஆளானது. அத்தகையதொரு நிலைதான் இலங்கையிலும் காணப்படுகின்றது.

நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்றாக அமர்ந்து பேசி சகல இனவாத அமைப்புக்களையும் தடைசெய்வதற்கான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும். சிறுபான்மையினர் மத்தியில் இவை காணப்பட்டாலும் அவற்றையும் தடைசெய்ய வேண்டும். மேலும் இனவாதம் பேசுவோர், இனவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் கடுமையானதண்டனையைஅனுபவிக்கும் வகையில் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

இனவாதம் இல்லாததொரு நாடு மலரும்போது பொருளாதாரமும் உயர்ந்து அனைத்து மக்களின் மனங்களிலும் வாழ்விலும் அமைதியையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்திவிடமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களப் படையினரின் படுகொலைகள்வரிசையில் வரலாற்றில் பதிவான ஜூன் 10 ஆம் நாள்

■ மு.ஈழத்தமிழ்மணி

முதலாம்கட்ட ஈழப்போர் வேளையில் படையினர் அப்பாவித் தமிழ் மக்கள்மீது ஆகாய, தரைவழி, கடல் மார்க்கத்தாக்குதல்களைமேற்கொண்டு வந்தனர்.

வடபகுதி மீனவர்கள் வடபகுதிக் கடலில் மீன்பிடிப்பதைத் தடுக்கும் விதத்தில் அரசால் தடைச்சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் ஆதிக்கம் கடற்படையினருக்கு அச்சுறுத்தலாய் அமைந்தது. இதனால் வடபகுதி மீனவர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துக் கொண்டிருந்தன. கடலில் புலிகளது தாக்குதல்களுக்குப் பதிலடியாக கடற்படையினர், மீனவர்கள்மீது தாக்குதல்களை மேற்கொண்டனர்.

**படகுப் படுகொலைகளில் குமுதினிப் படுகொலையே முதலாவதாகும்**

முதலாவதான நடவடிக்கையாக 1985 ஆம் ஆண்டு மேமாதம் 15ஆம் நாள் குமுதினிப்படகில் பயணித்த பொது மக்கள்மீது கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்டு 33 அப்பாவித்தமிழ் மக்களைக் குரூரமாகப் படுகொலை செய்தனர். அதேபோன்று 1986 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி குருநகரில் இருந்து கரைவலைத் தொழில் செய்வதற்காக மீனவர்கள் 31பேர் தங்களது 'தூய ஒளி' என்ற படகில் சென்ற வேளை.இலங்கைக் கடற்படையினரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட 31ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்றாகும்.

தமிழின விடுதலைப் போராட்டத்தின் ஆயுதவழிச் செயற்பாட்டை ஆரம்பத்திலேயே அழித்துவிட வேண்டுமென்று எண்ணியிருந்த சிங்கள அரசு, தமிழ் மக்களைக் கொத்துக் கொத்தாகப் படுகொலை செய்கின்ற கொடூரத்தைக் கடலிலும் நிகழ்த்தியிருந்ததில் இரண்டாவது சம்பவமான மண்டைதீவுப்படுகொலை வரலாற்றில் பதிவாகிய தினமான ஜூன் 10 ஆம் திகதியன்று அதிகாலை யாழ்ப்பாணக்கோட்டையிலிருந்து பண்ணை வீதியூடாக நகர்ந்து சென்ற படையினர் மண்டைதீவுச் சந்தியில் நிலை கொண்டிருந்தனர். பின்னர் மண்டைதீவின் கண்டல் பற்றைகள் ஊடாகவும் வேறு குறிச்சிகள் ஊடாகவும் புங்கங்காட்டுப் பகுதிக்குள்ளும் படையினர் ஊடுருவியிருந்தனர்.

**தூயஒளி படகில் கடலுக்குச் சென்ற மீனவர்களுக்கு நேர்ந்த கதி**

குருநகர், மக்கள் தம் வாழ்வோடு இணைந்த கடல் தொழிலுடன் ஒன்றித்தவர்கள். கடலில் தொழில் செய்ய அவர்களுக்குப் பலதடைகள் ஏற்படுத்தப்பட்டு வந்ததால் மீனவர்கள் வாழ்க்கையிலும் வறுமை தாண்டவமாடியது. இருப்பினும் படையினரின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் தமது மீன்பிடித்தொழிலைச் செய்தே வந்தனர். 1986ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம்திகதியன்றுகரைவலைத்தொழில் செய்யவென குருநகர் இறங்குதுறையிலிருந்து பெரும் ஆரவாரத்துடன் ஒரு பெரிய படகு தனது பயணத்தை ஆரம்பிக்கின்றது. 'தூயஒளி' என்ற அந்தப் படகில் பயணித்த 31மீனவர்களில் எவரும் தாம் கடற்படையினரால் கொல்லப்படப்போகின்றோம் என்பதை அந்த வேளையில் உணர்ந்திருக்கவில்லை. சம்மாட்டி பிலிப்பின் அந்தக் கரைவலைப் படகில் சிறுவர்கள், இளையோர், முதியவர்கள் எனப் பலதரப்பட்டோரும் இருந்தனர். அந்தப் படகில் மீனவர்களுடன் பயணித்த வயதில் மிகக் குறைந்த இரு சகோதரர்களுக்கு அந்தப் படகுப் பயணம் மகிழ்ச்சியைக் கொடுத்த அதே வேளை, அதுவே அவர்களுக்கு இறுதிப் பயணமாகவும் அமைந்தது.

**மீனவர்கள் படுகொலையின் 31ஆவது ஆண்டு நிறைவு ஜூன் 10ஆம் திகதியாகும்**

மண்டைதீவு கடற்பரப்பைத் தொட்ட போது திடீரென துப்பாக்கியிலிருந்து வெளிப்பட்ட சூட்டுச் சத்தத்தின் பயங்கர ஓசையால் பயமும் பதற்றமும் அவர்களைத் தொற்றிக்கொண்டன. தமது தொழில் நடவடிக்கைகளை விரைவாக முடித்துச் கொண்டு இருப்பிடத்திற்குத் திரும்பி விட வேண்டும் என்ற அச்ச உணர்வுடன் தமது தொழிலில் ஈடுபட்டனர் அந்த மீனவர்கள். மண்டை தீவு முகாமிலிருந்து தொடர்ந்தும் துப்பாக்கிச் சூடுகள் பயங்கர ஓசையோடு பறந்து வந்து வெடித்துச் சிதறின.

குருநகர் மீனவர்களின் படகை நோக்கி அண்மித்து வந்து கொண்டிருந்த படையினரது பிளாஸ்ரிக் படகில் இந்தகறுப்புஉடைஅணிந்திருந்தகடற்படையினர் பலர் கூரிய ஆயுதங்களுடன் கொலை வெறிகொண்டவர்களாய்வந்துமீனவர்களின்படகுக்குள்ஏறி மீனவர்களைக் கண்டகோடரிகள், துப்பாக்கிச் சோங்குகள், தலைக்கவசங்கள், இரும்புக் கம்பிகள், படைக்கத்திக்ள் போன்றவற்றால் குத்தியும் வெட்டியும் கொடூரமாகப் படுகொலை செய்தனர். ஏதுமறியா அந்த அப்பாவி மீனவர்கள் உயிரற்ற சடலங்களாய் படகுக்குள் வீழ்ந்தனர். அந்தநேரத்திலும் கொலை வெறிபிடித்த அந்தப் படையினர் [illegible] மீனவர்களது உடல்களைச் சிதைத்துக் கொண்டிருந்தனர்.

தமிழ்ப் போராளிகள் வேறு படகொன்றில் சம்பவம் நடைபெற்ற இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்ததை அவதானித்த படையினர் கடற்கரையோரமான ஓட்டமுமாக நடையுமாக புறமுதுகிட்டு ஓடித்தப்பினர்.

குருதியில் மூழ்கியிருந்ததூய ஒளி படகில் படுகொலை செய்யப்பட்டிருந்த 31 மீனவர்களின் சடலங்களும் வேறு படகுகளில் ஏற்றப்பட்டு குருநகர் இறங்குதுறைக்கு போராளிகளால் கொண்டு வரப்பட்டு குருநகர் சனசமூகநிலையத்தில் வைக்கப்பட்டன. உறவினர்கள் நண்பர்கள் என அனைவரும் சனசமூக நிலையம் முன்பாக ஒன்று கூடி கதறி ஓலமிட்டதைக்கண்டு குருநகர் பகுதியே ஆறாத துயரத்தில் மூழ்கியிருந்தது.

**யாழ்.குடாநாட்டையே கலங்கவைத்த மீனவர் படுகொலை**

குருநகர் மட்டுமன்றி யாழ்.குடாநாடு முழுவதும் தீராத சோகத்திலும் அதிர்ச்சியிலும் உறைந்திருந்தது.

தமது குடும்பங்களை தமது உழைப்பில் வாழ வைக்கவெனத் தொழிலுக்குச் சென்று அப்பாவி மீனவர்கள் எதுவித காரணமுமின்றி படையினரால் கொல்லப்பட்டனர். இந்தப் படுகொலைகளுக்கான பொறுப்பை எவருமே ஏற்கவில்லை. இந்தக் கொலைகள் சம்பந்தமாக விசாரணைகள் எதுவும் இடம்பெறவில்லை.

மண்டைதீவு கரையோரத்தில் படையினரால் கொல்லப்பட்ட மீனவர்களது உடல்கள் மக்கள் அஞ்சலிக்காக குருநகர் சனசமூக நிலையத்தின் முன்பாக வைக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ்.கொஞ்சேஞ்சி மாத சேமக்காலையில் ஒரே இடத்தில் தனித்தனியாக அடக்கம் செய்யப்பட்டன.

31ஆண்டுகள் கழிகின்ற நிலையிலும், அந்த 31 அப்பாவி மீனவர்களுக்கும் நேர்ந்த துயரமுடிவு இன்று வரை தமிழர்களின் மனதில் நீங்காத நினைவாகி இருப்பதுடன், குருநகர்ப்பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையத்தின் முன்பாக உயர்ந்து நிற்கின்ற நினைவுத் தூபியும் படுகொலை வரலாற்றைக் காலம் காலமாகக் கூறிவருகின்றது.

31 மீனவர்களின் ஆராதனைக்குரிய நாளான ஜூன் மாதம் 10 ஆம் திகதி, தமிழர்களின் படுகொலைகள் வரலாற்றில் மண்டைதீவுப் படுகொலையும் உள்ளடக்கப்பட்டு வரலாற்றில் பதிவாகியுள்ளது.

இன்னும் பல ஆண்டுகள் கடந்து போயினும், ஈழத்தமிழர்களின் அடுத்த சந்ததிகளுக்குஎமது இனத்துக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்த தகவல்களைக் கடத்துகின்ற வரலாற்றுச் சாட்சியங்களாக வருடாவருடம் தமிழ் மக்களால் தவறாது நினைவு கூரப்படுகின்றஅஞ்சலி நிகழ்வுகளே அமைகின்றன.



## ஆசிரியருக்கான கடிதம்

### ஐரோப்பிய ஒன்றியத்தின் கடிவாளமே ஜீ.எஸ்.பி.பிளஸ் சலுகை

ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கைக்கு முன்னர் வழங்கப்பட்ட ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை காரணமாக கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் இயங்கிய ஆடைத் தொழிற்சாலைகளின் தயாரிப்புக்கள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதன் மூலம் நாடு பெருமளவிலான அந்நியச் செலாவணியை ஈட்ட வாய்ப்புக் கிட்டியது. இருப்பினும் இத்தகைய வரிச்சலுகையை சிலகுறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்குவதனூடாக ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிடத்தக்க அளவுக்கு இலங்கை அரசை அரசியல் ரீதியில் கட்டுப்படுத்த முயல்வதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்ததுமுண்டு.

இலங்கை அரசு மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தத் தவறுவதாகக் குற்றஞ்சாட்டி மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் அந்தச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் நிறுத்தி வைத்தமை மேற்குறித்த குற்றச்சாட்டுக்கு வலுச்சேர்த்ததாக அரசியல்வாதிகள் விமர்சித்து வந்துள்ளனர்.

அதேவேளை மீண்டும் குறித்த வரிச்சலுகையைப் பெற்றுக் கொள்ள முடிந்தமைக்கு, தாம் எடுத்த கடும் ராஜதந்திர ரீதியிலான முயற்சிகளே காரணமென மைத்திரிபால ரணில் கூட்டு அரசுத் தரப்பினர்கள் பெருமையடித்துக் கொண்டதையும், மறுபுறத்தில் நாட்டின் இறைமைக்குப் பாதிப்பு ஏற்படுத்தவல்ல பல்வேறு நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொண்டே அதனை நல்லாட்சி அரசால் மீண்டும் பெற முடிந்ததென மகிந்த தலைமையிலான எதிரணி குற்றம் சாட்டியதையும் நாம் கண்டு கேட்டுள்ளோம்.

ஜீ.எஸ்.பி.வரிச்சலுகை மீண்டும் வழங்கப்பட்ட ஒரு சில நாள்களுக்குள் தற்போது முஸ்லிம் இனத்தவர்கள் மீதான வன்செயல்களைக் காரணம் காட்டி, அரசு தங்களது எதிர்பார்ப்புக்கு அமையச் செயற்படாவிட்டால் மீண்டும் அந்த வரிச்சலுகை நிறுத்தப்படுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் எளியாரை வலியார் வாட்டினால், வலியாரைத் தெய்வம் வாட்டும் என்பதற்கிணங்க, இந்த நாட்டின் சிறுபான்மை இனத்தவர்களுக்குப் பெரும்பான்மை இனத்தவர்கள் அநியாயம் இழைக்காதிருக்கும் வித்த்தில் சிங்கள அரசைக் கட்டுப்படுத்துவதற்கான மேற்குலக நாடுகளது ஒரு கடிவாளக் கயிறாக இந்த ஜீ.எஸ்.பி.வரிச் சலுகையைக் கருதுவது தவறல்லவே!

மா.சுதர்சன்
நவாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியம் தரும் சூரிய ஒளி

மருத்துவர் எஸ்.கேதீஸ்வரன்

நாம் சிறுவர்களை வெயிலில் நிற்காதே, மழையில் நனையாதே என்ற கட்டுப்பாடுகளுடன் நலன் சார்ந்த கடப்பாடுகளைப் பேணி வருகின்றோம். வெயிலைத் தவிர்க்கக் குடை, தொப்பி, நீளமான ஆடைகள், சூரிய ஒளியைத் தடுக்கும் பூச்சுக்கள் எனப் பல்வேறு விதமான பொருள்களைப்பாவிக்கின்றோம். உண்மையில் இந்த விடயங்கள் எவ்வளவுதூரம் சரியானது என்பது கேள்வி நிலைக்குட்பட்ட ஒன்றாகவே விளங்குகிறது. சூரியஒளியிலுள்ள புற ஊதா கதிர்கள் (Ultraviolet Brays) எமது தோலில் விற்றமின் `டி' உற்பத்தியாவற்கு அவசியமாகிறது. எமக்குத் தேவையான விற்றமின் `டி' இல் பெரும் பகுதி குறிப்பாக 90 தொடக்கம் 95 வீதமானவை சூரிய ஒளி மூலமாகவே தோலில் உற்பத்தியாகின்றன. போதிய சூரிய ஒளி நேரடியாகத் தோலில் படாவிட்டால் விற்றமின் `டி' குறைபாடு ஏற்பட்டும் பல நோய்கள் ஏற்படலாம்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி உலகில் பலருக்கு விற்றமின் `டி' பற்றாக்குறையிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதும் சூரிய ஒளி குறைவில்லாமல் கிடைக்கும் இலங்கை போன்ற நாடுகளிலும் விற்றமின் D குறைபாடு பலருக்கு இருப்பதென்பது அதிர்ச்சிகரமான விடயமாகும்.

வெள்ளையர்களை விடக் கறுப்பான தோலுடைய ஆசிய நாட்டவர்களில் தோலில் அதிகம் காணப்படும் மெலனின் (Melanin) எனும் நிறப் பொருளால் சூரிய ஒளி தோலினுள் ஊடுருவுவது குறைவடைகின்றது. இதனால் வெள்ளையர்களை விட ஆசிய நாட்டவர்களான நாம் அதிக நேரம் சூரிய ஒளியை உடலில் படவிடவேண்டும். இடம் பெயர்ந்து மேலைத்தேய நாடுகளில் வாழும் ஆசிய நாட்டவர்களில் அதிலும் குறிப்பாகப் பெண்களில் விற்றமின் `டி' குறைபாடு அதிகமாகக் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் எம்மவர்கள் குளிர் காரணமாக உடலை மூடி உடைகளை அணிவதும் வீட்டை விட்டு வெளியில் வருவது குறைவாக இருப்பதுமேயாகும்.



### சூரிய ஒளியும் விற்றமின் `டி' உம் உடலுக்கு தரும் நன்மைகள்

1. விற்றமின் `டி' ஆனது கல்சியம் அகத்துறிஞ்சப்படுவதற்கு அவசியமாகும். ஆக, எலும்பு, பல் ஆரோக்கியத்திற்கு சூரியஒளி அவசியமாகிறது. குறிப்பாக மாதவிலக்கு நின்றபின் பெண்களில் ஏற்படும் ஒஸ்ரியோபுறோசிஸ் (Osteoporosis) எனும் நோய்க்கு கல்சியம் குறைவது காரணமாக விளங்குகிறது.
2. சூரியஒளியினால் எமது உடலில் கிறோரொனின் (Serotonin) எனும் ஹோர் மோன் அதிகமாகச் சுரக்கப்படு கின்றது. இந்த ஹோர்மோன் சோம்பல் இல்லாமல் சுறுசுறுப்பாக இயங்க உதவுகின்றது. சூரிய ஒளி குறைந்த குளிர்காலங்களில் மேலைத்தேய நாடுகளில் நரம்புத்தளர்ச்சி அதிகம் ஏற்படுகின்றது.
3. சூரிய ஒளியானது உடலின் கொலஸ்ரோல் அளவு, குருதியமுக்கம் என்பவற்றைக் குறைக்கின்றது. வெயில் குறைந்த குளிர்காலங்களிலேயே மாரடைப்புப் பொதுவாக ஏற்படுகின்றது. எனவே சூரிய வெளிச்சம் மாரடைப்பைக் குறைக்கின்றது என்பதை ஊகிக்கலாம்.
4. அது மட்டுமா! சூரியஒளி உடலில் படுவதலால் உடல் பருமன் குறைவடை வதுடன் நீரிழிவு ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவடைவதாக வும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
5. சூரிய ஒளியினால் உடல்நோ, மூட்டுவாதம் என்பன குறைவடைகின்றன.
6. அதிகமான சூரியஒளி குறிப்பாக, வெள்ளையர்களின் தோலில் புற்று நோயை ஏற்படுத்தலாம். ஆனால் அளவான சூரியஒளி உடலில் படுவதால் பல்வேறு விதமான புற்றுநோய்கள் ஏற்படுவது குறைவடைவதாக அண்மையில் வெளியான ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மார்புப் புற்றுநோய், குடல் புற்றுநோய், கருப்பைப் புற்றுநோய், இரப்பைப் புற்றுநோய் என்பன அவற்றில் சிலவாகும்.
7. மிதமான சூரிய ஒளியினால் மாதவிலக்குப் பிரச்சினைகள் குறைவடை கின்றன. அத்துடன் மாதவிலக்கு நிற்பதும் தள்ளிப் போகப்படுகின்றது. குறிப்பாக ஆண்மைத் தன்மை அதிகப்படுவதுடன் பெண்களில் குழந்தைப் பேற்றுக்கான சாத்தி யங்கள் அதிகப்படுத்தப்படுகின்றன.
8. சூரியஒளி உடலில் படுவதால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கின்றது.

### சூரியஒளி தவிர விற்றமின் `டி' ஐப் பெறக்கூடிய வழி மூலங்கள்

விற்றமின் `டி' சில உணவுகளிலேயே காணப்படுகின்றது. எண்ணெய்த் தன்மையுள்ள ருனா, சமன் (Tuna,saman) போன்ற மீன்களில் விற்றமின் டி காணப்படுகின்றது. பால், முட்டை என்பவற்றிலும் விற்றமின் `டி' காணப்படுகின்றது. ஆனால் உணவு மூலம் எடுககப்படும் விற்றமின் `டி' உடலுக்குபோதுமானதுஅல்ல. விற்றமின் `டி' உள்ள மாத்திரைகள் இப்போது பாவனையில் உள்ளன. ஆனாலும் இந்த வகையில் எடுக்கப் படும் விற்றமின் `டி' யால் மேற்குறிப்பிட்ட நன்மைகள் அதிகம் கிடைப்பதில்லை என ஆய்வுகள் மூலம் அறியப்பட்டுள்ளது. எனவே இலவசமாகஎங்கும்கிடைக்கும்சூரியஒளியை நாம் ஏன் அதிகம் பயன்படுத்தக்கூடாது.

### ஒரு நாளைக்கு உடலில் பட வேண்டிய சூரிய ஒளியின் அளவு

ஆசிய நாட்டவர்களான நாங்கள் ஒவ்வொரு நாளும் அண்ணளவாக அரைமணி நேரம் வெய்யிலில் நின்றால் போதுமானதாகும். குறிப்பாக காலை 6மணிதொடக்கம் 10 மணி வரை அல்லது மாலை 4மணிமுதல் 6 மணி வரையுள்ள நேரத்தில் சூரியஒளி படத்தக்கவாறு நிற்கலாம். இந்த நேரத்தில் உடற்பயிற்சி அல்லது நடப்பதனால் எமக்கு இரட்டிப்பு நன்மை ஏற்படும்.

ஆசிய நாட்டைச் சேர்ந்த ஒருவர் குறைவான ஆடைகளுடன் அரைமணி நேரம் வெயிலில் நின்றால் அவருக்கு 8 ஆயிரம் தொடக்கம் 10 ஆயிரம் சர்வதேச அலகு விற்றமின் `டி' உடலில் உற்பத்தியாகின்றது. இவ்வளவானது நாளொன்றுக்கு போதுமான தெனக் கூறப்படுகின்றது.

எனவே விலையுயர்ந்த மருந்துகளை நாடிச் செல்லும் நாம் இயற்கையான சூரிய ஒளி, கடற்கரைக் காற்று, இயற்கை அழகு என்பவற்றை பயன்படுத்தலாம். எமது உடலும் உள்ளமும் நலன் பெறும். வெயிலில் நின்றால் முக அழகு குன்றிவிடும் என பயப்பாடாதீர்கள். காலை, மாலை நேர வெயிலால் ஏற்படும் நன்மைகள்பல வாகும்.

பொது வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா
வைத்தியசாலை.



மருத்துவர் எம்.அரவிந்தன்

# அதிக சீனியின் உள்ளீடு

## தொற்றா நோய்களின் தரிப்பிடம்

பன்னாட்டு ரீதியில் நீரிழிவு போன்ற தொற்றா நோய்கள் பல்கிப் பெருகி வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. இலங்கை போன்ற வளர்முக நாடுகளிலும் சிறிது சிறிதாக இவற்றின் தாக்கம் அதிகரித்துச் செல்கின்றது. மிக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி கொழும்பு நகரப் பகுதியில் ஏறக்கு றைய 23 சதவீதத்தினர் நீரிழிவு அல்லது நீரிழிவுக்கு முந்தைய நிலையால் (prediabetes) பாதிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. இனங்களை ஒப்பிடுகையில் இலங்கைத் தமிழரிடையே நீரிழிவு ஏற்படும் சதவீதம் அதிகரித்துச் செல்வதைக் காணக்கூடிய தாகவுள்ளது.

எமது மக்களிடையே சீனி மற்றும் மாச்சத்துப் பாவனையானது அதிகமாக இருப்பது இதற்கான காரணமாகும். இதேபோல அதிகரித்து வரும் மேற் குலத்தின் துரித (Fast food) உணவுகளின் பயன்பாடும் இதற்கு முக்கிய காரணமாகும். உடற்பயிற்சியற்ற (Sedentary) வாழ்க்கை முறையும் கூட இதற்கு ஏதுவாக அமைகின்றது. இவ்வாறான தவறான உணவுப் பழக்கங்களால் நீரிழிவு ஏற்படும் போது பல்வேறு பட்ட நீண்டகாலப் பிரச்சினைகள் (Complications) ஏற்படலாம். கண் குருடாதல், சிறுநீரகச் செயலிழப்பு, நரம்புகளில் ஏற்படும் தாக்கம் மாரடைப்பு மற்றும் பாரிசவாதம் போன்றவை இதற்கு உதாரணங்களாகும்.

எமது மக்களிடையே தாகம் ஏற்படும் போது அருந்தும் பானமாக சோடா எனப்படுகின்ற மென்பானங்கள் அமைந்திருப்பது மிகவும் துர்ப்பாக்கியமான விடயமாகும். தேநீர் மற்றும் பழச்சாறு என்பவற்றுக்கு நேரடியான முறையிலும் பல்வேறுபட்ட மறைமுகமான வழிகளிலும் நாம் சீனியைப் பயன்படுத்தி வருகின்றோம். மென்பானங்கள், ஐஸ்கிறீம், கேக் மற்றும் இனிப்பூட்டிய பிஸ்கற், சொக்லேட் என்பவற்றில் மிகவும் அதிகமான அளவில் சீனிச் சத்து இருக்கிறது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் படி ஒரு வருடத்தில் இலங்கையரொருவர் உள்ளெடுக்கும் சீனியின் அளவு ஏறக்குறைய 30 கிலோகிராம் ஆகும். எமது விழாக்கள் மற்றும் சடங்குகளில் கூட சீனி மற்றும் மாச்சத்துள்ள உணவுப் பண்டங்களின் அளவு மிக அதிகமாக இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

அதிகரித்து வரும் ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பான நிலையங்களும் இவ்வாறான சீனிப்பாவனை அதிகரித்துச் செல்வதற்குக் காரணமாகும்.

சுகாதார அமைச்சானது மிக அண்மையில் குளிர்பானங்களுக்கு வர்ணக் குறீயீட்டை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி பச்சை (மிகக் குறைந்த சீனியளவு) மஞ்சள் (இடைப்பட்ட அளவு), சிவப்பு (மிக அதிகளவு) ஆகிய நிறக் குறியீடுகளை மென்பானங்களில் பார்க்க முடிகிறது.



### தீர்வுகள்

1. சிறுவர்களுக்கு ஆரம்ப காலத்திலிருந்தே அதிகரித்த சீனி மற்றும் மாச்சத்துப் பாவனையால் ஏற்படும் தீமைகளை எடுத்துரைத்தல் அவசியமாகும். இவ்வாறான பாவனையில் நீண்டகால அடிப்படையில் ஏற்படும் நீரிழிவு போன்ற தொற்றா நோய்களின் தாக்கம் குறித்து அவர்களுக்கு எடுத்துரைப்பது அவசியமாகும்.
2. பொது மக்கள் மத்தியில் அதிகரித்த சீனி மற்றும் மாச்சத்துப் பாவனையினால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி விரிவாக எடுத்துக் கூறுவது இன்றியமையாததாகும். இதற்குப் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி மற்றும் இணையம் போன்றவற்றை நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும்.
3. பாடசாலை உணவகங்களில் அதிகரித்த சீனி மற்றும் மாச்சத்துள்ள உணவுகளையும் துரித உணவுகளையும் தடைசெய்து ஆரோக்கிய உணவுகளை அறிமுகப்படுத்த வேண்டும்.
4. தாகம் ஏற்படும் போது சோடா போன்ற மென்பானங்களை அருந்துவதைத் தவிர்த்து சீனி சேர்க்கப்படாத இயற்கையான பழச்சாறு, செவ்விளநீர் அல்லது தூய நீரை அருந்தப் பழக வேண்டும்.
5. குளிர்பான மற்றும் ஐஸ்கிறீம் தயாரிப்பு நிலையங்களில் சீனிப் பாவனை அளவினைக் கண்காணித்து தேவையான நடைமுறைகளைக் கடைப்பிடித்தல், சீனிப் பயன்பாட்டைக் குறைத்தல் அவசியமாகும்.
6. நாம் உறவினர் மற்றும் நண்பர்களின் வீட்டுக்குச் செல்லும் போது சொக்லட், பிஸ்கற் மற்றும் ஐஸ்கிறீம் போன்றவற்றைக் கொண்டு செல்லாது பழங்கள் போன்ற ஆரோக்கியமான உணவுப் பொருள்களை அவர்களுக்குக் கொடுக்கப் பழக்கிக் கொள்ள வேண்டும். எமது உறவினர்களுக்கோ, நண்பர்களுக்கோ சீனி மற்றும் மாச்சத்து அதிகமான தின்பண்டங்களை வழங்குவதன் மூலம் அவர்களை நாம் ஆரோக்கியமற்ற நோயாளராக மாற்றாது இருத்தல் அவசியமாகும்.
7. எந்தவொரு அலுவலகக் கூட்டமாக இருந்தாலும், விழாக்களாக இருந்தாலும் சீனியை வேறாக வைத்திருத்தல் அவசியமாகும். இவ்வாறு வைத்திருக்கும் போது தேவைப்பட்டவர் தமக்குத்தேவையான அளவில் அதனைச் சேர்த்துக் கொள்ள முடியும்.
8. இறுதியாக நாம் அனைவரும் அதிகரித்த சீனி மற்றும் மாச்சத்துப் பாவனையால் நீண்டகால அடிப்படையில் ஏற்படுகின்ற பாரதூர பின் விளைவுகளையும், தொற்றா நோய்களையும் கருத்திற் கொண்டு அவை பற்றிப் புரிந்து கொள்ள முன்வர வேண்டும். நற்சிந்தனையோடு ஆரோக்கியம் பற்றிச் சிந்திக்க வேண்டும். இதுவே காலத்தின் கட்டளையாகும்.

நாளைய மாற்றத்திற்காக இன்றேசெயற்படுவோம்

நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதி
சிறப்பு வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியகாந்தி
உதயன் 11.06.2017




முதல்வர் என்ன செய்யப் போகிறார்?
பக் 23



ஒரு கிடாயின் கருணை மனு
பக் 33



பக் 36
'அன்றொய்ட்'



■ வசந்தன்

“நான் கட்டாருக்கு வந்து பதினைஞ்சோ, பதினாறு... வருசங்களாப் போச்சுது. நான் வரேக்க இருந்த கட்டாரில்ல இது. வந்த காலத்தில இருந்த கட்டாருக்கும் இப்ப இருக்கிற கட்டாருக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு. அதின்ர முகத்தையே(டோகா) அது மாத்திப்போட்டுது. கட்டடங்களை எல்லாம் வேகமாக் கட்டியெழுப்பி, மரங்களை எல்லாம் பெரிய மரங்களாகவே கொண்டு வந்து நாட்டி, பாலைவனமாயிருந்த கட்டாரைப் பசுமையும் பணக்கார நாடுமாக்கியிருக்கினம். நான் வந்த காலத்திலயிருந்தே கொஞ்சம் கொஞ்சமா எல்லாமே மாறிக்கொண்டு தான் வந்துது. 2006க்குப்பிறகு எல்லாமே படுவேகம். 2022ஆம் ஆண்டு நடக்கயிருக்கிற 'வேள்ட் கப்' வேலையில கிட்டத்தட்ட 90சதவீதம் இப்பவே முடிஞ்சிருக்க வேணும்...!

எங்கட நாட்டில மனிசரை மக்கள் எண்டு சொல்லுவாங்கள் இங்க மக்களில்லை. எல்லாரும் தொழிலாளிகள் உழைப்பாளிகள். எத்தினை காலம் இங்க இருந்தாலும் இந்த நாட்டுக்குக் 'கார்ட்' கிடைக்காது. வரலாம், இருக்கும் வரைக்கும் கட்டாயம் உழைக்க வேணும், போகலாம்” இவர் கட்டாரிலிருக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாலராஜ்.

## உயரப் பறக்கின்றன
# கட்டார் விமானங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகச் செய்திகளில் கடந்த வாரத்தில் பிரபல்யம் அடைந்திருந்த செய்திகள் அனைத்தும் கட்டாரைப் பற்றியதாகவே அமைந்திருந்தன. தீவிரவாதக் குழுக்கள் பலவற்றுக்கும் கட்டார் ஆதரவளிக்கின்றது என்று காரணம்கூறிக் கட்டாரின் அயல் நாடுகள் சிலவும் கட்டாருடனான உறவைத் துண்டித்தன. அதைத் தனிமைப்படுத்தின. கட்டார் அதை மறுத்தது. இது அமெரிக்க அதிபரின் சுற்றுப்பயணத்துக் குப்பின்னர் நிகழ்ந்திருப்பதால் பலவகையான அரசியல் சுழிக்குள் கட்டார் சிக்கித்தவிக்கின்றது என்கின்றனர். அரசியல் விமர்சகர்கள். அதனால் தான் இப்போது வடகொரியாவை ஒத்த நிலைக்குக் கட்டார் உட்பட்டிருக்கின்றது. ஆனால் இத்தகைய தடைகளால் கட்டாரை ஒருபோதும் அதன் வளர்ச்சியிலிருந்து பின்தள்ளிவிட முடியாது என்கின்றனர் உள்ளூர்வாசிகள்.

## கட்டாந்தரையாக இருந்த கட்டாரின் வளர்ச்சி

"நான் வந்து 16வருசத்துக்கு மேலயாகுது. பால் கொம்பனி ஒண்டில உப தொழிலதிபரா இருக்கிறன். போனகிழமை முழுக்கச் சொந்தக்காரர், நண்பர்கள் போன் எடுத்து என்ன உங்க பிரச்சினையாக் கிடக்காம்? எண்டு விசாரிச்சினம். அவை நினைக்கிற அளவுக்கு இங்க நெருக்கடிகள் வாறதுக்கு வாய்ப்பில்ல. பால், இறைச்சி, அது சார்ந்த உணவுகள் தான் இங்க பிரதானமானவை. அதுகளை சவூதியில இருந்துதான் நாங்கள் இறக்கிவந்தனாங்கள். இப்ப சவூதிப் போடர் தடைப்பட்டிருக்கு. அதால நான் செய்யுற வேலையில ஒரு தளர்வு வந்தது. ஆனா அது ஒண்டு, ரெண்டு நாளோட சரி. இப்ப வேற நாடுகளில இருந்து அதுகள் வரத் தொடங்கீற்று. சுத்தியிருக்கிற நாடுகள் கட்டாருக்கு எவ்வளவு தடை விதிச்சாலும் அதால கட்டார் பாதிப்படைய வாய்ப்பில்லை எண்டுதான் நான் நினைக்கிறன். வழமையான செயற்பாட்டில மாற்றம் கொண்டுவர எடுக்கிற நேரம் மட்டும் தான் தேவையே தவிர, மற்றும்படி கட்டார் எல்லாத்தில இருந்தும் உடனடியா மீண்டிரும். இஞ்ச இருக்கிற உழைப்பாளிகள்தான் அதுக்குக் காரணம்"

வேகம் கொண்ட உழைக்கும் வர்க்கத்தை மாத்திரம் ஏராளமாகத் தனக்குள் கட்டியமைத்திருக்கும் கட்டார் உலக நாடுகள் ஒன்றுவிடாமல் தன்னுடைய வியாபார வலைப்பின்னலை நிறுவியிருக்கின்றது. இதன் காரணமாகத் தன்னைச் சுற்றியிருக்கின்ற நாடுகளில் மாத்திரம் அது தங்கியிருக்கவில்லை. இதனால் எத்தகைய தடைகளை விதித்தாலும் கட்டார் துவண்டு விடப்போவதில்லை என்பது உள்ளூர் வாசிகளின் திண்ணம்.

## உழைக்கும் வர்க்கத்தை மாத்திரம் உள்ளீர்த்துக் கொள்ளும் கட்டார்

"எவ்வளவு காலத்துக்கும் உழைக்கலாம். எவ்வளவும் உழைக்கலாம். உழைப்புக்குத் தான் முன்னுரிமை. உழைப்புக்கு மாத்திரம் தான். ஆனால் எவ்வளவு காலம் இங்க இருந்தாலும் குடியுரிமை வழங்கிற நடமுறை கிடையாது. தொழில் நிறுவனங்கள்தான் தொழிலாளர்களைப் பாத்துக் கொள்ளும். இராணுவம் எண்டு எங்கட நாட்டைப்போலயெல்லாம் இங்க இல்லை. அதுக்குத் தேவையும் இல்லாததால எங்களுக்கு இராணுவம் எப்பிடியிருக்கும் எண்டும் தெரியாது. சவூதிக்குப் போற பாலைவனப் 'போடரில' மாத்திரம் தான் ஒண்டு, ரெண்டு இராணுவத்தப் பார்க்கலாம்.

ஒரு இடத்தில மட்டும் ஒரு 15, 20கிலோமீற்றர் நீளம் வரையில அமெரிக்கன் 'பேஸ்' இருக்குது. அதுகளை எல்லாம் இஞ்ச ஆரும் கணக்கில எடுக்கிறதில்ல. இங்க யார் வந்தாலும், போனாலும் 'பிஸ்னஸ்' மாத்திரம் தான் அவையின்ர வேலையாயிருக்கும். அதாலயோ என்னவோ இஞ்சத்தேய நாட்டுக்காரர விட நேபாளி, இந்தியர், மற்றய அரபு நாட்டுக்காரர் தான் நிறையப் பேர் இருக்கினம். எல்லாருமே 'பிஸ்னஸ்' காரரும் தொழிலாளிகளும்தான்"

கட்டார் பொதுவாகவே செய்திகளில் இடம்பெறுவதில்லை. ஆனாலும் குட்டி நாடான கட்டாரைத் அறிந்திராதவர்களும் குறைவு. அதன் வானூர்திச் சேவைகள் உலகம் முழுக்கப் பரந்திருப்பவை.

பிரபல்யமானவை. கட்டாரின் வானூர்திகள் தரையிறங்காத நாடுகளே இல்லை என்ற பெருமையும் அதற்குண்டு.

எமது நாட்டுக்கு நாளுக்கு இரண்டுமுறை கட்டார் வானூர்திகள் வந்துபோகின்றன. வறிய ஆபிரிக்க நாடான சோமாலியாவுக்குக்கூட அதன் வானூர்திச் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

உலகின் எந்தவொரு நாட்டையும் அது விட்டு வைக்கவில்லை. ஆனாலும் 2022ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்துத் தொடரைக் கட்டார் நடத்தவிருக்கின்றது எனும் தகவல்களுடன் தான் கட்டாரை அதிகமானவர்களுக்குத் தெரிந்திருந்தது. அதைத் தூரநேக்காகக் கொண்டுதான் கட்டார் தனிமைப் படுத்தப்படுகின்றது என்ற கருத்தும் இல்லாமலில்லை.

## மக்கள் தொகையில் அதிகப்படியாக ஆண்கள்

2.5 மில்லியன் மக்கள் இருக்கும் கட்டாரில் வெறும் 7இலட்சம் பெண்கள் உள்ளனர். இதற்குக் காரணம், கட்டாரின் மக்கள் தொகையின் திடீர் எழுச்சியாகும். அதாவது அதிகப்படியான குடியேறிகள், அதுவும் அதிகபட்சமாக இளம் ஆண்கள் தொழிலாளர்களாகக் கட்டாரை நோக்கிப் படையெடுத்திருக்கின்றனர். உலகின் வியாபரியாக, வியாபார மையமாக இதன் மூலம் கட்டார் தன்னை வளப்படுத்திக் கொண்டுள்ளது.

கட்டாரில் வேலைவாய்ப்புக்களில் உத்தரவாதம் இருப்பதால் சமீப வருடங்களாக அதாவது 2003ஆம் ஆண்டில் 7இலட்சமாக இருந்த மக்கள் தொகை 2016ஆம் ஆண்டில் 2.5மில்லியனாக உயர்ந்திருக்கின்றது. கட்டாரில் பெண் தொழிலாளர்களும் இருக்கின்றார்கள். குறைந்தளவில் கட்டாரின் வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணம் அதன் எண்ணெய், வாயு வளம் மற்றும் சில நல்ல முதலீடுகள் ஆகும். அவற்றை வைத்து உலகின் அனைத்து நாடுகளின் கொடுக்கல், வாங்கல் வியாபாரியாகத் தன்னை மையப்படுத்தியிருக்கின்றது. உலகிலேயே அதிகமான உள்நாட்டு மொத்த உற்பத்தி விகிதத்தை கொண்ட நாடும் கட்டாரேயாகும்.

## நிலவரம் - பின்னணி - காரணங்கள்

சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், பஹ்ரைன், எகிப்து ஆகிய நாடுகள், கட்டாருடனான தமது உறவை முறித்துக் கொள்வது என்று முடிவெடுத்த பின்னர், கட்டார் அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தத்தமது நாடுகளின் கட்டாருடனான எல்லைகளை மூடிவிட்டன. எகிப்து ஒரு படி மேலே சென்று தனது வான் பரப்பையும் துறைமுகங்களையும் கட்டார் பயன்படுத்த முடியாமல் மூடிவிட்டது. ஏமன் அரசும், லிபியாவின் கிழக்குப் பகுதியில் இருந்து இயங்கும் அரசும்கூட கட்டாருடனான தங்கள் உறவுகளைத் துண்டித்துவிட்டன.

**பயங்கர, கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு**

இஸ்லாமியவாதிகளுக்கு கட்டார் ஆதரவளிப்பதாகக் கருதப்படுகின்றது. உதாரணமாக, முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் தலைவரான, எகிப்தின் முன்னாள் அதிபர் மொஹமது மோர்சி 2013ஆம் ஆண்டு பதவியிலிருந்து அகற்றப்பட்டார். அதன் பின்னர், தற்போது எகிப்து அரசால் தடை செய்யப்பட்டுள்ள அந்த அமைப்பின் உறுப்பினர்களுக்குக் கட்டார் இடமளிக்கின்றது. சவுதி அரேபியாவும், ஐக்கிய அரபு இராச்சியமும் அந்த அமைப்பை 'பயங்கரவாத அமைப்பு' என்று புறமொதுக்குகின்றன.

சவூதி அரசின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனத்தின் மூலம் பிரசுரிக்கப்பட்ட அறிக்கை ஒன்று 'இந்தப் பிராந்தியத்தை நிலைகுலையச் செய்யும் நோக்கிலான பல பயங்கரவாத மற்றும் மதக்குழு அமைப்புகளைக் கட்டார் அரவணைத்துக் கொண்டுள்ளதாக' குற்றம் சாட்டியிருந்தது. முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு, ஐ.எஸ் மற்றும் அல் கொய்தா போன்ற அமைப்புகள் இதில் அடங்கும்.

ஆனால், இவை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் என்றும் தன்னைச் சுற்றியிருக்கின்ற நாடுகள் தற்போது செய்துகொண்டிருப்பது நியாயமற்றது என்றும் கட்டார் கூறுகின்றது. பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்தை எதிர்ப்பதில் வளைகுடா நாடுகளுக்கேயுரிய கடமைகளையே தானும் செய்து வருவதாகக் கட்டார் கூறுகின்றது..

## அமெரிக்காவுடனான முரண்

ஈரானைக் கையாள்வதில் அமெரிக்கா கொண்டிருக்கும் குரோதத்தன்மையை விமர்சித்ததாகக் கட்டார் அரசர் ஷேக் தமிம் பின் ஹமத் அல்தானி தெரிவித்த கருத்துக்களை மேற்கோள் காட்டி சர்ச்சைக்குள்ளான செய்தி ஒன்று வெளிவந்ததன் பின்னரே கட்டார் இப்படியாகப் பேசுபொருளாகியுள்ளது. கடந்த காலங்களில் கணினி வலையமைப்புக்களில் ஊடுருவியவர்கள்தான் .தனது அரச செய்தி நிறுவனத்தில் வெளியிடப்பட்ட அந்தச் செய்திக்குப் பின்னால் இருக்கிறார்கள் என்று கட்டார் கூறுகின்றது. அதன் பின்னர் சிறிது காலங்களில் அமெரிக்கா அதிபர் ட்ரம்ப் மேற்கொண்ட வளைகுடாப் பயணத்துக்குப் பின்னர்தான் கட்டாருக்கு இந்த நிலமை.

பன்னாட்டு விமானப் போக்குவரத்துக்களை இணைக்கும் முக்கிய தளமாகக் கட்டாரின் தலைநகர் இருப்பதால், அந்த வலையமைப்பில் இடையூறுகள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கட்டார் நாட்டின் மேற்கில், பெரிய நாடாக இருக்கும், சவூதி வழியே கட்டார் விமானங்கள் பயணிப்பது நிறுத்தப்பட்டிருக்கும்பட்சத்தில்அவைகூடுதல்தூரப்பாதைகளில் பயணிக்க நேரிடுகின்றன. எனவே பயண நேரமும் அதிகமாகின்றது. கட்டாருக்குப் பன்னாட்டுக் கடல் பகுதி, பன்னாட்டு வான்வெளி என்றிருக்கும் வரப்புக்களையும் பயன்படுத்த முடியும். அத்துடன் இப்போது சோமாலியா மக்களால் வானில் அதிகளவு விமானங்கள் பறக்கும் காட்சியைக் காண முடிகின்றதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு முதல்வர் என்ன செய்யப் போகின்றார்?

தில்லாலங்கடி

வடக்கு அமைச்சர்கள் மீது நடத்தப்பட்ட விசாரணை அறிக்கை வெளிவந்ததும், இங்குள்ள அரசியல் களம் கொதிநிலைக்குச் சென்றுள்ளது. விசாரணைக்குழு பரிந்துரைத்தபடி முதல்வர் நடவடிக்கை எடுப்பாரா ? அல்லது விசாரணைக்குழுவின் பரிந்துரைகள் குப்பைக் கூடைக்குள் செல்லுமா ? இதற்கும் மேலாக விசாரணைக்குழு மீது பழியைப் போட்டுவிட்டுத் தப்பிக்க முயலும் அமைச்சர்களுக்கு, முதலமைச்சரும் உறுப்பினர்களும் கை கொடுப்பார்களா? என்று பல கேள்விகள் மக்களிடம் எழத் தொடங்கியிருக்கின்றன.

**ஐங்கரநேசனுக்காக வாதாடினார் முதலமைச்சர்**

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட பிரேரணை வடக்கு மாகாண சபையில் முதலில் நிறைவேற்றப்பட்டது. பிரேரணை நிறைவேற்றப்பட்டதற்கு மறுநாள் பொது நிகழ்வில் பேசியிருந்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், "விவசாய அமைச்சர், காய்த்த மரம் என்பதால் கல்லடிபடுகின்றார். அவர் பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சமாட்டார்" என்று தெரிவித்திருந்தார்.

இதன் பின்னர் அமைச்சர் ஐங்கரநேசன் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டருப்பதால் அவர் குற்றவாளியாகமாட்டார். விசாரணைகளின் பின்னர்தான் ஒருவர் குற்றவாளியா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க முடியும் என்று குறிப்பிட்டிருந்தார் முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, அமைச்சர் ஐங்கரநேசனுக்கு எதிராக வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையையும் அது தொடர்பான விடயங்களையும் சபையின் பதிவேட்டிலிருந்து நீக்குவதற்கான பிரேரணையை, 8மாகாண சபை உறுப்பினர்களின் கையெழுத்துக்களுடன் சபைக்குக் கொண்டு வந்தவர் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

அமைச்சர் ஐங்கரநேசனை எந்த வழியும், எப்பாடுபட்டாவது பாதுகாப்பதற்கு முழு மூச்சாகச் செயற்பட்டவர் அவர். இப்போது விசாரணைக்குழு, அமைச்சர் ஐங்கரநேசன் மீது குற்றங்களை இனங்கண்டு அவரைப் பதவி நீக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. குற்றத்தைச் செய்பவரை விட, குற்றத்துக்குத் தூண்டுதலாக இருந்தவருக்கும் குற்றவாளியைப் பாதுகாத்தவருக்குமே அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும். ஐங்கரநேசனைப் பாதுகாத்த குற்றத்துக்கா, முன்னாள் நீதியரசரும் முதலமைச்சருமான விக்னேஸ்வரன் தனது பதவியிலிருந்து விலகுவாரா...?

**பொய் சொல்லி மாட்டினார் ஐங்கரநேசன்**

வடக்கு மாகாண சபையின் சிறப்பு அமர்வு கடந்த 7ஆம் திகதி நடந்தது. விவசாய அமைச்சர் தன்னிலை விளக்கம் வழங்குவதற்குத் தயாராக வந்திருப்பதாகக் கூறினார். ஆனாலும் ஒரு உதாரணத்தை மாத்திரம்தான் இப்போது சொல்லப்போவதாகக் குறிப்பிட்டார்.

விசாரணைக் குழு முன்பாகச் சென்று அமரும் தருணம் வரையில், விசாரணைக் குழுவின் உறுப்பினர்கள் எவர் என்றே தெரியாது. இவர்களில் ஒருவர், வடமராட்சி கிழக்கு கூட்டுறவு சமாசத் தலைவரைப் பதவி நீக்கியமை தொடர்பில் சமாசத் தலைவரால் வடக்கு மாகாண சபைக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில், சமாசத் தலைவரின் சட்டத்தரணியாக முன்னிலையாகுபவர்.

இவ்வாறான முரண்பாடுகள் இருக்கும் போது இந்த விசாரணைக் குழுவின் தீர்ப்பு எப்படி நியாயமாக இருக்க முடியும் என்று அப்பாவித்தனமாக கேள்வி எழுப்புவதுபோல் சபையில் கேட்டார்.

இதனை ஆமோதித்து ஆளும் கட்சி உறுப்பினர் கேசவன் சயந்தன் தனது பங்குக்குக் கருத்து வெளியிட்டார். விசாரணைக் குழுவின் உறுப்பினர்களை முதலமைச்சர் நியமிக்கும்போது அவர்கள் தொடர்பில் பத்திரிகைகளில் விளம்பரம் செய்ய வேண்டும். இதன்மூலம் குழு உறுப்பினர்களின் கீர்த்தி, புகழ் என்பவற்றை அறிந்து கொள்ள முடியும். இந்த விடயத்தில் பத்திரிகை விளம்பரம் செய்திருந்தால், அமைச்சர் ஐங்கரநேசன் குறிப்பிடுவது போன்ற விடயம் நடந்திருக்க முடியாது என்றார்.

இவை எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் இறுதியாக பெரும் குண்டு ஒன்றைத் தூக்கிப் போட்டார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தான் நியமித்த விசாரணைக் குழுவின் உறுப்பினர்களின் பெயர்களை, 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி நடைபெற்ற சபை அமர்வில் கூறினார். அதன் சபைப் பதிவேடு என்னிடம் இருக்கின்றது என்றார்.

விசாரணைக் குழு உறுப்பினர்கள் மீது பழிபோட்டுத் தப்பித்துக் கொள்ள அமைச்சர் ஐங்கரநேசன் கூறிய தன்னிலை விளக்கமும், அவைத் தலைவர் மூலம் மாட்டிக் கொண்டது. அவைத் தலைவர் கூறிய பதிலுக்கு அமைச்சர் ஐங்கரநேசனோ, ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தனோ, ஏன் முதலமைச்சர் விக்னேஸ்வரனோ மூச்சுக் காட்டவில்லை.

**காய் நகர்த்தல்களுக்கு அவகாசம்**

விசாரணை அறிக்கை மீதான விவாதம் தள்ளிப் போயிருக்கின்றது. அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுச் சரியாக ஒரு வாரத்தின் பின்னர் அதைப் பற்றி விவாதம் நடக்க இருக்கின்றது. வெளிப் பார்வைக்கு, அறிக்கை சமர்பிக்கப்பட்டால் அதை ஆராய்ந்து உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிப்பதற்கு கால அவகாசம் தேவை என்பது போன்றே அது தோற்றமளிக்கும். மாகாண சபையில் கூட உறுப்பினர்கள் அத்தகைய கருத்துக்களைத்தான் முன்வைத்திருந்தார்கள்.

ஆனால் உண்மையில், மாகாண சபை உறுப்பினர்கள் அறிக்கையை முழுமையாகப் படித்து அதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கப் போவதில்லை. தமது அரசியல் நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே கருத்தை முன்வைக்க இருக்கின்றார்கள். இதற்குள் அமைச்சர்கள் புகுந்து விளையாடுவார்கள். கட்சி அரசியல் கலந்து விளையாடும்.

எதிர்வரும் 14ஆம் திகதி நடக்கும் அமர்வில், குற்றச்சாட்டுக்குள்ளாகிப் பதவி விலக வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்ட அமைச்சர்கள் எப்படியாவது தமக்குச் சார்பாக பெரும்பான்மை உறுப்பினர்களை வளைத்துப்போட்டுக் கொண்டு வருவார்கள். இந்த அரசியல் சதிராட்லுக்காகவே, அமைச்சர்களும் சரி உறுப்பினர்களும் சரி விவாதத்தைக் கொஞ்சம் தள்ளிப் போடக் கோரியிருந்தார்கள். விசாரணை நீதியின் அடிப்படையில் எல்லாம் இங்கு முடிவெடுக்கப்படப் போவது கிடையாது. நீதியரசராக இருந்த தற்போதைய முதல்வர்கூட, அரசியலின் அடிப்படையில்தான் முடிவைச் சொல்லப் போகின்றார்.







வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தான் நியமித்த விசார ணைக் குழுவின் உறுப்பினர்களின் பெயர்களை, 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி நடைபெற்ற சபை அமர்வில் கூறினார். அதன் சபைப் பதிவேடு என்னிடம் இருக்கின்றது என்றார். விசார ணைக் குழு உறுப்பினர்கள் மீது பழிபோட்டுத் தப்பித்துக் கொள்ள அமைச்சர் ஐங்கரநேசன் கூறிய தன்னிலை விளக்கமும், அவைத் தலைவர் மூலம் மாட்டிக் கொண்டது. அவைத் தலைவர் கூறிய பதிலுக்கு அமைச்சர் ஐங்கரநேசனோ, ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தனோ, ஏன் முதலமைச்சர் விக்னேஸ் வரனோ மூச்சுக் காட்டவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டிபோடும்.... மயிலிறகே....!

ஜெ. காயா

கால் நடையாகப் பள்ளிக் கூடம்...

பசி வயிற்றைக் கிள்ளிக் கொண்டிருந்தாலும் பொடி நடையாக ஆடிப் பாடிய படியே வீடு...

வீடு வந்து சேர்வதற்குள் அம்மா அடி வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு தெருப் படலையைப் பார்ப்பதும் அங்குமிங்குமாக அல்லாடிக் கொள்வதுமாக உயர்கொதி நிலையிலிருப்பாள். பிந்திச் சென்றால் பின்னேரப் படிப்புக்குப் பக்கத்து வீட்டு சரசு ரீச்சருக்கு வீட்டுப்பாடம் காட்டத் தேவையில்லை. அன்றைய பொழுதும் அப்படியே மறைந்தது.

அந்தக் காலம் என்னுடைய மூன்றாமண்டின் மூன்றாம் தவனையாக இருக்க வேண்டும்! புத்தகப்பை என்பது நாளுக்கொன்று எனப் புதிது புதிதாக மாறிக் கொண்டிருக்கும். காரணம், அது கடதாசிப் பையாகவோ அல்லது தினமொரு சொப்பின் பையாகவோ இருப்பதுதான்.



■ ■ ■

பள்ளிச் சிறுவர் நமக்குள் ஏராளம் புடுங்குப்பாடுகள் தினமிருக்கும். ஆனாலும் குறித்த அந்தப் புடுங்குப்பாடு மாத்திரம் சில வாரங்களாக நீடித்துக் கொண்டேயிருந்தது. அது என்னவாகவிருக்கும்...? எப்பதான் அது குஞ்சு பொரிக்கும்...? என்ற பிரச்சினை தான் அது. அதைக் கிளப்பிவிட்டது வழமைபோன்றே வகுப்பறைக்குள் குழப்பத்தை ஏற்படுத்திவிடும் எனது சகாவான லவன் தான். அன்றைக்கு அவன் நாம் அறியாத பொருள் ஒன்றைப் பள்ளிக்குக் கொண்டு வந்திருந்தான். அதைத் தன்னுடைய புத்தகப்பையை விட்டு ஒரு போதும் அவன் வெளியே எடுத்துவிடவில்லை. புத்தகப் பைக்குள்ளே, புத்தக ஒற்றைகளுக்கு இடைநடுவில் அதை மறைத்து வைத்திருந்தான். இடையிடையே ஓரிருவருக்கு மாத்திரம் அற்புதமாகவும், பயபக்தியுடனும் அதைக் காட்டிக் கொண்டிருந்தான். அந்தப் பொருளைச் சுற்றி அவன் கட்டிய வியூகம் எல்லோரையும் 'அது என்னவாகவிருக்கும்...?' என்று ஆவல் கொள்ளும் படியாகச் சற்றே ஈர்த்திழுக்கவே செய்தது. அத்துடன் அது பற்றிய சிறிய விளக்கம் ஒன்றும் அவனிடம் கூடவே யிருந்தது.



"உதுக்குள்ள மயிலிறகு ஒண்டு வைச்சிருக்கிறன். அது குட்டிபோடுற மயிலிறகு. வானத்துக்குக் காட்டக் கூடாது. வானத்துக்குக் காட்டினாக் குஞ்சு பொரிக்காது. புத்தகத்துக்க மூடி அதை அடை வைச்சிருக்கிறன். குஞ்சு பொரிச்சதும் உங்களுக்கெல்லாம் ஒண்டொண்டு தாறன்"

■ ■ ■

அவன் வைத்திருந்த மயிலிறகின் மகிமை இப்படியாகவிருந்தது. முண்டியடித்தவாறு எல்லோரும் அவனைச் சுற்றிக் குழுமினாலும் மறைத்து, மறைத்து அதை அவன் ஓரிருவருக்கே காட்டிக் கொண்டிருந்தான். அவனுக்கு ஒவ்வாத சிலரோ அந்தக் காட்சியைக் கண்டுகொள்ளத் தவறியிருந்தனர். அவர்களுக்கும் அந்த மயிலிறகை மறைத்து மறைத்துக் காட்டியதில் பார்த்தது பாதி, பார்க்காதது பாதியாகக் கண்டு முடித்த இன்னும் சிலருக்கும் "மயிலிறகு ஒன்றுள்ளது. வானத்துக்குக் காட்டாமல் வைச்சிருந்தால் அது குட்டிபோடும், வானத்துக்குக் காட்டாமல் அதைத் தன்ர புத்தகத்துக்க மறைச்சு வைச்சிருக்கிறான் லவன்" என்பதாக அவ்விடத்தில் அடிபடுகின்ற அது பற்றிய கதைகள் மாத்திரமே காதுகளை நிரப்பியிருந்தன. அதிலிருந்து மாத்திரமே அவர்கள் அவன் வைத்திருக்கும் மயிலிறகு பற்றிய மனக் காட்சியைத் தமக்குள் ஏற்படுத்திக் கொண்டனர். வானத்துக்குத் தெரிந்துவிடும் என்ற காரணத்தை வலிமை செய்ததில் லவனுக்கு அது சாத்தியமாயிற்று.

■ ■ ■

இப்படியே நாள்கள் கழிந்து, வாரங்கள் உருண்டோடி, மாதங்களையும் கண்டு விட்டது அந்த அடையிலிருக்கும் மயிலிறகு. ஆனால் அது குஞ்சு பொரிப்பதாயில்லை. லவனுக்கு இப்போது தொடங்கீற்று நெருக்கடிகள்.

"எப்பயடா உது குஞ்சு பொரிக்கும்?"

"எனக்கு எப்ப தருவ?"

தினமும் மெல்லத் திறந்து பார்ப்பதுவும், மூடுவதுமாய் இருந்த ஒரு நாளில் அந்த இறகிலிருந்து உதிர்ந்த இறகொன்றைக் கண்டுவிட்ட லவன், மயிலிறகு குட்டிபோட்டாயிற்று என்று ஓரிருவருக்கே பின்னாளில் அதையும் அற்புதமாகக் காட்டித் திரிந்தான். சகாக்களின் தொந்தரவுகளுக்கு இப்போதைக்கு முற்றுப்புள்ளி வைத்தாயிற்று.

வானத்துக்குக் காட்டக்கூடாது என்பது இன்னும் கொஞ்சம் கடுமையாக...

மயிலிறகோ புத்தகத்துக்குள்...

இப்போதும் பத்திரமாய்...

அப்படியே...




# இந்தவார முகநூலில்...

உசிலமணி

வடக்கு மாகாணசபை அமைச்சர்களின் விசாரணை அறிக்கை தொடர்பில் முகநூலில் விளாசல்கள் கொஞ்சம் பலமாகத்தான் இருந்தன. "மலர்ந்தது தமிழரசு" என்று மாகாண சபைத் தேர்தல் முடிவுடன் வந்த பத்திரிகைக் 'கட்டிங்கையும்' அமைச்சர்களைப் பதவி நீக்கச் சொன்ன பத்திரிகைக் 'கட்டிங்கையும்' போட்டு வெளுத்து வாங்கியிருந்தாங்கள். வந்தவன், போனவன் எல்லாருமே, அந்த அமைச்சர்களின்ர வண்டவாளங்களைப் பற்றிப் பெருமையாய் கதைச்சாங்கள்.

Like Comment Share



இப்ப நடக்கிறது 'மினி வேள்ட் கப்பா' இல்லை 'வேள்ட் கப்பா' என்ற சந்தேகம் வந்திட்டுது. ஒவ்வொருத்தனும் போடுற 'போஸ்'டைப் பார்த்த இந்தச் சந்தேகம் வரத்தான் செய்யுது. இந்தியா பாகிஸ்தான் 'மச்'தான் 'செம கிட்டா' இருக்கும் என்று பார்த்தா, இலங்கை – இந்தியா 'மச்'தான் 'ரொப்'பில நிண்டுது.



இலங்கை – இந்தியா 'மச்' தொடங்கிற வரைக்கும், இலங்கையை, எல்லாரும் செம கலாய் கலாய்ச்சாங்கள். ஆனா, எவருமே எதிர்பார்க்காத நெத்தி அடியை இந்தியாவுக்குக் கொடுத்து இலங்கை வெண்டிருக்கு.

Like Comment Share





முகநூலில் ஒரு பகுதி, கல்வி அமைச்சரைக் காப்பாத்த முதல்ல பிரதேச வாதத்தைத் தொடக்கிச்சுது. அவர் வன்னியான் என்றபடியால்தான் இப்பிடிச் செய்து போட்டங்கள் எண்டதாய் அவர்களின் ஒப்பாரி இருந்திச்சுது. விட யத்தை பிரதேச வாதத்தில போட்டு வெட்டிவிட அவையள் பாடுபடுற மாதிரித் தெரிஞ்சுது. மற்றொரு 'பகுதி' விவசாய அமைச்சரைக் காப்பாத்த மூச்சாக் களமிறங்கிச்சுது. அவர் செய்த சாதனைகளைப் பட்டியலிட்டு, பெரும் வியாக்கியானம் நடந்திச்சுது. 10 நல்லது செய்தா, ஒரு கெட்டது செய்யலாமா? எண்டு பதிலடியும் கெடுக்கப்பட்டது.

Like Comment Share



தென்பகுதியில பேரிடரால பாதிக்கப்பட்டவைக்குச் சம்பந்தன் உதவி நிவாரணங்களைக் கொண்டுபோய் ப் போனகிழமை கொடுத்தவர். எங்கட சனத்துக்கு முள்ளிவாய்க்காலுக்குப் பிறகு இண்டுவரைக்கும் அவல்கூடக் கிடைக்கேல்ல, சிங்களச் சனத்துக்கு உதுகளைக் கொண்டுபோய்க் கொடுக்கிறார் எண்டும், இப்ப நம்மட சனம் போராட்டம் நடத்துது. அதை வந்து பார்க்கேல்ல. சிங்கள சனத்திட்டப் போட்டார் எண்டும் வாயில வந்தத வரிஞ்சு கட்டிக் கொண்டு போட்டுத் தள்ளினாங்கள்.

Like Comment Share

Like Comment Share

அரசியலிலயும், விளையாட்டிலயும் கலகலப்பா இந்த வாரம் போட்டுது. அடுத்த வாரம் என்ன நடக்குது எண்டு பார்ப்பம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கலை, இலக்கியத்தில் கொய்தலும் கொழித்தலும்

கலை, இலக்கியப் படைப்பாளிகளின் பல்வேறு கருத்துக்களை அவர்களின் நூல்களில் இருந்தும் சிற்றேடுகளில் இருந்தும் தொகுத்து இந்தப் பகுதியில் தரப்படுகின்றது.

தி. இராஜநாயகி

## எஸ்.இராமகிருஸ்ணன்



### எழுத்தாளன்

எழுத்தாளனாக இருப்பது ஒரு வேலையல்ல. ஆண், பெண் என்ற பால் சார்ந்த அடையாளம் அல்ல. எழுத்தாளான இருப்பது சிறப்பு அடையாளம் கிடையாது. எழுத்து என்பது ஓர் ஆழ்ந்த தியான நிலைதான். புத்தனின் தியானம் என்று சொல்ல முடியாது. விருட்சத்தின் தியானம் என்று சொல்லலாம். விருட்சம் தொடர்ந்து நிசாப்தமாக இருக்கும். மரத்துக்குக் கீழே இருந்து பார்க்கும்போது அது பெரிய போராளி. தன்னுடைய வேர்களை எல்லா இடத்துக்கும் அனுப்பி சின்ன அறிகுறி கூட இல்லாமல் மரத்தின் மேல் பக்கம் இருக்கும். இந்த வேட்கையும் அமைதியும் இரண்டும் சேர்ந்துதான் மரம். இந்த விருட்சத்தின் தியானம் தான் எழுத்தாளனோட தியானம்.

### எழுத்தாளன் யதார்த்தவாதம் கலைஞர்கள் படைப்பும் சமூகமும்

யதார்த்தவாதம் என்ற பெயரில் சுய அனுபவத்தை எழுதுவது மட்டுமே கதை என்று கூக்குரலிட்டுக் கொண்டிருந்த ஒரு சாராருக்கும் மறுபக்கம் இலட்சிய வாதக் கோட்பாடுகளுக்கு ஏற்றபடி கதையைத் தைத்துக் கொடுக்கும் சீர்திருத்தக் கதாசிரியர்களுக்கும் இடையில் கதைகள் என்பது ஒரு புனைவு என்பது யாவரும் அறிந்த உண்மைதான். ஆனால் புனைவு என்பதைப் பொய் என்று புரிந்து வைத்திருப்பதை நான் மறுத்தேன். கற்பனை என்பது உண்மைக்கு எதிரானதல்ல. உண்மையைப் புரிந்து கொள்வதற்கும் வெளிப்படுத்துவதற்குமான சாத்தியப்பாடு என்று கூறினேன். யதார்த்தம் என்பது ஒரு புனைவே. அதை முன் முடிவுசெய்யப்பட்ட புனைவாகச் சொல்லலாம். கடந்த காலங்களில் யதார்த்தத்தைத் தட்டையான ஒற்றைப் பரிமாணமுள்ளதாக மட்டுமே புரிந்து கொண்டிருக்கிறார்கள். உண்மையில் யதார்த்தம் பல தளங்களை உடையது. அதீதமும் இயல்பும் ஒன்றாக முயங்கிக் கிடக்கக் கூடியது. காலத்துக்குக் காலம் யதார்த்தத்தைப் பற்றிய புரிதல் தொடர்ந்து மாறிக் கொண்டேதானிருக்கின்றது. யதார்த்தம் என்ற பெயரில் நடைபெற்று வந்த சலிப்பூட்டும் ஒற்றைத் தன்மைக் கதைமுறைகளை மாற்றியமைக்க வேண்டும் என்றுதான் நான் பேசியும் எழுதியும் வந்திருக்கிறேன். நம் கதை மரபு ஒற்றைத்தன்மை வாய்ந்தது அல்ல. அது பன்முகத் தன்மை வாய்ந்தது.

(எப்போதுமிருக்கும் கதை)

## மு.பொன்னம்பலம்

### கலைஞர்கள்



வாழும்போது ஒரு கலைஞன் நம்மால் கண்டுகொள்ளப்படுவதில்லை. கண்டுகொண்டாலும் நாம் அவன் திறமையைப் பாராட்ட முன்வருவதில்லை. மாறாக நமது காழ்ப்பும் வயிற்றெரிச்சலுமே அவனுக்கெதிராக ஏவப்படுகின்றன. ஒரு கலைஞன் வாழும்போதே அவனைப் பாராட்டி, அவனது திறமைகளைக் கௌரவித்து, அவனிடம் குறைகள் இருந்தால் அதை உரிய முறையில் முன்வைத்து, அவனை ஆற்றுப்படுத்தும் வழக்கம் நம்மிடம் எப்பொழுதுமே இருந்ததில்லை. இருக்கும்போது ஒருவனுக்கு நம்மால் முடிந்த மட்டும் சேற்றை வாரிக்கொட்டுவதும், இறந்த பின்னர் அதற்கு மாறாக அவனை 'ஆகா ஓகோ' என்று உச்சியில் ஏற்றுவதுமே நமது வழமையாகிப் போய்விட்டது.

(திறனாய்வு சார்ந்த சில பார்வைகள்)

## பாவண்ணன்

### படைப்பும் சமூகமும்



ஒரு படைப்பு என்பதை ஒரு பக்கமாகவும் சமூகம் என்னும் மக்கள் கூட்டத்தை மறுபக்கமாகவும் பார்க்க வேண்டாம். என்னதான் முக்கியமான எழுத்தாக இருந்தாலும் அதை ஒரு வாசகன் தனிமையில்தான் படிக்கிறான். அவனைப் பொறுத்தமட்டில் அது ஒரு அந்தரங்கமான அனுபவம். ஒரு எழுத்து ஒரு வாசகன் என்பதை நிலையில்தான் உறவு நீடிக்கின்றது. ஒரு எழுத்தை வாசிக்கும்போது அதன் சாரத்தை அறியும் வாசகன் அதன் வலிமையைத் தன் வலிமையாக்கிக் கொள்கின்றான். அப்புள்ளியை நோக்கி விவாதிக்க விழையும் தருணங்களில் அவன் பார்வை விரிவும் கூர்மையும் பெறுகின்றது. பார்வையிலே ஏற்படும் மாற்றம் அணுகுமுறையிலும் மாற்றத்தை ஏற்படுத்தும். ஒரு வாசகன் கோடிக்கணக்கான மானுட சமூகத்தில் ஒரு அங்கம் என்கின்ற நிலையில், அவன் அணுகும் முறையில் மாற்றம் ஏற்படக் காரணமாகின்றது. எழுத்து, சமூக மாற்றத்திலும் இது முக்கியமான பகுதி என்கின்ற வகையில் எழுத்துக்கும் சமூகத்துக்குமான உறவு இன்னும் கூடுதலான வலிமையடைகின்றது. சமூகத்துக்கும் எழுத்துக்குமான உறவை நான் இப்படித்தான் புரிந்துகொள்கின்றேன்.

*(இலக்கிய உரையாரடல்கள்)*

## வெறுமை

தாகம் இருந்தும்
கண்முன்னே பரந்திருக்கும்
கடல் போலவும்....
வயது கடந்து வந்து சேரும்
திடீர் ஞானம் போலவும்....
வாடிய பின் பூவைத் தேடி
அவசரமாய் வந்து சேரும்
வண்ணத்தி போலவும்...
வறண்ட நிலத்தில்
பெய்து முடிந்திருக்கும்
தூறல் மழை போலவும்....
எதுவும் முழுவதுமாய்
நிரம்பாமலே போகிறது
எனக்கு உன்மேல்....!



## எஸ்.தர்சி கவிதைகள்

### முகவரி

என்வீட்டின்
முகவரி தெரியாத
அவனுக்கு
என் இரவுகளின்
முகவரி
யார் கொடுத்தது...?
தவறாமல் வந்துவிடுகின்றான்
தினமும் கனவுகளில்...



### எனக்குப் புரியும்

நீ
நெருங்கும்போது
'செல்'கள் அனைத்தும்
சில்லிட்டு பூப் பூக்கின்றன....
இமைகள் அறிக்கையிடாமல்
தாழ்கின்றன....
இதழ்கள் தன்னையே அறியாமல்
புன்னகைக்கின்றன...
எனக்குத் தெரியும்
நீ நெருங்குவது என்னை அல்ல
என் இதயத்தை என்று
ஆனாலும் நீ
தள்ளி நின்றே பேசு
நீ பேசுவது மௌனமாயினும்
எனக்கு அது புரியும்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா வழியில் அல்ல...

இணுவையூர் சிதரம்ப திருச்செந்திநாதன்

உனக்கு எத்தினை வயதாகுதெண்டு தெரியுமே" அம்மா கேட்க "கேட்டு என்ன செய்யப் போறியள்" பதிலுக்குப் பளீர் என வெடித்தாள் சுஜந்தா. "என்னடி விசர்க் கதை கதைக்கிறாய். எத்தின நாளைக்குத்தான் நான் கேட்டு வாறவங்களுக்குப் பதில் சொல்லுறது. வயது வட்டுக்குப் போட்டுது. முகத்தில அது தெரியுது. நான் மண்டையப்போட முதல் ஒரு கலியாணத்தைச் செய்து வைப்பம் எண்டு எத்தின பாடு படுகிறன்"

சுஜந்தா பதில் ஏதும் பேசவில்லை. காலையில் பாடசாலைக்குப் புறப்படும் நேரம் பார்த்து அம்மா இப்படி அதிரடித்தாக்குதல்கள் நடத்துவதைப் பழக்கமாகக் கொண்டிருந்ததால் அதில் அவளுக்கு ஒருவகை திருப்தி இருக்கின்றதோ எனவும் சுஜந்தா யோசிப்பதுண்டு. பாடசாலை நேரம் ஏழரை மணியாகிவிட்ட பின்னர் சுஜந்தா கடைசி ஏழுமணிக்காவது வீட்டை விட்டுப் புறப்படுவது வழக்கம்.

ஸ்கூட்டியில் போனால் பத்து நிமிட ஓட்டம். ஆனால் மருதனார்மடம் சந்தியையும் சுன்னாகம் சந்தியையும் கடந்து ஏழாலைப் பக்கம் போய்ச்சேரும் வரை ஒருவகை மனப்பயம் இருக்கும். "சர் சர்" என சகல வாகனங்களும் பாய்ந்துகொண்டிருக்கும். இதற்கு இடையில் வாகனம் ஓட்டுவது என்பது எத்துணை சிரமமானது என்பது சொல்லி மாளாது.

வழக்கமாக ஆத்துப்பறந்து சாப்பிடுவது அவளின் பழக்கம். அம்மாதான் சிறிய துணிப்பையில் சாப்பாட்டுப் பொக்சையும், தண்ணிப்போத்தலையும் வைப்பாள். ஆனால் இன்றைக்கு அவை எதுவுமே செய்யாமல் கல்லுப் பிள்ளையார்போல முன்விறாந்தை வாசற்படியில் அமர்ந்திருக்கின்றாள். நிறம் வெளிறி நைந்து தும்பாகிப்போன ஒரு சோட்டியை அவள் அணிந்திருந்தாள். ஒழுங்காக வாரப்படாத அவளுடைய தலைமயிர் வாள்வெட்டுக் கோஷ்டியைப்போல தறிகெட்டுக் கிடந்தது.

எத்தனை தடவை சொல்லியிருப்பாள் சுஜந்தா. "அம்மா உந்தச் சோட்டியை மாத்துங்கோ" என. அதற்கு எந்த மறுமொழியும் சொல்லாமல் தொலைக்காட்சித் தொடர்களில் வரும் பெண் வில்லிகளைப்போல முகத்தை வைத்திருந்தாள். ஒரே ஒரு வித்தியாசம். அவர்கள் பட்டுடுத்து றோஸ் பவுடர் பூசி வில்லிப்பார்கள். அம்மா பஞ்சத்துப் பரதேசியாக இருந்து வில்லத்தனம் புரிகின்றாள்.

அம்மாவுக்குக் குறையொன்றும் இல்லை. வாத்திவேலை செய்ததால் அம்மாவுக்குப் பென்சன் வருகிறது. அதே வாத்தி வேலையை அப்பாவும் பார்த்துப் பரலோகம் போய்விட்டார். அவருடைய பென்சனும் அம்மாவுக்கு வருகிறது. இருபது பரப்புக் காணிக்குள் பிரமாண்டமான வீடு. வளவு நிறைய தென்னை, பலா, மா என்று பயன்தரும் மரங்கள். செழிப்புக் காட்டி நன்கு சிலிர்த்துப்போய் நின்றன. வீட்டு வருமானமே அம்மாவுக்குக் காணும்.

வரும்போது சீதனமாக வந்த தோட்டக்காணி பதினாறு பரப்பும் இப்போதும் அம்மாவின் பெயரில் தான் உள்ளது. வங்கியிலும் அவளுக்கு வைப்புச் சொப்புக்கள் உண்டு. நகைகள்வேறு பழம்பெருமை பேசிக்கொண்டு வீட்டினுள் தலைமறைவாக. இவை எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு அம்மா என்ன செய்யப்போகிறாள்.

வீடும் வளவும், தோட்டக் காணிகளும், நகையும், காசும், தொழிலும் என அம்மா வீம்புடன் வாழ்ந்தாள். அந்த வீம்புடன்தான் இப்போதும் இருக்கின்றாள். தன்னைவிட யாருக்கும் உபயோகம் இல்லாமல். ஸ்கூட்டியில் வீட்டைவிட்டுப் புறப்பட்டபோது அம்மாவுக்குச் சொல்லாமலேயே புறப்பட்டாள். எப்போதவது கேற்றைத் திறந்து விடுவாள் அவள். இன்றைக்கு இருந்த இடத்தைவிட்டு எழும்பவே இல்லை.

கேற்றைத் திறந்து ஒழுங்கைக்குள் இறங்கிய போது பாடசாலை செல்லும் சிட்டுக்குருவிகள் நகர்ந்து கொண்டிருந்தார்கள். சிலர் எதிர்வீட்டுப் பிள்ளைகள். வழக்கம்போல அவர்கள் புன்னகைகள் காற்றில் மிக மிக மெதுவாகப் பரவி வந்தன. சுஜந்தாவும் சிரித்தாள். சிரிக்கத் தொடங்கியதும் மனதில் இருந்த பாரம் இறங்குவது போல இருந்தது. அம்மாவுடன் முரண்பட்டுப் புறப்பட்டது தேவை இல்லாத விடயமோ என்ற எண்ணமும் ஏற்பட்டது. காங்கேசன்துறை வீதியில் ஸ்கூட்டியை ஏற்றி நிதானமாகக் காத்திருந்து தாவடிச் சந்தியில் திரும்பியபோது எதிரே மிதமான வேகத்தில் வந்த மயூரன் மோட்டார் சைக்கிளில் தன் ஓட்டவேகத்தைக் குறைத்து புன்னகைத்தான். அந்தப் புன்னகையின் அடி ஆழத்தில் நுண்ணியதாக இழையோடிப்போயிருந்த வேதனையை சுஜந்தா உணர்ந்து கொண்டாள்.



> அவன் குரலில் இருந்த ஈரக்கசிவு சுஜந்தாவுக்கு ஒரு மாற்றத்தைக் கொடுத்திருக்க வேண்டும். அவன் அழுதுவிடும் நிலையிலிருப்பதையும் அவள் உணர்ந்தாள். சோகம் கொப்பளிக்கும் விழிகளால் அவளை அவன் பார்த்தான். "மிஸ்... என்னைப் பிழையா நினையாதிங்கோ. எனக்கு அந்தப் பழைய கதைகள் எல்லாம் வேண்டாம். அதுகளை ஒருகெட்ட கனவா மறந்து போங்கோ"

- - - - -

மூன்று வருடங்களுக்கு முன்னர் மயூரன் அவள் படிப்பித்துக்கொண்டிருந்த பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றிருந்தான். அதற்கு முன்னர் வன்னி க்ஸ்ரப் பிரதேசத்தில் கடமையாற்றியிருக்க வேண்டும்.

பக்கத்துப் பக்கத்து வகுப்புக்களில் இருந்து. ஒரே நேரம் வகுப்பெடுக்க ஆரம்பித்துப் புன்னகைத்துப் புன்னகைத்து அதுபின்னர் கூடுதலாகி ஒற்றை வார்த்தைப் பிரயோகக் கதையாக மாறி அவைபின்னர் அதிகம் கதைப்பதாக மாறிற்று.

வீட்டில் கலியாணப்பேச்சு வெகு வீரியமாக நடப்பதாக மயூரன் சொன்னான். வன்னியில் இருக்கும் வரை தான் கலியாணம் முடிக்க விரும்பியிருக்கவில்லை என்றும் இப்போது ஊருக்கு வந்தபடியால் இனிச் சாட்டுச் சொல்ல முடியாதெனவும் மயூரன் சென்னான்.

பார்ப்பதற்கு மனம் நிறைவான ஆண்மகனாகத் தான் மயூரன் இருந்தான். அவனிடம் ஒருவகை ஈர்ப்பு இருப்பதையும் சுஜந்தா தண்டாள். சுற்றிச் சுற்றிக் கதைத்து மயூரன் ஒரு தடவை அவளைச் சுற்றி வியூகம் கட்டினான்.

அது வருடாந்த விளையாட்டுப்போட்டிக் காலம். இல்லங்கள் பிரித்து மாணவர்கள் பயிற்சியில் இருந்தனர். மைதானத்தில் ஒரு மூலையில் தனித்திருந்த புளியமரம் தன் விருப்பம்போல வெயிலை எதிர் கொண்டபடி கீழே நிழல் விரித்திருந்தது.

ஆசிரியர்கள் கொண்டு வந்துபோட்ட கதிரைகள் சில அங்கிருந்தன. வெம்மை கலந்த காற்று என்றாலும் அது இதமாக இருந்தது. வேலிக் கரையோரமாக இருந்த வீட்டில் இருந்து பி. சுசீலாவின் பழைய பாடல் ஒன்று இனிமையாக... "மிஸ் உங்களுக்கு ஒரு லவ் பிறேக் இருக்காம்..."என்ற கேள்வியில் மயூரனிடம் ஒரு தயக்கம் இருந்தது. என்றாலும் சூழவும் யாரும் இல்லதா சூழ்நிலையை இனிமேலும் எதிர்பார்க்க முடியாது என்ற அவசரமும் அதில் வெளிப்பட்டது.

சுஜந்தா அப்படி ஒரு கேள்வியை அப்போது எதிர்பார்க்கவில்லை. மறைபொருளாய் அடி மனதில் பாசி படர்ந்து கிடந்த பழைய நினைப்புக்கள் பொல பொலவெனக் கொட்ட ஆரம்பித்தன.

இயல்பாக இருந்த அவள் முகம் முதலில் சிவந்து பிறகு கறுத்து விழியோரங்களில் துளித்துளியாக நினைப்புக்கள் வெளிவருகின்றனவா?

மயூரன் கலங்கித் துடித்துப் போனான். "ஐயோ மிஸ் நான் பிழையாய் ஏதும் கேட்டால் என்னை மன்னிச்சுக்கொள்ளுங்கோ. உங்களைக்காயப்படுத்த வெண்டு நான் உங்களைக் கேட்கயில்லை"

புளியமரத்தின் அடியோரம் இரண்டு அணில்கள் அடித்துப்பிடித்து ஒன்றின் பின் ஒன்றாக ஓடின. மாணவிகள் சேர்ந்து கூச்சலிடுவதும் எல்லோரும் அத்திசையை நோக்கிப் பார்ப்பதுமாக இருக்க மயூரன் பரிதாபமாக சுஜந்தாவைப் பார்த்தான்.

சுஜந்தாவின் உதடுகள் மெல்லெனத் துடித்தன. வெக்கை கால ராஜதான் தான் என்பதை நிரூபிப்பதற்காகச் சூரியன் நெருப்புக் கொழுத்தாமலே தரையை எரித்துக் கொண்டிருந்தான்.

நெஞ்சு படபடக்க வெம்மை பிளக்கும் சூரிய ஒளியைப் பார்த்தாள் சுஜந்தா. தொடர்ந்து பார்க்க முடியவில்லை. பார்வையை வேலிப்பக்கம் திருப்பினாள். சீமைக்கிளுவை வேலியில் கிளைகளும் இலைகளும் வெயிலால் வேதனைப்பட்டு அழுது சோர்ந்திருந்தன.

"மிஸ்... மிஸ்..." என்றான் மயூரன். எட்டாத தொலைவிலிருந்து அந்தக்குரல் கேட்பதாகப் பட்டது அவளுக்கு.

"மிஸ்... தயவு செய்து பிழையா நினையாதிங்கோ. உங்களை இப்பிடிக் கஸ்ரப்படுத்தும் எண்டால் நான் கேட்டிருக்க மாட்டன்" அவன் குரலில் இருந்த ஈரக்கசிவு சுஜந்தாவுக்கு ஒரு மாற்றத்தைக் கொடுத்திருக்க வேண்டும். அவன் அழுதுவிடும் நிலையிலிருப்பதையும் அவள் உணர்ந்தாள்.

சோகம் கொப்பளிக்கும் விழிகளால் அவளை அவன் பார்த்தான்.

"மிஸ்... என்னைப் பிழையா நினையாதிங்கோ. எனக்கு அந்தப் பழைய கதைகள் எல்லாம் வேண்டாம். அதுகளை ஒருகெட்ட கனவா மறந்து போங்கோ" சுஜந்தா அவனை விநோதமாகப் பார்த்தாள். என்ன சொல்ல வருகிறான் இவன்.

"மிஸ் நீங்க சம்மதித்தால் நான் உங்கட வீட்ட வந்து கதைக்கிறன். உங்களோட கதைச்சுச் கதைச்சு என்னை அறியாமலே நான் உங்களை விரும்பத் தொடங்கீற்றன்"

"என்ன..."

"ஓம் மிஸ் நீங்கள் கீனக்கக் கதைக்க மாட்டியல் ஆனால் கதைக்கிற ஒவ்வொரு சொல்லும் என்னைத் தாக்கிற ஆயுதமா மாறிட்டுது. இதைவிட அந்தச் சொற்களில ஊறிப்போய்க் கிடக்கிற சோகம் என்னைச் சித்திரவதை செய்யுது அதுதான் உங்களப்பற்றி விசாரிச்சன். நீங்கள் ஒருவரை விரும்பினதாகவும் உங்கட அம்மா அதுக்குச் சம்மதிக்கேல்ல எண்டும் அதுக்குப் பிறகு இப்பிடியே இருக்கிறீங்கள் என்டும் கேள்விப்பட்டன். உங்கட முகமும் சோகமும் என்ன நித்திரை கொள்ள விடுகிதில்லை மிஸ்"

அவன் சொல்லி முடிப்பதற்குள் மயூரனிடம் இருந்த ஆண்மையும் வேகமும் தோற்றன. இல்லமல் போய் நெக்கி உருக்குலைந்த ஒரு பக்தனாக கடவுளிடம் யாசகம் கேட்கும் அடியாளாக மாறியிருந்தான்.

"சேர் என்ன மன்னிச்சுக் கொள்ளுங்கோ.. என்ர வாழ்க்கை எப்பவோ முடிஞ்சு போச்சுது அவ்வளவுதான்" என்றபடி கதிரையைவிட்டு எழுந்து பிள்ளைகள் அதிகமாக இருக்கும். பக்கம் நடக்கத் தொடங்கினாள் சுஜந்தா.

அவள் போவதைப் பார்த்துக் கொண்டு மயூரன் வெகு நேரம் வரை அந்த இடத்திலேயே நின்றான்.

- - - -

மயூரனின் புன்னகையில் பிணைந்து கிடந்த துயரத்தின் தன்மையினை சுஜந்தா உணர்ந்தபோது மனதில் குழப்பம் ஏற்பட்டது. ஸ்கூட்டியை நிதானமாக ஓட்டிச் செல்வது சிரமமாக இருந்தது.

பாடசாலையில் முதலாவது பாடம் பிறியாக இருந்தபடியால் ஸ்ராவ் றூமுக்குப் போகாமல் லைபிறேறிக்குப் போனாள். அது வெறிச்சோடிப்போய் மௌனம் காத்தது. காற்றினைத் தவிர கேள்வி கேட்க யாருமில்லை.

சஞ்சிகை ஒன்றை எடுத்துக்கொண்டு ஓரமாக உட்கார்ந்தாலும் மனம் கையில் இருந்த சஞ்சிகையில் லயிக்கவில்லை. சுழன்றடித்து நினைவுகள் திசைக்கொன்றாகப் பறந்தோடின. பத்து வருடங்களாகத் தான் வரித்துக் கொண்ட நிலைப்பாட்டை அவளால் விட்டு விலக முடியாதிருப்பதை உணர்ந்து கொண்டாள்.

ஆசிரிய சேவையில் பத்து வருடங்கள் கடந்து விட்டன. இன்னமும் மிஸ் சுஜந்தா கதிரவேலுவாக இருப்பது ஒன்றும் கஷ்டமாக இருக்கவில்லை. எப்போதாவது மயூரன் போன்ற சிலர் வருவார்கள். அவர்களைத் தவிர்த்து விட்டால் அவ்வளவுதான்.

அம்மா வாத்தி வேலையில் இருந்து ஓய்வுபெற்ற அதே வருடம்தான் சுஜந்தாவுக்கு வேலை கிடைத்தது. முதல் பாடசாலை. புதிய சூழல். இறக்கை கட்டிக் கொண்டு பறக்கும் இருபத்தியொரு வயதது.

43

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.ப.வேந்தன்



# குரும்பை

## அழகியலைத் தவறவிட்ட அற்புத சினிமா

“பிரச்சினைகளைக் கையாளும் திரைப் படங்களில் எனக்கு அக்கறை உண்டு. ஆனால் பிரச்சினைகளுக்கானதீர்வை என்னால் எப்பொழுதாவது தரமுடியுமென நான் கருத வில்லை. சமூகத்தைப் பற்றியும், மனித உறவுகளைப்பற்றியும், அவர்கள் அன்றாடம் முகங்கொடுக்கும் பிரச்சினைகளைப் பற்றியுமான விழிப்புணர்வை பார்வையாளர்களிடையேஅந்தத்திரைப்படம்ஏற்படுத்த வேண்டுமென நான் கருதுகிறேன். அதனால் மனித குலத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில், அவர்கள் கூடிய விழிப்புணர்வைப் பெறுகின்றனர்” சத்யஜித்ரே (பதிவுகள் – அ.யேசுராசா) ஒரு திரைப்படம் மக்களிடத்தில் ஏதாவதொருவகையில் தான்எடுத்துக்கொண்டகருவோடுஇணைந்து விழிப்புணர்வைஏற்படுத்துமிடத்து அது சமூகப்பெறுமானமுள்ள ஒரு படைப்பாக மாறிவிடுகிறது. தீர்வுகளை வழங்குவதிலுள்ள அக்கறையை விட பிரச்சினைகளை அடையாளப்படுத்தினாலேயேபாதிவெற்றியைஅடைந்துவிட முடியும். அப்படியான நீளும் சமூகப்பிரச்சினை ஒன்றைக் கருவாக்கிப் படமாக்கியிருக்கின்றது திருமறைக்கலாமன்றம்.

### குரும்பையின் அறிமுகம்

யாழ்ப்பாணத்தின் பேச்சுவழக்கில் தேங்காயின்பிஞ்சை‘குரும்பை’என அழைப்பதுண்டு. இது குழந்தைப் பருவம் தாண்டிய சிறுவர் பருவத்தினரையும் குறிக்கப் பயன்படும். ஒரு சிறுவனைமையப்படுத்திநகரும்கதைக்கு‘குரும்பை’ என்றுதலைப்பிட்டுகதை, திரைக்கதை, வசனம் எழுதியிருக்கின்றார் இயக்குநர் பீ.சே.கலீஸ். தலைப்பிலும், எழுத்தறிமுகக் காட்சியிலும் வரும் குரும்பையின் விதம் விதமான சுமன்ராஜின் ஓவியங்களில் இருந்தே தன்னைக்கவனிக்கவைத்துவிடுகிறதுபடம்.பவிலன், கிறிஸ்ரினா மீரா, காணிக்கைதாஸ், சாந்தி, சகாயநாதன், யுகன் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில்நடித்திருக்கிறார்கள்.அ.யசிதரன்ஒளிப்பதிவு செய்யஇசையமைத்திருக்கிறார்எஸ்.ஜே.ஸ்ரலின். குடிப்பதையே தனது பிரதான தொழிலாகக் கொண்டிருக்கும் தந்தை, கிடுகு பின்னுதல், விறகுவெட்டுதல்எனக்கிடைக்கும்கூலிவேலைகளைச் செய்து குடும்பத்தைக் கவனித்துக் கொள்ளும் தாய், மூன்றுவயதுடைய தங்கை, இவைதான் கதையின் நாயகன் பத்துவயதுச் சிறுவனான வசந்தனின் குடும்ப அமைப்பு. வறுமைகாரணமாகப்படிப்பைஇடையில்நிறுத்திவிடும்வசந்தனுக்குப்பொழுதுபோக்கு, வெட்டைவெளியில்ஆடுகளோடுவிளையாடுவதும், சைக்கிள்சில்லைஉருட்டித்திரிவதும், இடையிடையே தாய் சொல்லும் சின்னச் சின்ன வேலைகளைச் செய்வதும் தான். ஒரு நாள் சைக்கிள்சில்லைஉருட்டிக்கொண்டுவரும் வசந்தன் கடையொன்றில் கச்சான் பிஸ்கட்டைப் பார்த்துவிடுகிறான். அதன்விலை 5ரூபா. தன்னிடம் 2ரூபாதான் இருக்கின்றது எனக்கூறியதும் கடைக்காரன் சிறியவேலையொன்றைக் கொடுத்துவிட்டு அதற்குக்கூலியாக கச்சான் பிஸ்கட்டைக் கொடுக்கிறான். பிஸ்கட்டைச் சுற்றிக்கொடுக்கும் கடதாசியில் வசந்தன் பாடசாலையில் படிக்கும் நாள்களில் வரைந்த ஓவியத்தைக் காண்கிறான். அதை வீட்டுக்குக்கொண்டுவந்து சுவரிலே ஒட்டி வைத்து, அதையே பார்த்துக்கொண்டிருக்கிறான். அவனுடையநினைவுகள்பின்னோக்கிச் செல்கின்றன.

காலையில் பாடசாலைச்சீருடையுடன் வீட்டின் திண்ணையில் அமர்ந்து வசந்தன் ஓவியம் வரைந்துகொண்டிருக்கிறான். அப்போது காலைப்பொழுதிலேயே குடிப்பதற்காகச்சாராயப் போத்தலைக் கொண்டுவந்து திண்ணையிலே வைக்கிறார் வசந்தனின் தகப்பன். இதைக்குடித்துவிட்டுத்தானே எனக்கும்அம்மாவுக்கும் அப்பா அடிக்கிறார் எனவே இதை எடுத்து ஒளித்துவிடுவோம் என்று அதைத் தனது புத்தகப்பைக்குள்வைத்து மறைத்து வீதியில்கொண்டு சென்று உடைத்து, எறிந்து விடுகிறான்.

மாலை பாடசாலை விட்டு வீடு திரும்பிய வசந்தனைக் கோபத்துடன் காத்திருந்த தகப்பன் மரத்துடன்கட்டிவைத்து அடிக்கிறார். அன்றுடன்வசந்தனின் பாடசாலை வாழ்க்கையும் முற்றுப் பெறுகின்றது. நினைவிலிருந்து மீள்கிறான்வசந்தன்.

பிறிதொருநாள் காலையில் தாய் பக்கத்துவீட்டுச் சாந்தியக்காவிடம் கிடுகு பின்னிய காசை வாங்குவதற்காக வசந்தனை அனுப்புகிறார். அவன் அங்கு போகிறான். அங்கு சாந்தியக்கா தனது இரண்டு (வசந்தனின் வயதையொத்த) பிள்ளைகளுக்கும் உணவூட்டிக்கொண்டிருக்கிறார். அதைப்பார்த்ததும் வசந்தனின் மனதில் ஆசைபிறக்கின்றது. காசைவாங்கிவந்துதாயிடம் கொடுத்துவிட்டு தாய்கொடுத்த பாணையும் தேநீரையும் தனக்கு ஊட்டிவிடுமாறு தாயை வேண்டுகிறான். தாய், தனக்கு வேலை இருப்பதாகச் சொல்லி அவனைச் சாப்பிடும்படி பேசுகிறார். இல்லை என அவன் வற்புறுத்தத் தாய் கோபமடைகிறார். அவன் சப்பிடாமல் சாந்தியக்கா வீட்டுக்குச் செல்கிறான். அங்கு சாந்தியக்கா தனது பிள்ளைகளுக்கு உணவூட்டிவிடுவதை வாசலில்நின்றுபார்த்துக்கொண்டிருக்கிறான். வசந்தனைக் கண்ட சாந்தியக்கா அவனை அழைத்து அவனுக்கும் உணவூட்டி விடுகிறார். வேறொரு நாள் வசந்தன் தாயுடன் விறகு வெட்டப்போகிறான். அப்போது ஒரு கிறிஸ்தவ மயானத்தில் இருவரும் ஓய்வெடுக்கின்றனர். “இதுக்க தாட்ட ஆக்கள் திரும்ப வரமாட்டினம் மாம்மா?”என்றுவசந்தன்தாயிடம் கேட்கிறான். அதற்குத் தாய் “இல்லை” என்கிறார். அது அவனை யோசிக்க வைக்கிறது.

வீட்டில் தகப்பன் குடித்துவிட்டுச் சத்தி எடுத்தவாறு விழ்ந்து கிடக்கிறார். தாயும் வசந்தனும் சேர்ந்து அவரை இழுத்துச் சரிசெய்கிறார்கள். அதன்பிறகு 6மாதங்களுக்கு மேலாகியும் தகப்பன் வீடு வரவில்லை. ஒருநாள், திடீரென்று தகப்பன் விட்டுக்கு வருகிறார். “இவ்வளவு நாளும் வீட்டு யோசினை இல்லாம எங்க கிடந்தனி?” எனத் தாய் பேசுகிறார். வந்த தகப்பன் வீட்டுக்குள் சென்று உள்ளிருந்த பொருள்களையெல்லாம் இழுத்துக்கொட்டித்தாலிக்கொடியைத்தேடுகிறான். தரமறுக்கும் மனைவிக்கு அடிக்கிறான். வசந்தனுக்கும் அடிக்கிறான். “நாளைக்கு வருவன் தாலிக்கொடி தராவிட்டால் கொளுத்தி விடுவேன்” என மிரட்டிவிட்டுச் செல்கிறான்.

தாய் அழுதுகொண்டிருக்கிறாள். அழுது கொண்டிருந்த வசந்தனும் தீர்மானம் எடுத்தவனாக எழுந்து சென்று வீட்டிலே இருந்த தங்களுடைய குடும்ப ஒளிப்படத்தை எடுத்து அதில் இருக்கும்தந்தையுடைய உருவத்தை மாத்திரம் கிழித்து எடுத்துக்கொண்டு மயானம் நோக்கி ஒடுகிறான். அங்கே ஒருகல்லறையின் அருகில் குழி ஒன்றை வெட்டித் தகப்பனுடைய ஒளிப்படத்தைக் கசக்கிப் போட்டுவிட்டு மண்போட்டு மூடுகிறான். கல்லறைச் சுவரில் அப்பா எனக் கரித்துண்டால் பெயர் எழுதிவிடுகிறான். இங்கே புதைத்தவர்கள் மீள வரமாட்டார்கள் என்ற நம்பிக்கை அவனை வலுவாகப்பற்றிக் கொள்கிறது. பின்னாலே துரத்திக்கொண்டு வந்த தாய் அவனையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்க ‘நாளை நீங்களும் புதைக்கப்படலாம்’; எனும் வாசகத்தோடு படம் நிறைவ்டைகிறது.

### கவிதைத்தனமான கதையும் கவனிக்கத் தவறிய படமாக்கல் முறையும்

கவிதைக்கான கரு ஒன்றை கதையாக்கிப் படமாக்கியிருக்கிறார் இயக்குநர். ஆனாலும் கதையின் அழகு படமாக்கப்பட்டதில் தொலைந்துவிட்டது. மிக அழகான ஆழமான குழந்தைகளின் மன இயல்புகளை மிக மென்மையாகப் பேசக்கூடிய கதையை படமாக்கிய விதத்தில் கூடுதல் சிரத்தை எடுத்திருந்தால், ஈழத்தமிழ்சினிமாவில் பெயர்சுட்டிக் கூற முடிந்த ஒரு படமாகக் குரும்பைஅமைந்திருக்கும்என்பதில்ஐயமில்லை. கதை நிகழும் களமும் சரி கதை மாந்தர்களும் சரிமிக இயல்பாகக்கதையோடுஒட்டிப்போனாலும், மிகை நடிப்பு குறிப்பிட்ட சில காட்சிகளில் துருத்திக்கொண்டுநிற்பதைத்தவிர்க்கமுடியாதுள்ளது. வசந்தனாகநடித்திருக்கும்சிறுவனின் அநாயாசமான நடிப்பு படத்துக்கு மிகப்பெரிய பலம். ஆனால் அவனால் மாத்திரம் படத்தை நகர்த்திச்செல்ல முடியவில்லை. தங்கையாக நடித்திருக்கும்பெண்குழந்தையின்இயல்புமிக அற்புதமான உலகத்தரமான சினிமாவைக் கண்முன்னே காட்டி விடுகிறது. குழந்தையின் இயல்பைஅதன்போக்கில்படமாக்கியிருப்பது இயக்குநரின்மிகப்பெரியவெற்றிஎனலாம். ஒரு காட்சியே ஆனாலும் மனதில் ஒட்டிவிடுகிறது அந்தக் குழந்தை. கதை நிகழும் சூழலுக்கேற்ப உரையாடல், பாத்திரங்களின் உடை, பின்னணி என்பன கவனிக்க வைக்கின்றன.

ஒற்றைச்சில்லுவண்டி, கோபத்துடன் தடியொன்றால் பனைமட்டை வேலியைத் தட்டிக் கொண்டுசெல்வது, ஆட்டுக்குட்டியுடன் உருண்டு புரள்வது, காற்சட்டை ஒன்றுடன் அந்த வீதி முழுவதும்விட்டேத்தியாகவிளையாடித்திரிவது என ஒரு கிராமத்துச் சிறுவனை அப்பட்டமாகக் காட்டியிருப்பது அழகு. கிராமத்தையும், கதைக் காட்சிகளையும் அழகாகக் காட்டுவதற்கு வசதியிருந்தும்கோட்டைவிட்டிருக்கிறதுஒளிப்பதிவு. பின்னணி இசையும் பார்வையாளனை கதையோடு நெருக்கமாக்கத் துணைபுரியவில்லை.

### சிறுவர் உலகின்மீது பெரியவர்களுக்கிருக்கும் பொறுப்பு

கடைக்காரர்சிறுவனுடைய ஆசையைப்பயன்படுத்திக்கொண்டு வேலை வாங்குவது, சாந்தியக்கா சிறுவனுடைய ஆசையைத் தீர்த்து வைப்பது, தாயால்சிறுவனுடையஆசைபுரிந்து கொள்ளப்படாமை, தகப்பனால் சிறுவனின் மனதில் வன்முறை, கோபம் உண்டாக்கப்படுவது, வாய்க்காலின் நாற்றத்தைப் பழகிவிட்டது எனக்கூறிச்செல்வதுபோன்றனமூலம்சிறுவர் உலகைத் தீர்மானிப்பதிலிருக்கின்ற பெரியவர்களின் பங்கு காட்டப்படுகின்றது.

சிறுவர் உளவியல், பெற்றோரின் வாழ்க்கை முறை என்பது பற்றிய ஒரு சமூக அக்கறையோடு பிரச்சினையை அடையாளம் காட்ட முனைந்திருக்கிறது குரும்பை. பேசப்படவேண்டியதும் அடையாளப்படுத்தப்படவேண்டியதுமான ஒரு கதையைப் படமாக்கியிருப்பதில் வெற்றிபெற்றிருக்கின்றார் இயக்குநர். ஆனாலும் சமூகத்தை உலுக்கும் அளவுக்கு வல்லமையுள்ள ஒரு கதையை அழகியலோடு படமாக்கத் தவறியிருப்பதை எதிர்கால தமிழ் சினிமாவின் போக்குகளில் இருந்து நாம் உணர்ந்து கொள்ளலாம்.



> ஒருநாள், திடீரென்று தகப்பன் விட்டுக்கு வருகிறார். ‘இவ்வளவு நாளும் வீட்டு யோசினை இல்லாம எங்க கிடந்தனி?’ எனத்தாய் பேசுகிறார். வந்த தகப்பன் வீட்டுக்குள் சென்று உள்ளிருந்த பொருள்களையெல்லாம் இழுத்துக் கொட்டித் தாலிக்கொடியைத்தேடுகிறான். தரமறுக்கும் மனைவிக்கு அடிக்கிறான். வசந்தனுக்கும் அடிக்கிறான். ‘நாளைக்குவருவன்தாலிக்கொடி தராவிட்டால் கொளுத்திவிடுவேன்’ என மிரட்டிவிட்டுச் செல்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏற்றமும் இறக்கமும் நிறைந்ததுதான் வாழ்க்கை

நா.நவராஜ்

"வாழ்க்கை என்பது ஒருகழுதை" இப்படியொரு பழமொழி இருக்கிறது. கழுதை வீட்டில் இருந்து அழுக்குத் துணியைக் கொண்டுபோகும். ஆற்றில் இருந்து வெளுத்த துணியைக் கொண்டுபோகும் ஒரு இடத்தில் நிற்காது. இரண்டு கரைகளுக்கும் போய்வரும். வாழ்க்கையும் இப்படித்தான் ஒரு இடத்தில் தேங்கி நிற்காது செயற்பட்டுக் கொண்டேயிருக்கும் இதனால் இந்தப் பழமொழி கழுதையும் வாழ்க்கையும் சமம் என்ற நோக்கில் வழங்கப்படுகின்றது.

## கழுதைக்குத் தெரியுமா....?

கழுதையின் இத்தகைய செயற்பாட்டில் அழுக்குத் துணி, வெளுத்த துணி என்ற இரண்டு சுமைகள் இருக்கும். கழுதைக்கு இரண்டும் சுமைதான் அதற்கு அழுக்குக்கும் வெளுப்புக்கும் வித்தியாசம் தெரியாது. எம்மில் பலர் இருப்பது கழுதையின் நிலையில், வாழ்கை என்பது அவர்களுக்குச் சுமைதான். சிலருக்கு சுமையாகப் பலபொழுதுகளும் சுகமான சுமையாகச் சில பொழுதுகளும் இருக்கும். சிலருக்கு எந்தச் சுமையை வைத்தாலும் சுகமான சுமையாகவே வாழ்க்கை இருக்கும். இவர்களிடையில் ஏன் இந்த வேறுபாடு...?

## வாழ்க்கை வாழ்வதற்கே...

வாழ்க்கை இரண்டு கரைகளுக்குள் ஓடும் ஒரு நதி. ஒரு பக்கத்தை மட்டும் நாம் விரும்ப முடியாது. இரண்டு பக்கங்களையும் விரும்ப வேண்டும். ஒரு கரையை மாத்திரம் கொண்ட நதியும் இருக்க முடியாது. வாழ்க்கையும் அப்படித்தான் நமக்கு விரும்பிய பக்கத்தை - சுமையைத் தேர்ந்தெடுக்க முடியாது. நல்லது என்றால் மறுபக்கம் கெட்டது. கெட்டது என்றால் மறுபக்கம் நல்லது. ஒன்றை விட்டு ஒன்றைப் பிடிக்க முடியாது. தவிர்க்கவும் முடியாது. நாம் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் அது வந்து போகும். இது புரிந்தால் வாழ்க்கை சுகமான சுமையாகும்.

ஒரு பக்கம் தான் வேண்டும் அதுவும் நல்ல பக்கமாக இருக்க வேண்டும் எனில் வாழ்க்கை வண்டியை நிறுத்தி வைக்கவேண்டும். ஓட விட முடியாது. இது சாத்தியமற்ற ஒரு விடயம். வாழ்க்கை வண்டி ஓடிக்கொண்டிருந்தால் தான் அழகு. நின்றுவிட்டால் அதில் இல்லை மகிழ்வு. ஓடுவதால் தான் ஆற்றை இரசிக்கின்றோம் தேங்கி நின்றுவிட்டால் மூக்கைப் பொத்தி வேறுபக்கம் திரும்பி
"ஆறென்று பேர் படைத்தாய்
இப்படி நாறுவாய் என்று நாம் நினைக்கவில்லை
ஐயோ! என்ன கொடுமை..." என்போம். பலர் விரும்புவது நல்லபக்கத்தை மட்டுமே இதனால் தமது விருப்பப்படியே எல்லாம் நடக்கும்போது மகிழ்ச்சியில் துள்ளிக் குதிப்பர். மறுபக்கம் துன்பம் வரும்போது திகைப்பர். இவர்கள் வாழ்க்கை வண்டியைத் செலுத்தத் தெரியாத மனிதர்கள்.

வாழ்கை என்ற வண்டி நாம் ஓட்டுவதற்காகவே தரப்பட்டுள்ளது. பலர் அதை அப்படியே நிறுத்தி வைத்துப் பேண நினைக்கிறார்கள். சிலர் சந்தோஷமாக அதை ஓட்டிச்செல்கின்றனர். வண்டியென்றால் நிறுத்தி வைத்தாலும் ஓட்டிச்சென்றாலும் காலத்தால் தேய்வது நிச்சயம். ஓடாமல் தேய்வதிலும் ஓடித்தேய்வது சிறந்ததல்லவா? ஓடினால் விபத்துவரும் எனப் பயந்தால் எப்படி ஓடுவது...?



## எதிர் நீச்சல் கொள்வதும் எதையும் சமாளிப்பதும் துணிவு

உலகத்தில் உள்ள எல்லாம் கெட்டது எனநினைப்பதும். உலகத்தில் உள்ள எல்லாம் நல்லது என நினைப்பதும் இயல்பான சிந்தனைகள் அல்ல. உலகம் என்பது இரண்டும் கலந்தது என்று நினைப்பதே இயல்பு.

எல்லாம் கெட்டது என்று நினைப்பவனும் வாழமுடியாது எல்லாம் நல்லது எனநினைப்பவனும் வாழமுடியாது. இரண்டும் இருக்கும் என்ற சிந்தனைப் பாங்கு உள்ளவனே வாழமுடியும். வாழ்க்கை இப்படித்தான் இன்பம், துன்பம் இரண்டும் இருக்கும் என்று எண்ணுபவனே வாழ்க்கையை எதிர்கொள்ளவும்முடியும்.

வாழ்க்கை என்பது இன்பமயமானது மட்டுமே என நினைத்து வாழ்பவர் துன்பம் வரும்போது துவண்டு வீழ்வர்.

தாம் நினைக்காத ஒன்று நடப்பதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை குழப்பமடைந்து விடுவர். வாழ்க்கை என்பது கெட்டது என நினைப்பவர்கள் நிலையும் இப்படித்தான் சந்தோஷங்களை அனுபவிக்க முடியாது விரக்தியுடன் காலங்கழிப்பர். சிலர் எதிர்கொள்ளத் துணிவின்றி வாழ்வைத் துறந்தே வெளியேறிவிடுவர்.

முழுவதும் கெட்டது, முழுவதும் நல்லது, என்ற எண்ணங்கள், அதீத நம்பிக்கைகள் இவை வாழ்க்கைக்கு உதவாதவை.

நல்லதும் கெட்டதும் இணைந்ததே வாழ்க்கை என்று உணர்ந்து ஏற்றுக் கொண்டு இயல்பாக வாழ்வதுதான் வாழ்க்கையை இனிப்புள்ளதாக்கும். நீங்கள் எந்தரகம் அதீதமானவரா இயல்பானவரா? தீர்மானம் உங்களுடையதே.

அதீதமானவராக இருந்தால் மாற்றத்தைத் தெண்டித்தாவது திணித்துக் கொள்ளுங்கள். இயல்பானவராக இருந்தால் வழமைபோன்றே வாழ்க்கையைச் சந்தோஷமாக வாழுங்கள். வாழ்த்துக்கள்.



# நீங்கா நினைவுகள்...

ஐந்து வயதில் என் அம்மம்மாவின்
கைபிடித்து நான்
முன் பள்ளி சென்ற நாள்கள்
இன்றும் என் நினைவில்
நீங்காது இருக்கின்றன.

பாதையில் கால்பதித்து நான்
சாலையை அளந்தபடி
மெல்ல நடந்திடுவேன்
கால் வலி மறைய கதை சொல்லி
கூட நடந்திடுவார் அவர்.

சாலையின் ஒவ்வோர் மரமும்
எங்கள் நண்பர்கள் கைகாட்டி
அறிமுகம் தந்து
அவற்றின் பயன்களும்
சொல்லிடுவார்
மர நிழலின் கீழ் இளைப்பாறும்
வகையினையும் காட்டிடுவார்

வியர்த்திடும் வேளைகளில்
சேலைத் தலைப்பால்
நெற்றி வியர்வை
தான் துடைத்து
என் அச்சங்களையும்
துடைத்திடுவார்

பசிக்கின்றது என
நான் சொன்னால்
முடிந்து வைத்த காசெடுத்து
மிட்டாய் வாங்கி
விருப்புடன்
ஊட்டியும் விடுவார்

அம்மம்மா என அழைத்தால்
அம்மா என வந்து நிற்பார்
அடித்தது இல்லை என்னை
ஆனாலும்
கண்டிப்புக்குக் குறைவில்லை

பள்ளி முடியும் முன்பே
வாசலில் காத்திருப்பார்
ஓடி வரும் என்னை
நிறுத்திடுவார்
கைப்பிடியில்
என் குட்டி உலகம் சுழன்றிடும்
அவரைச் சுற்றி

இன்றும் நான் அந்தப்
பாதையில்
நடக்கின்ற போதெல்லாம்
கூட வருகின்றது அவர் முகம்
இன்றும் அதே போல்
புன்னகை பூத்த முகம்

அன்னைபோல எனை
அணைத்த
அவர் உறவு
எத்தனை காலம்
வாழ்ந்தாலும்
சலிக்காது அந்த உறவு
உலகத்தில் எங்கும் இல்லை
இப்படி ஒரு புது உறவு

பா.பாலாஜினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழலாடிக்குட்டன்



# வாசிப்பு வாழ்வோடு இணைதல் வேண்டும்

நூல்கள் எங்கள் வாழ்க்கையோடு இரண்டறக்கலந்தவை. மனித வாழ்வின் அடிப்படைத தேவைகளில் நூல்களுக்கு முக்கிய இடம் உண்டு.

எந்தவொரு நாட்டின் வளங்களிலும் முக்கியமானதும் மிகையானதும் மனித வளம்.

இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள் அப்படியே மனித மாந்தைகளாக இருந்தால் என்ன நடக்கும்? இந்த மனித வளத்தை உச்சமாகப் பயன்படுத்துவதன் மூலமாகத்தான் நாட்டைப் பொருண்மிய ரீதியாக மேம்படுத்த முடியும். மனித வளத்தை மேம்படுத்தும் அடிப்படைக் கருவி கல்வி. கல்வி என்பது ஆரம்பக் கல்வியில் இருந்து அதாவது முன்பள்ளியில் இருந்து ஆரம்பித்தது. எனினும் இது ஒரு தொடர் நிகழ்வு. மரதன் ஓட்டம்.

- - - -

இந்தக் கல்விதான் எங்களுக்கு படிக்கும் பழக்கத்தைத் தந்தது. கல்வியில் மேம்பாடு அடைய ஒவ்வொருவரும் படிக்கும் பழக்கத்தைத் தொடர வேண்டும். படிக்கப் படிக்கத்தான் வார்த்தை வளம், கருத்து வளம், பேச்சு வளம் என்பன மேம்பாடு அடையும். எழுதவும் பேசவும் இவை தேவை. எனவே ஒருவர் பேச்சாளனாக, எழுத்தாளனாக இருப்பதற்குப் படிப்பு முக்கியம். படிப்பு என்பது தனியே கல்விசார் படிப்பு மாத்திரமல்ல. கல்விசார் படிப்பை விட கல்விசாராத் துறைசார்ந்த படிப்பு மிக மிக முக்கியமானது. இவ்வாறான பரந்த படிப்பு ஒவ்வொரு மனிதரையும் செழுமைப் படுத்துகின்றது. படிக்கப் படிக்க ஒவ்வொரு கட்டத்தை, தளத்தை, நிலையை நாம் அடைவோம். படிக்கப் படிக்கப் புதுப் புது வாசல்கள் திறக்கப்படும். எண்ணங்கள், கருத்துக்கள், செயற்பாடுகள் எல்லாவற்றிலும் மாற்றங்கள் ஏற்படும். பழையன கழிதலும் புதியன புகுதலும் ஏற்படும்.

- - - -

இத்தகைய படிப்புக்கு ஆரம்பகர்த்தா ஆசிரியர்தான். "இளமையில் கல்" என்ற வாசகத்துக்கு அமைய ஒரு பிள்ளையின் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைபவர்களட ஆசிரியர்கள்தான். நல்லாசிரியன் நல்ல கல்விக்கு வழிகாட்டியாவதுடன் நல்ல படிப்புக்கும் நல்ல நூல்களுக்கும் வழிகாட்டியாக அமைகின்றான். ஆனால் இப்போதுள்ள ஆசிரியர்கள் பலரும் இவ்வாறு இல்லை. தாங்களே நல்ல நூல்களைத் தேடிப் படிப்பதில்லை. பிறகெப்படிப் பிள்ளைகளுக்கு வழிகாட்டுவது...?

நன்றாக வாசிக்க, படிக்கப் பழகிய ஒருவர் ஒருபோதும் வாசிப்பை பிரிந்திருப்பதில்லை. கிடைக்கும் நேரங்கள் எல்லாம் படித்துக் கொண்டே இருப்பர். பகத் சிங் தூக்குமேடைக்குப் போகும்போதும் படித்துக் கொண்டு இருந்தார். லெனின் எழுதிய என்ன செய்ய வேண்டும் என்ற நூல்தான் அது.

- - - -

சிலைவடிக்க இருக்கும் நேரத்தை வீணாக்க முடியாது என்று புத்தகம் படித்தபடி சிலை செய்ய மாதிரியாக (Model) இருந்தார் இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் ஒரு சிறந்த வாசகர். தன்னுடைய வாழ்க்கையை மிக முக்கியமான மூன்று புத்தகங்கள் பற்றிக் குறிப்பிடுவார். 1954ஆம் ஆண்டு சென்னை மூர் மார்க் கெட்டில் 20ரூபாவுக்கு வாங்கிய புத்தகம் ஒன்று 50 வருடங்களுக்கு மேலாகத் தன்னை வழிப்படுத்தி வருவதாக அவர் குறிப்பிடுவார்.

இவ்வாறாக முக்கியத்துவம் பெறுகின்ற அறிஞர்கள், பெருமக்கள் எப்போதும் புத்தகங்களுடன் தான் இருப்பார்கள்.

நீங்கள் பலபேரை அப்படிக் காணலாம். மிக அண்மையில் உதாரணம் பேராசிரியர் க.சிவத்தம்பி. எந்தப் பெரிய படைப்பாளியும் தன்னுடன் ஒரு புத்தகக் கடையே வைத்திருப்பார். அது நூலகம் போலில்லாமல் கும்பல் கும்பலாகக் குவியலாக நூல்கள் இருக்கும்.

- - - -

நூலகங்களை ஒத்த தமது நூல்களைப் பாதுகாப்பதில் பல்வேறு அறிஞர்களும் பல்வேறு சிரமப்பட்டார்கள். எமது 30 வருட வாழ்க்கை வரலாறும் அதை உணர்த்தும்.

- - - -

10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரசீக மன்னரான அப்துல் காசிம் இஸ்மாயில் ஒரு புத்தகப் பிரியர். ஏராளமான, ஆயிரக்கணக்கான புத்தகங்களை அவர் வைத்திருந்தார். போர்க் காலங்களில் எல்லாம் அவர் அவற்றை எடுத்துச் செல்வார். அதற்காக 400ஒட்டகங்கள் இருந்தன. வேறு பல அதிகாரிகளும் அதற்கெனச் செல்வார்களம். எங்கள் வரலாற்றில் எத்தகைய நூலகங்களையேல்லாம் நாங்கள் இழந்துவிட்டோம். தனிப்பட்ட பல்வேறு நூல்கள் இழக்கப்பட்டு விட்டன.

எனது சொந்த அனுபவம் 2 டிரைக்ரர் லோட் புத்தகங்களைக் கிட்டத்தட்ட 150 உரைப்பை மூடைகளாகக் காவித்திரிந்து கடைசியில் கைவிட வேண்டியதாயிற்று.

ஒருவர் சராசரியாக வருடம் ஒன்றுக்கு 2000ஆம் பக்கங்களாவது படிக்க வேண்டும் என ஐ.நாவிடம் யுனெஸ்கோ நிறுவனம் கூறுகின்றது. ஆனால் இந்திய ஆய்வு ஒன்றில் ஒருவர் தற்காலத்தில் சராசரியாக 34 பக்கங்களுக்குள்தான் படிக்கிறார்கள் எனத் தெரியவந்துள்ளது.

- - - -

ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு படைப்பாற்றல் உண்டு. கனவுகளும் கற்பனைகளும் உண்டு. சொல்ல வேண்டிய செய்திகளும் நிறைய உண்டு. ஆனால் தாம் நினைப்பதை எல்லாம் எழுத எல்லோராலும் முடிவதில்லை. அதற்குக் காரணம் அவர்களிடம் உள்ள சொற்களின் இருப்புத்தான்.

உதாரணமாக 100கல்லுகள் இருந்தால் சிறிய வீடு கட்டலாம். 1000கல்லுகள் இருந்தால் பெரிய வீடு கட்டலாம். அதுபோலத்தான் நம்மிடம் உள்ள சொற்களும். சொற்கள் கிடைப்பது வாசிப்பதன் ஊடாகவே. சொற்கள் மாத்திரமல்ல சிந்தனைகள் தீட்டப்படுவதும், பொறி தட்டுவதும் வாசிப்பதன் ஊடாகத்தான். புதிய புதிய சிந்தனைகளும் கருத்துக்களும் உரு வாக்கம் பெறும். இது எழுத்துக்கு மாத்திரம் அல்ல பேச்சுக்கும் பொருந்தும். அதனால் தான் புத்தகங்களை வாசிப்பதை சகலரும் அதிகரிக்க வேண்டும்.

- - - -

எல்லோராலும் எல்லாப் புத்தகங்களையும் புதிதாகக் கொள்வனவு செய்ய முடிவதில்லை. அதற்காகத்தான் நூலகங்களைப் பயன்படுத்துங்கள் என வலியுறுத்தப்படுகின்றது.

இன்று பல்வேறு புறக்காரணிகளால் எங்கள் மத்தியில் புத்தக வாசிப்பும் புத்தகப் பண்பாடும் நலிவடைந்து போய்விட்டது. பத்திரிகையே வாசிக்காதவர்கள் புத்தகங்களை எப்படித் தேடுவார்கள். அதற்கான புறக்காரணிகள் ஏராளம். நாடு சிறக்க நல்ல குடிமக்கள் வேண்டும். நல்ல குடிமக்கள் எனும்போது நல்ல தாய், தகப்பன், நல்ல சூழல் எல்லாமே தேவை. இவ்வாறான சூழல் சிறக்க பெற்றோர், ஆசிரியர்கள் பிள்ளைகளை வழிப்படுத்தி அவர்களை சான்றோர்களாக மாற்ற புத்தக வாசிப்பை ஊக்குவிக்க வேண்டும். ■





## நாளதும் இருண்ட கண்டம்!

நூலகம் இல்லாத கிராமம்
நூதன சாலைக்கு நிகராம்.
பாலகர் முன்பள்ளி தன்னே
பாடமும் கேட்டிட வைப்போம்!

ஆரம்பக் கல்வியைப் பெற்றார்
ஆகுதல் மேன்மை என்றால்
நேரத்துக் கல்லார் வாழ்க்கை
நாளதும் இருண்ட கண்டம்!

வாசிப்பு மனிதனை ஏற்றும்
வாழ்வதில் ஒன்றுக்கு மேலாம்
பற்பல மொழிகள் கற்றோர்
தேசத்தில் உயர்ந்த மக்கள்!

கூடுதல் மொழியைக் கற்கின்
கூடாதென்றெவரும் கூறார்
நாடுகள் அனைத்து நடக்கும்
நிகழ்வுகள் அறிந்து கொள்வர்!

கல்விச் செல்வம் கொள்ளை
களவால் மட்டும் இல்லை
பொல்லாத தீயால் அழிக்க
புக்கா தென்றே சொன்னார்!

வாசித்து முழுமை அடைதல்
வாழ்நாள் கடமை அறிவீர்
பூசித்து தெய்வம் போலவே
புத்தகம் படித்தல் வேண்டும்!

நூலகம் ஆயிரம் தோன்ற
நூல்களைப் பதித்தல் வேண்டும்
நாலுலகம் எம்மை நோக்கி
நாவாலே புகழ்தல் வேண்டும்!

நவாலியூர்க் கவிராயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்ரியமதா பயஸ்

# செல்லும் வழியின் தூரம்...

அன்றும் அப்படித்தான் குண்டுச் சத்தங்களுடன் பொழுது விடிந்தது. நாம் வள்ளிபுனத்தின் வடக்குப்பக்கமாகக் குடிகொண்டிருந்தோம். எனது கணவரின் தாயார் வீடு வள்ளிபுனத்துக்குத் தெற்கு பக்கமாகத் தேவிபுரம் பகுதியில் அமைந்திருந்தது இரண்டும் எதிர் எதிர் வீதிகளைக்கொண்டவை.

**வளம் கொழிக்கும் வள்ளிபுன விளைச்சல்கள்**

எமது காணிக்குள் வெகுவாக சோளன், பூசணி,கீரை என்பவற்றைப் பயிரிட்டிருந்தோம். அதைவிட எல்லா மரக்கறி வகைகளும் நடப்பட்டுக் காய்த்துக் குலுங்கின. பாகற்காய்கள் அந்த முறை நல்ல விளைச்சல். இரண்டு, மூன்று கொடிகளிலேயே இரண்டு, மூன்று கிலோக்கணக்கில் காய்த்துக் கிடந்தன. பூசணிக் கொடிகளைக் காணியைச் சுற்றிய வேலி முழுவதும் எனது அம்மாவும் கணவரும் நட்டுப் படர வைத்திருந்தனர். சிறிய சிறிய உருண்டை வடிவ அழகுடன் சுவை அதிகம் கொண்ட பூசணிக்காய்களும் அந்த முறை அதிகமாகக் காய்த்திருந்தன. பக்கத்து வீட்டு வைகை அக்காவின் புளியமரம்கூட மிக அதிகமான புளியங்காய்களைச் சிலிர்த்திருந்தது. நிறைந்த கோழிகளும், பால்தரும் பசுக்களும், கன்றுகளும் வீடு எப்போதும் நிறைவாகவே இருக்கும். இறக்குமதிப் பொருள்கள் சிலவற்றைவிட மற்றைய எதற்கும் நாம் கடைக்கு போகவேண்டிய தேவையில்லை. மேற்குறித்தவை அனைத்தும் எப்போதும் எம்மிடம் அதிகமாகவே இருக்கும். எல்லோருக்கும் பகிர்ந்தளித்து உண்ணுவதில் அன்றைய வன்னித்தமிழனே முதன்மையாயிருந்தான் என்று சொல்வேன். காரணம், இருப்பவன் கொடுப்பதில் பெருமை இல்லை. இல்லாதவன் தன்னிடம் இருப்பதைப் பகிர்ந்தளிப்பதில்தான் இருக்கின்றது பெருமையும் மனிதமும்.

**வள்ளிபுனத்தைச் சூழ்ந்துகொண்ட போர் மேகங்கள்**

அன்றைக்கு நாம் எமது இத்தகைய வளங்கொழிக்கும் இருப்பிடத்தை விட்டு ஓடப்போகின்றோம் என்று யாரும் அறிந்திருக்கவில்லை. காலையில் வைகை அக்கா வீட்டில் வழமையாக நல்ல தண்ணீர் எடுப்போம். அன்றும் ஒரு குடம் நிறையத் தண்ணீரை அள்ளிக்கொண்டுவந்து அடுக்களைப் பக்கமாக வைத்துவிட்டு இரண்டு பாலைக்கட்டைகளை எடுத்துக்கொண்டு வந்து முற்றத்தில் போட்டு கொத்த ஆரம்பித்தேன். இரண்டு கொத்துகள் போட்டு இரண்டு துண்டுகள் பிளந்தாகிவிட்டன. இரைச்சலுடன் வந்த இரண்டு கிபிர்கள் எழுந்தமானமான இலக்கில் வள்ளிபுனம் காட்டுப்பகுதிக்குள் குண்டுகளைத் தள்ளின. வேகமாக ஓடிச்சென்று ஏணைக்குள் உறங்கிக்கொண்டிருந்த எனது பிள்ளையைத் தூக்கிக்கொண்டு வைகை அக்கா வீட்டுப்பக்கம் ஓடினேன். இடையிலிருந்த கம்பி வேலியை அவசரத்துக்குக் கடக்க முடியவில்லை. அப்படியே அருகில் இருந்த ஆற்றுக்குள் இறங்கிவிட்டேன். குண்டுச் சிதறல்கள் ஆற்றில் விழுந்து ஸ்...ஸ்...ஸ் என்று சூடு அடங்கிப்போயின. ஆற்றோரம் இருந்த மகிழமரங்கள் என்னையும் பிள்ளையையும் அரவணைத்துக்கொண்டன. அந்த மரங்களின் அடர்ந்த கிளைகள் குண்டுச் சிதறல்களைத் தாம் தாங்கிக் கொண்டு எனதும் பிள்ளையினதும் உயிர்களைக் காப்பாற்றின.





05



மரங்கள், ஆறுகள், குளங்கள் என்பனவே எம்மைப் பெரும்பாலும் காத்துக் கொண்டன. சிலவேளைகளில் வீதிகள், ஆறுகள் பகுதிகளில் இருக்கும் மதகுகளுக்குள்ளும் புகுந்து ஒளிந்துகொள்வோம். அப்போது அவையும் எமக்குத் தாய்மடிதான்.

வள்ளிபுனத்தின் பின் பகுதிகளில் பரந்திருந்த அடர் காட்டுக்குள் போடப்பட்ட குண்டுகளின் சத்தங்கள் ஓய... சிதறல்கள் ஓய... புகை ஓய... மரங்கள் முறிந்துவிழ்ந்து அமைதியடைய... மக்கள் அலறியடிக்கும் அழுகுரல்கள் ஓங்கி ஒலித்தன. அந்தப் பிரதேசம் பின்னர் பல நாழிகைகள் கழித்து நிசப்தம் பூண்டு கொண்டது.

நான் பிள்ளையை அணைத்தபடியே மெதுவாக ஆற்றுக்குள் இருந்து வெளியே வருகின்றேன். கால்கள் இரண்டும் விறைத்து போய்விட்டன. ஒரே பக்கமாகப் பிள்ளையை அணைத்து நெடுநேரம் வைத்தபடியே பயத்தில் ஓரிடத்திலேயே உறைந்துபோய் இருந்தமையால் கைகளும் விறைத்துப் போய்விட்டன. என்னைத் தேடி பெயரை உரத்த குரலில் அழைத்தபடி அம்மாவும் கணவரும் ஓடி வருகின்றனர். அம்மா பிள்ளையை வாங்கிக்கொள்ளக் கணவர் கைத்தாங்கலாக என்னை அணைத்துப் பிடித்துக்கொண்டு என்னையும் பிள்ளையையும் வெளியே கொண்டு வருகின்றனர்.

"...ஏன் ஆத்துக்க வந்து இறங்கினாய்... வீட்டு, பங்கருக்குள்ள போயிருக்கலாம் தானே...?" அம்மாவும் கணவரும் கேள்விகள் கேட்கின்றனர். எனக்கு எதுவும் பேச வரவில்லை. பசி அதிகரித்துக் கொண்டதால் குண்டொலிகள் ஓய்ந்த அந்த நேரம்பார்த்து பிள்ளை வீறிட்டு அழத் தொடங்கியது.

**தேவிபுரம் நோக்கிய நகர்வு**


வீடு வந்து சேர்வதற்குள் கிபிர்கள் மீண்டும் வந்துவிட்டன. தொடரான கிபிர்த் தாக்குதல்கள் ஆரம்பமாயின. ஓலையால் வேயப்பட்ட அந்த அழகான இரண்டு அறைகள், சமையலறை, விறாந்தை என்ற இயற்கை சூழ்ந்த வீட்டை விட்டும் அன்போடு வளர்த்த பயிர், கொடிகளை விட்டும் ஆடுகள், மாடுகள், கோழிகளை விட்டும் கிபிரடி குறையும் நேரத்தில் மீண்டும் வருவோம் என்ற எண்ணத்தோடு அந்த வீட்டை விட்டுக் கணவரின் தாயாருடைய வீடு அமைந்திருக்கின்ற தேவிபுரம் நோக்கி நகர்கின்றோம். குண்டுகள் மழை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இராணுவத்தின் நகர்வு கிளிநொச்சியைத் தாண்டியதாக இருந்தது.

நான் ஏலவே சொன்னதுபோல பல பகுதிகளிலுமிருந்து வந்து குவிந்த உறவுகளால் தேவிபுரத்தில், நாம் இப்போது இருக்கும் கணவருடைய தாயாரின் காணிக்குள், தறப்பாள் கூடாரங்களும் பதுங்குக் குழிகளும் நான்கு மூலைகளிலும் மலக்கூடங்களும் அமைக்கப்பட்டுவிட்டன.

**உணவுத் தட்டுப்பாடு ஆரம்பம்**

வள்ளிபுனத்திலுள்ள அந்தப் பெரும் வளங்களை இடைநடுவே விட்டுவிட்டு இப்படியாகத் தேவிபுரத்துக்குள் தஞ்சம் புகுவோம் என்று நாம் கனவிலும் நினைக்கவில்லை. பெரும்பாலான மக்கள் எமது காணிக்குள் சேர்ந்துவிட்டனர். நெருங்கிய நண்பர்களின் குடும்பங்கள் இரண்டு, எமது அண்ணா குடும்பம் என அனைவருக்கும் ஒரே சமையல். மற்றவர்கள் பெரும்பாலும் எமக்கு அறிமுகமில்லாத குடும்பங்கள் அவர்களும்எமது காணிக்குள் குடியமர்ந்து விட்டனர். எல்லோரும் ஒரே இனத்தவராதலால் ஒரே விதமான அவலங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. போர் தரும் துன்பமோ, இன்பமோ எதுவாயினும் அதை அந்த நேரம் நாம் சேர்ந்தே அனுபவிக்கத் தயாரானோம். மக்கள் தேவிபுரம் பகுதிக்குள் குவிந்து கொண்டதும் உணவுப் பொருள்களுக்கு இப்போது தட்டுப்பாடு நிலவத் தொடங்கியது.... (தொடரும்)

## கடவுளின் மறைவு



கடவுள் எங்குமனவர்
எல்லாமுமானவர்
மரத்திலிருந்தார்
அடியிலிருந்த ஒரு
கல்லிலிருந்தார்
உச்சிக்கு நேரே
மழையிருந்தது.

அங்கேயே மழையிருந்தது.
சூழவும் காற்று
இலைகளை மீட்டியிருந்தது.
வேண்டிய வேளையில்
சந்திக்க முடிந்த கடவுளுடன்
மனந்திறந்து பேச முடிந்தது.

எனது மொழியில்
எனது பிரச்சினைகளை
எப்போதும்
பேசிக்கொள்ள
முடிந்தது.
எங்குமாயிருந்த
எல்லாமுமாயிருந்த கடவுள்
காணாமலாகினார்.
எல்லாம் போயிற்று.
உச்சியின் வெயில்
அதேபோன்ற மழை
சுகமான காற்று
பேச்சுத் தனிமை
பயில்மொழி
எல்லாமுமாய்.
இப்போது...
ஒன்றுமேயில்லை
ஒன்றுமேயில்லை

வானவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவசி...

மிருசுவில் தமிழ்தாசன்



17

ராவுணுக்குப் போவதற்குத் தயாராகிக் கொண்டான் ஓவசி. மனேச்சர் மயில்வாகனத்தாரின் சைக்கிளையும் இரவல் வாங்கிக்கொண்டான். இனி அவன், போவதற்கு அரை மணித்தியாலம். மருந்து வாங்கப் பத்து நிமிடம். அதேபோல் அரை மணி நேரத்துக்குள்ளே சைக்கிளை வலித்துக் கொண்டு திரும்பி வந்து விடலாம். பஸ்சில் போய் வருவதென்றால் கணிசமான பணமும் நேரமும் செலவாகும். எனவேதான் சைக்கிளில் இந்தப் பயணம்.

குழந்தை சித்திரனுக்கு மெல்லிய சளித் தொல்லை. நகர்ப்பகுதித் தனியார் மருந்தகத்தில் மருந்து வாங்க வேண்டும். சவுந்தரி ஆசையாக வளர்க்கும் ஆட்டுக்குட்டி இப்போது சில நாள்களாகத் தனது கழிவை வெளியேற்ற முடியாது கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. சொல்லப்போனால் அதற்கு மலச்சிக்கல். அதற்கும் மருந்து வாங்கிவரத்தான் ஓவசியின் பயணம் ஆரம்பமாகியது. வீட்டின் தெருப்படலையைத் தாண்டி வீதியில் ஏறிவிட்டான்.

"எடக்கோதாரி விழுந்தது! முழுவியளத்துக்கு உந்தப்பரதேசியே வருகுது"

அருளம்பலம் வாத்தியாரின் மாமியார்க் கிழவி செல்லமுத்துவைக் கண்டதும் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. மெல்லச் சைக்கிளை அப்படியே நிறுத்திவிட்டு வீட்டுக்குள் மீண்டும் ஒரு தடவை போய் திரும்பவும் வந்து சைக்கிளில் கெந்திமிதித்து ஏறினான். இப்போது கணக்கர் கார்த்திகேசர் முழுவியளத்துக்காகக் காட்சி கொடுத்தார்.

"இந்த மனிசன் பறவாயில்லை. நல்ல முழுவியளம்" மகிழ்ச்சியுடன் சைக்கிளை வேகமாக ஓட்டினான் ஓவசி.

போனவேகத்தில் அவன் எதிர்பார்த்தபடி மிக இலகுவாக மருந்தும் வாங்கியாயிற்று. சித்திரனுக்கு நீலமூடிப் போத்தலில் சளி மருந்து. ஆட்டுக்குட்டிக்குப் பச்சை மூடிப் போத்தல். இரண்டுமே கலவை மருந்துகள். இரண்டுமே ஒரே மாதிரியான போத்தல்களில் தான். எப்படியாவது இருக்கட்டும். போத்தல் மூடிகளை மறக்காதிருந்தால் பிரச்சினைக்கு இடமில்லை.

நண்பகல் வெயில் நன்றாகத் தான் வாட்டிக் கொண்டிருந்தது. நெற்றியில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளைச் சுட்டுவிரலால் அநாயாசமாகத் துடைத்தபடி வெகு உற்சாகமாகச் சைக்கிளை வலித்தான் ஓவசி.

"கடவுளே! இண்டைக்கெண்டாலும் அலைச்சல் உலைச்சலில்லாமல் போன கையோடை எல்லாம் வெட்டியாடிப் போட்டன். மனேச்சர் மயிலற்றை சைக்கிளைக் கொண்டுபோய் நேரத்துக்குக் குடுத்திட வேணும். இனியென்ன குடுக்கலாம் தானே. உது தான் சொல்லுறது நல்ல முழுவியளத்திலை முழிச்சுக் கொண்டு வெளிக்கிட வேணும். இண்டைக்குக் கணக்கற்றை மூஞ்சை! சட்டப்படி!" அதிகமாகச் சந்தோஷித்தபடி உளக்கினான் சைக்கிளை.

"எட! என்ன இது. இவ்வளவு புகைகிளம்புகுது! ஏதோ எரியுது போலை! எட ஆக்களும் கனக்கப்பேர் நிக்குதுகள் என்னவாயிருக்கும்!"

சைக்கிளை நிறுத்தி. மரமொன்றில் சாத்திவிட்டு ஓடிப் போனால் பலசரக்குக் கடையொன்று எரிந்து கொண்டிருந்தது. யாராவது தீ வைத்து விட்டார்களா? அல்லது மின் ஒழுக்கா? என்ன இழவோ யாருக்குத்தெரியும்? என்னவாயிருந்தாலென்ன! கூடி நின்றவர்கள் யாருமே எரிந்து கொண்டிருந்த தீயை அணைக்க முயற்சிக்கவில்லை. மாறாகக் கடையில் தீக்கிரையாகாத பொருள்களை எடுத்துக் கொண்டு ஓட்டம் பிடிப்பதில் கண்ணாயிருந்தனர். விடுவானா ஓவசி!

"இதென்ன சீனி மூடையோ! ஓ! கொண்டு போனால் கொழுத்த காசு. விடக்கூடாது"

ஒரு மூடையை எடுத்து மிகவும் கஷ்டப்பட்டுத் தனது சைக்கிளின் பின்னிருக்கையில் முக்கித்தக்கி ஏற்றித் தான் விட்டான்.

"பிள்ளையாரே! அடிச்சிருக்குது இண்டைக்கு ஒரு லக்கு. அதுசரி அதென்ன! அதுவும் சீனிமூடை போலை தான் கிடக்குது. அதையும் தூக்கி ஏத்துவமோ! ஓ! விடக் கூடாது. என்னண்டு உதைத் தூக்கி உயர்த்தி ஏத்துறது! சரிபாப்பம்"



முயற்சித்தால் முடியாததொன்றுமில்லை. எப்படியோ இரண்டு சீனி மூட்டைகளையும் ஏற்றிவிட்டான். ஆனால் ஒன்று. அவற்றை ஏற்றினால் சைக்கிள் ஓட்டிப் போக முடியாது. உருட்டத்தான் வேண்டும். அதற்கென்ன! உருட்டினால் போச்சுது...

(தொடரும்)

துரை.சிவபாலன்

பலரும் மகிழுமாறு அவர்களுடன் கூடிப் பழகிப் பின்னர் இவரை இனி எப்போது காண்போமோ என்று அவர்கள் எண்ணி ஏங்குமாறு அவர்களை விட்டுப் பிரிதலே கற்றறிந்த புலவர் தொழிலாம். ஏதோ திருக்குறளுக்கு புது விளக்கம் எழுத இவர் வெளிக்கிட்டு விட்டார் எனப் பலரும் நினைக்க வேண்டாம் இருக்கும் உரைகளாலே விளக்கங்களையோ யாரும் படித்துப் பலன் அடைந்ததாய்த் தெரியவில்லை. இந்த லட்சணத்தில் வித்துவான் வேலன் இலக்கிய வட்டமானது மாதா மாதம் தமிழ் ஆர்வலர்கள் கூடிப் பேசி, கலந்துரையாடி, விவாதித்து தெரிந்ததை தெரியாத வர்க்குக் கொடுத்தும் தெரியாததைத் தெரிந்தவரிடமிருந்து எடுத்தும் தமிழால் இன்புற்றுக் கூடி எப்போதுமே தமிழ் வளர்க்கும் இலக்கிய வட்டம். அந்த வட்டதின் அன்றைய பேசு பொருள் முடிந்து அதாவது செவிக்கு உணவளித்து முடிந்து வயிற்றுணவு கொள்ளும்போது பல ரும் பல நகைச் சுவைகளைப் பகிர்ந்து கொள்வார்கள். அப்படிப் பகிர்ந்த சிலவற்றில் சிந்தையில் இருக்கின்ற சிலவற்றுடன் வருகின்றேன்.



இது நம்மூர்க் கதை. விடுமுறை விட்டுப் பாடசாலையின் புதிய தவணை ஆரம்பமாகியது. வகுப்பாசிரியர் வகுப்புக்கு வந்து மாணவர்களின் சுகம் விசாரித்து மாணவர்களே உங்கள் விடுமுறைக் கால அனுபவங்களை ஒரு கட்டுரையாக மூன்று பக்கங்களுக்குக் (அந்தக் காலத்தில் 200 சொற்கள் 300 சொற்கள் என்ற பாவனை கிடையாது) குறையாமல் எழுதி வாருங்கள் என்று ஒரு வீட்டுப் பாடத்தைக் கொடுத்து அன்றைய தமிழ் பாடத்தை முடித்தார்.

அடுத்த நாள் மாணவர்கள் கட்டுரையுடன் வந்தார்கள். ஆசிரியர் ஒவ்வொருவருடைய கட்டுரையையும் பார்வையிட்டார்.

ஒரு மாணவன்.....

நானும் அப்பாவும் தம்பியும் பாடசாலை விடுமுறையில் கொழும்புக்குப் போவதற்காக யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்துக்குச் சென்று புகை வண்டியில் ஏறி அமர்ந்தோம் புகைவண்டி பயணிக்கத் தொடங்கியது. கூகூகூ.... சுக்குப் புக்குச் சுக்குப் புக்குக் கூகூகூ.... சுக்குப் புக்குச் சுக்குப் புக்குக் கூகூகூ......

(மூன்று பக்கங்களுக்கும் சுக்குப் புக்குச் சுக்குப் புக்குக் கூகூகூ....)

கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்தில் புகையிரதம் நின்றது நாங்கள் மெதுவாக இறங்கினோம். ஆசிரியர் கட்டுரைக் கொப்பியை எடுத்துக் கொண்டு அதிபரின் அலுவலகம் நோக்கி ஓடினார்.

கூகூகூ சுக்குப் புக்குச் சுக்குப் புக்கு.....

இது மற்றொரு பாடசாலை. பாடம் சுகாதாரம். விளையாட்டுப் போட்டியோடு சேர்ந்த பரீட்சைக்காலம். அத்தோடு போர்க்காலமும் கூடவே. பரீட்சை வினாத்தாளில் நான்காவது வினா இது.

04) குண்டு எறியும் போது கவனிக்க வேண்டிய ஐந்து முக்கிய விடயங்களை எழுதுக.

பதில்

1. கூட்டமாக நிற்பதைத் தவிர்க்க வேண்டும்.
2. பெரும் கட்டடங்களுக்கு அருகாமையில் நிற்பதைத் தவிர்க்கவும்.
3. வெளிகொண்ட இடங்களில் நிற்கக் கூடாது
4. காதுகளுக்குள் பஞ்சை உடனடியாக வைக்க வேண்டும்
5. இயலுமான வரை பதுங்குக் குழிக்குள் சென்று பாதுகாப்பாக இருப்பது நல்லது.

# புள்ளிகள் போடமுடியாத விடைகள்



இது இத்தாலி நாட்டுக் கதை ஒரு விளையாட்டு மைதானம் பெரும் செலவில் நிர்மா ணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பல நூற்றுக் கணக்கானவர்கள் இரவு பகலாக வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள் துரத்திஷ்டவசமாக ஒருநாள் வேலை நேரத்தில் கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்ததிர் 20 பேர் உடனடியாகவே சாவடைந்தனர். தன்னுடன் ஒன்றாக வேலை செய்த நண்பன் இறந்த சோகத்தில் வீட்டுக்கு வந்த ஒருவன் தனது மனைவியிடம் நடந்த சம்பவங்களைச் சொல்லி அழுதான். இருந்தாலும் ஒரு ஆறுதல் அரசு இறந்தவருடைய குடும்பத்துக்குத் தலா ஐம்பதாயிரம் மில்ல லீரா (அந்தக் காலத்தில் யூரோ பாவனைக்கு வரவில்லை) பணம் கொடுக்கின்றார்களாம். அது ஓரளவுக்கு ஆறுதல் என்றான்.

"ஓ அப்படியா!" என்று கேட்டு விட்டு,

"கட்டடம் இடிந்து வீழ்ந்தபோது நீங்கள் எங்கே போனீர்கள்...?" எனக் கேட்டாள் மனைவி.

"அதிஷ்டவசமாக அந்தநேரம் நான் கோப்பி குடிக்கக் கடைக்குப் போய்விட்டேன்" என்றான் கணவன்.

"ஒரு நாளும் வேலை செய்யிற இடத்தில் ஒழுங்கா நிண்டு வேலை செய்ய மாட்டீங்களே..." கணவனைத் திட்டித் தீர்த்தாள் மனைவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT




# சுயமுன்னேற்ற சிந்தனைகள்

1. கற்கும் வயதில் நீ கற்றிடு கல்வியை. காலம் யாவும் அது கொடுத்திடும் நன்மையை.
2. உறுதிகொள் மனதில் கடவுளை நம்பி. உன் மனம் போகாது தீமையை எண்ணி.
3. நினைக்கும் எண்ணங்கள் நல்லவையாக இருப்பின், நடக்கும் விடயங்களும் நல்லவையாகவே நடக்கும்.
4. மனப் பொறுமை, சிந்தித்தல் ஒரு செயலில் இருக்கவேண்டும். இந்த இரண்டும் இல்லையெனின், அது ஒழுங்கற்றுச் சிதறிவிடும்.
5. மனம் எண்ணும் எண்ணங்களில் நல்லவற்றைத் தெரிந்தெடுத்து அதன்படி நடப்பது சிறப்பு.
6. துணிவும் நம்பிக்கையும் அதிகம் தேவை. துன்பத்தில் நீ இருக்கும் அந்த வேளை.
7. நாம் வாழும்போது எமது வாழ்வை வெளிப்படுத்தி வாழ வேண்டும். இல்லையெனில், வாழ்ந்தபின் எமது வாழ்வு அர்த்தமற்றதாகிவிடும்.
8. கடந்தகாலத்தில் நீ செய்த தவறை யோசி. வருங்காலம் உனக்குச் சொல்லும் நல்ல செய்தி.
9. மனவலிமை வருவது வாழ்வினிலே இலகுவல்ல. மனவலிமை வந்துவிட்டால் வாழ்வு முழுவதிலும்சோர்வு இல்லை.
10. மனங்களில் இருக்கும் சிந்தனைகளை வெளிப்படுத்தி வாழும்போது நமக்குள் இருக்கும் நன்மை - தீமைகள் வெளிப்படும்.

*டி.அதிசயா*

# எல்லாம் நன்மைக்கே!



ஒரு நாட்டை அரசர் ஒருவர் ஆண்டு வந்தார். அந்நாட்டு அமைச்சர் எது நடந்தாலும், "எல்லாம் நன்மைக்கே" என்று சொல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒருநாள் இருவரும் பேசிக் கொண்டிருந்தபோது, அரசர் மாம்பழம் ஒன்றைக் கத்தியால் வெட்டினார். தவறுதலாகக் கத்தி அவரின் சுண்டுவிரலை அறுத்துவிட்டது. வலி தாங்க முடியாமல் அரசர் துடித்தார்.

வழக்கம் போல் அமைச்சர், "அரசே! எல்லாம் நன்மைக்கே!" என்றார். இதைக் கேட்டுக் கோபமடைந்த அரசர், "நான் விரல் வெட்டுப்பட்டுத் துடிக்கிறேன். எல்லாம் நன்மைக்கே என்று சொல்கிறாய். காவலர்களே! அமைச்சரைச் சிறையில் கொண்டு போய் அடையுங்கள்" என்று உத்தரவிட்டார். காவலர்களும் அமைச்சரைச் சிறையில் அடைத்தனர். அப்போதும் அமைச்சர், "எல்லாம் நன்மைக்கே" என்றார். நாள்கள் பல கடந்தன.

வேட்டையாடுவதில் ஆர்வமுடைய அரசர் தனியாகக் காட்டுக்குச் சென்றார். அங்கே மலைவாசிகள் காளிக்குப் பலி கொடுப்பதற்காக ஒருவரைத் தேடிக்கொண்டிருந்தனர். அவர்களிடம் அரசர் சிக்கிக்கொண்டார். அங்கு வந்த கோவில் பூசாரி அரசரை முழுமையாகச் சோதித்தார். பின்பு, "காளிக்கு எந்தக் குறையுமில்லாதவனை மட்டுமே பலியிட முடியும். இவனோ சுண்டு விரல் பாதியாக உள்ளான். இவனை விட்டு விடுவோம்" என்றார். அரசன் அரண்மனைக்கு வந்ததும் உடனடியாக அமைச்சரை விடுவிக்க உத்தரவிட்டார். நடந்ததை எல்லாம் அமைச்சரிடம் சொன்ன அரசர், "சுண்டு விரல் வெட்டுப்பட்டதால் உயிர் பிழைத்தேன். அன்று எல்லாம் நன்மைக்கே என்று நீ சொல்லியதன் உண்மையை அறிந்தேன்" என்றார்.

"அரசே! என்னை நீங்கள் சிறையில் அடைத்ததும் நன்மைக்கே. எப்பொழுதும் உங்களைப் பிரியாமலிருக்கும் நான், என்னைச் சிறையிலடைக்காமல் இருந்திருந்தால் உங்களுடன் காட்டுக்கு வந்திருப்பேன். எந்தக் குறையும் இல்லாத என்னை அந்த மலைவாசிகள் பலியிட்டிருப்பார்கள். நீங்கள் என்னைச் சிறையில் அடைத்ததால் நான் உயிர்பிழைத்தேன்" என்றார் அமைச்சர்.

நீதி: எதுநடந்தாலும் அதுநல்லதுக்கேஎன்றுநினைத்துக்கொள்ள வேண்டும்.



## சிந்தனைக்கு

**எந்தத் தீமைக்குள்ளும் சிறு நன்மையுண்டு.**

*– முதுமொழி*


# தீமை தரும் ஏழு விடயங்கள்

1. பேராசை
2. முதியோரை மதிக்காமை.
3. மண், பொன், பெண், போதை என்பவற்றில் பேராசை
4. நம்பிக்கைத் துரோகம்.
5. நேரத்தை வீணடித்தல்.
6. அதிக நித்திரை.
7. வதந்தியை நம்புதல்.

*ஞா.கார்த்திகா,வட்டு. மத்திய கல்லூரி.*



கேதீசன் அக்ஸிதா,
வளர்மதி முன்பள்ளி, கொக்குவில்



ஷங்கரேஸ் சுபிட்சா,
தரம் - 01,
வ/தாலிக்குளம் அ.த.க.பாடசாலை.

## பின்வருவனவற்றுள் பொருந்தாத சொல்லைக் கண்டறிக.

01. அ)இளவேனில்
ஆ)கார்காலம்
இ)கூதிர்காலம்
ஈ)யாமம்

02. அ)ஆந்தை
ஆ)இராமன்
இ)கர்ணன்
ஈ)கண்ணகி

03. அ)நளவெண்பா
ஆ)குறவஞ்சி
இ)பிள்ளைத்தமிழ்
ஈ)உலா

04. அ)நிலநடுக்கம்
ஆ)சூறாவளி
இ)சுனாமி
ஈ)காட்டுத்தீ

05. அ)வெளவால்
ஆ)காகம்
இ)குயில்
ஈ)மைனா

**விடைகள்**

01) யாமம்,
02) ஆந்தை
03) நளவெண்பா
04) நிலநடுக்கம்
05) வெளவால்

# மாணவரின் பண்புகள்

சோக்கிரட்டீஸிடம் ஒரு மாணவன் வந்தான். "ஐயா, மாணவன் என்பவன் எப்படி இருக்க வேண்டும்?" என்று கேட்டான். அதற்கு அவர், "மாணவன் என்பவன் கொக்கைப்போல இருக்க வேண்டும். கோழியைப் போல இருக்க வேண்டும். உப்பைப் போல இருக்க வேண்டும். உன்னைப்போல இருக்க வேண்டும்" என்றார். மாணவனுக்கு ஒன்றும் புரியவில்லை. "கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள்" என்றான்.

"கொக்கு, ஒற்றைக் காலில் நீண்டநேரம் பொறுமையாக நிற்கும். மீன்கள் வந்தவுடன் விரைந்து செயற்பட்டுப் பிடித்துவிடும். அதுபோல ஒரு மாணவன் சரியான வாய்ப்புக் கிடைக்கும்போது அதைப் பயன்படுத்தி அரிய செயல்களைச் செய்ய வேண்டும்" என்றார்.

"கோழியைப்போல இருக்க வேண்டும் என்றீர்களே, அதற்கு என்ன அர்த்தம்?" என்று கேட்டான் மாணவன். "கோழி என்ன செய்யும்? குப்பையைக் கிளறும். ஆனால், அந்தக் குப்பைகளை விட்டுவிட்டு தனக்குத் தேவையான உணவை மட்டும் எடுத்துக்கொள்ளும். அதுபோல மாணவர்கள் தாம் சந்திக்கும் தீமைகளைத் தூரம் தள்ளி, நன்மைகளை மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்றார்.

"அடுத்தது உப்பைப்போல இருக்க வேண்டும் என்றீர்களே..." என்றான் மாணவன்.

"ஆமாம். உப்பை எந்த உணவோடு கலந்தாலும், அது இருக்கிறது என்று கூற முடியும். ஆனால், கலந்த உணவிலிருக்கும் உப்பு கண்ணுக்குத் தெரியாது. அதன் சுவையை மட்டுமே உணர முடியும். அதுபோல மாணவர்கள் எந்தத் துறையில் இறங்கினாலும் அதில் சிறப்பான தனித்தன்மையை வெளிப்படுத்தி, தனது மறைவுக்குப் பின்னும் அதை இவர்தான் செய்தார் என்று கூறும்படி விளங்க வேண்டும்" என்றார்.



"எல்லாம் சரி, உன்னைப் போல இருக்க வேண்டும் என்றீர்களே. அதற்கு என்ன அர்த்தம்?" என்று கேட்டான். அதற்கு, "மாணவன் என்பவன் தனக்குள் எழக்கூடிய சந்தேகங்களை எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் ஆசிரியரிடம் கேட்டுத் தெளிவுபெற வேண்டும். அதற்காகத்தான் உன்னைப்போல இருக்க வேண்டும் எனச் சொன்னேன்" என்று புன்னகைத்தார் சோக்கிரட்டீஸ். அந்த மாணவன் மகிழ்ச்சியுடன் அவரை வணங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யதார்த்த சினிமா

# ஒரு கிடாயின் கருணை மனு



**கதைப்பார்வை**
35வயதாகியும் திருமணம் நடக்காமல் இருக்கும் தன்னுடைய பேரன் ராமமூர்த்திக்காக (விதார்த்) குலதெய்வமான முனியாண்டியிடம் வேண்டிக்கொள்கின்றார் அவனது பாட்டி. அவனுக்குத் திருமணம் நடந்தால் முனியாண்டிக்கு ஆடு வெட்டிப் படைப்பதாக அவருடைய வேண்டுதல் அமைகின்றது. வேண்டியபடியே பேரனுக்குத் திருமணம் நடக்கின்றது. வேண்டுதலை நிறைவேற்றச் சமையல் பாத்திரங்கள், கிடாய் ஆடு, தட்டுமுட்டுச் சாமான்களுடன் ஊர்க்கோவில் நோக்கிய பயணம் (லொறியில்) ஆரம்பமாகின்றது.
ஆடு வெட்டிப் படையல் வைத்து வழிபடப் புறப்படும் ஒரு கலாசாரத்தையே அந்தப் பயணத்தின் சித்தரிப்பில் சிறந்த சினிமாவாக்கியிருக்கிறார்கள் இயக்குநர் சுரேஷ் சங்கையா மற்றும் குழுவினர். பயணத்தின் இடைநடுவில் தொற்றிக்கொள்ளும் வழிப்போக்கர் ஒருவர் இடையில் ஏற்படும் விபத்தில் சாவடைந்துவிடுகின்றார். ஆடு வெட்டிப்படையலிடப்புறப்பட்டவர்கள்கொலை வழக்கில் சிக்கிக்கொள்கின்றனர். இந்த யதார்த்தமான கதைதான் 'ஒரு கிடாயின் கருணை மனு'. முதல் பாதியில் நிகழும் சம்பவங்களால் விறுவிறுப்பாக ஓடும் கதை, இரண்டாம் பாதியில் கொஞ்சம் சோர்ந்துவிடுகின்றது. கதைக்களம் ஒரே இடம் என்பது அதற்குக் காரணமாகவிருக்கலாம்.



**இயல்பான பாத்திர வார்ப்புக்கள்**
விதார்த் தான் அறிமுகமாகும் முதல் காட்சியிலேயே தன்னுடைய புதுமாப்பிள்ளைக் கோலத்தைக் காட்டுகிறார்.
புதுப்பெண்ணாக நடித்திருக்கும் (பின்னணிக் குரல் கலைஞர்) பிரவீணா தனது தோற்றம், நடிப்பு இரண்டாலும் ஈர்க்கின்றார். விதார்த்தின் பெரியப்பாவான கவிஞர் விக்கிரமாதித்யனும் தனது கதாபாத்திரத்துக்குத் தேவையான நடிப்பை வழங்கியிருக்கிறார். விதார்த்துக்குச் சமமாக ஆரம்பம் முதலே கதையில் முக்கியத்துவம் பெற்றிருக்கும் 'கொண்டி' என்ற பாத்திரத்தைப் பூண்டுள்ள 'ஆறு' பாலா இயல்பான நடிப்பால் ஈர்க்கின்றார்.
எந்தப் பெரிய பிரச்சினையாயினும் சாதாரண அசட்டைத்தனத்துடன் அவற்றை எதிர் கொள்ளும் கிராமத்து இளைஞனாகக் 'கொண்டி' கதாபாத்திரம் உருவாக்கப்பட்டிருக்கின்றது.
இவர்களோடு 'சுப்பிரமணியபுரம்' சித்தன், ஹலோ கந்தசாமி, கலை இயக்குநர் வீரசமர், ஜோர்ஜ் உள்ளிட்ட பலரும் தமது பங்களிப்புக்களைச் சரியாக வழங்கியுள்ளனர்.

**வசனம், ஒளிப்பதிவு, காட்சியமைப்பு**
படத்தின் கூடுதலான காட்சிகள் காட்டுப் பகுதியில் உள்ள ஒரு பழைய மண்டபத்தில்தான் நடக்கின்றன. கதையை வசனங்களே நகர்த்திச் செல்கின்றன. வட்டாரப் பேச்சு வழக்கில்சொல் அடைகள், புதுமொழிகள் கலந்து கதாபாத்திரங்கள் ஒருவரை ஒருவர் சீண்டிக்கொள்ளும்போது திரையரங்கில் சிரிப்பொலிகள் உயர்கின்றன. குருநாதன் சுரேஷ் ஆகிய இருவரும் இணைந்து வசனம் எழுதியுள்ளனர்.
கிடாய் ஆட்டின் பார்வையில் இருந்து விரியத் தொடங்கும் ஆரம்பக் காட்சியில் இருந்து இறுதிவரை உறுத்தாமல் தொடர்கிறது ஆர்.வி. சரணின் ஒளிப்பதிவு. 'எல்லாத்துக்கும் காரணம் இந்த ஆடாக இருக்குமோ?' எனக் 'கொண்டி' கதாபாத்திரம் கூறுவது போல, தான் வெட்டப்படுவதைத் தடுக்க மேற்கொள்ளும் தவம்போல படத்தின் அனைத்துக் காட்சிகளிலும் ஒரு சாட்சியாக வருகின்றது அந்தஆடு ஓர்உயிர்ச்சேதம் நடந்த இடத்தில் கதாபாத்திரங்கள் வெளிப்படுத்தும் நகைச்சுவை உணர்வு இயல்பானதாக இல்லை. ஆனாலும், மண் மணக்கும் அம்சங்களால் 'ஒரு கிடாயின் கருணை மனு' ஓரளவுக்காவது ஏற்கத்தக்க நல்ல திரைப்பட அனுபவமாக வசீகரிக்கின்றது.

# போங்கு

## போதாமைகள் நிறைந்து




**கதைப் பார்வை**
தேவ் (நட்ராஜ்), ஜனனி (ருஹி சிங்), பாஸ்கர் (அர்ஜுன்) ஆகிய மூவரும் விலை உயர்ந்த கார்களை விற்பனை செய்யும் கடையில் பணிபுரியும் ஊழியர்கள். எதிர்பாராத சூழ்நிலையில் கார் திருட்டுப் பழிக்கு ஆளாகி, செய்யாத குற்றத்துக்காகச் சிறை சென்று திரும்புகிறார்கள். அதன்பின்னர் கார் திருட்டையே தங்கள் தொழிலாகக் கையிலெடுக்கும் அவர்களுக்கு, விலை உயர்ந்த பத்துக்கார்களைத் திருடும் வேலை கொடுக்கப்படுகிறது.
மதுரையில் தாதாவாக இருக்கும் பாண்டியனின் (ஷரத் லோகித் தஷ்வா) கார்கள் தான் அவை. யாராலும் நெருங்கமுடியாத பாண்டியனை தேவ் அணியால் நெருங்க முடிந்ததா? அந்தக் கார்களை அவரகளால் திருட முடிந்ததா? என்பதுதான் படத்தின் கதை.

**முழுமைப்படுத்தாத முயற்சிகள்**
திருட்டு எனும் கதைக் களத்தை எடுத்துக்கொண்ட இயக்குநர், கார்களைத் திருடிச் செல்லும் காட்சிகளில் 'அட' என்று சொல்லும் விதமாகச் சுவாரசியமும் புத்திசாலித்தனமும் கூட்டியிருந்தால், படத்தில் நிறைந்திருக்கும் திருப்பங்கள் இன்னும் விறுவிறுப்பைத் தந்திருக்கும். திரைக்கதை சரியான வடிவத்தில் போதிய திருப்பங்களுடன் இருக்கும்போது அதில் குத்துப் பாடல்கள் தேவையற்றுத் திணிக்கப்பட்டிருக்கின்றன. வில்லனுக்கு விதம் விதமான கார்கள் என்றால் அதிகம் பிடிக்கின்றது. ஆனால், அதற்கான காரணத்தையும், கார்களைச் சொந்தமாக்கிய பிறகு அவர் எப்படி அவற்றை இரசனையுடன் பயன்படுத்துகிறார் என்பதையும் காட்டத் தவறிவிட்டார் இயக்குநர். வில்லன் கதாபாத்திரத்தையும் வழக்கமான சட்டகத்துக்குள்ளேயே வடித்திருக்கின்றார்.

**பாத்திர வார்ப்புக்கள்**
மணியாக வரும் 'முண்டாசுப்பட்டி' ராம்தாஸ், வில்லனின் குழு நிர்வாகியாக வரும் பாவா லட்சுமணன், கார் திருத்துநராக வரும் சாம்ஸ் ஆகியோர் தரும் நகைச்சுவை விருந்து இனிக்கிறது. அதேபோல, கார் திருடும் அணியில் முதல் இரு இடத்தை வகித்தாலும் நாயகன், நாயகி இருவருக்கும் காதல் என்ற வழமை இல்லாமல் நண்பர்கள் மட்டுமே என்று காட்டியிருப்பதும் ஆறுதலான மாறுதல்.

தேவ் ஆக வரும் நட்ராஜ், கதாநாயகனுக்கான பணியைச் செய்துவிடுகிறார். ரஜினி பாணி நடிப்பை நகலெடுப்பதைக் குறைத்துக்கொண்டு நடிப்பில் தனது தனித்துவத்தைக் காட்ட அவர் முயற்சிக்கலாம். ருஹி சிங், அர்ஜுன் ஆகியோர் தங்களுக்குத் தரப்பட்ட வேலையைக் கச்சிதமாகச் செய்துள்ளனர்.

**இசை, ஒளிப்பதிவு**
சிறிகாந்த் தேவாவின் இசையில் உருவாகியிருக்கும் பாடல்கள் எவையும் மனதில் நிற்கவில்லை. பின்னணி இசையையும் கொஞ்சம் அதிகமாகவே வாசித்திருக்கிறார். படத்தில் இடம்பெற்ற கார் துரத்தல், சண்டைக்காட்சிகளில் சுப்ரீம் சுந்தரின் கைவண்ணம் விறுவிறுப்பைக் கூட்டியிருக்கின்றது.
திருப்பங்கள் நிறைந்த ஒரு திரைக்கதையில் சுவாரசியம், தர்க்கம் ஆகிய அம்சங்களில் இன்னும் அதிக கவனம் செலுத்தியிருந்தால் முழுமையான பொழுதுபோக்குப் படம் ஆகியிருக்கும் போங்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# புவிக்கு அடிக்கப்படும் சாவு மணி



## ஆண்டுதோறும் 10,357 மில். மெற்றிக் தொன் கார்பனை வெளிவிடுகின்றது சீனா

பிரகாஸ்

வளிமண்டலத்தில் வருடாந்தம் 10ஆயிரத்து 357மெற்றிக் தொன் கார்பன் கலந்து வருகின்றது. இது சீனா வருடாவருடம் வெளிவிடும் கார்பனின் அளவைக் கணிப்பீடு செய்து வழங்கப்பட்டிருக்கும் தகவல் ஆகும். புவி வெப்பமாதல், புவி வெப்பமாதலுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பரிஸ் ஒப்பந்தம் தோல்வியில் முடிவுறும் நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு புவியை வெப்பமாக்குவதில் முன்னிலை வகிக்கும் கார்பனுக்கு எதிரான உலகளாவிய அமைப்பு சில தகவல்களை வெளியிட்டுள்ளது. அதில் அதிகளவில் கார்பனை வெளியிடும் நாடுகளை வகைப்படுத்தி பட்டியலிட்டுள்ளது. இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ள முதல் பத்து நாடுகளில் சீனாவின் ஆதிக்கமே அதிகமாகவுள்ளது..

### சீனா முதலிடம்

அதிகளவான கார்பனை வெளியிடும் நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் சீனா உள்ளது. சீனா மிகப் பெரிய நாடு. அதிகளவான சனத்தொகை, அதிகப்படியான தொழில் திட்டங்கள், நாளுக்குநாள் தோற்றம்பெறும் தொழிற்சாலைகள், அதிகரித்த உள்நாட்டு உற்பத்திகள், பொருளாதரத்தில் உச்சம் என இவை அனைத்தும் அபிவிருத்திப் பாதையில் சீனாவை வெற்றி நடைபோட வைத்தாலும் ஒட்டுமொத்த உலகையும் சீனா பின்னோக்கித் தள்ளிக் கொண்டிருக்கின்றது என்ற தகவல் ஆய்வாளர்களைத் திடுக்கிட வைத்துள்ளது. இதன்படி சீனா வருடத்துக்கு 10ஆயிரத்து 357மெற்றிக் தொன் கார்பனை வெளியிடுகின்றது.

### அமெரிக்கா இரண்டாமிடம்

வர்த்தகத்தில் மட்டுமல்ல கார்பன் வெளியேற்றத்திலும் சீனாவுக்குப் போட்டியாக அமெரிக்காவே உள்ளது. இதன்படி அந்த நாடும் சீனாவுக்குச் சளைக்காமல் தானும் 5ஆயிரத்து 414மில்லியன் மெற்றிக் தொன் காபனை ஆண்டுதோறும் வெளிவிடுகின்றது. உலக வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிரான்ஸ் தலைநகர் பரிஸில் கடந்த 2015ஆம் ஆண்டு நூற்றுக்கும் அதிகமான நாடுகளின் பங்குபற்றலுடன் கூட்டு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தானது. புவியின் வெப்பநிலையை இரண்டு பாகை செல்சியஸ்ஆல்குறைவடையசெய்வது இதன் முக்கிய நோக்கமாகும். ஒபாமாவின் தலைமையிலான அரசு இந்த ஒப்பந்தத்தை இறுக்கமாகக் கடைப்பிடித்தது. ஆனால் அதன் பின்னர் அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள ஆட்சிமாற்றத்தால் அரியணை ஏறிய ட்ரம்ப், தனது அதிரடி முடிவுகளில் ஒன்றாகப் பரிஸ் ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாக அறிவித்தார். ட்ரம்பின் இந்த முடிவின் மூலம் அமெரிக்கா கார்பனை வெளியிடுவதில் உறுதியாக உள்ளது என்பது மட்டும் தெளிவாகின்றது.







### இந்தியாவும் விடவில்லை

கார்பன் வெளியிடுதலில் இந்தியாவும் ஏனைய நாடுகளுக்குப் போட்டியாகத் தான் உள்ளது. அந்த நாடு 2ஆயிரத்து 274மில்லியன் மெற்றிக் தொன்னை வருடம்தோறும் வெளிவிடுகின்றது. சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகள் கார்பனை வெளிவிடுவதில் அதிகப்படியாக பங்களிப்பைச் செய்கின்றன என்பது அப்பட்டமாகத் தெரிந்தா லும் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளமை அதிர்ச்சிகரமான செய்தியே. இந்தியாவின் இந்த மோசமான நடவடிக்கைகளால் அயல்நாட்டாரான எமக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டு வருகின்றது.

### இந்தியாவுக்கு அடுத்தபடியாக ரஷ்யா

இந்தியாவுக்கு அடுத்த இடத்தில் வருடத்துக்கு ஆயிரத்து 617மில்லியன் மெற்றிக் தொன் கார்பனை வெளிவிடும் ரஷ்யா நான்காவது இடத்தில் உள்ளது. உலக வெப்பமயமாதலுக்கு எதிரான பரிஸ் ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகியுள்ள நிலையில், ரஷ்யாவுக்குக் கூடுதல் பொறுப்பு எழுதப்படாத விதியாக வந்துள்ளது. இது அந்த நாட்டின் கார்பன் வெளியேற்றத்தை கட்டுக்குள் கொண்டுவரவும் உதவலாம்.

### ஜப்பான் ஐந்தாமிடம்

ஆயிரத்து 237மில்லியன் மெற்றிக் தொன் கார்பனை வெளிவிடும் ஜப்பான் ஐந்தாவது இடத்தில் உள்ளது. அந்த நாட்டின் நிலப்பரப்புடன் ஒப்பிடுகையில் ஜப்பான் ஆயிரம் மில்லியன் தொன் மெற்றிக் தொன்னை வெளிவிடுதல் ஏற்றுக்கொள்ள முடியாததே. ஆனாலும் அதன் வேகமான விருத்தியே இத்தகைய அதிகளவு கார்பன் வெளியேற்றத்துக்குக் காரணமாக அமைந்துள்ளது.

இந்த ஐந்து நாடுகளுமே ஆயிரம் மில்லியன் மெற்றிக் தொன்னுக்கு அதிகளவான கார்பனை வெளியிடுகின்றன. ஏனைய ஐந்து நாடுகளும் ஆயிரம் தொன்னுக்குக் குறைவான மெற்றிக் தொன் கார்பனையே வெளிவிடுகின்றன. 798 மில்லியன் மெற்றிக் தொன்னுடன் ஜேர்மனி ஆறாவது இடத்திலும், 648 மில்லியன் மெற்றிக் தொன்னுடன் ஈரான் ஏழாவது இடத்திலும், 601 மில்லியன் மெற்றிக் தொன்னுடன் சவூதி அரேபியா எட்டாவது இடத்திலும், 592 மில்லியன் மெற்றிக் தொன்னுடன் தென்கொரியா ஒன்பதாவது இடத்திலும், 557 மில்லியன் மெற்றிக் தொன்னுடன் கனடா 10ஆவது இடத்திலும் உள்ளன.

இவை தவிர்ந்த ஏனைய உலக நாடுகள்கூட இத்தகைய கார்பன் வாயு வெளியேற்றத்தில் பின்னிற்கவில்லை. அபிவிருத்தியையும், பொருளாதார மேம்பாட்டு நிலையையும் உயர்த்திக் கொள்ள முயற்சிக்கும் அனைத்து நாடுகளுமே தம்மால் முடிந்த அளவில் கார்பனை வெளியேற்றிக் கொண்டுதான் இருக்கின்றன. நவீன தொழிற்சாலைகள், அவற்றின் அதீத இயந்திரப் பாவனைகள் என்பனவே அவற்றுக்கு வழிகோலுகின்றன. ஆனாலும் சீனா, அமெரிக்கா உள்ளிட்ட அபிவிருத்தியின் உச்சத்தில் இருக்கும் நாடுகளே இத்தகைய வளிமண்டலத்தைச் சூடாக்கும் கார்பன் வெளியேற்றத்தில் முன்னிலை வகிக்கின்றன. இவர்களால் தோற்றுவிக்கப்படும் கார்பனின் வெளியேற்றம் அவர்களுடன் மாத்திரம் நின்றுவிடாமல் ஒட்டுமொத்தப் பூமியையும் சூடாக்கிப் பாலைவனமாதலுக்கு வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணசேகரன் சக்தீனா

# குற்றமும் தண்டனையும்



இது ஒரு குட்டிக்கதையாகத் தான் தெரியும் ஆனாலும் இந்தக்குட்டிக்கதை மன்றின் கட்டளைக்குப்பணிந்து குட்டிக்கதையாகவே முடிவடைந்திருந்தது. அது உணர்த்திச் சென்ற படிப்பினை பயன்மிக்கதாய் அமைந்திருந்தது. யாழ்ப்பாணத்தில் இன்னமும் பேதங்கள் நீடிக்கின்றன என்பது தான் கதையின் மையம். தாமாக முடிவெடுக்கும் பண்பை யாரும் வளர்க்கவில்லை என்பதையும், 'நான்' என்கிற ஆணவத்தைக் கைவிடவில்லை என்பதையும் மிகத் தெளிவாக உணர்த்திச் சென்றிருக்கின்றது இந்தச் சம்பவம். சுவாரஸ்யம் என்னவென்றால் இந்தச்சம்பவம் நீதிமன்று வரைக்கும் வந்தது தான்.

● ● ●

யாழ்ப்பாணத்திலுள்ள மல்லாகம்தான் அந்த ஊர். அந்த ஊரில் பழம்பதி முருகன் தேவஸ்தானம், அருள்மிகு காளிகாதேவி அம்மன் ஆலயம் என இரண்டு கோவில்கள் இருக்கின்றன. ஒரு ஊருக்குள்ளே இருக்கின்ற இந்த இரண்டு கோயில்களிலும் பழம்பதி முருகன் தேவஸ்தானத்தினர் ஒதுக்கப்பட்ட ஒரு காலப்பகுதியில் திருவிழாக்களை நடத்தி வந்துகொண்டிருந்தனர். அங்குள்ள காளிகாதேவி ஆலயத்தினர் இதுவரைக்கும் திருவிழாக்கள் எதையும்செய் திருக்கவில்லை.

ஆனால் இப்போது மேற்குறித்த பழம்பதி முருகன் ஆலயத்தினர் திருவிழா நடத்தும் காலங்களிலேயே தாமும் திருவிழா நடத்தப் போவதாகக் காளிகாதேவி ஆலய நிர்வாகசபை முடிவெடுத்தனர். அந்தநிர்வாகசபையினர் எடுத்த முடிவுக்கெதிராக அந்த ஊர் மக்களால் ஆலய நிர்வாகத்தினர் ஊரின் அமைதியைக் குழப்புகின்றார்கள் என்று மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதன் காரணமாக மன்றில் முன்னிலையாகுமாறு காளிகாதேவி நிர்வாக சபையினருக்குமன்றுஅழைப்பாணை விடுத்தது.

மல்லாகம் மத்தியில் இவ்விரு ஆலயங்களும் அமைந்துள்ளன. இரண்டு கோயில்களுக்கும் தனித்தனியே இரண்டு பரிபாலன சபையினர் இருக்கின்றார்கள்.

இந்த இரண்டு கோயில்களில் பழம்பதி முருகன் தேவஸ்தானத்தில் வருடந்தோறும் சித்திரை மாதம் 29ஆம் திகதி தொடக்கம் வைகாசி 10ஆம் திகதிவரைக் கும் திருவிழா நடைபெறுவது வழக்கம் ஆனால் அருள்மிகு காளிகாதேவி அம்மன் ஆலயத்தில் திரு விழாக்கள் நடைபெறுவது இல்லை. ஆனால் இந்த முறை காளிகாதேவி அம்மன் ஆலயத்தில் திருவிழாவை நடத்த ஆலய நிர்வாகத்தினர் முடிவெடுத்தனர். அதன் பிரகாரம் பழம்பதி முருகன் தேவஸ்தானத்தில் திருவிழா நடக்கும் அதே தினத்தில் தான் தமது ஆலயத்திலும் திருவிழா நடாத்துவோம் என்று அவர்கள் உறுதியான தீர்மானத்தைக் கொண்டுள்ளனர். காளிகாதேவி அம்மன் ஆலய நிர்வகத்தினரின் இந்த முடிவை அந்த ஊர் மக்கள் மற்றும் ஆலய உபயகாரர் விரும்பவில்லை.

ஆனாலும், பழம்பதி முருகன் ஆலயத்தினர் திருவிழா நடத்திக் கொண்டிருக்கும் தினத்தில் நாமும் திருவிழா நடத்தாமல் வேறுபட்ட காலங்களில் திருவிழாவை நடத்தலாம் என்று மக்கள் கூறியுள்ளார்கள். இதை ஆலய நிர்வாகத்தினர் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த நிலையிலே ஏற்படப் போகும் முரண்போக்கை விரும்பாத மக்களால் இந்த வழக்கு மல்லாகம் நீதவான் மன்றுக்குக் கொண்டு வரப்பட்டது.

அந்தக் கோவில் வழக்கு மன்று வரைக்கும் கொண்டுவரப்பட்டு நடைபெற்றது ஆனாலும் காளிகாதேவி ஆலய பரிபாலன சபையினர் ஒரே காலத்தில்தான் திருவிழா செய்வது என்ற தமது எண்ணத்தில் விடாப்பிடியாகவே இருந்தார்கள், இதனால் சர்வமத இந்து குருபீடத்தை முன்னிலையாகுமாறு மன்று பணித்தது. அதனடிப்படையில் அவர்கள் மன்றுக்கு வருகை தந்தனர். இரண்டு ஆலயத் திருவிழாக்களையும் ஒரே நாளில் நடத்தலாம் என அவர்கள் தெரிவித்தார்கள்.

அதனை மன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டதுடன். இரண்டு ஆலயத்திருவிழாக்களையும் ஒரே நாளில் நடத்தலாம் என்று தனது தீர்ப்பையும் அளித்தது.


ஊரின் ஒற்றுமையைக் கலைக்கப் பலரும் எடுத்துக் கொண்ட முடிவுகள் பல விடயங்களை உணர்த்திச் சென்றது. ஊருக்குள் முடிவுறுத்தப்படாமல் இருக்கும் பிரச்சினைகள் நீதிமன்றங்களை நாடிச் செல்வதன் மூலம் சரி செய்யப்படும் என்ற நம்பகரமான உண்மையை உணர்த்தியது. அனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

மல்லாகம் மன்றுக்குக் கொண்டு வரப்பட்ட இந்த விடயம் தீர்ப்பு நாளில் அனைவருக்கும் சாதகமாகவே அமைந்திருந்தது. மல்லாகத்தின் பழைமைகள் அறிந்தவர் என்று பெயர் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒருவர் இருந்தார். பழைமைகள் தெரிந்த அவருக்கு இந்த ஊரிலிருக்கின்ற இரண்டு கோயில்களுக்கும் இடையில் பல வருடங்களாக இல்லாத புதுப்பிரச்சினையை இப்பொழுது யார் கிளறி விட்டது என்பதான கேள்வி நிலைகளின் வெளிப்பாட்டோடு அங்கலாய்த்திருப்பது அவரது முக பாவனையில் தெரிந்தது.

இவ்வளவு காலமும் கோயிலைப் பராமரிக்கவே ஆள்கள் இல்லாமல் இருந்தார்கள். இப்ப கோயிலில திருவிழா நடத்த வேணுமாம் புறுபுறுத்துக் கொண்டார். இன்னும் ஏதோ கதைத்தார் ஆனாலும் எனக்கு விளங்கவில்லை.

"ஊர்ப்பிரச்சினையை ஊருக்குள்ள தீர்க்க வேண்டும் என்று தானே கேட்டோம் அதற்குப் போய் ஊருக்குள்ள துண்டுப்பிரசுரங்களும் பல்வேறு கதைகளும் தான் உலாவிச்சுதே தவிர தீர்வை யாரும் எடுக்க முன்வர வில்லை.

நான் பெரிது, நீபெரிதுஎன்று நினைத்துக்கொண்டு திரிந்ததன் விளைவுதான் இவ்வாறு மன்று வரைக்கும் வர வைத்து விட்டது" என்றார் ஒரு வயதான பெண்மணி.



அவர் கழுத்தில் பல மாலைகள் போட்டிருந்தார். 'அம்மா...! காளிதேவி...!'என்று மட்டும் நொடிக்கொரு தடவை கூறிக்கொண்டிருந்தார்.

இது கோயில் விடயம் மட்டுமில்லை. பலருக்கும் பலவற்றை உணர்த்திய விடயம் பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்டவர்களை விட்டு விட்டு நாம் எங்கெல்லாமோ செல்கிறோம் என்பதைக் கூறிக்கொண்டே சலித்துக் கொண்டார் அவர். அவருக்குப்பின்னால் இன்னும் பலர் இருந்தனர். அவர்கள் அனைவரும் நெற்றியில் திருநீறு அணிந்திருந்தார்கள். எது எப்படி இருந்தாலும் மன்றுக்கு வரும் ஒவ்வொரு குற்றமும் பல பாடங்களைக் கற்பித்து விட்டுச் செல்வதைப்போன்றே இந்த விடயமும் பற்பல விடயங்களை உணர்த்திச் சென்றிருக்கின்றது என்பது தான் உண்மை.

"இனி இரண்டு கோயில்களிலும் திருவிழாக்கள் நடைபெறும். ஊரே திருவிழாவில் ஒன்றித்திருக்கும் இதுவும் நல்லது தான்" என்றார் மிக மகிழ்வுடன் ஒருவர். அவர் யார் என்பதை ஊகித்துக் கொள்ள முடியவில்லை.

# மன்றுதான் முடிவாகுமா?






**அந்தக் கோவில் வழக்கு மன்று வரைக்கும் கொண்டுவரப்பட்டு நடைபெற்றது ஆனாலும் காளிகாதேவி ஆலய பரிபாலன சபையினர் ஒரே காலத்தில்தான் திருவிழா செய்வது என்ற தமது எண்ணத்தில் விடாப்பிடியாகவே இருந்தார்கள், இதனால் சர்வமத இந்து குருபீடத்தை முன்னிலையாகுமாறு மன்று பணித்தது. அதனடிப்படையில் அவர்கள் மன்றுக்கு வருகை தந்தனர். இரண்டு ஆலயத் திருவிழாக்களையும் ஒரே நாளில் நடத்தலாம் என அவர்கள் தெரிவித்தார்கள். அதனை மன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டதுடன். இரண்டு ஆலயத் திருவிழாக்களையும் ஒரே நாளில் நடத்தலாம் என்று தனது தீர்ப்பையும் அளித்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அதுவரை

இது
அமைதியான தேசம் தான்
ஆனால்
ஒப்பாரியும் ஓலமும்
இன்னமும் ஓயவில்லை...

இங்கு
தேவதைகள் அதிகம் தான்
ஆனால்
கைம்பெண்களுக்குக்
குறைவில்லை...

இங்கு
தென்றலின் ஸ்பரிசத்தை
நுகர முடியும்
ஆனால்
கந்தகத்தின் நெடியை
மறக்க முடியவில்லை...

இங்கு
கன்னிவெடிகள் குறைவுதான்
ஆனால்
கம்பிவேலிகளால்
துண்டாடப்பட்ட
நிலங்களோ அதிகம்...


இங்கு
உறவுகள் அதிகம் தான்
ஆனால்
சொந்தம் கொண்டாடத்தான்
யாரும் இல்லை...

இங்கு
குடும்பத்துக்கு ஆண்தான்
தலைவன்
ஆனால்
பெண் தலைமைக்
குடும்பங்கள் ஏராளம்...

இங்கு
நெஞ்சில் குண்டேந்திய
மாவீரர் அதிகம்
ஆனால்
எதிரியின் காலை
நக்கிப்பிழைக்கும்
கயவர்களுக்கும்
குறைவில்லை...

இது
அமைதியான தேசம் தான்
ஆனால்
(கை)விலங்குகள்
அவிழ்க்கப்படும்
வரைக்குமே...

சரோன்



# 'அன்றொய்ட்'

சி.சிவபாலன்

இது திறன் கைபேசிகளை (ஸ்மாட் போன்) வைத்திருப்பவர்கள். அல்லது 'ரப்லட்' என்பவற்றை வைத்திருப்பவர்கள் அவற்றை இயக்க ஆரம்பிக்கும் போது காணும் ஒரு சொல்லாகும். என்னதான் தொலைபேசிகளை அல்லது கணினிகளை வடிவமைத்தாலும் அவை சடப்பொருள்களே. அவற்றுக்கு உயிர்கொடுப்பவை இந்த அன்றொய்ட் போன்ற மென்பொருள்களேயாகும். கூகிள் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த மென்பொருள்கள் தொடுதிரை கொண்ட திறன் பேசிகளுக்கென்று சிறப்பாக வடிவமைக்கப்பட்டதாகும்.

**மென்பொருள்கள் உயிர் போன்றவை**

அதாவது கணினிகள், கைபேசிகளை (உபகரணங்களை) உடல் என்றால் மென்பொருள்கள் உயிர் போன்றவையாகும். அதிலும் அன்றொய்ட், வின்டோஸ் என்பன சிறப்புத் தன்மை வாய்ந்த மென்பொருள்களாகும். மென்பொருள் கள் என்பன மேற்குறித்த சாதனங் களை இயக்குவதற்கு வழங்கப்படும் கட்டளைகளின் தொகுப்பாகும்.
இவற்றில் உள்ள கட்டளைகளுக்கு அமையவே கணினிகள். கைபேசிகள் இயங்குகின்றன. இவற்றில் அன்றொய்ட். வின்டோஸ் போன்றன மனிதனுக்கும் கணினிகளுக்கும், கைபேசிகளுக்கும் இடையே சிறந்த தொடர்பை ஏற்படுத்துவதுடன் அவற்றின் பாகங்கள் எமது தேவைக்கு ஏற்ப செயற்படுவதற்கான கட்டளைகளைக் கொண்டுள்ளன. இவை 'பணிச் செயல் முறைமை' ஆங்கிலத்தில் 'ஒப்பரேற்றிங் சிஸ்ரம்' (ஓ.எஸ்)என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகின்றன.

**பரந்துபட்ட வசதி தரும் பணிச் செயல்முறைமை**

நாம் கணினியை இயக்க ஆரம்பிக்கும்போது பணிச்செயல் முறைமையானது செயற்படத் தொடங்கி கணினியின் அனைத்துப் பாகங்களும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள கருவிகளும் சரியான முறையில் இயங்கத் தக்க நிலையில் உள்ளனவா என்பதை.தான் கொண்ட மென்பொருள் மூலம் சரிபார்க்கும். இதன் பின்னரே நாம் கணினியை உபயோகிக்கக் கூடிய நிலை உருவாகும்.
கணினியை நாம் உபயோகிக்கும்போது நாம் வழங்கும் கட்டளைகளுக்கு அமைவாகக் கணினியைச் செயற்பட வைப்பது பணிச்செயல் முறைமையாகும். கணினிக்கு விளங்கும் மொழியைச் சாதாரணமாக நாம் விளங்கிக் கொள்வது கடினமாகும். எனவே எமக்குத் தெரிந்த மொழியில் கட்டளைகளை நாம் வழங்கும்போது பணிச் செயல் முறைமை அவற்றைக் கணினிக்கு விளங்க வைத்து அதை இயங்க வைக்கின்றது. அத்துடன் கணினியுடன் இணைக்கப்பட்டுள்ள கருவிகளுக்கும் கட்டளைகளை வழங்கி அவற்றையும் இயங்கவைப்பது பணிச்செயல் முறைமையோயாகும். எமக்குத் தேவையானவற்றைக் கணினியில் சேமித்து வைத்தல். தேவையானபோது திரும்ப வழங்கல், தேவையற்றவையை நீக்குதல் போன்ற செயற்பாடுகளையும் எமது கட்டளைகளுக்கேற்ப இதுவே செயற்படுத்துகிறது. நாம் பயன்படுத்துகின்ற வலையமைப்புகளையும் இதுவே முகாமைத்துவம் செய்கிறது.

**மென்பொருள்களைக் கையாளும் 'ஓ.எஸ்'**

நாம் எமது தேவைக்கு ஏற்ப வேறு சில மென்பொருள்களைக் கணினியில் நிறுவவேண்டியிருக்கும். உதாரணமாகப் படங்களை எமக்குத் தேவையான வகையில் வடிவமைத்துக் கொள்ள 'போட்டோ சொப்' என்னும் மென்பொருளைப்பயன்படுத்துகிறோம். இதுபோன்ற மென்பொருளை நிறுவிக்கொள்ளவும் தேவையானபோது அவற்றை இயக்குவதற்கும் பணிச்செயல் முறைமை பயன்படுகிறது. அதாவது கணினியாயினும் சரி திறன் பேசியாயினும் சரி அவற்றின் இயக்கத்துக்கு இன்றியமையாத மென்பொருள் பணிச்செயல்முறைமையாகும். இதுவே இவற்றின் இயக்கம் முழுவதையும் கட்டுப்படுத்துகின்றது. ஏனைய மென்பொருள்களை நாம் எமது தேவைகருதி தேவையானவற்றை மட்டும் நிறுவிப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

**கூடியளவில் இலவசமாகவே 'ஓ.எஸ்'**

இந்த அன்றொய்ட் மென்பொருள் பொதுவாக நாம் திறன்பேசிகளைக் கொள்வனவு செய்யும் போது அவற்றில் நிறுவப்பட்டிருக்கும். கணினிகளைக் கொள்வனவு செய்யும்போது பணிச்செயன்முறைமை நிறுவப்பட்டிருக்காவிடின் அதனை நிறுவிக்கொள்ள வேண்டும். பணிச்செயல்முறைமையில் பல்வேறு வகைகள் உள்ளன. இதில் 'மைக்றோ சொவ்ற்' நிறுவனம் தயாரித்துள்ள வின்டோஸ் இங்கு மிக அதிக அளவில் பயன்பாட்டில் உள்ளது. இந்தப் பணிச்செயல் முறைமையானது பல்வேறு பதிப்புகளை(உதாரணமாக வின்டோஸ் எக்ஸ். வின்டோஸ் 7,வின்டோஸ் 8) கணினியில் நிறுவுவதற்கேற்றவகையில் தயாரித்து வரும் அதேவேளை திறன்பேசிகள், 'ரப்லட்' ஆகியவற்றுக்கும் ஏற்றவகையில் 'வின்டோ மொபைல்' எனும் பணிச் செயல்முறைமையையும் தயாரித்துள்ளது.
அதேவேளை அப்பிள் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் கணினிகளுக்கு 'மக்' எனும் பணிச்செயல்முறைமை பயன்படுத்தப்படுகிறது.
இவற்றைப் பணம் செலுத்திக் கொள்வனவு செய்தே பயன்படுத்த முடியும். இதேவேளை 'லினக்ஸ்' எனும் பணிச்செயல்முறைமையை இணையம் மூலம் இலவசமாகப் பெற்று நிறுவிக் கொள்ள முடியும். இதனை அடிப்படையாகக் கொண்டு திறன்பேசிகள், 'ரப்லட்' என்பவற்றில் பயன்படுத்தவென 'கூகுள்' நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டதே 'அன்றொய்ட்' எனப்படும் பணிச்செயல்முறைமையாகும். இது இலவச மென்பொருளாகும். இது நாம் திறன்பேசிகளைக் கொள்வனவு செய்யும்போது நிறுவப்பட்டிருக்கும். இதுவே நாம் தொடுதிரை மூலம் உருவங்களைத் தொடும்போது அதற்குரிய கட்டளைகளைத் திறன்பேசிக்கு வழங்கி அதனைச்செயற்பட வைக்கின்றது.

> கணிணிகள், கைபேசிகளை, உபகரணங்களை உடல் என்றால் மென்பொருள்கள் உயிர் போன்றவையாகும். அதிலும் அன்றொய்ட், வின்டோஸ் என்பன சிறப்புத் தன்மை வாய்ந்த மென்பொருள்களாகும். மென்பொருட்கள் என்பன மேற்குறித்த சாதனங்களை இயக்குவதற்கு வழங்கப்படும் கட்டளைகளின் தொகுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.ஜே.ஞானேந்திரன்



# ஆள் பற்றாக்குறையும் அவசர இறக்குமதியும்

அந்நிய நாடுகளில் வழங்கப்படும் எந்தத் தொழிலாக இருந்தாலும் பிடிவாதமின்றி செய்யும் இளம் சமுதாயம், எமது நாட்டில் அவற்றைச் செய்யத் தயாராக இல்லை. அக்கரைச் சீமையில் கால் பதிக்கும் இவர்களிடம், அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் கண்டுகொள்ளாத தன்மையும் தாம் எதையும் செய்யலாம் என்ற மனோபாவம் மேலோங்கி நிற்கும் போக்குமே இதற்குக் காரணம். கிடுகிடுவென உயர்கின்ற கட்டடங்களை நிரப்பியிருக்கும் அந்தத் தேசமும் அவர்களுக்குப் புதுமைதான். அந்தத் தேசங்களைப் போன்று கட்டடங்களை எழுப்பப் போதுமான தொழிலாளிகள் எமது நாட்டில் இல்லை என்பது இங்கேயுள்ள பிரச்சினை யாகக். காணப்படுகிறது.

## பணமிருந்தும் ஆள்ப் பற்றாக்குறை

வளைகுடா நாடுகளுக்குப் படையெடுத்து, அங்கே வான்முட்டும் கட்டடங்களை எழுப்பும் பணியில் ஈடுபட்டு, மாத ஊதியங்களைப் பெற்று வாழ்வாதாரத்தை நகர்த்திச் செல்லும் தொழிலாளர் வர்க்கம் பற்றி எமக்குத் தெரியும். அதே கட்டடங்கள் இலங்கையில் குறிப்பாகத் தலைநகரிலும் அதை அண்டிய பிராந்தியங்களிலும் அசுர வேகத்தில் உயர்ந்து கொண்டிருக்க, அதற்குத் தேவையான தொழிலாளிகளை இறக்குமதி செய்து கொண்டிருக்கின்றது இலங்கை. கவர்ச்சியான ஊதியம் தருகிறோம், வாகன வசதி தருகிறோம். வெளிநாடுகளில் தஞ்சம் புகாமல் எங்களிடம் வாருங்கள் என்று முதலாளிகள் தொழிலாளிகளுக்குக் கவர்ச்சி காட்டுகிறார்கள்.

அப்படியிருந்தும் இங்கு ஆள்ப் பற்றாக்குறைதான் முன் நிற்கின்றது. இதனால் வளைகுடா நாடுகளைப்போல தொழிலாளிகளை ஆசிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்துகொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் எம்மவர்கள்.

ஒரு காலத்தில் இலங்கையிலிருந்து அதிக ஏற்றுமதியாகும் பொருள் எது என்ற கேள்விக்கு மனித வளம் என்று நகைச்சுவையாக பதிலளிப்பதும் உண்டு.

நாட்டை உலுப்பியெடுத்த போர் 2009ஆம் ஆண்டுகளில் முடிவுக்கு வந்த பின்னர், நாட்டைக் கட்டியெழுப்புவது என்பது அவசியமானதொன்றாகி விட்டது. குறிப்பாக போரால் சிதைந்த வட பகுதியை பழைய நிலைக்குக் கொண்டுவருவதன்பது பெரும் முயற்சியாக இருக்கின்றது. 30 வருட காலப் போரின் வடுக்களை அகற்றுவது என்பது நீண்ட கால அவகாசத்தையும் அதிக தொகையான நிதி மூலங்களையும். புதிய வீடுகள், நெடுஞ்சாலைகள், துறைமுகங்களைத் திருத்துதல் போன்ற, நிர்மாணப் பணிகளுக்குச் அண்ணளவாக 600பில்லியன் ரூபா தொகை (4 பில்லியன் டொலர்) மதிப்பீடு இதுவரை செலவிடப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு இந்தத் தொகை மூன்று மடங்காக அதிகரித்து 11.6 டொலர்களை எட்டலாம் என்க கணிப்பிட்டுள்ளார்கள்.

நீண்ட கால அடிப்படையில் கடனாகப் பணத்தை வழங்க அந்நிய நாடுகள் முன்வருகின்றபோது. கட்டுமானப் பணிகளுக்குப் போதுமான தொழிலாளர்கள் இங்கே இல்லை என்பதுதுதான். இந்த நிலையில் அரசுக்குப் புதிதாக 4லட்சம் தொழிலாளிகள் தேவைப்படுகின்றார்கள் என்கிறது இலங்கை கட்டுமானத் தொழிற்சாலைச் சம்மேளனம்.

## கவர்ச்சி காட்டும் அரச பொறிமுறைகள்

உள்நாட்டில் கிடைக்காத இவர்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என்று அங்கலாய்க்கின்றனர் சம்மேளனத்தின் தலைவர் நிஸங்க விஜயரட்ண. ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளிகளைத் திரட்டும் ஒப்பந்தக்காரர்கள், 'கைநிறையச் சம்பளம் தருகிறோம், வேலைக்குச் செல்ல வாகன வசதி தருகிறோம், வெளிநாடுகளுக்குப் போகாதீர்கள்' என்று கூறும் காலம் இப்பொழுது மலர்ந்திருக்கின்றது.

வெளிநாட்டுக்குச் செல்பவர்களைத் தடுத்து நிறுத்த இன்னும்பல தந்திரோபாயங்களைக் கையாளத் தொடங்கியிருக்கிறது அரசு. ஆகக்குறைந்த சம்பளம் இவ்வளவாக இருந்தால்தான், வெளிநாடு செல்ல அனுமதி கிடைக்கும் என்று நிபந்தனை விதிக்கும் அரசு, மாதமொன்றுக்கு 400டொலர்களுக்குக் குறையாத வேதனம் இருக்க வேண்டும் என்ற சட்டத்தை இடைச் செருகலாக வைத்துள்ளது. இலங்கையில் இதே தொகையை உழைக்க வாய்ப்பு இருக்கும்போது, எம்மவர்கள் குறைந்த ஊதியத்துக்கு அந்நிய நாடுகளில் பணிபுரிவதைத் தான் விரும்பவில்லை என்கிறது அரசு. வெளிநாட்டு ஊதியத்தை விட இங்கே அதிகமாக உழைக்க வாய்ப்பிருக்கின்றது என்பதே அதன் உள்ளார்ந்தம்.

இதில் ஒன்றைக் கவனித்தாக வேண்டும். கிட்டத்தட்ட பத்தில் ஒரு இலங்கையர் வெளிநாடொன்றில் தொழில் செய்து கொண்டிருக்கின்றார்கள். 21மில்லியன் சனத்தொகையைக் கொண்ட இந்த நாட்டுக்கு அந்நியச் செலவாணியை ஈட்டிக் கொடுப்பதில் இவர்கள் அனுப்பும் பணமே முதலிடத்தைப் தக்கவைத்துக் கொண்டுள்ளது. எனவே இவர்களைத் தடுப்பது அல்லது கட்டுப்படுத்துவது என்பது நாட்டுக்கு நல்லது என்றும் சொல்லிவிட முடியாது. 2015இல் 6.98பில்லியன் டொலராக இருந்த இந்தத் தொகை மதிப்பீடானது கடந்த வருடம் 7.24பில்லியன் டொலராக உயர்வடைந் துள்ளது. என்பதை அறியும் போது, ஆண்டு அரசுக்குக் கிடைக்கும் வருமானம் அதிகரித்து வருவது துல்லியமாகத் தெரிகின்றது.



## தெரிந்தவர்கள் அறியா வண்ணம் வேலை செய்வதில் நாட்டம்

கட்டட வேலைகள், தச்சு வேலைகள், குழாய் பொருத்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு அதிக சம்பளத்தை இங்கு எடுக்க முடிந்தாலும், இன்றைய இளைஞர் சமுதாயம் மேற்போத்த வேலைகளை மனமுவந்து செய்யப் பின்னிற்கிறது என்பதே யதார்த்தம்.

வெளிநாடுகளுக்கு இலங்கையர்களை அனுப்பும் முகவர்கள் இப்பொழுது வெளிநாடுகளில் இருந்து தொழிலாளிகளை ஒப்பந்த அடிப்படையில் இறக்குமதி செய்யத் தொடங்கி இருக்கின்றார்கள். சட்டரீதியற்ற முறையில் 2 லட்சம் வரையிலான வெளிநாட்டவர்களை இங்கு வரவழைத்து, நிறுவனங்களுக்கு விநியோகம் செய்திருக்கின்றனர். கள் என்கிறார் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சர் சம்பிக்கா ரணவக்க.

## சீனாவிலிருந்து தொழிலாளர்கள்

இங்குள்ள பல சீன நிறுவனங்கள், உள்நாட்டுத் தொழிலாளிகளை வேலைக்கு அமர்த்த முடியாத நிலையில், சீனாவிலிருந்து பெருந்தொகையானவர்களை வரவழைத்து வேலைக்கு அமர்த்தி உள்ளன. கொழும்பில் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் புதிய ஷங்கிரி லா என்ற சீன விடுதியின் நிர்மானப் பணிகளுக்காக தருவிக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான சீனத் தொழிலாளிகள் தம்மை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்காக காத்துக் கொண்டு நிற்பதை தினமும் தெருக்களில் காணக் கூடியதாக இருக்கின்றது.

கட்டட ஒப்பந்தக்காரர்கள் புதிய வேலைத் திட்டங்களைக் பெறுப்பேற்க மறுத்து வருகின்றார்கள். தொழிலாளர் பற்றாக் குறை நிலவுவதே இதற்கு முக்கிய காரணி. இந்தக் கட்டுமானப் பணிகளைவிட, கழிவு நீர்க் குழாய் பொருத்தல், நீர் விநியோகக் குழாய் பொருத்தல் போன்ற பணிகளுக்கு இந்தியாவிலிருந்து தொழிலாளர்களைத் தருவிக்க வேண்டிய நிலை வந்துள்ளது என்கிறார்கள். ஆடை உற்பத்தி நிறுவனங்கள் பெரிய அளவில் ஆள் பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றன. இயந்திரங்களைக் கையாள 50ஆயிரம் பேர் வரையில் தேவைப்படுவதால், குறைந்த ஊதியத்தோடு தொழிலாளிகளைப் பெற இலங்கை நிறுவனங்கள் பங்களாதேஷ் தொழிலாளிகளை அணுகியிருக்கின்றன.

## இரண்டு எதிர் எதிர் முனைகள்

இலங்கையின் உல்லாசப் பயணத்துறை 2020ஆம் ஆண்டளவில் 3 லட்சம் பேருக்காவது வேலை வாய்ப்புக்களை வழங்குமளவுக்கு, பெருவளர்ச்சி கண்டுவருவது மகிழ்வளிக்கும் விடயந்தான். அதேபோல 65பில்லியன் ரூபா பெறுமதியான கட்டுமானப் பணிகளை 2020 ஆம் ஆண்டினுள் முடிப்பதற்கு இலங்கைக்கு 6லட்சம் பேர் வரையில் தேவைப்படுகின்றார்கள்.

வடக்கிலும் கிழக்கிலும் பட்டதாரிகள் வேலை வேண்டும் என்று படிப்புரிமையின் போர்க் கொடியை கரங்களில் ஏந்தி தூக்கி நிற்கின்றார்கள். ஆனால் புள்ளிவிவரங்களோ ஆயிரக்கணக்கானவர்கள் புதிதாக வேலைக்குத் தேவைப்படுவதனை தகவல் அளிப்பைத் தந்துள்ளன. தொழில்நுட்பரீதியாகக் கற்றவர்களின் தட்டுப்பாடே அடிப்படைப் பிரச்சினை என்பதும் தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

இங்கோ ஒரு புறம் வேலை கேட்டுப் போராடும் நிலையும், மறுபுறம் தொழிலாளர்களுக்குப் பற்றாக்குறையும் தலைவிரித்தாடுகின்றன. இந்த இரண்டு பிரச்சினைகளுக்கும் எப்போதுதான் தீர்வு கிடைக்கப் போகின்றதோ...?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்குத் திசையில் இருந்து...

அனார்கலி

## விழாக்கோலம்



கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்ற காரைதீவு சிறி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் (திருக்குளிர்த்தி) தற்பொழுது மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. சிறப்பு மிக்க இந்த வருடாந்த உற்சவத்தையொட்டி காரைதீவு பிரதான வீதி உட்பட உள்ளகப் பகுதிகளும் தற்சமயம் விழாக்கோலம் பூண்டு காட்சியளிக்கின்றன.
கடந்த 5ஆம் திகதி திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமான இந்த சிறப்பு மிக்க உற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை அதிகாலை திருக்குளிர்த்தி பாடுதலுடன் நிறைவு பெறும்.
இந்த உற்சவகாலத்தில் கண்ணகி வழக்குரை பாராயணமும் செய்யப்பட்டுவரும் அதேவேளை, பெருந் தொகையான பக்தர்கள் ஆலயத்துக்குத் திரண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

## கவிக்கோ மறைவு!

இந்திய இலக்கியவானில் புகழ் பெற்ற கவிஞர் பேராசிரியர் கவிக்கோ அப்துல் ரஹ்மானின் மறைவு குறித்து நிந்தவூர் கலை, இலக்கியப் பேரவை அனுதாப அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.
பேரவையின் தலைவர் மருத்துவர் ஏ.எம்.ஜாபிர், செயலாளர் தம்பிலெப்பை இஸ்மாயில் ஆகியோர் இணைந்து இந்த அனுதாப அறிக்கையை விடுத்துள்ளனர்.
கவிக்கோவின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு எனக் குறிப்பிட்டுள்ள இந்த அனுதாப அறிக்கையில், புதுக்கவிதை உலகின் முன்னோடி அவர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

## அவசர கடிதம்!

நாட்டில் இனமுறுகல்களைத் தூண்டியும், முஸ்லிம்களுக்கெதிராக அடாவடி மற்றும் வன்முறைகளைக் கட்டவிழத்தும் வரும் பொதுபலசேனாவின் நடவடிக்கைகளை தலையிட்டு நிறுத்து மாறு நீதிமற்றும் புத்த சாசன அமைச்சர் விஜயதாச ராஜபக்சவுக்குக் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. அக்கரைப்பற்று மாநகரசபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், முஸ்லிம் காங்கிரஸின் அக்கரைப்பற்று அமைப்பளருமான மௌலவி எஸ்.எல்.எம்.ஹனிபா (மதனி) அமைச்சர் விஜயதாசவுக்கு அனுப்பிவைத்துள்ள அவசர கடிதம் ஒன்றிலேயே மேற்படி கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார்.
வடகிழக்கில் போர் நடைபெற்றபோது ஆயுதம் ஏந்திப் போராடியவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த முடியாதிருப்பது போன்ற ஒரு துர்ப்பாக்கிய நிலையே பொதுபல சேனாவின் ஞானசாரதேரர் தொடர்பாகவும் ஏற்பட்டிருப்பதை சமகால நிகழ்வுகள் உணர்த்துகின்றன எனவும் ஹனிபா (மதனி) தமது கடிதத்தில் சுட்டிக்காட்டி யுள்ளார்.



## பட்டம் சூட்டினார்!

முஸ்லிம் காங்கிரஸின் தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபுக்கு மறைந்த கவிஞர் பேராசிரியர் கவிக்கோ அப்துல் ரஹ்மான் கவிஞர் திலகம் எனும் பட்டத்தை சூட்டி மகிழ்ந்ததை முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் ஏ.எல். அப்துல் மஜீத் நினைவு கூர்ந்துள்ளார்.
பேராசிரியர் கவிக்கோவின் மறைவு தொடர்பில் அவர் விடுத்துள்ள அனுதாப அறிக்கையில், 1997ஆம் ஆண்டு அட்டாளைச் சேனையில் நடைபெற்ற தேசிய மீலாத் விழாவையொட்டிய கவியரங்கு கவிக்கோ தலைமையிலே நடைபெற்றது.
இந்தக் கவியரங்கில் கவிதை பாடி பலரது கவனத்தையும் ஈர்த்த மர்ஹூம் அஷ்ரபுக்கு கவிஞர் கவிக்கோ பட்டம் சூட்டியதையே தவிசாளர் அப்துல்மஜீத் நினைவுகூர்ந்தார்.

## இப்தார்!

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் வருடாந்த நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு, அட்டாளைச்சேனை ஒஸ்றா வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. சம்மேளனத்தலைவர் கலாபூஷணம் மீரா எஸ்.இஸடீன் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் பெருந்தொகையான ஊடகவியலாளர்களும், பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.
நிகழ்வில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இறையடிசேர்ந்த மூத்த ஊடகவியலாளர் எம்.ஐ.எம்.முஸ்தபாவுக்கான சிறப்புப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

## இங்கு எவருமில்லையா?

திருகோணமலை மல்லிகைத்தீவு பெரிய வெளிக்கிராமத்தில் சிறுமிகள் மூன்று பேரை பாலியல் வதைக்குட்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவத்தைக் கண்டித்தும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியும் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பாடசாலை மாணவர்கள் கவனவீர்ப்புப் போராட்டங்களை நடத்திவருகின்றனர்.
இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் குறிப்பாகத் தமிழர் பிரதேசங்களில் இது தொடர்பான போராட்டமெதுவும் இதுவரை முன்னெடுக்கப்படாமை குறித்துக் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் பதில் தவிசாளர் வீ.கிருஷ்ணமூர்த்தி கவலை வெளியிட்டுள்ளார்.
அம்பாறை மாவட்டத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகளின் கவனம்கூட இந்தச் சபவத்தில் குவியாமையும், கவலையளிப்பதாகக் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

## நன்றிகளும் வரவேற்புக்களும்

இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும், வன்முறைகளைத் தடுத்து நிறுத்துமாறும், சட்டத்தை நிலை நாட்டுமாறும் கோரி வடமாகாண சபையில் ஏக மனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமை கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்த விடயத்தில் எதிர்ப்பைக் காட்டி அழுத்தம் கொடுக்காது அமைச்சுப் பதவிகளையும், அதிகாரப்பதவிகளையும், கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் முஸ்லிம் தலைவர்கள் மீது முஸ்லிம் மக்கள் வெறுப்புற்றிருக்கும் நிலையில், வடமாகாணசபையின் இந்தத் தீர்மானம் சற்று ஆறுதலளித்திருக்கின்றது. சக சிறுபான்மைச் சகோதர இனம் துயர இக்கட்டில் சிக்கியிருக்கும்போது இப்படித் தீர்மானம் நிறைவேற்றிக் குரல் எழுப்பியுள்ள விடயம் கிழக்கிலுள்ள முஸ்லிம் பிரதே சங்களில் பெரு வரவேற்புடன் சிலாகித்துப் பேசப்படுகின்றது. வடமாகாண சபையின் 94ஆவது அமர்வில் இதற்கான அவசரப்பிரேரணையை முன்மொழிந்த உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வழிமொழிந்த எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராஜா உட்பட ஏகமனதாக நிறை வேற்றிய சகல உறுப்பினர்களுக்கும் அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நலன் பேணும் அமைப்பு பெருநன்றி தெரிவித்துள்ளது.






## காட்டுத் தர்பார்!

மக்களின் அன்றாட வாழ்க்கையோடு ஒட்டிய அந்த அமைச்சு சார்ந்த பிராந்திய பணிப்பாளர் அலுவலகம் ஒன்று கல்முனை மாநகரில் இயங்கி வருகின்றது.
இந்த பணிப்பாளர் அலுவலகத்துக்குச் சென்று தமது கருமங்களை நிறைவேற்ற முனையும் பொதுமக்களிடமும், ஏனையோரிடமும் பெரும் கெடுபிடிகள் காட்டப்படுவதாகக் கவலையும், விசனமும் தெரிவிக்கப்படுகின்றது.
தமது தேவைகளுக்காக இந்த அலுவலகத்திலுள்ள ஒரு அதிகாரியையோ உத்தியோகத்தர்களையோ எடுத்த எடுப்பில் நேரே சென்று சந்திக்க முடியாதாம். காரணம் கூறி உயர் பீடத்திலிருப்பவரின் அனுமதி பெற்றே எந்தச் சந்திப்பும் நடைபெறவேண்டுமாம்.
பொது மக்களுக்கென ஒதுக்கப்பட்ட தினமான புதன் கிழமைகளில் கூட்படிவம் நிரப்பிக் கொடுத்தே எந்த உத்தியோகத்தரையும் சந்திக்க வேண்டுமென்ற கட்டாயமும் உண்டு.
இந்த பணிப்பாளர் அலுவலகத்துக்கு சென்றால், முதலில் நுழைவாயிலில் பாதுகாப்பு கடமையிலிருப்பவரது கெடுபிடி. அடுத்து அலுவலகத்துக்குள், வரவேற்பாளருக்கு விளக்கம், அதன்பின்னரே அனுமதி பெற வேண்டிய நிலை.
இதையெத்த கொழும்பிலுள்ள, திருமலையிலுள்ள அமைச்சு அலுவலகத்திலோ இல்லாத கெடுபிடி இங்கு மட்டும் ஏன்? என விசனமுறும் பொதுமக்கள் 'இது என்ன காட்டுத் தர்பாரோ...?' எனவும் கேள்வி எழுப்புகின்றனர்.

(சுத்தம் சுகம் தரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அரசியலில இதெல்லாம் சாதாரணமப்பா!

எம்.ஐ.முபாறக்

## மைத்திரி பாணியில் பல்டி அடிப்பு

அரசியல் உலகில் பதவிக்காகவும் பணத்துக்காகவும் பல்டி அடிப்பதென்பது சாதாரண விடயமாகிவிட்டது. தனது கட்சியோடு முரண்பாட்டுக் கொண்டு அடுத்த பக்கம் பல்டியடிப்பது அல்லது இறுதிவரைக்கும் கட்சியோடும் கட்சித் தலைமையோடும் நல்லுறவைப் பேணிவிட்டு மறுநாளே சத்தமின்றிப் பல்டியடிப்பது என்று இரண்டு வகையான பல்டிகள் இப்போது இடம்பெறுகின்றன.

அதில் இரண்டாவது பல்டியைத்தான் தற்போதைய அரசதலைவர் மைத்திரிபால தேர்ந்தெடுத்தார். அந்த பல்டியை அவர் பிரபல்யப்படுத்தியது அப்பம் மூலம்தான். ஆம்... முதல் நாள் முன்னாள் அரச தலைவர் மகிந்தவுடன் கூட இருந்து அப்பம் சாப்பிட்டுவிட்டு மறுநாள் சத்தமின்றி பல்டியடித்தார் மைத்திரி என்றே இப்போதுவரைக்கும் புலம்பித் திரிகின்றார் மகிந்த. அதைத் தொடர்ந்து பல்டியடிக்கும் அரசியல்வாதிகள் மைத்திரியின் பாணியைத்தான் பின்பற்றுகிறார்கள் என்று அறியக் கிடைத்துள்ளது. அண்மையில் மைத்திரி பக்கம் பல்டியடித்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்ட வட மத்திய மாகாண சபையின் மகிந்த அணி உறுப்பினர்களும் மைத்திரியின் பாணியைத்தான் பின்பற்றினார்களாம். மகிந்த அணி எம்.பி எஸ்.எம்.சந்திரசேனவை இவர்கள் முதல் நாள் இரவு சந்தித்துப் பேசி அவருடன் அப்பம் சாப்பிட்டுவிட்டே சென்றார்களாம். மறுநாள் பல்டி செய்தியைத்தான் கேள்விப்பட்டாராம் சந்திரசேன. மகிந்தவைப்போல் சந்திரசேனவும் இப்போது போகுமிடமெல்லாம் இந்த துரோகத்தைப்பற்றி சொல்லிச் சொல்லிப் புலம்புகிறாராம்.

சரிதான் விடுங்க பாஸ். தலைவர் எவ்வழியோ தொண்டர்களும் அவ்வழியே.

## இப்படியுமாடா பழி வாங்குவீங்க...?



இரட்டைக் குடி உரிமை உள்ள மகிந்த அணி எம்.பி கீதாவுக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடுத்து யாரெல்லாம் இரட்டைக் குடி உரிமை வைத்துள்ளார்களோ அவர்கள் எல்லாம் கலக்கத்தில் உள்ளனராம்.

தாமும் இரட்டைக் குடி உரிமை வைத்திருப்பதைத் தெரிந்துகொண்டு யாரெல்லாம் நீதிமன்றம் செல்லப் போகிறார்களோ? எப்போது நமது சீற்றுக் கிழியுமோ என்ற அச்சத்தில்தான் அவர்கள் காலத்தைக் கடத்திக்கொண்டு செல்கின்றனர். அந்தத் தீர்ப்புக்குப் பிறகு தமது அரசியல் எதிரிகளை பழி வாங்குவதற்காக 'இவருக்கு இரட்டைக் குடி உரிமை உண்டு, அவருக்கு இரட்டைக் குடி உரிமை உண்டு' என்று கண்டபடி கதையைக் கட்டிவிடுகிறார்களாம்;.

அவ்வாறானவர்களிடம் சிக்கியவர்களுள் மகிந்த அணியின் தூண் டளஸ் அழகப்பெருமவும் ஒருத்தர். சந்திரிகாவின் ஆட்சியில் அரசியலில் இருந்து முற்றாக ஒதுங்கி அமெரிக்காவுக்குப் போய் அங்கேயே நீண்ட காலம் தங்கினார் டளஸ். மகிந்த பிரதமரானதும் அவரை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வந்து எம்.பி பதவி கொடுத்து மீண்டும் அவரை அரசியலில் இறக்கினார் மகிந்த.

2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக நிறைவேற்றப்பட்ட 19ஆவது திருத்தச் சட்டத்தில் இரட்டைக் குடி உரிமை வைத்திருப்பவர்கள் எம்.பி பதவி வகிக்க முடியாது என்று கூறப்பட்டிருப்பதால் மகிந்தவின் அரசியல் எதிரிகள் அவ்வாறானவர்களைத் தேடிப் பிடித்துச் சிக்கலில் தள்ளத் தொடங்கினர்.

2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக டளஸ் அழகப்பெரும வேட்பு மனுத் தாக்கல் செய்த நேரத்தில் அவர் இரட்டைக் குடி உரிமை உடையவர் என்று கூறி அவரின் வேட்பு மனுவுக்கு எதிராக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. தான் இரட்டைக் குடி உரிமை பெறாதவன் என்பதை நிரூபித்ததன் பின்பே அவரது நியமனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இருந்தும், அவர் இரட்டைக் குடி உரிமை பெற்றவர் என்றும் அவர் வென்றாலும் அந்தப் பதவி பறிபோய்விடும் என்றும் தேர்தல் மேடைகளில் பரப்புரை செய்யப்பட்டதால் அவர் கடவுச் சீட்டுடன் மேடை ஏறும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

ஆனால்,இப்போது கீதாவின் விவகாரத்துக்குப் பின் அதே பழைய பரப்புரையைக் கொண்டு மீண்டும் டளஸை வம்புக்கு இழுக்கிறார்களாம் அவரது அரசியல் எதிரிகள். இதனால் போகுமிடமெல்லாம் மீண்டும் கடவுச் சீட்டுடன் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளாராம் அவர்.

அவர் முதன் முதலாக அமெரிக்காவுக்குச் சென்றது மாணவர் நுழைவிசைவில் இறுதியாகச் சென்றது சுற்றுலா நுழைவிசைவில் என்று கூறும் டளஸ் 'இப்படியுமாடா ஒருத்தன பழி வாங்குவீங்க...?' என்று புலம்புகிறாராம்.

## புது வாகனத்தைப் பெற இப்படியொரு டான்ஸ்?

பொருளாதாரம் தள்ளாடிக்கொண்டு இருக்கும் நிலையில் அமைச்சர்களுக்கு வாகனங்கள் இறக்குமதி செய்வதற்காக 350 மில்லியன் ரூபா குறை நிரப்புப் பிரேரணை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டமை கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. எதிர்க்கட்சியினர் இப்போது எங்கு பார்த்தாலும் இதையே போட்டுத் தாக்குகின்றனர். ஆனால், அமைச்சர்கள் வாகனங்கள் வழங்கும் திட்டத்தை நியாயப்படுத்தியே பேசுகின்றனர் .புது வாகனம் கிடைப்பதென்றால் யார் தான் விடுவார்கள்?

அமைச்சர் மகிந்த அமரவீர தரப்பு இவ்வாறு நியாயப்படுத்துகின்றது. கடந்த நான்கு மாதங்களுக்குள் நான்கு தடவைகள் அமைச்சரின் வாகனம் பழுதடைந்து நடு வீதியில் நின்றதாம்.

ஒரு தடவை இவ்வாறு பழுதடைந்து கொழும்புக்கு வர வாகனம் இன்றி அமைச்சர் தத்தளித்தபோது தங்காலையில் உள்ள ஒரு தனவந்தரிடம் இருந்து வாகனத்தைப் பெற்றுக்கொண்டு கொழும்புக்குச் சென்றாராம் .

இன்னொரு தடவை பழுதடைந்தபோது அங்குனுகொலவில் உள்ள ஒருவரிடம் இருந்து வாகனம் ஒன்றை இரவல் வாங்கிக்கொண்டு கொழுப்புக்குச் சென்றாராம். இன்னொரு தடவை கூட்டம் ஒன்றுக்குப் போய்க் கொண்டிருக்கும்போது டயர் வெடித்து நடுவீதியில் நின்றாராம். ஒருவாறு வேறு வாகனம் ஒன்றைப் பிடித்து வீடு திரும்பி னாராம்.

இவ்வாறு கடந்த நான்கு மாதங்களுக்குள் நான்கு தடவைகள் வாகனம் பழுதாகி அசௌகரியத்தை எதிர் நோக்கினாராம் அமைச்சர்.

முன்னைய ஆட்சியில் பதில் அமைச்சர் ஒருவர் பாவித்த வாகனம் ஒன்றுதான் அவருக்கு வழங்கப்பட்டுள்ளதாம்.

இவ்வாறு அமைச்சர்களுக்குப் பழைய வாகனங்க்ள் வழங்கப்பட்டுள்ளமையால் அவை அடிக்கடி பழுதாகுவதால் பயன்படுத்த முடியாமல் அமைச்சர்கள் அவதிப்படுகிறார்கள் என்றும் அப்படியானதொரு நிலையில் அவர்களுக்கு புதிய வாகனங்கள் வழங்கப்படுகின்றமை நியாயம்தான் என்றும் அமைச்சர்கள் பலர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

உண்மைதான். இவர்கள் மக்களுக்காகப் படுகிற கஷ்டத்தைப் பார்த்தால் ஒவ்வொருத்தருக்கும் தனித்தனி உலங்கு வானூர்திகளே வழங்க வேண்டும் போலிருக்கின்றதே....ம்...ம்.. புது வாகனத்தைப் பெற என்ன ஒரு டான்ஸ்.



## சாதாரண தரப் பரீட்சையில் நான்கு தடவைகள் தோல்வியடைந்த அமைச்சர்

அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தின்போது பல அமைச்சர்கள் வகித்து வந்த அமைச்சுக்கள் பறிக்கப்பட்டுப் பதிலுக்கு அவர்களுக்கு வேறு அமைச்சுக்கள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு நியமிக்கப்பட்டிருக்கும் அமைச்சர்களின் தகுதிகள்கல்வித் தகைமைகள் தொடர்பில் மகிந்த அணி கேள்வி எழுப்பி வருகின்றது.

கடந்த காலங்களில் இரண்டு பெரிய அமைச்சுக்கள் தொடர்ச்சியாகச் சர்ச்சைக்குள் சிக்கியே வந்தன. இதனால் அவர்கள் இருவருக்கும் அந்த அமைச்சுக்கள் மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன.

அவற்றுள் ஒரு அமைச்சை ஏற்கனவே வகித்தவர் தகுதி இல்லை என்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டதால்தான் அந்த அமைச்சு அவரிடம் இருந்து பறிக்கப்பட்டு இவரிடம் வழங்கப்பட்டது. ஆனால், இவரும் அந்த அமைச்சுக்குத் தகுதி இல்லையாம்!

இவரின் கல்வித் தகைமையைச் சுட்டிக் காட்டி வேறு அமைச்சர்களை அதற்கு நியமிக்க வேண்டும் என்று மகிந்த தரப்புக் கூறுகின்றது. அந்த அமைச்சை வகிக்கும் அமைச்சர் நான்கு தடவைகள் கல்விப் பொது சாதாரணதரப் பரீட்சையில் தோற்றி சித்தியடையத் தவறியவராம்.

பின்பு லண்டன் கல்லூரி ஒன்றில் ஆடைத் துறையில் பட்டப் படிப்பை முடித்து ஆடை வடிவமைப்பு ஆலோசகராக இலங்கையில் சிறிது காலம் பணியாற்றினாராம். அதன் பின்பே அவர் அரசியலுக்குள் நுழைந்தாராம்.

இலங்கையில் அமைச்சர் பதவி வகிப்பதற்கு கல்வித் தகமை எதற்கு பாஸ்? மாட்டிக்கொள்ளாமல் திருடுவதற்கு மாத்திரம் தகுதி திறமை இருந்தால் போதும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# வேதனை அடையும் சாதனை சுசந்திகா

ஸூடோ ஸ்வாமி

பொதுவாகவே பிரபலங்களின் தனிப்பட்ட வாழ்க்கை சிறப்பானதாக அமைந்திருப்பதில்லை. அந்தக் கசப்பான உண்மையை, அவர்களில் பலரும் வெளிச்சம் போட்டுக் காட்டியபடியே இருக்கின்றார்கள். இன்றைக்குப் பதினேழு ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையர்கள் அனைவரையும் குதூகலிக்கச் செய்து பன்னாட்டு வரைபடத்தில் ஒலிம்பிக் பதக்கப்பட்டியலில் இலங்கையின் பெயரை மீளவும் பொறிக்கச் செய்த சுசந்திகா ஜயசிங்க கடந்த வாரத்தில் விடுத்திருந்த அறிவிப்பு, பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றது.

தனது பிள்ளைகளைப் பராமரிப்பதற்காகத் தான் பெற்றிருந்த ஒலிம்பிக் பதக்கத்தை ஏலம் விடப்போவதாக வெளியிட்டிருந்த அறிவிப்பே அது. தற்போதைய அரசின்கீழ், விளையாட்டுத்துறை அமைச்சின் ஆலோசகராகப் பணியாற்றிவரும் ஒலிம்பிக் பதக்கம் வென்ற வீராங்கனையான சுசந்திகா ஜயசிங்க, விளை யாட்டுத்துறை அமைச்சால் தனக்கு வழங்கப்பட்ட ஊதியம் கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் இடைநிறுத்தப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டே தான் பெற்றிருந்த பதக்கத்தை ஏலமிடப்போவதாக தெரிவித்திருக்கின்றார்.

### பதக்கம் விலைபோகாதிருக்கப் புதிய சட்டம்

பலரை விசனத்திற்குள்ளாக்கிய இந்த அறிவிப்பு, அரச தலைவர் மைத்திரிபாலவின் தலையீட்டை அடுத்து கைவிடப்பட்டிருந்தாலும் சுசந்திகாவுக்கும் விளையாட்டுத்துறை அமைச்சுக்குமிடையில் உச்சமடைந்திருந்த முறுகல் நிலையின் வெளிப்பாடே இது என்பதை நாம் கண்டுகொள்ள வேண்டியிருக்கிறது. சுசந்திகாவின் அறிவிப்பைத் தொடர்ந்து கடந்த புதன்கிழமை விளையாட்டுத்துறை அமைச்சரான தயாசிறி ஜயசேகர தெரிவித்திருக்கும் விடயம் இதை நன்கு புலப்படுத்தியிருக்கிறது. பன்னாட்டு நிகழ்வுகளில் வெற்றி கொள்ளப்பட்ட பதக்கங்களைக் குறித்த வீர, வீராங்கனைகள் விற்பது மற்றும் ஏலத்தில் விடுவதை தடுக்கும் வகையில் புதிய சட்டம் ஒன்றை கொண்டுவரவிருப்பதாக தெரிவித்திருக்கிறார். குறித்த பதக்க வெற்றியீட்டுதலுக்காக நாடு அதிக தொகையை செலவிட்டிருக்கின்றது என்பதை குறிப்பிட்டிருக்கும் அவர், தமது சொந்தத் தேவைகளுக்காக பதக்கங்களை விற்க முயல்வது நியாயமற்றது என்பதை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

சுசந்திகா மைதானத்தில் பிரகாசித்த காலத்திலிருந்து இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சுக்கும் சுசந்திகாவுக்குமிடையேயொட்டாத பொருத்தமே நிலவி வந்திருக்கிறது. தற்போதைய நிலையில் விளையாட்டு அமைச்சால் அவரை ஆலோசகராக உள்ளீர்க்கும்போது அவரிடம் எதிர்பார்க்கப்பட்ட தான கருமங்கள் தொடர்பில் திருப்தி நிலை காணப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

### சுசந்திகாவின் வாழ்க்கைப் போக்கு

ஆசிய கருங்குதிரை (Asian Black Mare) என்று அறியப்பட்ட சுசந்திகா ஜயசிங்க, இலங்கைக்காகப் பன்னாட்டளவில் குறுந்தூர ஓட்ட விளையாட்டு நிகழ்வுகளில் பதக்கங்களை சம்பாதித்த வீராங்கனை யாவார். கடந்த 2000ஆம் ஆண்டு சிட்னி நகரில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப்பதக்கத்தை அவர் வென்றிருந்தார். அதன் பின்னர் 2007ஆம் ஆண்டு ஊக்க மருந்துக் குற்றச்செயல் காரணமாக முதலிடம் பெற்றிருந்தவர் தனது தங்கப்பதக்கத்தைப் பறிகொடுக்க, சுசந்திகாவுக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. 2009ஆம் ஆண்டு விளையாட்டுத் துறையிலிருந்து ஓய்வு பெற்ற சுசந்திகா, இரண்டு பிள்ளைகளின் தாயாவார். கடந்த ஆண்டு ஜூன் மாதம் கணவரால் முறைகேட்டுக்குள்ளாக்கப்பட்டு வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற நேர்ந்ததுடன் கடந்த ஆண்டின் இறுதியில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு தியத்தலாவ வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பின்னர் மேலதிக சிகிச்சை களுக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு உலங்குவானூர்தி மூலமாகக் கொண்டுசெல்லப்பட்டிருந்தார்.



> தற்போதைய அரசின் கீழ், விளையாட்டுத்துறை அமைச்சின் ஆலோசகராகப் பணியாற்றிவரும் ஒலிம்பிக் பதக்கம் வென்ற வீராங்கனையான சுசந்திகா ஜயசிங்க, விளையாட்டுத்துறை அமைச்சால் தனக்கு வழங்கப்பட்ட ஊதியம் கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் இடைநிறுத்தப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டே தான் பெற்றிருந்த பதக்கத்தை ஏலமிடப்போவதாகத் தெரிவித்திருக்கின்றார்.

### இலங்கையின் புதிய சாதனை

சுசந்திகாவுக்குப் பின்னர் ஒலிம்பிக்கில் பதக்கம் எதையும்வென்றிருக்காத இலங்கை, கடந்த ஆண்டு பிரேசில் நாட்டின் றியோ டி ஜெனீரோ நகரில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிக்கான பங்கேற்பில் வித்தியாசமான சாதனையைச் சத்தமில்லாமல் நிலைநாட்டியிருந்தது. தற்பொழுது அந்தச் சாதனை சர்ச்சைக்குள்ளாகியிருக்கின்றது. குறித்த ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றுவதற்கு 9வீர வீராங்கனைகளே பெயரிடப்பட்டிருந்த நிலையில், அவர்களை 46 அலுவலர்களும், அதிகாரிகளும் பிரேசிலுக்கு அழைத்துச் சென்றிருந்தமையே அந்தச் சாதனை. அது தொடர்பில் தற்போது தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவால் விளக்கம் கோரப்பட்டிருக்கின்றது. விளையாட்டுத்துறை சார்ந்த நிறுவனங்களான இலங்கைக் கிரிக்கெட் சபை, தேசிய ஒலிம்பிக் குழு மற்றும் இலங்கை கால்பந்து அமைப்பு போன்றவற்றில் இடம்பெற்ற நிதி மோசடிகள் இனங்காணப்பட்டுவிசாரணைக்குள்ளாகியுள்ள நிலையிலேயே இந்தச் சங்கதியும் பதிவாகியிருக்கின்றது.

### சுசந்திக்காவை முதன்மைப்படுத்தும் விடயங்கள்

அண்மையில், இலங்கையில் வழங்கப்படும் உயர் கௌரவங்களில் ஒன்றான தேசபந்து விருது வீராங்கனை சுசந்திகாவுக்கு வழங்கப்பட்டிருந்தது. 12ஆண்டுகளுக்குப் பின்னர் கடந்த மார்ச் மாதம் நடந்த இந்த மதிப்பளிப்பு நிகழ்வில் சுசந்திகாவுடன் சேர்த்து ஒன்பது பேருக்கான தேசபந்து கௌரவம் அரசதலைவரால் வழங்கப்பட்டிருந்தது. இதைவிட சுசந்திகா ஒலிம்பிக்கில் விருது வென்ற 15ஆவது வருடக் கொண்டாட்டமும் கடந்த 2015ஆம் ஆண்டு அரசதலைவரின் பங்கேற்புடன் இடம்பெற்றிருந்தது. இதில் சுசந்திகாவின் சுயசரிதத்தை வெளியிடுவது, அவருடைய பெயரில் விளையாட்டு நிதியம் ஒன்றை ஆரம்பிப்பது, மற்றும் அவருக்கான இணையத்தளத்தை ஆரம்பிப்பது போன்ற விடயங்கள் பேசப்பட்டிருந்தன.

### சுசந்திகாவின் ஆதங்கம்

தனது அண்மைய அறிவிப்பை அடுத்து தான் பெற்ற பதக்கத்தை ஏலத்தில் வாங்குவதற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பலர் முன்வந்துள்ளனர் எனத் தெரிவித்திருக்கும் சுசந்திகா, தன்னுடைய பதக்கத்துக்கு, 250மில்லியன் ரூபா தொகை மதிப்பை வழங்குவதற்குக் கூட சிலர் தயாராக இருப்பதாக 'தி ஐலண்ட்' பத்திரிகைக்குத் தெரிவித்திருக்கிறார். பதக்கத்தை விற்பனை செய்யும் பெறுமதியில் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறியின் அடுத்த தேர்தல் பரப்புரைச் செயற்பாடுகளுக்கும் கூட நிதி அனுசரணை வழங்கமுடியும் என எள்ளி நகையாடியிருக்கும் குறுந்தூர ஓட்ட வீரமங்கை, உலகத்துக்கே தனது பதக் கத்தின் பெறுமதி தெரிந்திருக்கின்றபோதும், அமைச்சருக்கு அது தெரியாமலிருப்பது வருத்தமளிப்பதாகக் கூறியிருக்கிறார்.

நாட்டுக்குப் பன்னாட்டு ரீதியில் புகழ் தேடித் தந்தவர்களை இறந்தபின் தேசிய துக்கதினம் அறிவித்தும், மரியாதை வேட்டுக்கள் தீர்த்தும், சிலை எழுப்பிக் காகங்களின் எச்ச அர்ச்சனைக்கு இடம் தந்தும், முத்திரை வெளியிட்டு முகத்தில் குத்தி மதிப்பளிப்பதைத் தவிர்த்தும், வாழும் போதே வாழ்த்தும் செயல் திட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவரவேண்டியது சுசந்திகா விடயத்திலும் உணரப்பட்டிருக்கின்றது. தனது திருமண வாழ்வில் தோல்வி கண்டுள்ள சுசந்திகா, நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு அதிலும் தோல்வியைச் சந்தித்திருக்கிறார். தேசத்தில் மதிப்பு பெற்றிருக்கும் சுசந்திகாவின் அமைதியான வாழ்வுக்கு வழியேற்படுத்திக் கொடுப்பது அரசின் தற்போதைய டைமையாக இருக்கிறது. விளையாட்டுத்துறை அமைச்சுக்கும் சுசந்திகாவுக்கும் இடையில் நிலவும் பிணக்கை முடிவுக்குக் கொண்டுவந்து சுசந்திகாவின் அனுபவத்தையும், பயிற்சிமுறை நுட்பங்களையும் எதிர்காலத்தினருக்கும் பயன்படுத்திக்கொள்ள வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதும் தேசிய தேவையாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** முக்கியமான செயலை மறக்க நேரிடலாம் கவனம். குடும்பத்தினரின் ஆதரவு உண்டு. தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறுகளை சரி செய்வீர்கள். அளவான பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** சிலர் உங்களுக்கு அளித்த வாக்குறுதி மாறாக செயல்படலாம். பெருந்தன்மையுடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். வருமானம் சுமாராக இருக்கும்.

**மிதுனம்:** இலட்சிய நோக்குடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்தி மனம் மகிழ்வீர்கள்.

**கடகம்:** சிரமமான சூழலையும் திறம்பட சமாளிப்பீர்கள். உங்களின் சாமர்த்தியத்தை நண்பர் பாராட்டுவார். தொழில், வியாபாரம் செழித்துதாராள இலாபம்கிடைக்கும். குடும்பத் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** எதிலும் முன்யோசனையுடன் ஈடுபடுவது நல்லது. தொழில், வியாபாரம் வளர்ச்சிக்கு நண்பரின் உதவி கிடைக்கும். அளவான பணவரவு கிடைக்கும். குடும்பத்தில் திடீர் செலவு ஏற்படலாம்.

**கன்னி:** எவரிடமும் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். பணியில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் சராசரி அளவில் பணவரவு கிடைக்கும். வெளியூர் பயணத்தை பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது.

**துலாம்:** புதிய முயற்சி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி மறையும். அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். நிலுவைப்பணம் வசூலாகும். தாயின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** சுய தேவையை பூர்த்தி செய்ய முயல்வீர்கள். உறவினரின் செயலை குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபார வளர்ச்சியில் தாமதம் ஏற்படலாம். சுமாரான வருமானம் கிடைக்கும்.

**தனுசு:** தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு நன்மை காண்பீர்கள். அனைவரும் அன்பு பாராட்டும் சூழ்நிலை உருவாகும். தொழில், வியாபார வளர்ச்சியில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும்.

**மகரம்:** நண்பரின் செயலில் குறை காண வேண்டாம். ஆரோக்கியத்தில் அக்கறை கொள்வது அவசியம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். ஆதாயம் சராசரி அளவில் இருக்கும்.

**கும்பம்:** நீண்ட நாள் கனவு இனிதே நிறைவேறும். உறவினர், நண்பர் பெருமையுடன் வாழ்த்துவர். தொழில், வியாபாரம் செழிக்க அதிக அளவில் பணிபுரிவீர்கள். பணவரவு கூடும்.

**மீனம்:** பெருந்தன்மையுடன் பிறருக்கு விட்டுக் கொடுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த தடை விலகும். உற்பத்தி, விற்பனை செழித்து ஆதாயம் அதிகரிக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.



**ஒரே ஒரு எழுத்துப் பிழையினால் ஒரே நாளில் பத்து லட்சம் புத்தகம் விற்பனையாகியதாம்...**



How to change your life **என்பதற்கு பதிலாக,** How to change your wife **என்று அச்சடிக்கப்பட்டது தான், காரணமாம்...!**

Kousika @Bubbly_Girl_

பணம் உலகத்தைக் கவரும்
அழகு உள்ளத்தைக் கவரும்
வார்த்தைகள் மனிதரைக் கவரும்
இரக்கம் நிறைந்த ஒரு செய்கை
கடவுளையே கவரும்

## "மக்கள் ஸ்டார்" ஆனார் சிவகார்த்திகேயன்


தம்பி ராமையாவின் மகன் உமாபதி கதா நாயகனாக அறிமுகமாகும் படம் 'அதாகப்பட்டது மகாஜனங்களே'. இன்பசேகர் இயக்கியுள்ள இந்தப் படத்தின் இசை மற்றும் முன்னோட்ட வெளியீட்டு விழா சென்னையில் அண்மையில் நடைபெற்றது.

இமான் இசையில் உருவாகி உள்ள இப்படத்தின் இசை வெளியீட்டு விழாவில் சிவகார்த்திகேயன், கே.எஸ்.ரவிக்குமார், பொன்வண்ணன், பேரரசு, எஸ்.வி.சேகர், ஏ.எல்.விஜய், டி.இமான், பிரபு சாலமன், மனோபாலா, தம்பி ராமையா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். விழாவில் கலந்து கொண்ட தயாரிப்பாளர் பி.டி.செல்வகுமார் சிவகார்த்திகேயனை "இளம் சூப்பர் ஸ்டார்" என அழைத்தார். இயக்குநர் பேரரசு சிவகார்த்திகேயனை "மக்கள் ஸ்டார்" என்று பாராட்டினார்.

தந்தையும் மகளும் கோயிலுக்கு செல்கின்றனர்.
திடீரென மகள் அங்கே தூணில் உள்ள சிங்கத்தின் சிற்பத்தை பார்த்து ``அப்பா ஓடுங்கள் இல்லையென்றால் அந்த சிங்கம் நம்மை தின்றுவிடும்" என்றாள்
அதற்கு அப்பா மகளிடம் ``அது சிற்பம் தான் ஒன்றும் செய்யாது" என்றார்.
மகள் அப்பாவிடம் ``சிங்கத்தின் சிற்பம் நம்மை ஒன்றும் செய்யாது என்றால் கடவுளின் சிற்பம் மட்டும் நமக்கு என்ன செய்யும்" என்றாள்
தந்தையிடம் பதில் இல்லை....



**டேய் மாப்ள மரத்துமேல இருந்து பாத்தா பொறியியல் கல்லூரி பொண்ணுகளா தெரியிறாங்கடா...**



**கைய விட்டு பாரு மாப்ள மருத்துவ கல்லூரி பொண்ணுகளா தெரிவாங்க...**

**அம்மா தாயே! இதோ கிளம்பிட்டேன் ஸ்கூலுக்கு!**



**அதுக்குள்ள குச்சிய எடுத்துக்கிட்டு வந்துட்ட!**

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | 8 | | 4 | 7 | | |
| | | | | | 1 | | 6 | 3 |
| | | 1 | | | | | 8 | |
| | | 5 | | 3 | | | | |
| | | | | 5 | | 8 | | 9 |
| | | 7 | | | 8 | 5 | | |
| | | | 3 | | 2 | | 7 | |
| 9 | | | | | | | | 4 |
| | 2 | | | 6 | | | | |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 20[illegible] இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 2 | 6 | 5 | 7 | 3 | 4 | 8 |
| 8 | 3 | 6 | 4 | 9 | 2 | 5 | 7 | 1 |
| 7 | 5 | 4 | 3 | 1 | 8 | 9 | 2 | 6 |
| 6 | 1 | 5 | 8 | 4 | 9 | 7 | 3 | 2 |
| 2 | 4 | 3 | 7 | 6 | 5 | 1 | 8 | 9 |
| 9 | 7 | 8 | 2 | 3 | 1 | 4 | 6 | 5 |
| 5 | 6 | 7 | 9 | 8 | 4 | 2 | 1 | 3 |
| 4 | 8 | 1 | 5 | 2 | 3 | 6 | 9 | 7 |
| 3 | 2 | 9 | 1 | 7 | 6 | 8 | 5 | 4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 50 | 80 | 60 |
| கத்தரி | 140 | 200 | 140-150 | 220 | 180 |
| கரட் | 260 | 300 | 300 | 350 | 320 |
| மரவள்ளி | 60 | 80 | 45-50 | 60 | 80 |
| பயிற்றை | 140 | 120 | 90-100 | 120 | 180 |
| பாகல் | 180 | 200 | 160 | 180 | 200 |
| கருணைக்கிழங்கு | 130 | | 100 | 120 | 90-100 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 80 | 100 | 80-90 |
| சி.வெங்காயம் | 250 | 350 | 240-260 | 320 | 160-260 |
| பூசணி | 60 | 80 | 60-70 | 90 | 80 |
| தக்காளி | 140 | 200 | 100 | 150 | 180 |
| வாழைக்காய் | 60 | 80 | 30-40 | 60 | 60 |
| கீரை | 30 | 40 | 15-25 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 15 | 30 | 20 |
| பச்சை மிளகாய் | 350 | 600 | 200350 | 400 | 450 |
| புடோல் | 120 | 120 | 70 | 100 | 100 |
| கோவா | 140 | 200 | 160 | 240 | 180 |
| வெண்டி | 120 | 120 | 80 | 100 | 100 |
| போஞ்சி | 200 | 280 | 220 | 240 | 200 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 | 120 | 140 |
| தேங்காய் | 70 | 65 | 35-55 | 50-60 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 110 | 120 |
| தேசிக்காய் | 80 | 80 | 60 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10-15 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | | | 160 | 320 |
| இராசவள்ளி | 200 | - | | 300 | 250 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 70 | 100 | 120 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 800 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 300 | 500 | 400 |
| கணவாய் | 700 | 700 | 800 | 1000 |
| பாரை | 600 | 700 | 700 | 1000 |
| சுறா | 500 | 700 | 800 | 1000 |
| சீலா | 400 | 500 | 600 | 500 |
| விளை | 500 | 500 | 600 | 600 |
| முரல் | 400 | 500 | 500 | – |
| கும்பிளா | 400 | 600 | 500 | – |
| கிளாக்கன் | 800 | – | 500 | 600 |
| ஒரா | 300 | 400 | 600 | 500 |
| திரளி | 250 | 300 | 200 | 300 |
| நகரை | 300 | 200 | 400 | 300 |
| சூடை | 200 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 100 | 300 | 300 | 300 |
| திருக்கை | 250 | – | 400 | 400 |
| மதனம் | 250 | 150 | 300 | – |
| கொய் | 150 | 70 | 80 | 80 |
| பாலை | 250 | 250 | 600 | 500 |
| வாழை | 200 | – | 500 | – |



# கண் பார்வையைப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டியவைகள்





இன்றைய இளம் தலைமுறையினர் பலர் பார்வைக் குறைபாடு காரணமாக கண்ணுக்கு கண்ணாடி அணிந்து கொள்கின்றனர். பெரியவர்களோ கண் பர்வை தெளிவடைய ன் அறுவை சிகிச்சைகளை செய்துகொள்கின்றனர்.

பார்வையில் ஏதாவது சிக்கல் ஏற்படும் போது மட்டும் தான், கண்ணைப் பற்றி நாம் அக்கறை கொள்கிறோம். கோளாறு ஏற்படுவதைத் தவிர்க்க, சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கலாம்.

★ கண்களை இமைத்தல்: கணினி பயன்பாட்டாளர்கள் பெரும்பாலும் கண்களை தொடர்ந்து இமைப்பது இல்லை. கண்களை சீரான முறையில் இமைத்து வந்தாலே நல்ல புத்துணர்ச்சி ஏற்படும்.

★ கண்களில் அதிக அழுத்தமோ, எரிச்சலோ உணர்ந்தால், உடனே நன்கு தண்ணீர் ஊற்றி கண்களை கழுவுங்கள். பின் 5 நிமிடம் கண்களுக்கு ஓய்வளியுங்கள். இது, கண்களுக்கு ஏற்ப அழுத்தத்தை குறைக்க உதவும்.

★ அதிகாலை நடைப்பயிற்சி: அதிகாலை சூரிய ஒளி மிகவும் நல்லது, புத்துணர்ச்சி அளிக்க கூடியது. இது கண்களை அழுத்தமின்றி, இலகுவாக உணர உதவும்.

★ கண்ணுக்கு அதிகம் வேலை கொடுக்கும் சமயங்களில், ஒவ்வொரு மணி நேரத்திற்கும், இடையில், ஐந்து நிமிடம், உள்ளங்கையால், இரு கண்ணையும் மூடியபடி அமர்ந்து, கண்ணுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும்.

★ வெயிலில் அதிக நேரம் நின்றிருந்த பிறகு, உடனே கண்களைக் கழுவக் கூடாது. நீங்கள் நிற்கும் இடத்தின் வெப்ப நிலைக்கேற்ப, உடல் ஆசுவாசப்பட்ட பிறகே, கண்ணையும், முகத்தையும், தண்ணீரால் கழுவலாம்.

★ தூரத்தில் இருக்கும் பொருள்களைப் பார்க்கும் பொருட்டு, அதிக நேரம் அதை உற்றுப் பார்க்காதீர்கள். கண்களுக்குத் தேவையான அளவு, கண் சிமிட்டுவது அவசியம்.

★ குடல் சுத்தமாக இருந்தால், கண் பார்வையும் தெளிவாக இருக்கும். படபடப்பு, மன உளைச்சல், சோகம், கோபம், கவலை ஆகியவை, கண்ணையும் பதம் பார்க்கக் கூடியவை. எனவே, இவற்றைத் தவிர்க்க வேண்டும்.

★ கரட், முட்டைகோஸ் ஆகியவற்றை, உணவில் அதிகம் சேர்த்துக் கொண்டால், கண் பார்வை, தெளிவாக இருக்கும்.

★ இரு உள்ளங்கைகளைக் கொண்டு இதமாக, மென்மையாக உங்கள் கண்களை தேய்க்கவும். லேசாக சூடு பரவும் வரை இவ்வாறு செய்த பிறகு, கண்களுக்கு ஓய்வளியுங்கள். வெளிச்சம் குறைவான இடங்களில் இவ்வாறு பயிற்சி செய்தல் நல்லது.



பெண்களுக்கான பஞ்சாபி வகைகள் தற்போது புதிது புதிதாக சந்தைக்கு வருகின்றன. தற்போது மேலும் சில பஞ்சாபிகள் சந்தைக்கு வந்துள்ளன. இவை 5 ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

இது புதுசு



# பித்தவெடிப்பை மாற்ற இயற்கை தரும் மருந்து

(நேற்றைய 24 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாசிக்காய், கடுக்காய் பொடி பண்ணி விளக்கெண்ணெயில் சரிசமமாகக் கலந்து தடவினால் குணமாகும்.

பாதங்களில் வெடிப்பு ஏற்பட்டால் அதில் இரவு வேப்பெண்ணையைத் தடவ வேண்டும். காலையில் நார்த்தங்காயில் ஒரு துண்டு சாப்பிட்டு நீராகாரம் சாப்பிட வேண்டும்.

மஞ்சள், கடுக்காய், எள், உப்பு, ஆகியவைகளைச சம அளவு சேர்த்து இடித்துப் பொடி செய்து கொண்டு , வெள்ளாட்டின் சிறுநீர் கிடைத்தால் அதனுடன் கலந்து கொண்டு இரவில் படுக்கும் போது வெடிப்பின் மீது தடவிவர வெடிப்பு போய்விடும்.

விளக்கெண்ணெயில் கொஞ்சம் சுண்ணாம்பைக் கலந்து பித்த வெடிப்புகளில் போட்டு வந்தால் பித்த வெடிப்பு விரைவில் குணமாகும்.

அரச மரத்தின் அடிமரத்தைக் கீறினால் பால் வடியும். அந்தப் பாலை இந்த வெடிப்புகளில் தடவி வர, நாளடைவில் மறைந்து விடும்.

மருதோன்றி இலைகளைப் பசுமையாகப் பறித்து எலுமிச்சம்பழச் சாறு விட்டு அரைத்து அந்த விழுதைப் [illegible] பித்த வெடிப்பு, காயத்தால் [illegible] குணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா வழியில் அல்ல...

(26ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓராயிரம் தடவை துடித்துச் சிலிர்க்கும் விழிச் சிறகுகள். பார்ப்பார்கள் எல்லாம் தன்னையே பார்ப்பது போன்ற பிரமை. காரணமில்லாமல் சிரித்து கண்களைச் கழற்றி எறிந்து கலைத்துக் கலைத்துப் பார்க்கும் சூழல்.

அப்போது அறிமுகமானவன்தான் நந்தன். அவளுடைய பாடசாலையில் படிப்பித்துக் கொண்டிருந்தான். எனினும் இரண்டு வருட சேவைக்காலத்தை முடித்திருந்தான்.

சுஜந்தாவின் ஒழுங்கை முகப்பில்தான் அவன் வீடு. அவன் வீடு தாண்டித்தான் சுஜந்தா வீடு போக வேண்டும். முன்பு எப்போதாவது அவனைக் காண்பதுண்டு ஆனால் அப்போது ஏற்பட்ட மாற்றமும் பரபரப்பும் இப்போது ஏற்படவில்லை.

பற்றிக் கொள்ளும் பெருநெருப்பாக இருவரும் பழக ஆரம்பித்தனர். கிளையில் பரவிய நெருப்பு முழு மரத்தையும் காவுகொள்வதைப் போல சுஜந்தவும் நந்தனும் காதலர்கள் ஆனார்கள்.

ஒரே ஊர், ஒரே ஒழுங்கை, ஒரே ஆட்கள் என்பதால் அம்மா எத்தனை கோட்பாடுகளை வைத்திருந்தாலும் வெற்றிகொள்ள முடியும் என நினைத்து அதுபற்றி கதைப்பதற்காகக் காத்திருந்தார்கள்.

எனினும் ஏ.எல். முடித்துவிட்டு வேலை தேடிக்கொண்டிருந்த தம்பி, விடயம் தெரிந்து அம்மாவுக்குக் கொளுத்திப்போட்டான்.

'என்னடி' என்றபடி பாய்ந்த அம்மா அவளைக் கதைக்க விடவில்லை.

'எங்கட வசதி என்னெண்டு உனக்குத் தெரியுமே. இந்த வீடு, வளவு, தோட்டக்காணி எண்டு எங்கடை தகுதிக்கு அவன் சரிவருவானே. நல்ல வசதியான இடத்திலைதான் உனக்கு மாப்பிள்ளை பார்க்கிறன்'

அவளுக்கு அம்மாவுடன் எதிர்வாதம் புரியும் வல்லமை இருக்கவில்லை. இலகுகாற்றில் தவழ்ந்து பறக்கும் வண்ணத்துப் பறவையின் சிறுசேட்டையாகப் பறக்கும் வாழ்க்கையைக் கற்பனை பண்ணிக் கொண்டிருந்த அவளுக்கு அம்மாவின் முன்னால் போராட முடியவில்லை.

அம்மாவை எவராலும் எதிர்கொள்ள முடியாது. அம்மாவின் குடும்பம் வசதியான குடும்பம் பரம்பரைக் காணிக்காரர். அந்தப் பணத் திமிர் காரணமாகவும் அம்மாவின் வாத்தி வேலை காரணமாகவும் அம்மாவின் கலியயானமும் பிந்திப்போனது. முப்பத்தியெட்டு வயதுக்குப் பின்னர்தான் கலியாணம் நடந்தது. அப்பாவை விருப்பமில்லாமல்தான் கலியாணம் செய்ததரகக் கேள்வி.

சிறுவயது முதலே அப்பாவும் அம்மாவும் சந்தோசமாக இருந்ததை சுஜந்தா பார்த்ததில்லை. மனவிரக்தியுடன் தவித்த அப்பா குடிக்கப் பழகி – முழுக்குடிகாரனாகி – தம்பி பிறந்த சில காலத்தில் அம்மாவுக்குப் பிரச்சினையில்லாமல் ஒரு நாள் போய்விட்டார். பொசுக்கென்று.

அப்பா இல்லாத உலகம். சுஜந்தாவுக்கு புதினமாக இருக்கவில்லை. வீட்டில் எல்லாமே அம்மாவின் அரசாட்சியில் நடைபெற்றதால் அப்பா என்கிற பிரகதியின் தேவைப்பாடு உணரப்படவேயில்லை.

காதலித்தவனைக் கரம்பற்ற குறுக்கே விழுந்த அம்மா பிறகு அவளுக்குக் கலியாணம் பேசத் தொடங்கினாள். ஆனால் சுஜந்தா அவை எவற்றுக்குமே சம்மதம் தெரிவிக்கவில்லை.

அம்மா கொண்டுவரும் கலியாணங்களுக்கு மறுப்புச் சொல்வதில் சொல்லொண்ணாத இனிமை இருப்பதாக அவளுக்குப் பட்டது. நாளுக்கு நாளாக அந்த இனிமை அதிகரித்துக் கொண்டே போனது.

பதிலுக்கு அம்மா கத்திக் குளறுவதும், கண்டபடி பேசுவதும் ஒரு பகிடிக்குரிய விடயமாகப் பட்டது. கத்திக் கத்தி அம்மாவின் தோற்றமும் செயற்பாடும் ஒரு விநோதமான மனிதப் பிறவியாக அவளை மாற்றியது. பாடசாலை முடித்து வீட்டுக்கு வந்திருந்தபோது, தம்பி வீட்டில் இருந்தான். கூடவே அவன் மனைவி. நான்கு வயது, இரண்டு வயதுப் பிள்ளைகள்.

அவள் ஸ்கூட்டியை நிறுத்திவிட்டு வீட்டுக்குள் நுழைந்தாள். முன் விறாந்தையில் எல்லோரும் இருந்தார்கள். தம்பி எப்போதாவது தான் வீட்டுக்கு வருவான். அதுவும் சுஜந்தா வீட்டில் இல்லாத நேரங்களில் மாத்திரம்.

அக்கா இருக்க தான் கலியாணம் செய்து பிள்ளைகளுடன் குடும்பமாக வாழ்வது மனத்தளவில் சங்கடங்களை உண்டுபண்ணியதுவோ என்னவோ?

சுஜந்தா எதுவுமே பேசாமல் உள்ளே புகத் தலைப்பட்டாள்.

'நில்லடி' என்றாள் அம்மா. காலையில் அவள் ஏந்திய தர்க்க காவடியை இன்னமும் இறக்கவில்லைப் போலும்.

'என்ன' என்றாள் கஜந்தா. அம்மாவின் வேகத்துக்கு இணையாக

"கிழடுவத்திப் போனாய் தலையும் நரைக்கத் தொடங்கிப் போச்சுது இப்பிடியே இருந்து என்ன செய்யப் போறாய்?'

கிளித்தட்டு மறித்தாற்போல அம்மா அவளை மறித்துக் கேட்டாள்.

கஜந்தா பதில் சொல்லவில்லை.

'சொல்லடி நாயே.. என்னடி சொல்லப் போறாய். வெளியில வெளிக்கிட்டா கேட்கிற ஆட்களுக்குப் பதில் சொல்லேலாமக் கிடக்குது'

'அதுதானே சொன்னனான் எனக்குக் கலியாணம் வேண்டாம்' கோபமும் கண்ணீரும் வெளிப்பட சுஜந்தா சொன்னாள்.

'பத்து வருசத்துக்கு முதல் நீ விரும்பினவனைச் செய்ய விடேல்லை எண்ட கோபத்தில நீ இப்பவும் என்னை கஞ்சி வடிச்சுக் கொண்டு இருக்கிறாய். நீ நல்லாய் இருப்பியே' அம்மா புலம்பத் தொடங்கினாள்.

இதற்கு மேலும் பொறுமையாக இருக்க சுஜந்தாவால் முடியவில்லை.

'அம்மா...! அப்பாவை நீங்கள் விருப்பமில்லாமல் தான் கலியாணம் செய்யதனீங்கள். அதால அந்த மனுசன் நிம்மதியாய், சந்தோசமாய் வாழ முடியாமல் குடிச்சுக் குடிச்சு வாழ்க்கையைத் துலைச்சு செத்துப் போச்சுது. நானும் அப்பிடி ஒரு விருப்பமில்லாத மாப்பிள்ளைளை கலியாணம் செய்து அவன்ர வாழ்க்கையை நாசமாக்க விரும்பேல்லை' தரைக்கும் வானத்துக்கும் இடையே போல சுஜந்தா சொல்ல அம்மா அவளை அண்ணாந்து பார்த்தாள்.

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 475

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | ■ | 11 | | |
| | ■ | 12 | | 13 | | ■ | |
| ■ | 14 | | | | ■ | 15 | ■ |
| 16 | | ■ | | ■ | 17 | | 18 |
| 19 | | 20 | ■ | 21 | | | |
| 22 | | | | | | ■ | |

**அனுப்புபவர் பெயர்:..............................................**

**முழுமையான தபால் விலாசம்: ..............................**

**..............................................................**

**கையொப்பம்:...................................................**

### இடமிருந்து வலம்

1. கட்டுரை
4. களைப்பால் வருவது
7. பழத்தைப் பிழிந்தெடுப்பது
8. திருதராட்டினனின் மனைவி
9. கணவன் -மனைவி
11. நீர் அள்ளப் பயன்படுத்தும் கயிறு
12. வர வேண்டிய நிலுவை
14. மனிதர்கள் இதைத் தேடி அலைவதுண்டு
16. அரிசியின் வெளிக் கோது
17. தோல் வாத்தியம்
19. பண்டமாற்றில் இடைநின்று பொருத்தும் தொழில்
21. விரிவான
22. நெருக்கடி

### மேலிருந்து கீழ்

1. நோன்பு
2. இரப்பு
3. இடம் பெறும் ஒரு நிகழ்வு
4. ஒரு பாட்டின் முடிவை அடுத்த பாட்டின் ஆரம்பமாகக் கொள்ளும் திரட்டு
5. பரபரப்பாகப் பேசப்பட்ட ஒரு நாட்டின் தலைவர்
6. இந்திய மாநிலங்களில் ஒன்று
10. திருமணமான பெண்ணைக் குறிப்பிடும் அடையாளச் சொல்
13. அறிவு
14. குனிந்த நிலையில் இருந்து மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புதல்
15. வேறுபாட்டு நிலை
16. ஒத்தாசை
17. வதனம்
18. மயானம்
20. இன
21. உள்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 473 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) அந்தாதி (4) கதவு (6) வனவாசம் (7) சாமரம் (10) மையம் (11)அகராதி (12)அரம் (13)ஏகவாரிசு (14)சகா (15)கல் (16)சகல (17) மனத்திடம்

### மேலிருந்து கீழ்

(1)அஞ்சாமை (2)தாவரம் (3) தினம் (4)கசரோகம் (5)தம் (8)மயங்கல் (9)எதிர்காலம் (11)அரசு (12)அரியன (13)ஏகல் (14)சகட (16)சதி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 473 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
திலகவதி இராமசாமி,
வளலாய்,
அச்சுவேலி.

**2 ஆம் பரிசு**
மயில்வாகனம் செல்வராசா,
கரப்புக்குத்தி,
கனகராயன்குளம்.

**3 ஆம் பரிசு**
சிவகுரு தர்மகுலராசா,
ஏழாலை மத்தி,
ஏழாலை.

**4 ஆம் பரிசு**
ஞா. இம்மனுவல்,
இல. 85/4 கார்மல் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
நா. மோகனேஸ்வரன்,
இல. 8/1 தாளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

சஞ்ஜீவ் அபினயன்,
மாவடி, அல்வாய் வடமேற்கு,
அல்வாய்.

சி. கிருஷ்ணவேணி,
இல. 115/1. ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.

விஜிதன் - ஸ்ரீதேவி,
6ஆம் வட்டாரம்,
குமுளமுனை,
முள்ளியவளை.

சொற்சிலம்பம் போட்டி இல. 475 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (21.06.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல. 475இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 25.06.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 473 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இந்தவாரம் உங்களுக்கு எப்படி?

**11.06.2017 தொடக்கம் 17.06.2017 வரை**

## மேடம்

கேது, சுக்கிரனால் அதிக நன்மை உண்டா கும். பேச்சு, செயலில் உற்சாகம் வெளிப்படும். குடும்பத்தினரின் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள். குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் நிலைக்கும். பிள் ளைகள் அதிருப்தி எண்ணங்களுடன் செயற்படுவர். வழக்கு, விவகாரத்தில் சுமூகத்தீர்வு கிடைக்கும். வெளியூர் பயணங்களில் திடீர் மாற்றம் ஏற்படலாம். சீரான ஓய்வு கொள்வது உடல்நல னுக்கு நல்லது. மனைவி வழி உறவினர்களின் உதவி கிடைக் கும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் படிப் படியாக உயரும். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்புமூலம் வருமானம் காண்பர். பெண்கள் விரும்பிய பொருள் வாங்குவர். மாணவர் கள் படிப்பில் நல்ல தேர்ச்சி பெறுவர்.

## இடபம்

குரு, சுக்கிரன், சந்திரன் நற்பலன் தருவர். முக்கியமான பணிகள் விரைந்து நிறைவேற் றுவீர்கள். வீடு, வாகனத்தில் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். புத்திரர் பெற்றோரின் சொல்லை ஏற்று செயற்படுவர். பூர்வீகச் சொத்தில் திடீர் வருமானம் கிடைக் கும். குடும்பத்துடன் சுற்றுலா சென்று வரத் திட்டமிடுவீர்கள். பலரும் வியக்கும் அளவில் வாழ்க்கைத் தரம் உயரும். மனைவி விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள். தொழில், வியா பார வளர்ச்சியால் லாபம் கூடும். பணியாளர்கள் நிர்வா கத்தின் நம்பிக்கைக்கு உரியவராவர். பெண்கள் மகிழ்ச்சிகரமான வாழ்வு நடத்துவர். மாணவர் கள் அக்கறையுடன் படிப்பர்.

## கடகம்

சூரியன், புதன், சந்திரன் அனுகூலமான பலன் தருவர். நண்பர் மற்றும் உறவினர்களால் உதவி கிடைக்கும். மனதில் துணிச்சல் நிலைத்தி ருக்கும். திட்டமிட்ட பணிகள் எளிதாக நிறைவேறும். உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். வாகனப்பயணத்தில் நிதானம் பின்பற்றுவது நல்லது. புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். உறவுகள் மத்தியில் செல்வாக்கு கூடும். மனைவி உங்கள் கருத்துக்கு முக்கியத்துவம் தருவார். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை எளிதாகக் கிடைக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் வெளியிடம் சுற்று வதை குறைக்கவும்.

## மிதுனம்

சுக்கிரன், ராகு, சனீஸ்வரர் அனுகூல அமர் வில் உள்ளனர். இனிமையான பேச்சால் பிறரைக் கவர்வீர்கள். நீண்ட நாள் எதிர்பார்ப்பு தற்போது நிறை வேறும். குடும்பத்தேவை தாராள செலவில் பூர்த்தியாகும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரரின் செயற்பாடு மனதிற்கு மகிழ்ச்சி தரும். சேமிக்கும் விதத்தில் கையில் பணம் புழங்கும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் செயற்பாடு வளர்ச்சிக்குத் துணை நிற்கும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளவும். அரசு உதவி கிடைக்க தாமத மாகலாம். தொழிலில் வளர்ச்சிக்கான நவீன மாற் றம் செய்வீர்கள். லாபம் பன்மடங்கு உயரும். பணி யாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

## சிங்கம்

பெரும்பான்மைக் கிரகங்கள் நற்பலன் தரக் காத்திருக்கின்றன. பேச்சில் வசீகரம் அதிகரிக் கும். உறவினர்களிடம் கூடுதல் அன்பு, பாசம் வளரும். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை உண்டாகும். புத்திரர் கள் நற்செயலில் ஈடுபட்டுப் பெருமை தேடித் தருவர். நண்ப ருக்குக் கடனாக கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். மனைவி யின் ஆலோசனை வளர்ச்சிக்கு துணைநிற்கும். தொழில் வியாபாரம் செழித்து லாபம் பெருகும். குடும்பத் தேவைகள் தாராள செலவில் நிறைவேறும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பெண்கள் உறவி னர்களின் இல்லத்தில் சுபநிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள் படிப்பில் சிறப்பி டம் பெறுவர்.

## கன்னி

சுக்கிரன், சனீஸ்வரர், கேது அளப்பரிய நன்மை தருவர். புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். நீண்ட காலத் திட்டம் நிறைவேறும். அன்புக்குரியவர்களின் ஆதரவால் நன்மை காண்பீர்கள். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். வாகன பயணத்தால் இனிய அனுபவம் கிடைக்கும். புத்திரர் பெற்றோரின் வழிகாட்டுதலை ஏற்று செயற்படுவர். பூர்வீகச் சொத்தில் திடீர் வருமானம் கிடைக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி குடும்பத்தின் ஒற்றுமையை பாதுகாத்திடுவர். தொழில், வியாபாரத்தில் அதிக லபாம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப்பெறுவர். பெண்கள் நகை, புத்தாடை வாங்குவர். மாணவர்கள் படிப்புடன் விளையாட்டிலும் ஈடுபடுவர்.

## துலாம்

ராகு, புதன், சந்திரனால் நன்மை ஏற்படும். கடந்த கால நற்செயலுக்கான பலன் தற்போது கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்கள் சில விடயங்களில் பிடிவாதமுடன் செயற்படுவர். குடும்பத்தில் ஒற்றுமையை பாதுகாக்கவும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மனைவியின் செயலால் குளறுபடி உருவாகலாம். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பை தவறாமல் பயன்படுத்தவும். இலாபம் ஓரளவு இருக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் விவாதத்தில் செய்வதை தவிர்க்கவும். பெண்கள் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பர். மாணவர்களுக்குப் படிப்பில் விடாமுயற்சி தேவை.

## தனுசு

சூரியன், புதன், கேது நற்பலன்களை வாரி வழங்கு வர். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். திட்டமிட்ட பணிகள் ஓரளவு நிறைவேறும். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை காண்பீர்கள். புத்திரர்களுக்குப் படிப்பு, வேலைவாய்ப்பில் கால தாமதம் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மனைவியின் சொல்லும், செயலும் வளர்ச்சிக்குத் துணை நிற்கும். குடும்பத்தில் நிம்மதி நிலைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் கலைமைச்சம் நிறைந்த பொருள்கள் வாங்குவர். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பில் ஈடுபடுவர்.

## விருச்சிகம்

குரு, சுக்கிரன், சந்திரன் நன்மை வழங் குவர். எதிர்பார்த்த நற்செய்தி தாமதாக வந்து சேரும். உடன்பிறந்தவர்களின் செயலை குறை சொல்ல வேண்டாம். வாகனத்தில் மிதவே கம் பின்பற்றவும். புத்திரர் உங்களின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடப்பர். எதிரிகளின் தொல்லை குறையும். மனைவி மதிநுட்பத்தால் குடும்ப நலன் பேணிக் காத்திடுவார். தொழில், வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும். பணி யாளர்களுக்கு பணிச்சுமையைத் திறம்பட சமாளிப்பர். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ள வும். பெண்களுக்கு செலவில் சிக்கனம் தேவை. மாணவர்கள் படிப்பிற்கு கூடுதல் நேரம் ஒதுக்கவும்.

## மகரம்

குரு, சனீஸ்வரர், சுக்கிரன் அளப்பரிய பலன் வழங்குவர். பேச்சு, செயலில் நேர்மை நிறைந்திருக்கும். விலகிச் சென்ற உறவினரும் அன்பு பாராட்டுவர். தாயின் அன்பும், ஆசியும் கிடைக்கப் பெறுவீர்கள். பூர்வீக சொத்தில் தேவையற்ற செலவு ஏற்படலாம். புத்திரர் அறிவுக்கூர்மையு டன் செயல்பட்டு பெற்றோருக்குப் பெருமை சேர்ப்பர். மனைவி யின் கருத்தில் உள்ள நியாயத்தை ஏற்றுக் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி வளர்ச்சி உண்டாகும். பணியாளர்களுக்கு அதிர்ஷ்டவசமாக சலுகைகள் கிடைக்கும். பெண்கள் உறவினர்க ளின் குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள் ஆர்வமுடன் படித்து முன்னேறுவர்.

## மீனம்

சுக்கிரன், சூரியன், ராகு, குருவால் வியத் தகு வளர்ச்சி உண்டாகும். கையில் பணப்பு ழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். குடும்பத்தேவை தாராள பணச் செலவில் நிறைவேறும். புத்திரர் கல்வி, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். ஆரோக்கியம் சீர் பெறும். கடந்த கால உழைப்பின் பயன் கிடைக்கப் பெறுவீர்கள். மனைவி, உறவினர் களை உபசரித்து குடும்பத்திற்கு பெருமை சேர்ப்பார். தொழிலில் அபரிமிதமான வளர்ச்சியும், பணவரவும் உண்டாகும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் விளங் குவர். பெண்கள் தாய் வீட்டினரின் உதவியை கேட்டுப் பெறுவர். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

## கும்பம்

சுக்கிரன், புதன், சந்திரனால் நன்மை உண்டாகும். புதிய முயற்சியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பொது விடயங்களில் ஆர்வம் காட்டுவீர் கள். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை உண்டாகும். புத்திரர் விரும்பிய பொருள் கேட்டு பிடிவாதம் செய்வர். ஆரோக் கியம் சீராக இருக்கும். குடும்ப நலன் மேம்பட மனைவி உதவியாக இருப்பார். தொழில், வியாபாரத்தில் நவீன மாற்றம் செய்வீர்கள். லாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் நிர்வாகத்தின் நன்மதிப்பைப் பெறுவர். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். மாணவர்களுக்கு நல்ல தரம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதிப்பதற்கு வயது ஒரு தடையா?



இயற்பியல் படிக்கும் கனவுடன் சிக்காக்கோ பல்கலைக்கழகத்துக்கு, முன்னாள் இராணுவ வீரரான ஜோன் குடினாப் 1946இல் சென்றபோது அவருக்கு வயது 25. அப்போது, 'இயற்பியல் துறையில் சாதிப்பதற்கான வயதையெல்லாம் தாண்டிவிட்டீர்கள்' என்று அவரிடம் ஒரு பேராசிரியர் அலட்சியமாகச் சொன்னார்.

சமீபத்தில் அந்தச் சம்பவத்தை என்னிடம் சொல்லிவிட்டு உரக்கச் சிரித்தார் முனைவர் குடினாப். அந்தப் பேராசிரியரின் 'அறிவுரையை'ப் புறக்கணித்த குடினாபுக்கு இன்றைக்கு வயது 94. தனது அற்புதமான படைப்பாற்றலுடன் தொழில்நுட்பத் துறையில் பெரும் பரபரப்பை உருவாக்கியவர் அவர். புதிய வகை மின்கலம் ஒன்றுக்கான காப்புரிமை கோரி அவரும், டெக்சாஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அவரது குழுவினரும் விண்ணப்பித்தி ருக்கிறார்கள். சொன்னதுபோல் இது வேலை செய்தால் மிக மலிவான, எடை குறைந்த பாதுகாப்பான மின்கலமாக அது இருக்கும். மின்சக்தியில் இயங்கும் கார்களில் ஒரு புரட்சியையே ஏற்படுத்தும். பெட்ரோல் உள்ளிட்ட எரிபொருள்களில் இயங்கும் கார்களுக்கு முடிவு கட்டும் என்று உறுதியளித்திருக்கிறார்கள். 1980இல் தனது 57வது வயதில், மின்சாரத்தைச் சிறிய அளவில் அடக்கும் லிதியம் அயன் உட்புகுத்தப்பட்ட மின்கலத்தை அவர் கண்டறிந்தார்.

வயது ஏற ஏற படைப்பாற்றல் குறையும் என்று நாம் கருதிக்கொள்கிறோம். ஆனால், வயதான பின்னர் சிலரின் படைப்பாற்றல் மேலும் அதிகரிக்கின்றது என்பதை உணர்த்துகிறது டாக்டர் குடினாப்பின் கதை. துரதிஷ்டவசமாக, அதுபோன்ற புத்திஜீவிகள் பெரிய அளவிலான புறக்கணிப்பை எதிர்கொள்ள நேர்வதுதான் துயரம்.

**வயது ஒரு காரணியா?**

2007இல் ஸ்ரான்போர்டில் நடந்த நிகழ்ச்சியில் பேசிய முகப்புத்தக நிறுவுநர் மார்க் ஸுக்கர்பெர்க், 'இளைஞர்கள் சுட்டிகையானவர்கள்' என்றார். அப்போது அவருக்கு வயது 22. தன்னிடம் ஒரே ஒரு படுக்கைதான் இருக்கிறது என்று சொன்ன அவர், இளம் வயதுக்கும் படைப்பு சக்திக்கும் இடையில் பொருத்தமான உறவு இருக்கின்றது எனக் கூறினார் என்று தொழில்நுட்ப இணையதளமான வெஞ்சர்பீட் செய்தியாளர் குறிப்பிடுகிறார். மார்க் ஸுக்கர்பெர்கின் தர்க்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. அதற்காக அவர் பின்னர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டது வேறு விஷயம். ஆனால், அவரது வார்த்தைகளின் அர்த்தம் இதுதான்: நடுத்தர வயதுக்காரர்கள் சோம்பலூட்டும் பொருள்களைப் பயன்படுத்துபவர்கள். தேங்கிப்போன சிந்தனைகளைக் கொண்டவர்கள்.

மார்க்கின் அந்தப் பேச்சுக்குப் பின்னர், இளைஞர் சக்தியை வழிபடும் பழக்கம் அமெரிக்கத் தொழில்நுட்பத் துறையை ஒரு நோய்போலப் பற்றியிருக்கிறது. சமீபத்தில், {ஷப்னாம் பெனர்ஜி எனும் 12 வயதுக் கண்டுபிடிப்பாளர் ஒரு நிறுவனத்தைத் தொடங்குவதற்கு 'இன்ரெல்' நிறுவனம் முதலீடு அளித்து உதவியிருக்கிறது. இந்தச் சூழலில், நடுத்தர வயதுக்காரர்கள் கற்பனை எல்லைகளைக் கடந்து வந்துவிட்டவர்கள் என்றும் புத்தாக்கக் கருத்துருவாக்கம் எல்லாம் இளம் வயதினருக்கே சொந்தம் என்றும் நடுத்தர வயதினரே நம்பும் நிலைமை உருவாகிவிட்டது.

ஆனால், நடுத்தர வயதுக்குப் பின்னர், புத்துணர்வுடன் செயலாற்றுவது ஒன்றும் வித்தியாசமான விடயமல்ல என்பதற்கு ஏராளமான சான்றுகள் உண்டு. கண்டுபிடிப்பாளர்கள் தங்கள் 40களில் செயல்பாடுகளில் உச்சத்தை அடைகிறார்கள் என்றும் தங்கள் கடைசிப் பாதி வயதுகளில் மிகுந்த படைப்பாற்றலுடன் இருக்க முனைகிறார்கள் என்றும் 2016இல் வெளியான தகவல் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

**காத்திருக்கும் விருது**

1980கள் முதல், இயற்பியலுக்காக நோபல் விருது பெற்றவர்கள் தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வில், அவர்கள் தங்கள் கண்டுபிடிப்புகளை நிகழ்த்திய சராசரி வயது 50 என்று தெரியவந்திருக்கிறது. நோபல் பரிசு வெல்பவர்களின் படைப்பூக்கத்தின் உச்சம் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது என்றும் அந்த ஆய்வு முடிவு தெரிவிக்கின்றது. இப்போது குடினாப்புக்கு நோபல் பரிசு கிடைத்தால், அவர்தான் அந்த விருதைப் பெறும் மிக வயதான நபராக இருப்பார்.

அவருடன் பேசப் பேச, அவரது வயதுக்கும் அறிவுத் திறமைக்கும் நேரடித் தொடர்பு இருக்குமோ எனும் சந்தேகம் எழும். எரிசக்தி, மின்சாரப் பிரச்சினைகள் தொடர்பாக அதிக ஆண்டுகளாகப் பேசிவரும் ஒரே நபர் அவராகத்தான் இருப்பார்.

இளம் வயதில் பெற்றோலிய யுகத்தின் தொடக்க நாட்களைப் பார்த்த அவர், பண்ணை வீடு ஒன்றில் மண்ணெண்ணெய் அடுப்பில் சமைத்து வாழ்ந்தவர். கார் தயாரிப்பில் முன்னோடியான ஹென்றி போர்ட் தயாரித்த ஆரம்பகால கார்களில் சிறுவனாக இருந்தபோது பயணித்திருக்கின்றார். 'என் குடும்பத்தினர் வைத்திருந்த முதல் கார் 'மொடல்ஏ' வகை கார்' என்று என்னிடம் சொன்னார். ஈயஅமில மின்கலம் பொருத்தப்பட்ட கார் அது.

1970களில் நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு, சிறிய அளவிலான சாதனத்தில் மின்சாரத்தைச் சேமிப்பது எப்படி என்று அவரைச் சிந்திக்கத் தூண்டியது. இன்றைக்கு, அவர் கண்டுபிடித்த லித்தியம் அயன் பேட்டரியைத்தான் நமது மடிக்கணினிகள், தொலைபேசிகள், மின்சார கார்களில் பயன்படுத்துகிறோம். ஆனால், தனது கண்டுபிடிப்பில் உள்ள குறைகள் பற்றி அவருக்கு நீண்டகாலமாக வருத்தம் உண்டு. அவற்றைச் சரிசெய்யும் முனைப்பில் உள்ளார்.

"புதைபடிம எரிபொருட்களையே சார்ந்திருக்கும் பழக்கத்திலிருந்து நாம் வெளிவருவது மிக முக்கியமான விடயம். வசதிகள் நிறைந்ததாகவும் 'உள் எரி பொறி' சாதனத்தைப் போல் மலிவானதாகவும் ஒரு மின்சாரக் காரை உருவாக்க முடிந்தால், கார்பன் உமிழ்வைக் கட்டுப்படுத்தலாம்" என்கிறார். லிதியம் அயன் மின்கலம் வெடிக்காது என்று உறுதியாக நம்ப முடியாது என்று கூறும் அவர், அது விலை உயர்ந்தது என்றும், கார்பன் உமிழ்வைக் கட்டுப்படுத்தும் திறன் இல்லாதது என்றும் கருதுகிறார்.

**முடிவிலாப் பயணம்**

பல ஆண்டுகளுக்கு முன்னரே, பாதுகாப்பான ஒரு மின்கலத்தை உருவாக்க அவர் முடிவுசெய்தார். இந்த வகை மின்கலங்கள் தான் இன்றைய உலகில் விலை மலிவானவையாகவும், குறைந்த எடை கொண்டவையாகவும் இருக்கும்.

தனது முயற்சிகளில் குடினாப் வெற்றிபெறுவாரா? என்று சக விஞ்ஞானிகளே சந்தேகப்பட்டனர். ஆனால், அவர் நம்பிக்கை இழக்கவில்லை. "புதிய கருத்தாக்கங்கள் உருவாகாத வகையில், உங்கள் சிந்தனையை மூடி வைக்க முடியாது என்பதைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு நான் முதிர்ச்சி அடைந்தவன். புதிய விஷயங்கள் வேண்டும் என்றால், ஒவ்வொரு சாத்தியக்கூறையும் நீங்கள் பரிசோதித்தாக வேண்டும்" என்கிறார் அவர்.

முதிய வயதில் அவர் வெற்றியும் பெற்றார். "நம்மில் சிலர் ஆமைகள் போன்றவர்கள்; நாம் தொடர்ந்து போராடி முன்னேறுகிறோம். நமக்கு 30 வயதாகும் வரைகூட அது நமக்குப் புரியாது. ஆனால், ஆமைகள் தொடர்ந்து நடந்தாக வேண்டும். வாழ்க்கை முழுவதும் தொடரும் இந்தப் பயணம் அனுகூலம் தரும்; குறிப்பாக, வெவ்வேறு விஷயங்களைக் கடந்துவரும்போது, அவற்றிலிருந்து புதிய விடயங்களைக் கற்றுக்கொள்ளும் அளவு நெளிவுசுழிவுடன் இருக்கிறேன்' என்கிறார் தனது பயணத்தை இயற்பியலில் தொடங்கி, வேதியியலிலும் பொருளறிவியலிலும் கவனம் செலுத்தி, பசுமைப் பொருளாதாரத்தை நோக்கிய சமூக, அரசியல் போக்குகளையும் கவனித்துவந்த குடினாப்ஃ

தனது நோக்கத்தில் காட்டிய உறுதிக்கு, சுற்றுச்சூழல் சீர்கேட்டைக் குறைப்பத்திலும், பெற்றோலியப் பயன்பாட்டிலிருந்து விடுபடு வதிலும் தான் கொண்டிருந்த நம்பிக்கை கைகொடுத்ததாகச் சொல்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாக, தனது முதுமைதான் அறிவுசார் சுதந்தி ரத்தன்மைக்கு முக்கியக் காரணம் என்றும் அவர் குறிப்பிடுகின்றார். குடினாப்புக்கு தற்போது வயது 94.

நன்றி த ஹிந்து

> நடுத்தர வயதுக்குப் பின்னர், புத்துணர்வு டன் செயலாற்றுவது ஒன்றும் வித்தியாசமான விடயமல்ல என்பதற்கு ஏராளமான சான்றுகள் உண்டு. கண்டுபிடிப்பாளர்கள் தங்கள் 40களில் செயல்பாடுகளில் உச்சத்தை அடைகிறார்கள் என்றும் தங்கள் கடைசிப் பாதி வயதுகளில் மிகுந்த படைப்பாற்றலுடன் இருக்க முனைகிறார்கள் என்றும் 2016இல் வெளியான தகவல் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



05

# இலங்கையில் 2000 வருடங்களுக்கு முற்பட்ட தமிழ்க் கல்வெட்டுகள்

பேராசிரியர் சி. பத்மநாதன்

நீரின்றி அமையாது உலகு என்பதும் குளந்தொட்டு வளம் பெருக்குவதும் நெடுங்கால அனுபவத்தின் மூலமாக உருவாகிய சிந்தனைகள். இவை பழந்தமிழ் நூல்கள் எழுந்த காலத்தில் பொது வழமையாகிவிட்டவை. இந்தச் சிந்தனைகளுக்கு இலங்கையில் நாகர் செயல் வடிவம் கொடுத்தனர். மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலே தொட்டணைத்தூறும் மணற்கேணிகளை அவர்களே முதன்முதலாக அமைத்தனர்.

**குறுநில மன்னர்களும் குளங்களை உருவாக்கினர்**

மலைமேல் அமைந்த மனைகள், மாளிகைகள், கோயில்கள் என்பவற்றுக்கு வேண்டிய நீரைத் தேக்கி வைப்பதற்கு உச்சியிலும் சரிவிலுமுள்ள பாறைகளை வெட்டி, அவர்கள் அமைத்த கிணறுகள் இன்றும் காணப்படுகின்றன. அவற்றில் வெட்டப்பட்டுள்ள தமிழ்க் கல்வெட்டுகள் இதை உறுதி செய்கின்றன. ஆறுகள் இல்லாத பிரதேசங்களில் மழை வெள்ளத்தைத் தேக்கி நிலத்தில் நன்னீர் மட்டத்தைப் பேணிக் கொள்வதற்கும், மக்களதும் மாக்களதும் தேவைகளின் பொருட்டு சிறிய குளங்களையும் உருவாக்கினார்கள். காடுகளை வெட்டி, வயல் நிலங்களையும் தோப்புக்களையும் உருவாக்கிய நாகர் பயிர்ச் செய்கைக்கு வேண்டிய நீர்ப்பாசனத்துக்குத் தேவையான குளங்களையும் உருவாக்கினார்கள்.

அடங்காப்பற்று வன்னியிலுள்ள ஊர்களின் பெயர்களில் குளம் என்ற சொல் இறுதி நிலையாக வருகின்றது. அதிகமான பெருங்குளங்களைப் பற்றிய குறிப்புக்கள் இந்த நூலில் காணப்படுகின்றன. குளக்கட்டுகள், அணைக்கட்டுகள் என்பவற்றின் உருவப் படங்கள் வழியாக அவை நாகரின் சாதனைகள் என்பதை உணர முடிகின்றது. முன்னொரு காலத்தில் அநுராதபுர மன்னர்களே பெருங்குளங்களை அமைத்தனர் என்ற கருத்து வலுப்பெற்றிருந்தது. ஆனால் அண்மைக் காலத்தில் தென்னிலங்கைப் பல்கலைக்கழக ஆசிரியர்களில் சிலர் அந்தந்தப் பிராந்தியங்களில் அதிகாரஞ் செலுத்தியிருந்த பிரதானிகளும் குறுநில மன்னர்களும்கூட குளங்கள் பலவற்றை உருவாக்கினார்கள் என்று கருதுகின்றனர். இந்த நிலையில் கீழ்க்கண்ட இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருள்களை வகைப்படுத்திக் கொண்டு நிரல்படுத்துவது பயனுடையதாகும்.

**ஆதி இரும்புக்காலப் பண்பாட்டுச் சின்னங்கள்**

முதலியாகுளம் கல்லுமலை (கட்டட அழிபாடுகள், செங்கட்டிகள்), வாவெட்டிமலை (எழுத்துப் பொறித்த மலைப் பாறைகள்), குருந்தனூர் மலை (கற்கள், செங்கட்டிகள்), மன்னாகண்டல் மலை (தூண்கள்), தட்டயமலை (கற்கள்), குருந்தன்குள மலை (கற்பாறைகள்), கும்பகன்னன் மலை, வட்டுவாகல் மல்லைச்சாரல், சாளம்பன் அழிபாடுகள் (தமிழ் பிராமிக் கல்வெட்டுகள்), நொச்சிமோட்டை ஆறு (கற்குவியல்கள்), பேராறு (அடுக்குக் கல் அணைக்கட்டு, எழுத்துப் பொறித்த கற்கள்), தட்டயமலை அணைக்கட்டு (எழுத்துப் பொறித்த கற்கள்), பாவற்குளம் அணைக்கட்டு, குருந்தனூர் (கல்லணைக்கட்டு), கனகராயன் குளம், மருக்காரம்பளை (செங்கட்டிகள், ஓடுகள், சுடுமண் பாவைகள்) ஆகிய இடங்களில் ஆதி இரும்புக்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் பலவும் காணப்பட்டன.

**சமய வழிபாட்டுச் சின்னங்கள் (நாககற்கள், சிவலிங்கம், பௌத்த சின்னங்கள்)**

தட்டயமலை கருடமடு, பாவற்குளம், வற்றாப்பளை, பாலமோட்டை (புத்தர் பாதம்), நெளுக்குளம் கப்பச்சி, சின்னத்தம்பனை, வௌவாலைக்கேணி, தண்ணி முறிப்பு . இரணை இலுப்பைக் குளம், சமளங்குளம், கற்சிலை மடு, மதகுவைச்ச குளம் பனங்காமம், குரவில் வவுனிக்குளம், ஒட்டுசுட்டான், குமாரபுரம், மருதங்குளம், கல்வீரங் குளம், திருக்கேதீஸ்வரம், வவுனியன் பெரிய குளம் (நாகலிங்கம்) ஆகிய இடங்களில் சமய வழிபாட்டுச் சின்னங்கள் பலவும் காணப்பட்டன.

**கற்றூண்கள் காணப்படும் இடங்கள் (தூண் தாங்கு கற்கள் , அரை வட்டக் கற்கள், தூண்கள்)**

பாலமோட்டை, மன்னாகண்டல் மலை, கற்சிலை மடு, கனகராயன்குளம், தட்டய மலைப் படிகள், முதலியாகுளம் மலை, விளாத்திக்குளம், நெடுங்கேணி மிக அகலமான தூண்கள், மேற்கு மூலை இரணை இலுப்பைக் குளம், ஆவரங்குளம் (மேற்கு மூலை), குருந்தனூர் நிறுத்திய தூண்கள், கனகராயன் குளம் (உடையாவூர்) மண்கிண்டி, மன்னாகண்டல் சரிந்த தூண்கள், குரவில் புதுக்குடியிருப்பு, ஓமந்தை முதலியாகுளம் கல்லுமலை, கனகராயன்குளம், மருக்காரம்பளைவவுனியா, வாவெட்டி மலை, தளையன் குளம் கல்வெளி, குமாரபுரம், வவுனியா அருங்காட்சி யகம், குருந்தனூர் மலை, தட்டயமலை, கனகராயன் குளம் (படிகள்), குருந்தன் குளம் (படிகள்), மன்னாகண்டல், ஒட்டுசுட்டான் தட்டயமலை இவ்விடங்களில் கட்டுமானங்களுக்குப் பயன்படுத்திய கற்றூண்கள் காணப்படுகின்றன.

**பேராசிரியர் ப.புஷ்பரத்தினத்தின் அகழ்வாய்வுகள்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து வரலாற்றுத்துறைப் பேராசிரியரான ப. புஷ்ப ரத்தினமும் வன்னியில் கள ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். ஆயினும் அவற்றைப் பற்றிய விரிவான ஆய்வறிக்கைகள் இன்னும் வெளிவரவில்லை. பனங்காமம் முதலானவற்றிலுள்ள புராதனமான தொல்பொருள் சின்னங்கள் பலவற்றின் படங்களைத் தனது நூலொன்றில் வெளியிட்டுள்ளார்.

ஒரு கட்டுரையில் செட்டிக்குளத்திலுள்ள கப்பச்சியின் காட்டிலே கண்டுபிடித்த பிராமிக் கல்வெட்டுகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் ஒன்றின் ஒளிப்படமும் காணப்பட்டது. அதிலே 'பொகும்புர வேடன் கல் பெரும் ணாவிய் லெணே' என்ற வசனம் பொறிக்கப்பட்டுள்ளது. அவன் மாநாய்கன், வேடன்கல் என்னுமிடத்தில் இருந்தான். அவன் குகையொன்றைத் துறவியருக்குத் தானஞ்செய்தான் என்பவற்றைக் கல்வெட்டின் மூலம் உணர முடிகின்றது. மற்றைய கல்வெட்டுகளில் பரதர் பற்றிய குறிப்புண்டு என்று கொள்ளப்படுகின்றது. கடந்த ஆண்டின் முடிவிலே பேராசிரியர் புஷ்பரத்தினம் ஒரு மிக முக்கியமான அகழ்வாய்வினை நடத்தியுள்ளார். அது கட்டுக்கரைக் குளத்தில் நடைபெற்றது. புராதனமான காலம் முதலாக நெடுங்காலம், பல நூற்றாண்டுகளாக நிலை பெற்ற நகரமொன்றின் அழிபாடுகள் அங்கு கிடைத்துள்ளதாக அனுமானிக்கப்படுகின்றது. பலவகையான மட்பாண்டங்களும் வழிபாட்டுச் சின்னங்களும் கிடைத்துள்ளன. அவை கி.மு. 2ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை என்று ராஜன் முதலிய தென்னிந்தியத் தொல்லியலாளர் கருதுவதாகச் சொல்லப்படுகின்றது. அங்குள்ள சுடுமண் படிமங்களிலும் சிறிய மட்கலங்களிலும் தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் தெரிகின்றன. எனவே அங்கு கி.மு. 2ஆம் நூற்றாண்டுக்கு முன்பே ஆதி இரும்புக் காலப் பண்பாட்டு மக்களின் குடியிருப்புகள் ஏற்பட்டுவிட்டன எனக் கருதலாம்.

அங்குள்ள ஆதிவாசிகள் அவர்களோடு கலப்புற்றனர் என்றும் கொள்ளலாம். அங்கிருந்த நகரம் நாகரால் அமைக்கப்பட்டது என்று கருதுவதற்கு வரிவடிவங்கள் சான்றாயுள்ளன. கட்டுக்கரைக் குளத்தையும் நாகரே அமைத்திருக்க வேண்டும். வடமாகாணத்தில் இதுவரை நடைபெற்ற அகழ்வாய்வுகளில் மிக முக்கியமானதாகச் சொல்லப்படுவனவற்றுள் இதுவுமொன்று. இங்குதான் மிகக் கூடுதலான பலவகைப்பட்ட தொல்பொருள் சின்னங்கள் கிடைத்துள்ளன. பெரும்பாலானவை நாக வழிபாடு, சைவ சமய வழிபாடு என்பன தொடர்பானவை. இதுவரை மேலாய்வுகளின் மூலம் கிடைத்தவற்றின் அடிப்படையிலே சொன்ன விளக்கங்கள் இவற்றின் மூலம் உறுதியாகின்றமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். கட்டுக்கரைக் குளத்திலிருந்து எடுக்கக் கூடியவற்றை காட்சிப்படுத்துவதற்குக் கூடுதலான இடவசதிகள் தேவைப்படுகின்றன.

> “குளக்கட்டுகள், அணைக்கட்டுகள் என்பவற்றின் உருவப்படங்கள் வழியாக அவை நாகரின் சாதனைகள் என்பதை உணர முடிகின்றது. முன்னொரு காலத்தில் அநுராதபுர மன்னர்களே பெருங்குளங்களை அமைத்த னர் என்ற கருத்து வலுப்பெற்றிருந்தது.
> ஆனால் அண்மைக்காலத்தில் தென்னிலங்கைப் பல்கலைக்கழக ஆசிரியர்களில் சிலர் அந்தந்தப் பிராந்தியங்களில் அதிகாரஞ் செலுத்தியிருந்த பிரதானிகளும் குறுநில மன்னர்களும்கூட குளங்கள் பலவற்றை உருவாக்கினார்கள் என்று கருதுகின்றனர்

**நாகரும் தமிழ் பேசுவோருமே தொன்மையானவர்**

அடங்காப்பற்றுவன்னியிலே குளங்கள் ஆதிகாலம் முதலாக வாழ்வாதாரங்களாகும். முன்னே கவனித்தவாறு இடப்பெயர்களும் குளம் என்ற விகுதி பெற்றுள்ளன. ஆயினும் அவற்றைப் பற்றி முதன் முதலாகக் கள ஆய்வுகளை மேற்கொண்ட ஹியூ நெவிலும் பார்க்கப் பலரும் சில தவறான குறிப்புகளை விட்டுச் சென்றுள்ளனர். அதனால் இன்றுவரை வன்னியின் ஆதி வரலாறு பற்றிய குழப்பமான கருத்துக்கள் நிலவு கின்றன. இவர்களில் முதலாமவர் ஆய்வாளர் அல்லர். அவர் விபரத் தொகுப்பாளர். இரண்டாமர் வரலாற்றறிஞர் அல்லர். தொல்லியலாளரும் அல்லர். அவர் நீரியல் துறை பற்றிய நிபுணர். வரலாறு பற்றிய அவர்களின் குறிப்புகள் மீள் பரிசீலனைக்குரியவை. கனகராயன் குளம், பாவற்குளம், வவுனிக்குளம் மற்றும் கட்டுக்கரைக்குளம் முதலானவை நாகரோடும் தமிழ் மொழி பேசுவோரின் குடியிருப்பின் உற்பத்தியோடும் தொடர்புடையவை என்பதே உறுதி.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பிரகாஸ்

# இந்தியாவின் தோல்விக்கு காரணம் என்ன?

மினி உலகக்கிண்ணத் தொடரில் நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்கிய இந்தியாவை. புரட்டியெடுத்துள்ளது இலங்கைஅணி. இந்திய அணியின் அதிர்ச்சித் தோல்விக்குகாரணம் என்ன என்பது தொடர்பில் அலசுவதே இந்தக் கட்டுரை.

ஆட்டம் நடைபெற்றது ஓவல் மைதானத்தில். வழக்கம்போல் இந்த ஆடுகளம் துடுப்பாட்டத்துக்குச் சாதகமானதாக இருந்தது. சுழல்பந்து வீச்சாளர்களுக்குக் கெட்ட கனவாக உள்ள ஓவல் இந்தியா இலங்கை அணிகளுக்கு இடையிலான ஆட்டத்திலும் சுழலுக்கு ஒத்துழைக்கவில்லை.

ஆனால் வேகப்பந்து வீச்சாளர்கள் ஓரளவு சாதிக்கக்கூடிய வகையில் இருந்த ஆடுகளம் இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின் போதுதிடீர்மேலெழும்பல்தன்மையுடையபந்துகளைவீசக்கூடியவர்களுக்குசிறந்த முறையில் ஒத்துழைத்தது.

இதற்குசிறந்தஎடுத்துக்காட்டாகதிசெர பெரேரா 9 பந்துப்பரிமாற்றங்களை வீசியமையைக்குறிப்பிடலாம். அண்மைக்காலமாக 50 பந்துப்பரிமாற்றங்களைக்கொண்ட ஆட்டங்களில் பெரேராவுக்கு இடம் கொடுக்கப்படுவதில்லை. அவ்வாறு இடம் கொடுத்தாலும் அவர் 5 பந்துப்பரிமாற்றங்களை வீசுவதென்பதே அரிதிலும் அரிது.

ஆனால் திடீர் மேலெழும்பல் பந்துவீச்சு மேற்கொள்ளக்கூடிய அவரை சிறப்பாகபயன்படுத்தினார் அணித்தலைவர் மத்தியூஸ். இதனால் அவருக்கு 9 பந்துப்பரிமாற்றங்கள்கொடுக்கப்பட்டது. 54 ஓட்டங்களைபெரேராவழங்கியிருந்தார். இந்த ஆடுகளத்தில் பந்துப்பரிமாற்றத்துக்கு சராசரியாக 7.50 ஓட்டங்கள் என்ற அடிப்படையில் வீசினாலே பெரிய விடயம். 49ஆவது பந்துப்பரிமாற்றத்தை வீசிய மலிங்க, அத்தனை பந்துகளையும் திடீர் மேலெழும்பல் தன்மையுடையதாகவே வீசினார். இதை ஆட்டத்தைப் பார்த்தவர்கள் கண்டிருப்பார்கள்.

ஆனால், இந்திய அணியைப் பொறுத்த மட்டில் பும்ரா, பாண்டியா, ஜாதவ்போன்றவேகப்பந்துவீச்சாளர்கள்இருந்தாலும் திடீர் மேலெழும்பல் தன்மையுடைய பந்துகளை வீசக்கூடிய வல்லமை இவர்களில் ஒருவருக்கேனும் இல்லை. இதனால்தான் கோக்லி மூன்று பந்துப்பரிமாற்றங்கள் வீசினார். இந்த மூன்று பந்துப்பரிமாற்றங்களிலும் இலங்கை அணியினரால் 17 ஓட்டங்

# உடலும் உள்ளமும் நலம் தானா?

இலங்கை அணி தனது அடுத்த லீக் ஆட்டத்தில் நாளை பாகிஸ்தானைச் சந்திக்கவுள்ள நிலையில். இந்த ஆட்டத்துக்கு முன்பாக அதாவது இன்றுக்குள்குசல்ஜெனித்பெரேராஉடல்தகுதி பெற்றுவிடுவாரா என்பதே இலங்கை ரசிகர்கள் மத்தியில் தற்போதுள்ள கேள்வி.

இந்தியாவுக்கு எதிராக நடைபெற்ற லீக் ஆட்டத்தில்இலங்கைஅணிவெற்றிபெற குசல் பெரேராவின் பங்கு முக்கிய காரணமாக இருந்தது. அவர் அதிரடியாக விளையாடி 44 பந்துகளில் 47 ஓட்டங்களைப்பெற்றிருந்தநிலையில் தசைப்பிடிப்புக் காரணமாக வெளியேளினார். இதனால் அடுத்த ஆட்டத்தில் அவரது பங்குபற்றல் சந்தேகத்துக்குள்ளான ஒன்றாக மாறியுள்ளது.

தரங்கவுக்கு தடை விதிக்கப்பட்ட நிலையில்குசல்பெரேராதசைப்பிடிப்புக்குஉள்ளாகியமைஇலங்கைஅணிக்குப்பின்னடைவே. குசல் பெரேரா அடுத்த ஆட்டத்தில் அதாவது பாகிஸ்தானுக்குஎதிராகநாளைநடைபெறவுள்ள ஆட்டத்தில் விளையாடமாட்டார் என்றே ஏறக்குறைய அறிவித்திருந்தாலும் அவர் களமிறங்க வாய்ப்புக்கள் அடியோடு இல்லாமல் போய்விட்டதென்று சொல்லுவதற்கில்லை. மொத்தத்தில் குசல் பெரேராநினைவுக்குவரும்போதெல்லாம்கூடவே. நலம்தானாபாடலும்நினைவுக்குவந்துவிடுகிறது.

# அதிகம் சம்பாதிக்கிறார் ரொனால்டோ

ஆண்டுதோறும் அதிகம் சம்பாதிக்கும் வீரர்களின் பட்டியல் வெளியிடப்படுகிறது. இந்த வருடத்தில்எவர்அதிகம்சம்பாதிக்கிறார்என்ற தரவுகள் வெளிவந்துள்ளன. வழக்கம்போல் ரொனால்டோ முதலிடத்தில் உள்ளார்.

21நாடுகளைச்சேர்ந்த100விளையாட்டுவீரர்கள் பரிசீலிக்கப்பட்டாலும் அமெரிக்காவை சேர்ந்த வீரர்களே அதிகம் இடம்பெற்றுள்ளனர்.

இந்தபட்டியலில்கிறிஸ்டியானோரொனால்டோ முதலிடத்தில்உள்ளார், இவர்சம்பாதித்தது 93 மில்லியன் டொலர்களாகும்.

அமெரிக்க கூடைப்பந்தாட்ட வீரர் லெப்ரான் ஜேம்ஸ் (86.2 மில்லியன் டொலர்கள்), ரொனால்டோவுக்குப்போட்டியானகால்பந்தாட்ட வீரர்லயனல்மெஸ்ஸி (80 மில்லியன்டொலர்கள்), ரென்னிஸ் வீரர் பெடரர் (64 மில்லியன் டொலர்கள்) உள்ளிட்டோர் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.

இந்தபட்டியலில் இடம்பெற்றுள்ள ஒரேவீராங்கனை செரீனா வில்லியம்ஸ் மட்டுமே. இவர் 51ஆவது இடத்தில் உள்ளார். இதன்மூலம் அவர்அதிகம்சம்பாதிக்கும்வீராங்கனைகளின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.





# சம்பவம் நடந்துடிச்சு

மினி உலகக்கிண்ணத்துக்கு பங்களாதேஷ் தகுதி பெற்றப்பவே அந்த அணி ஏதோ ஒரு பலமான அணிக்கு முறையான பாடம் கற்பிக்கும் என்று பொதுவான எதிர்பார்ப்பு இருந்தது. அதை பொய்த்துப் போகவிடாமல் நியூசிலாந்துக்கு முறையான சம்பவத்தை நடத்திக் காட்டியுள்ளது.


முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 265 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 33 ஓட்டங்களில் 4 இலக்குகளை இழந்துதவித்தபோதிலும், பின்னர்சகிப் அல்ஹசன், மகமதுல்லா இருவரும் இணைப்பாட்டமாக 224 ஓட்டங்களைக் குவித்தனர். இருவரும் சதம் கடந்து வெற்றிக்குவித்திட்டனர். 2015ஆம் ஆண்டுநடைபெற்றஉலகக்கிண்ணத்தொடரில் இங்கிலாந்தைவீழ்த்தி கிரிக்கெட்டின்தாயகத்தையே தொடரில் இருந்து வெளியேற்றியது பங்களாதேஷ். பின்னர் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் வெற்றி, இலங்கைக்கு எதிரான டெஸ்ட் வெற்றி, இலங்கைக்கு எதிரான ஒருநாள், ரி20 தொடரைக் கைப்பற்றியமை, ஆசியக் கிண்ணத் தொடரில் இறுதிக்குத் தகுதி பெற்றமை ஆகியவற்றின் வரிசையில் மினி உலகக்கிண்ணத் [illegible] தையும் வெளியேற்றியது. ஆனால் இந்த வெற்றியை அடுத்து பங்களாதேஷ் வீரர் [illegible] க்கவில்லை. ஏனெனில் இந்த வெற்றிகள் அவர்களுக்கும் நன்று பரீட்சயமாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ். போதனா வைத்தியசாலை குருதி வங்கியினரால் வயாவிளான் மத்திய கல்லூரியில் மேற்கொள்ளப்பட்ட குருதிக்கொடை நிகழ்வில் ஆசிரியர்களும் மாணவர்களும் குருதித் தானம் செய்தனர். (ஐ)





யாழ்ப்பாண போதனா வைத்திய அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க, யாழ்ப்பாண தலைமையகப் பாது காப்பு படையின் கீழ் பணியாற்றும் படையின ரால் குருதித்தானம் வழங்கப்பட்டது. (ஐ)





சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி இளைஞர் கழக சம்மேளனத்தினரால் மரநடுகை நிகழ்வு சாவகச்சேரியில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. சாவகச்சேரி இளைஞர்கழக சம்மேளனத்தலைவர் சு.நக்கீரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் சண்முகதாசன்,சாவகச்சேரி நகர இளைஞர் கழக தலைவரும், சாவகச்சேரி நகரசபையின் முன்னாள்உறுப்பினருமான ஞா.கிஷோர், சாவகச்சேரித்தொகுதியின் முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் மதியுகன், பொதுச்சுகதாரப்பரிசோதகர் தளிர்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







ஈழத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க சேனையூர் சிறி நாகம்மாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் பெருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதன் போது தலைமைப் பொங்கல் ஆலயத்தின் முதன்மைக் குரு சிவசிறி அ. அரசரெத்தினம் அர்ச்சகரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ஐ-40)



சாவகச்சேரி சப்பச்சி மாவடிப் பிள்ளையார் ஆலயப்பெருந்திரு விழாவின் தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது. (ஐ-6)



சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று ஆயிரக்கணக்கான பக்தர்களின் பங்கேற்புடன் சிறப்பாக இடம்பெற்றது. (ஐ-ரி)













அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நேற்றுச் சிறப்பாக இடம்பெற்றது. ஆயிரக்கணக்கான பக்த தர்கள் கலந்து கொண்டு காவடி. தேங்காய் உடைத்தல் உட்பட பல நேர்த்திக்கடன் களை நிறைவேற்றினர். (ஐ-ரி)







வவுனியா குருமன்காடு காளியம்மன் ஆலயத்தில் வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்றுக் காலை இடம் பெற்றது. அதிகாலை முதல் கிரியைகள் இடம்பெற்று காலை 7.30 மணியளவில் வசந்தமண்டப பூசை இடம்பெற்று, அதனைத் தொடர்ந்து காளிகாம்பாள் உள்வீதி வலம் வந்து 8.30 தேரில் எழுந்தருளி 8.45 மணியளவில் இரத பவனி இடம்பெற்றது. தேர்த்திரு விழாவில் அடியார்கள் அங்கப்பிரதட்சனை மற்றும் கற்பூரச் சட்டி ஏந்தித் தங்களது நேர்த்திகடன்களை செலுத்தினர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில், காரை நகர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், வேதரடைப்புக் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் சுயதொழில் மற்றும் பனை சார்ந்த உற்பத்திகளை மேம்படுத்தும் வகையில் பனை சார் உற்பத்திப் பொருள்களின் பயிற்சி நெறி அண்மையில் நடைபெற்றது. இதில் அதிகளவான பெண்கள் கலந்து கொண்டிருந்தனர். (ஐ-ரி)









காரைநகர் பிரதேச இளைஞர் சம்மேளனம் நடத்திய விளையாட்டுப்போட்டிகளின் இறுதிநாள் விழாவும், பரிசளிப்புவிழாவும் அண்மையில் காரைநகர். இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன. நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டதுடன், யாழ். மாவட்ட இளைஞர்கழக சம்மேளனங்களின் தலைவர் காமராஜ், உடுவில் பிரதேச இளைஞர்கழக சம்மேளனத்தலைவர், காரைநகர் பிரதேச இளைஞர் சேவைகள் அதிகாரி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாவும் கலந்து கொண்டனர். கால்பந்தாட்டப்போடியில் வலந்தலை கலாநிதி இளைஞர்கழகம் வெற்றிபெற்றதுடன், ஒட்டுமொத்த பிரதேச சம்பியனாக, சிவகாமியம்மன் கோவிலடியைச் சேர்ந்த ஒளிச்சுடர் இளைஞர்அணி வந்தது. வெற்றிபெற்றவர்களுக்கான வெற்றிக் கோப்பைகளும் சான்றிதழகளும் விருந்தினர்களால் வழங்கப்பட்டன. (ஐ)







புதுக்குடியிருப்பு உடையார்கட்டுப்பகுதியில் அமைந்துள்ள ஒளிரும் வாழ்வு அமைப்பினூடாக புலம்பெயர் உறவுகளின் பங்களிப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிகள் வழங்கப்பட்டது. இவ் உதவிகள் வழங்கும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் 28 மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. அது தவிர முற்றாக இயங்க முடியாத மாற்றுத்திறனாளிகளில் ஒன்பது பேருக்கு கட்டில் மெத்தை ஆகியனவும் எட்டுபேருக்கு மின்விசிறிகளும் வழங்கப்பட்டன. (ஐ)











அளவெட்டி, கருகம்பனை தமிழமன்ற சனசமூக நிலையமும், இந்து இளைஞர் மன்றமும் இணைந்து நடாத்திய 2017ஆம் ஆண்டுக்கான சித்திரை விளையாட்டுவிழா தலைவர் ச.ஜெயதாசன் தலைமையில் சனசமூக முன்றலில் அண்மையில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா, சிறப்பு விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டுக்கள், போட்டிகள் என்பன இடம்பெற்றதுடன், வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் விருந்தினர்களால் வழங்கப்பட்டன. (ஐ)



சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண இந்துக் கல்லூரி சாரணர்களின் சுற்றுச்சூழல் தினம் கடந்த திங்கட்கிழமை காலை இடம்பெற்றது. "இயற்கையோடு இசைவுற இணைவோம்" எனும் தொனிப்பொருளில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 175ஆவது ஆண்டு நிறைவில் அருளின் பொலிவை மகத்துவம் செய்யும் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயம்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

பன்னாட்டு ரீதியிலே அமையப்பெற்றுள்ள கத்தோலிக்கத் திருச்சபையானது, ஜூன் மாதத்தின் ஒவ்வொரு நாள்களையும் மகத்துவம் செய்து கொண்டு கோடி அற்புதர் புனித அந்தோனியாரின் திருவிழாக்களைச் சிறப்புறக் கொண்டாடி மகிழ்கிறது. தேவ அன்னைக்கு அடுத்தபடியாக, புனித அந்தோனியார் பெயரிலேயே அதிக ஆலயங்களும், யாத்திரைத் தலங்களும், நிறுவனங்களும் பன்னாட்டளவில் அமையப்பெற்றுள்ளன.
இலங்கையிலே கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேசிய யாத்திரைத்தலம்,யாழ்ப்பாணம் பாசையூர் புனித அந்தோனியார் யாத்திரைத்தலம்,மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலம் என்பவை பெயர்பெற்றபுனித அந்தோனியாரின்வணக்க ஸ்தலங்களாக உள்ளன.
இவற்றை விடவும் யாழ். மறை மாவட்டத்தில் பருத்தித்துறை, மணல்காடு, தாளையடி, வெற்றிலைக்கேணி, கரவெட்டி, மாதகல், சுன்னாகம், அச்சுவேலி, நீர்வேலி, பண்டத்தரிப்பு, பெரியவிளான், நாவற்குழி, அளம்பில், பரந்தன், மல்லாவி, குமிழமுனை, நாவல்நகர், ஜெயந்தி நகர்,ஸ்கந்தபுரம், கிளாலி, கிராஞ்சி, 155 ஆம் கட்டை, கிளிநொச்சி, யூனியன் குளம், 13 ஆம் கட்டை, பாரதிபுரம், பல்லவராயன்கட்டு,
வவுனிக்குளம்,வடகாடு,பாலையடி,கீரிக்குடா,ஜெயபுரம், கள்ளப்பாடு,செல்வபுரம்,கேப்பாப்பிலவு, பள்ளிக்குடா, கௌதாரிமுனை, அல்லைப்பிட்டி,ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, மண்டைக் கல்லாறு, கச்சதீவு , பாலைதீவு, கற்கடதீவு, குருசடித் தீவு எனப் பல புனித அந்தோனியார் ஆலயங்கள் அமைந்துள்ளன.
சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயம் இவ்வாண்டு 175 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றமையால் இவ்வாரம் அந்த ஆலயம் பற்றியதான விடயங்களை பக்தியோடு நோக்குவோம். இவ்வாக்கத்திற்கான தகவல்கள் சுன்னாகம் மண்ணின் மைந்தனும், யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சங்க கணக்காளருமான திருஞானம் ஞானசீலனிடம் இருந்து பெறப்பட்டுள்ளது.

**உதயன் நாளிதழின் ஞாயிறு வார இறுதிப் பதிப்பின் கிறிஸ்தவப் பகுதிக்கு சுன்னாகம் பங்குத்தந்தை ஜே.பி. ஜோதிநாதன் அடிகளார் கருத்துக் கூறும்போது,**
"சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயப் பங்கு தனது 175 ஆவதுஆண்டுநிறைவுவிழாவை எதிர்வரும் 13 ஆம் திகதி கொண்டாடவுள்ளமை யாழ். மறைமாவட்டத்துக்கு மகிழ்வானதொரு செய்தியாகும். ஒரு பங்குத் திருச்சபையின் வாழ்வில் 175 ஆண்டுகளின் நிறைவு என்பது அருள் நிறைந்த சிறபப்பான காலமாக விளங்குகிறது. பங்கு மக்கள் அனைவரும் பங்குத்தந்தையுடன் இணைந்து இறைவனுக்கு நன்றி செலுத்தி மகிழ்வுற்றிருக்கிறார்கள்.
இந்த நிகழ்வை மேலும் மெருகூட்டும் விதமாக யாழ். ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை திருநாள் இடம்பெறவுள்ள தினமான ஜூன் 13ஆம் திகதியன்று காலை 7 மணிக்குத் திருநாள் திருப்பலியை ஒப்புக் கொடுக்கவுள்ளார். ஆலயம் நோக்கிய அடிகளாரின் முதலாவது வருகை என்பதால் அவருக்கான மகத்தான வரவேற்பளிக்கப்படும். திருப்பலிக்கு முன்னதாக ஆலயத்தின் புதிய மணியை ஆயர் ஆசீர்வதிக்கவுள்ளார். 40 அடி உயரமான ஆலய மணிக்கூட்டுக் கோபுரமானது புதிதாக அமைக்கப்பட்டுள்ளமை 175ஆவது ஆண்டின் சிறப்பம்சமாக விளங்குகிறது. திருநாள் தினத்திற்கு முன்னைய தினமான வேஸ்பர் தினத்தன்று ஆன்மீகத்தின் 'ஆணிவேரும் விழுது களும் விடுதலை நோக்கி' என்ற மலரின் வெளியீட்டு நிகழ்வும் இடம்பெறவுள்ளது" - என்றார்.

**175 ஆவது ஆண்டு நிறைவில் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயப் பங்கு மக்களை வாழ்த்துவோம்**
175 ஆவது ஆண்டு நிறைவில் தாம் பெற்ற விசுவாசத்தைப் பத்திரமாய்ப் பாதுகாத்து வாழ்ந்து தமது பரம்பரைக்கு வழங்கியுள்ள முன்னோரை நன்றியுடன் நினைந்து அருளின் பொலிவோடு சிறப்புற்றிருக்கும் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயப் பங்கு மக்களுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம். கிறிஸ்தவ உருவாக்கலின் தொட்டில் 'குடும்பம்' என்பதை எமதுமுன்னோர்எமக்கு வாழ்ந்து கற்றுத் தந்துள்ளார்கள்.
தாம் வாழ்ந்த விசுவாச வாழ்வைப் பத்திரப்படுத்தி பாரம்பரியமாக வழங்கிச் சென்றுள்ளனர். இன்று எதிர் நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வு குடும்ப வட்டத்தின் உள்ளேயே கட்மைவைப் பெற்றுள்ளது. நவீன தொழில்நுட்பம், கணினி உபயோகம், சமூக ஊடகம், தொலைக்காட்சித் தொடர் நாடகம்,தனியார் வகுப்புக்கள் எனப் பல இடைநிலை இடர்ப்பாடுகளால் ஒவ்வொரு குடும்பமும் கிறிஸ்தவ உருவாக்கலின் தொட்டிலாக செயற்பட முடியாமல் போவது தடுக்கப்பட வேண்டும். இவற்றோடு குடும்பங்கள் எவ்வாறு கிறிஸ்தவ உருவாக்கலின் தொட்டிலாக மாற்றமுடி லாம் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

> 1837 ஆம் ஆண்டு கத்தோலிக்க விசுவாசத்துக்கு எதிரானவர்கள் சிலரால் இவ்வாலயம் எரியூட்டப்பட்ட போதிலும் புனித அந்தோனியாரின் முழுத் திருச்சொரூபம் கூட்டுடன் அதிசயிக்கத்தக்க வகையிலே அழிவிலிருந்து காப்பற்றப்பட்டது.





**பழைய ஆலயத்தின் கட்டுமானம்**
பழைய ஆலயத்தின் கட்டட வேலைகள் 1842 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளதான தகவல் மக்களிடையே நிலவிய நாலடிச் செய்யுட் பாரம்பரியத்தில் வெளிப்பட்டுள்ளதாக நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் உருவாக்கியதான '25 வருட கால கத்தோலிக்க வளர்ச்சி' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அந்த நூலின் தகவலடிப்படையிலே ஆலயமானது வேலு அந்தோனி (கண்ணன்) என்பவரால் கட்டப்பட்டுள்ளமை தெரிய வருகிறது.
1837 ஆம் ஆண்டு கத்தோலிக்க விசுவாசத்துக்கு எதிரானவர்கள் சிலரால் இவ்வாலயம் எரியூட்டப்பட்ட போதிலும், புனித அந்தோனியாரின் முழுத் திருச்சொரூபம் கூட்டுடன் அதிசயிக்கத்தக்க வகையிலே அழிவிலிருந்து காப்பற்றப்பட்டது. இந்தத் திருச்சொரூ பமானது சந்தன மரத்தினால் ஆக்கப்பட்டதென வாய்மொழியாகச் சொல்லப்படுவதாலும், அது வடிவமைக்கப்பட்ட முறைமை கொண்டும், அது போர்த்துக்கீசர் காலச் சொரூபம் என நம்பப்படுகின்றது. இந்த நிகழ்வுக்குப் பின்பாக மக்கள் அந்தோனி மரியான் தலைமையில் ஒன்று சேர்ந்து மேலதிகமாகப் பெற்றுக் கொண்ட காணியில் நீக்கிலான் பிரான்சிஸ் என்பவரின் மருமகனும், வேலு அந்தோனியும் வேறு ஒரு ஆலயத்தை அமைப்பதற்கு 1842 ஆம் ஆண்டுகளில் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்

**ஜென் அ.ம.தி. அடிகள் காலத்தில் புதிய குருமனைக்கான பணிகள்**
இதன் பிற்பாடு பங்குக் குருவான ஜென் அ.ம.தி. அடிகள் 1902 ஆம் ஆண்டுக்கும் 1906 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் புதிய குருமனை அமைப்பதற்கான பணிகளைத் தொடக்கி வைத்தார். ஆலயத்தின் பழைய பீட சிம்மாசன வேலைகளையும் மீள் புனரமைப்புச் செய்தார். 1830 ஆம் ஆண்டுகளில் காணிக்கை மாதாவின் பெரு நாள்கள் மிகச் சிறந்த முறையிலே கொண்டாடப்பட்டுள்ளது.
அந்தக்கால கட்டங்களில் சில்லாலை, மாதகல் போன்ற பகுதிகளில் இருந்து மாட்டு வண்டிகளில் வருகை தரும் மாதாவின் பக்தர்கள், கூடாரமிட்டு விழாவில் பங்குபற்றிச் சென்றதாக வாய்மொழிப் பாரம்பரியச் செய்திகளின் வழியே அறிய முடிகிறது. 1900 ஆம் ஆண்டுகளின் முற்பகுதிகளில் இங்கு நடத்தப்பட்ட நற்கருணை வழிபாடுகளும் சிறப்பம்சம் வாய்ந்தவை. முழுக் கிராமத்தையும் விழாக் கோலமாக்கிப் பல விசேட மேடைகளை ஆங்காங்கே அமைத்து நற்கருணைப் பவனியும் வழிபாடுகளும் இடம்பெற்றன. ஆலயத்தில் உள்ள புனித அந்தோனியார் திருப்பண்டம், சிம்மாசனம், கல்லறை, ஆண்டவர் திருச்சொரூபம், தங்கத்தினாலான பாலன், கல்லறை ஆண்டவர் கூடு, கொடிமரம், காண்டாமணி,நற்கருணைப் பாத்திரம் என்பவை மிகப் பழமை வாய்ந்த பொக்கிஷங்களாக விளங்குகின்றன.

**1936 ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஆலயப் பீட கோபுரத்திற்கான அடிக்கல்**
தற்போதுள்ள புதிய ஆலயத்தின் பீட கோபுரத்துக்கான அடிக்கல் 1936 ஆம் ஆண்டு நடப்பட்டது. 1842 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஆலயத்தின் திருப்பீடம், வடக்குத் திசை நோக்கி அமைந்திருந்தது. 1936 ஆம் ஆண்டு திருப்பீட அடிக்கல்லானது தெற்குத் திசை நோக்கிய கோவிலுக்கான அடிக்கல்லாக நடப்பட்டு பெரிய அமைப்பிலான பீடக் கோபுரம் தொடர்ச்சியாக நிர்மாணிக்கப்பட்டு வந்தது. இது பழைய ஆலயத்தின் முன்பகுதியில் அமைக்கப்பட்டிருந்தது.
1972 ஆம் ஆண்டளவில் பங்குக் குருவாக இருந்த இராயப்பு ஜோசேப் அடிகளார் பழைமையான ஆலயத்தை முற்றாக இடித்து புதிய ஆலயம் ஒன்றை நிர்மாணித்து 1974 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதியன்று அபிசேகம் செய்யப்பட்டது.
அவ் ஆலயத்தின் முன் மண்டபத்தின் வேலைகள் யாவும் பங்குக்குரு எட்மன் மைக்கல் அடிகளார் காலத்தில் தொடங்கப்பட்டது.
பங்குக்குரு அ.ஞானப்பிரகாசம் அடிகளார் காலத்தில் (1996) போரால் அழிவடைந்த மிகப் பழம் பெரும் குருமனைக்குப் பதிலாக புதிய குருமனை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பங்குக்குருவாக இருந்த பா.பி.ராஜசிங்கம் அடிகளார் காலத்தில் (2002) போரால் சிதைவடைந்த ஆலய மண்டபமானது மீள் புனர்நிர்மானம் செய்யப்பட்டுள்ளது.
பழமையான திருச்சிலுவை மரமானது 1995 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வின் போது அழிவுக்குள்ளாகியிருந்தது. 2008 ஆம் ஆண்டில் பங்குக் குருவாயிருந்த ம.கான்ஸ்போவர் அடிகளார் காலத்தில் அந்தத் திருச்சிலுவைக்கு பதிலீடான புதிய திருச்சிலுவை மரமானது 25 அடி உயரத்திற்கு செய்யப்பட்டு அழகுற நிறுவப்பட்டுள்ளது. இதே போல 1995 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக புனித அந்தோனியாருடைய திருப்பண்டமும் இடம் மாறிக் கண்டுகொள்ளமுடியாமல்ப் போயுள்ளது. இதைத் தேடி எடுப்பதற்கான நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
ம.றெக்ஸ் சவுந்தரா அடிகளார் காலத்தில் அதாவது 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதியன்று ஜோசேப் ஜெயசீலன் அடிகளாரால் இப் புதிய மணிக்கூட்டுக்கோபுரத்துக்கான அடிக்கல் நடப்பட்டது. அந்தக் கோபுரமானது 40 அடி உயரத்தைக் கொண்டமைந்துள்ளதுடன், ஆலயத்தின் இரு புறமும் வானுயர நிமிர்ந்து நின்று அழகுற அருளின் பொலிவினைத் தந்து நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரங்கள்



## காணவில்லை

கறுப்பு சார்ந்த மண்ணிறமும் நெற்றியில் வெள்ளைப் புள்ளியும் உடைய 2 வயது மதிக்கத்தக்க பசுமாடு ஒன்றைக் காணவில்லை. கண்டுபிடித்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்

T.P: 0778 662 347

க.இராமலிங்கம்
D3, பன்னங்கண்டி,
கிளிநொச்சி.

(J8723)(10)

## VACANCIES

**Customer Service Executive**
**(Part time / Full time)**

**Requirements:**
1. Fluent in English (writing & Speaking)
2. Computer Skills (Internet and Email)
3. Ability to work in Day & Night Shift

**Benifits**
1. Accommodation provided
2. Attractive remuneration

Apply - careers. penguin @gmail.com
076 8578 474, 021 222 7077

## வீடு வாடகைக்குத் தேவை

கோண்டாவில், கோப்பாய், கொக்குவில், திருநெல்வேலி, கல்வியங்காடு ஆகிய இடங்களில் மூன்று பேர் கொண்ட சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை

**075 546 2940**

## கடை வாடகைக்குண்டு

யாழ்.கச்சேரிக்கு அருகில் Park இற்கு முன்பாக 12x50 நீள அகலம், Store Room, Attach Bathroom என்பவற்றுடன் வாடகைக்குண்டு. Office தேவைக்கும் பாவிக்கலாம்.

**077 727 1645**

## தவறிவிட்டது

பத்திநாதன் செபஸ்தியான் குரூஸ் ஆகிய எனது அடையாளஅட்டை (இல. 660084991V) யாழ். பஸ்நிலையத்திலிருந்து, யாழ். பொஸ்கோ பாடசாலை வழியாக அரியாலைக்குச் செல்லும் வழியில் மண்ணிற மணிபர்ஸ்சுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

**021 221 9144, 077 124 1545**



## ST. ANTONY'S

HP Dual Core LAPTOP - 24, 750/= (1Y)
HP Qard Core LAPTOP - 45, 750/= (3Y)
HP i3 LAPTOP - 50, 250/= (3Y)
HP i5 LAPTOP - 71, 750/= (3Y)
Desktop DualCore - 41, 750/= (3Y)
ASUS i3 - 57, 750/= (3Y)
HP i3 - 69, 750/= (3Y)

- Computer Parts Available
- Dongle, Pendrives, Phones, Etc.
- Laptop, Desktop Repair, Installation



187, K.K.S. Road,
Jaffna Town.
T.P : 021 222 4865,
075 069 8608

## காணிவிற்பனைக்கு

இராசபாதை வீதி, இருபாலைச் சந்தியிலிருந்து500mதூரமளவில் 15 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. **07670 23565**

## ஜெனரேற்றர் விற்பனைக்கு

OLYMPIAN (கற்றர்பிலர்) 100Kv ஜெனரேற்றர் 660 மணித்தியாலயம் மாத்திரம் பாவித்த Brand new யாழ்ப் பாணத்தில் உள்ளது.
தொடர்புகளுக்கு - 077 3629 998

## திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு

**IELTS** Life Skills **A1** **B1**

ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்

**BRITISH COLLEGE of Education**
More information
0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124
British College of Educatin - **IELTS** பரீட்சை நிலையம்

## காணி விற்பனைக்கு

யாழ் மருத்துவ பீடத்துக்கு அருகில் 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: **077 301 3060**

(c.29177)(10)

## மரண அறிவித்தல்

### திருமதி சுமந்தினி குருபரன்



ஊரியவத்தை, புலோலி வடக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு, வைத்தியர் வீதி, பார் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுமந்தினி குருபரன் 09.06.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தேவசகாயம் - இன்பமணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிவபாதம்-பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும் சிவபாதம் குருபரனின் (முன்னாள் சமுர்த்தி முகாமையாளர், மட்டக்களப்பு) அன்பு மனைவியும் நிருஷன், சஜீவன் (மட்.புனித மிக்கேல் கல்லூரி, தரம் 11 மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயும் சுதர்சினி (பரு.ப.தெ.வ.அ.கூ.சங்கம்), சுகிர்தன் (Network Manager, யாழ். பல்கலைக்கழகம்), சுயந்தினி (ஆசிரியர், குடத்தனை கரையூர் அ.மி.த.க.பாடசாலை), சுகந்தன் (பொலிஸ் உத்தியோகத்தர், கொடிகாமம் பொலிஸ்நிலையம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் டேவிட் (கோல்டன் ஈகிள் பாதுகாப்பு பரிசோதகர்), ஒஸ்கா டொமின்றில்டா (ஆசிரியை, நவாலி மகா வித்தியாலயம்), துஷ்யந்தன் (பிரதி அதிபர், யா/ஊர்காவற்துறை அந்தோனியார் கல்லூரி), சிறிராஜசேகரம் (சவுதி அரேபியா), திருமதி சாந்திசிறி, கோபால இரத்தினசிங்கம் (பனை அபிவிருத்திச் சபை, மட்டக்களப்பு), திருமதி திருமலாதேவி மத்தியூ, இந்துமதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் றெஜினா ஜெசிக்கா, கோபால இரத்தினசிங்கம் (பனை அபிவிருத்திச்சபை மட்டக்களப்பு), காலஞ்சென்ற சண்முகம் மத்தியூ (பிரதேச செயலகம், ஆரையம்பதி), சந்திரராஜா (கனடா) ஆகியோரின் சகலையும் அபிஷனா, யஸ்மிலன் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஹமில்டன், திருமதி ஜெறோ கேதீஸ், டனா மத்தியூ, டிலூசியா, அனுராஜ், கோபிராஜ், வேணுகாஷ் ஆகியோரின் அன்பு மாமியும் எலன்ஸ் றெபனி, அன்றுஸ்ரேபான், ஜொயில்யோசுவா, ஜெரேமியா சாமுவேல் ஆகியோரின் அன்புச் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (12.06.2017) திங்கட்கிழமை மு.ப.10.00 மணிக்கு பருத்தித்துறை தூய அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்று கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஊரியவத்தை,**
**புலோலி வடக்கு,**
**பருத்தித்துறை.**

தகவல்:
**குடும்பத்தினர்**
**0212260080**
**0776964710**

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரில் இருந்து 1 km இல் கச்சாய் வீதியின் அருகில் பெரியமாவடியில் அமைந்துள்ள 6 பரப்பு, 9 1/2 குளியுடன் "T" வடிவில் உள்ள காணி விற்பனைக்கு உண்டு. முகவர்கள் இல்லாது நேரடியாக தொடர்பு கொள்ளவும். தொடர்பு - 077 4933 959

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, துறைமுகம், சந்தைக்கு மிக அருகில் பீச் றோட்டில் உள்ள 04 பரப்பு காணி பகுதியாகவோ, முழுமையாகவோ விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:0779685566

## சந்தையாளர்கள் - யாழ்ப்பாணம்



நீங்கள் விற்பதற்கு மற்றும் ஆர்வமாக இருந்தால்.... நீங்கள் எங்களுக்கு தேவை.

எங்களுடைய தயாரிப்புகளாவன,
- சீசீ டிவி
- அழையாது நுழைபவர் அலாரம் அமைப்புகள்
- தீ தடுப்பு அமைப்புகள்
- தீ கண்டறியும் அமைப்புகள்
- தீ அணைப்பவர்

எங்களுடைய சேவைகளாவன,
- மனித பாதுகாப்பளித்தல்
- விசாரணைகள்
- பாதுகாப்பு பயிற்சி

சம்பளம் - பேசி தீர்மானிக்க முடியும்
தொடர்புகளுக்கு அழையுங்கள் டெரிக் - 0771 069 6489

Email – careers@watchguard.lk

## பேக்கரிக்கு வேலையாள் தேவை

பேக்கரி வேலையில் அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.
தொடர்பு - புதிய துர்க்கா வெதுப்பகம்.
கலைவாணி வீதி, பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

## பணிப்பெண் தேவை

வயது 50 - 55 இருக்கவேண்டும் முன் அனுபவம் இருக்க வேண்டும், வீட்டில் தங்கி நின்று பணி செய்யவேண்டும். தங்குமிட வசதி, மூன்று வேளை உணவு, சம்பளம் நீதியாக வழங்கப்படும்.
தொடர்பு - 077 788 5175
077 9084 950

## மரண அறிவித்தல்

ஓம் விராட் விஷ்வப்பிரம்மனே நமஹ!

### திருமதி இராஜேஸ்வரி ஸ்ரீசந்தணராசா



மலர்வு 27.05.1953 உதிர்வு 09.06.2017

சங்கானையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி ஸ்ரீசந்தணராசா 09.06.2017 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராசா செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு இளைய மகளும் காலஞ்சென்றவர்களான செகராசா பாக்கியலக்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகளும் செ.ஸ்ரீசந்தணராசாவின் அன்பு மனைவியும் மல்லிகா தேவி, பாலேந்திரன் (லண்டன்), மனோகரன் ஆகியோரின் சகோதரியும் தேவகுஞ்சராம்பாள் (லண்டன்), ஞானாம்பாள், ஜெகதாம்பாள் (பிரான்ஸ்),கிருசாம்பாள்,ஸ்ரீஸ்கந்தராசா,சுந்தராம்பாள்,ஸ்ரீசௌந்தரராசா, ஸ்ரீதவரெட்ணராசாஆகியோரின்மைத்துனியும்கஜனி,பபித்தா(பிரான்ஸ்), கற்பகராஜ், கிசோக்குமார் ஆகியோரின் பாசமிகு தாயும் சந்திரதேவன், சாரங்கன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஹரிஸ்வர்த்தமன், ஹவிஸ்கர், தியானா(பிரான்ஸ்), தரூண் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11 .06.2017 )ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கானை, கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அம்பிகாவத்தை வீதி,**
**சங்கானை.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 440 5418**

## வேலைவாய்ப்பு

**O/L,A/L பயிற்சியில் திருப்திகரமான பலன் பெறவில்லையா?**

கவலை வேண்டாம் 6 மாதகால பயிற்சியுடன் 60,000/- வரை சம்பாதித்து உங்கள் எதிர்காலத்தை செழிப்பாக்க எங்கள் College இற்கு வாருங்கள். அங்கீகாரமுள்ள Diploma in Hospitality பாட நெறி ஊடாக 8 அரச சான்றிதழ்களுடன் 5 நட்சத்திர ஹோட்டல்களில் வேலை வாய்ப்பு செய்து தரப்படும்.

மாத கல்வியின்போது பகுதிநேர வேலைப் பயிற்சியும் (சம்பளம் - 500-2000 வரையும்) மற்றும் இலவசமாக English, French, Chineese, IT பாடநெறிகளுடன் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான ஆலோசனைகளும் செய்து தரப்படும்.

**077 884 9049 / 077 738 3542**

## விசேட விலைக்கழிவு

- ✓ முதல்தர பனர் பிரதியாக்கம் - 30.00
- ✓ ஒரு பக்க விளம்பரப்பலகை - 150.00
- ✓ ஒளியூட்டப்பட்ட விளம்பரப்பலகை - 400.00
- ✓ கதவுகளிற்கான கொத்து வேலை - 10000.00
- ✓ Mug print - 300.00
- ✓ Sunboard print - 100.00
- ✓ Fabric cloth print - 80.00
- ✓ 3D LED SIGN BOARD - 50% விலைக் கழிவில்
- ✓ கிறிஸ்ரல் பிறேம் (10x15) - 1200.00

(உங்கள் வீட்டு மங்கல நிகழ்வுகளிற்கான வீடியோ மற்றும் அல்பங்களையும் குறைந்த விலையில் பெறமுடியும்)

**மூர்த்தி டிஜிற்றல்**
**ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**077 224 7428**

## முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி கற்கை நெறிகள்

கொழும்பில் இயங்கும் திவ்யா பயிற்சி நிலையம், யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் தனது பயிற்சி கிளை நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி கற்கை நெறியினை கற்க விரும்புவோர் ஆனி மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை சுன்னாகத்தில் உள்ள பயிற்சி நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்

**விலாசம் .இல 234, K.K.S வீதி,சுன்னாகம்.**
**தொலைபேசி . 011 250 4218, 077 941 5686**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கற்பித்தல்...

சிறப்புக் குழு பாடசாலைகளுக்குச் செல்லும். உங்கள் கற்பித்தல் செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லை எனில் உங்கள் நியமனங்கள் மீள்பரிசீலனை செய்யப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

வடக்கு மாகாணத்துக்கான கணித, விஞ்ஞான, தொழில்நுட்ப பாட ஆசிரிய வெற்றிடங்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நியமனம் பெறுவோர் அவர்களுக்கு எந்தப் பாடசாலை வழங்கப்படுகின்றதோ அங்கு சென்று உடனடியாகக் கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும். நிரந்தர நியமனம் கிடைத்துவிட்டது, இனி ஒன்றும் செய்ய முடியாது, வீட்டுக்கு அருகில் இருக்கும் பாடசாலைக்கே செல்வேன் என்று அடம் பிடித்தீர்களானால் பாதிக்கப்படப் போவது மாணவ, மாணவியரே.

நீங்கள் உங்கள் பாடங்களில் துறைசார்ந்தவர்கள் என்பதால் கற்பித்தல் செயற்பாடுகளில் குறைவு ஏற்படாது. இடம்பெயர்ந்து இந்தியா சென்று அங்குள்ள பல்கலைக் கழகங்களில் கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் சிறப்புச் சித்திபெற்ற இளைஞர்கள், யுவதிகள் வடமாகாணத்தில் எங்குவேண்டுமென்றாலும் கடமையாற்றத் தயார் என்றும் தம்மை எமது கல்விச் சேவைக்குள் உள்நுழைக்குமாறும் அண்மையில் கோரியுள்ளனர். அது பற்றி ஆராயவேண்டியுள்ளது. தூரத்தைக் காரணம் காட்டி கடமைக்குச் செல்லாது இருக்க எண்ணும் ஆசிரிய, ஆசிரியர்கள் இந்த விடயத்தையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

வடபகுதியில் ஒருகாலத்தில் கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் புகழ்பூத்த ஆசிரியர்கள் இருந்தார்கள். இன்றோ கணித, விஞ்ஞான, தொழில்நுட்ப ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தென்மராட்சியில் இருந்தும் கடந்த வருடபல்கலைக் கழக புகுமுகத் தேர்வில் ஒருமாணவமாணவியர் கூட மருத்துவம், பொறியியல் துறைக்கு தெரிவாகவில்லை என்பது மனவருத்தத்துக்குரிய விடயம்.

எமது கல்வி நடவடிக்கைகளில் விரைந்து மாற்றங்களைக் கொண்டுவர வேண்டியது காலத்தின் கட்டாயம். வடமாகாணத்தில் நீண்டகாலமாக க.பொ.த உயர்தர தொழில் நுட்பத்தில் உயிரியல், தொழில்நுட்பம், பொறியியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பத்துக்கான விஞ்ஞானம் என்பவற்றுக்கும் க.பொ.த. உயர்தர பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல், இணைந்த கணிதம் என்பவற்றுக்கும் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவில்லை"- என்றார்.

நேற்று 219 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன. பௌதீகவியல் பாடத்துக்கு 16 பட்டதாரிகளும், இரசாயனவியல் பாடத்துக்கு 11 பட்டதாரிகளும், உயிரியல் பாடத்துக்கு 13 பட்டதாரிகளும், இணைந்த கணிதம் பாடத்துக்கு 10 பட்டதாரிகளும் உள்ளீர்க்கப்பட்டனர்.

உயிரியல் தொழில்நுட்பம் பாடத்துக்கு 15 பட்டதாரிகளுக்கும், பொறியியல் தொழில்நுட்பம் பாடத்துக்கு 12 பட்டதாரிகளுக்கும், தொழில்நுட்பத்துக்கான விஞ்ஞான பாடத்துக்கு 2 பட்டதாரிகளுக்கும், விஞ்ஞான பாடத்துக்கு 95 பட்டதாரிகளுக்கும், கணித பாடத்துக்கு 45 பட்டதாரிகளுக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வடக்கு மாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரன், வடக்கு மாகாண எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-8)

### 56 கிலோ...

யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை கடற்படையினர் கடற்பரப்பிலும் கடற்கரையை அண்டிய பகுதிகளிலும் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். தொண்டமனாறு கடற்கரையை அண்டிய பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய இருவரிடம் கடற்படையினர் விசாரணைகளை மேற்கொண்டனர். அதன்போது கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று கூறப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக நடவடிக்கைகளுக்காக காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன், கைப்பற்றப்பட்ட கஞ்சாவும் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

தொண்டமானாறு, ஊரிக்காடு வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தே. ஜெயபிரசாந் (வயது-32), தம்பாலை அச்சுவேலியைச் சேர்ந்த இ.கஜன் (வயது -24) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள், சான்றுப் பொருள்களுடன் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சாவின் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-10-101)

### தேர்தலை...

சாட்டியுள்ளது.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள கூட்டு எதிர்க்கட்சியின் பேச்சாளர் காமினி லொக்குகே, நாட்டின் மெய்யான பிரச்சினைகளை திசை திருப்பும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது எனக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலில் தோல்வியைத் தழுவுவோம் என்பதைப் புரிந்து கொண்ட அரசு அதனை ஒத்தி வைத்து வருகிறது. பன்னாட்டு சக்திகளுடன் இணைந்து அரசு ஞானசார நாடகத்தை அரங்கேற்றி வருகின்றது. மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்திலும் அரசைக் கவிழ்க்க ஞானசார தேரர் பயன்படுத்திக்கொள்ளப்பட்டார்- என்றார். (த)

### விபத்தில்...

நேற்று அதிகாலை 2 மணியளவில் நாத்தாண்டியாவில் நடந்துள்ளது. கிளிநொச்சி, கணேசபுரத்தைச் சேர்ந்த தனேந்திரன் (வயது-44) என்பவரே உயிரிழந்தார்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவரை அங்கொடை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற சமயமே விபத்து ஏற்படடுள்ளது. நாத்தாண்டியாவில் உள்ள நாற்சந்தியை நோயாளர் காவு வண்டி கடந்தபோது, அதன் இடதுபுறமாக வந்த கார் மோதியது என்று தெரிவிக்கப்படுகின்றது. விபத்தில் சிக்கிய நோயாளர் காவு வண்டியின் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். விபத்து நடந்தபோது நோயாளர் காவு வண்டிக்குள் நோயாளி, வைத்தியர், உதவியாளர் ஆகியோரும் இருந்துள்ளனர்.

விபத்துத் தொடர்பில் நாத்தாண்டியாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-10-101)

### சுழற்சிமுறை...

கட்சி தமக்கே வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதாக அறிய முடிகின்றது. இதனால் இந்த விவகாரத்தில் ஒருமித்த நிலைப்பாடு கூட்டமைப்பினுள் ஏற்படவில்லை என்று தெரிய வருகின்றது.

2013ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றிருந்தது. 28 ஆசனங்களுடன், இரண்டு நியமன ஆசனங்களும் கிடைத்திருந்தன. நல்லாட்சிக்கான தேசிய முன்னணியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டுக்கு அமைவாக, ஓர் நியமன ஆசனம் அந்தக் கட்சிக்கு வழங்கப்பட்டது.

மற்றைய ஆசனம் சுழற்சி முறையில் வழங்கப்பட்டு வருகின்றது. முதலில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிட்டிருந்த திருமதி மேரி கமலா குணசீலனுக்கு வழங்கப்பட்டிருந்தது. தொடர்ந்து, ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் வவுனியா மாவட்டத்தில் போட்டியிட்டிருந்த எம்.பி.நடராஜாவுக்கு வழங்கப்பட்டிருந்தது. தற்போது, ரெலோ சார்பில் வவுனியா மாவட்டத்தில் போட்டியிட்டிருந்த எஸ்.மயூரனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சுழற்சி முறையில் அடுத்த ஆசனம் தமது கட்சிக்கே வழங்கப்பட வேண்டும் என்று புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் கோரியுள்ளார். இது தொடர்பில் அவர் கோரிக்கை விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பில், 'அ.அஸ்மின் நியமிக்கப்பட்ட நாள் தொடக்கம் இன்று வரையிலும் [illegible] அங்கத்தவராகவே இருந்து வருகின்றார் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாகாண சபையின் இறுதியாண்டுக்கான ஆசனம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட்ட வி.எஸ்.சிவகரனுக்கே வழங்கப்படவேண்டும் என்று, 2013ஆம் ஆண்டு இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்ததாகவும், தற்போது வி.எஸ். சிவகரன், கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளபோதிலும், அந்த ஆசனம் தமது கட்சியைச் சேர்ந்த வேறு ஒருவருக்கே வழங்கப்படவேண்டும் என்பதில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உறுதியாக இருப்பதாகவும் தெரிய வருகின்றது. (த-5)

### திடீரென...

ளுக்குள் சந்தித்துப் பேசுவதாகத் தெரிவித்திருந்தார். அதற்கு அமைவாக இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

அரச தலைவர், யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நாளை திங்கட் கிழமை திடீர் பயணமாக வருகை தரவுள்ளார். அரச தலைவரின் இந்தத் திடீர் பயணம் தொடர்பில், நேற்றுக் காலையே அலைபேசி ஊடாக, மாகாண ஆளுநர் அலுவலகம் மற்றும் மாவட்டச் செயலகத்துக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நாளை காலை 10 மணிக்கு, மாவட்டத்தின் சிறப்பு அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெறும். அரச தலைவர் மைத்திரிபால கலந்து கொள்வார். இந்தக் கூட்டத்துக்காக ஒழுங்குகள் இன்றைய தினமே, மாவட்டச் செயலக அலுவலர்களால் மேற்கொள்ளப்படவுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கடந்த மாதம் 17 ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேசியபோது, சிறப்பு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை நடத்துவதாக அரச தலைவர் தெரிவித்திருந்தார். இதற்கு அமைவாகவே இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்களையும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சந்தித்துப் பேசவுள்ளார். இந்தச் சந்திப்பு நாளை மதியம் 2 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

வடக்கின் 5 மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டவர்கள் இந்தச் சந்திப்புக்கு அழைக்கப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. (5)

### மகிந்த...

கொழும்பு காலிமுகத்திடலுக்கு அருகாமையில் இராணுவத் தலைமையகம் அமைந்திருந்த இடத்தை, ஷங்ரிலா ஹோட்டல் நிர்மாணிப்பதற்குக் கடந்த அரசு வழங்கியிருந்தது. இந்தத் தீர்மானம் காரணமாகவே 750 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத் தளபதியின் காரியாலயம், பணிப்பாளர்களின் காரியாலயங்கள் மற்றும் ஏனைய காரியாலயங்கள் தற்போது வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இதனால் இராணுவத்துக்கு மாதாந்தம் 10 கோடி ரூபாவைக் காரியாலய வாடகையாகச் செலுத்த நேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் தீர்மானத்துக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் இதனால் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த)

### சொன்னதை...

வித்து மூன்று மாதங்களின் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு நாளை திடீர்ப் பயணமாக வருகை தரவுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 4 ஆம் திகதி, வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற, 'அரச தலைவருக்கு தெரிவியுங்கள்' அலுவலகத்தின் கிளைத் திறப்பு விழாவில் கலந்து கொண்டிருந்த அரச தலைவர்மைத்திரிபால சிறிசேன, ஒவ்வொரு மாதமும் யாழ்ப்பாணத்துக்கு வருவேன் என்றும், அபிவிருத்தி தொடர்பில் கொழும்பு அரசின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், இங்குள்ள அரச அதிகாரிகள் அழைக்கப்பட்டு கலந்துரையாடல் நடத்தப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு தெரிவித்து மூன்று மாதங்கள் கடந்த பின்னரே, முதற்தடவையாக அவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

### 70 பவுண்...

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கும் 8 மணிக்கும் இடைப்பட்ட வேளையில் கொள்ளை நடந்துள்ளது. முன்னாள் இலங்கைவங்கி ஊழியர் நடராசமூர்த்தி என்பவரின் வீட்டிலேயே கொள்ளையர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். கொள்ளையர்களால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த திருமதி சித்திரா நடேசமூர்த்தி (வயது - 58) யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வெளிநாட்டில் இருந்து வந்திருந்த மகனுக்கு கடந்த திங்கட்கிழமை திருமணம் நடைபெற்றது. திருமணப் பெண்ணின் நகைகள் மற்றும் வெளிநாட்டில் இருந்து திருமண வீட்டுக்கு வந்திருந்த உறவுகளின் நகைகள், படுகாயமடைந்த பெண்ணின் நகைகள், சேமிப்புக்கள் எனப் பெருந் தொகை கொள்ளையடிக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

மகனின் திருமணத்தை அடுத்து நாள் பொருள்கள் கொள்வனவு செய்வதற்கு புதுமணத் தம்பதிகள் மற்றும் உறவினர்கள் யாழ்ப்பாணம் சென்றுள்ளனர். அதன்பின்னர் திரைப்படம் பார்க்கச் சென்ற நிலையில் வீட்டில் மணமகனின் தாயார் மட்டும் தனிமையில் இருந்தார்.

வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் வீட்டில் தனிமையில் இருந்த பெண்மணியின் முகத்தில் இரசாயனத் திரவம் ஒன்றை விசிறினர் என்றும், கண் எரிவுற்ற நிலையில் கொள்ளையர்களை பெண்மணி தடுக்க முற்பட்ட வேளையில் அவரின் கழுத்தை திருகி அடித்து படுகாயப் படுத்தி மயக்கமடையச் செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ற)

### அமெரிக்காவுக்கு...

வூட்டுவதில் நாடாளுமன்றத்தின் வகிபாகம் என்ற தொனிப்பொருளில் அமெரிக்க தலைநகர் வொஷிங்டனில் இந்தச் சிறப்புச் செயலமர்வு நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் பங்குகொள்ள சபாநாயகர் கரு ஜெயசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், புத்திக பத்திரன ஆகியோர் நேற்று வொஷிங்டனுக்குப் பயணமானார்கள்.

இந்தச் சிறப்புச் செயலமர்வில் இலங்கை, டுனீசியா, கொலம்பியா, நேபாளம் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கின்றனர். குறித்த நாடுகள் அரசியல் ரீதியான பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (4-5)

### சிமெந்து...

முயன்றனர் என்று அவர்கள் மீது பொலிஸார் குற்றம் சுமத்துகின்றனர்.

பொதுமக்கள் எவரும் நுழையமுடியாதவாறு இராணுவத்தினரின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ள காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்குள் உள்ள இயந்திரங்களில் இருந்து இரும்பு வெட்டிக்கொண்டிருந்தனர் இவர்கள். இரவு பகலாக பெருமளவு இரும்புகள் வெட்டப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கும் பொலிஸார் நேற்று மாலை சுமார் 7 மணியளவில் அதிரடியாக தொழிற்சாலைக்குள் புகுந்து மூவரையும் கைது செய்தனர்.

குறித்த தொழிற்சாலையிலிருந்து ஏற்கனவே ஏராளமான இரும்புகள் வெட்டி தென்பகுதிக்குக் கடத்தப்பட்டு வருகின்றன. ராணுவத்தினரின் உதவியுடன் அவர்கள் இவ்வாறு இரும்புகளை வெட்டிக் கடத்திவந்திருக்கின்றனர் என்று கூறப்படும் நிலையில்,

தற்போதும் அவ்வாறு இரும்புகள் வெட்டப்பட்டு அங்கிருந்து அகற்றப்படுகின்றனவா என்ற சந்தேகத்தை குறித்த மூவரது கைது எழுப்பியுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் சுன்னாகத்தைச் சேர்ந்தவர். மற்றைய இருவரும் மல்லாகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் விசாரணைகளின் பின்னர் அவர்கள் நீதிவானிடம் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(உ-4-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 11

**கொலின்ஸ் வி.க.**
**கால்பந்தாட்டம்**

கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமராட்சி பீறிமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வட ஸ்ரைக்கர்ஸ் அணியை எதிர்த்து பேர்ள் போய்ஸ் அணி மோதவுள்ளது.

**துடுப்பாட்டம்**

இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று நடைபெறவுள்ளன. கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஹாட்லி யைட்ஸ் அணி மோதவுள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் சிறி காமாட்சி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து டிறிபேக் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**யாழ். மாவட்ட**
**கூடைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பிரிவினருக்கான ஆட்டங்கள் சில இன்று நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் காலை 7.30 மணிக்கு இடம்பெறும் 17வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை அணி மோதவுள்ளது. காலை 8.30 மணிக்கு இடம்பெறும் 20 வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணி மோதவுள்ளது. சென். பற்றிக்ஸ் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் 17வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 3.40 மணிக்கு இடம்பெறும் 15 வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23-108-422)



# ஆஸ்திரேலியா வெளியே பங்களாதேஷ் உள்ளே

மினி உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் தோல்வியடைந்ததை அடுத்து ஆஸ்திரேலிய அணி தொடரை விட்டு வெளியேறியது. பங்களாதேஷ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து களத்தடுப்பைத் தீர்மானித்து ஆஸ்திரேலியாவை 277 ஓட்டங்களில் கட்டுப்படுத்தியது. ஹெட் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 71 ஓட்டங்களைப் பெற்றார். பின்ஞ் 68 ஓட்டங்களையும், சிமித் 56 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வூட், ரசிட் இருவரும் தலா 4 இலக்குகளையும், ஸ்ரோக்ஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து 35 ஓட்டங்களில் முன்வரிசை வீரர்களான றோய், கேல்ஸ், ரூட் ஆகியோரை இழந்தது. ஆனால் மோர்கன், ஸ்ரோக்ஸ் இருவரும் நிலைத்து ஆட்டத்தின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தினர். 87 ஓட்டங்களுடன் மோர்கன் ஆட்டமிழந்தார். ஸ்ரோக்ஸ் சதம் விளாசினார். இங்கிலாந்து 40.2 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகள் இழப்புக்கு 240 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழை குறுக்கிட 'டக்வேர்த் லூயிஸ்' விதிப்படி 40 ஓட்டங்களால் இங்கிலாந்துக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இந்தத் தோல்வியின் மூலம் ஆஸ்திரேலியா மூன்றாம் இடத்துக்கு பின்தள்ளப்பட்டது. பங்களாதேஷ் இரண்டாவது இடத்துக்கு ஏற்றம்பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. இன்று நடைபெறும் இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி பங்களாதேஷுடன் அரையிறுதியில் மோதுவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

(ம)

# அனித்தாவுக்கு சிவன் பவுண்டேசன் அனுசரணை

யாழ்ப்பாணம், ஜூன் 11

தாய்லாந்தில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் கோலூன்றிப்பாய்தல் நிகழ்வில் அனித்தா கலந்துகொள்ளவுள்ள நிலையில் அவருக்குத் தேவையான சில உதவிகளை சிவன் பவுண்டேசன் செய்து கொடுத்துள்ளது.

சிவன் பவுண்டேசன் நிறுவுனர் வேலாயுதன் கணேஸ்வரன், மற்றும் வல்வெட்டித்துறை நகர சபை முன்னாள் உபதலைவர் க.சதீஸ் ஆகியோர் அனித்தா மற்றும் அவரது பயிற்றுவிப்பாளர் ஆகியோரை கடந்த புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர். இதையடுத்து அனித்தாவுக்கு பல்வேறு அனுசரணைகளை வழங்க சிவன் பவுண்டேசன் முன்வந்துள்ளது. (ம-108)



# சிறிஅம்பாள் - நியூஸ்ரார் அணிகள் முன்னேற்றம்

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் சிறிஅம்பாள் விளையாட்டுக் கழகம் மற்றும் நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் என்பன அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றன.

நண்பர்களின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் மயிலிட்டி கண்ணகை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாச்சிமார் கோவிலடி சிறி அம்பாள் விளையாட்டுக் கழகம் மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 35ஆவது நிமிடத்தில் சிறி அம்பாளின் தர்சன் கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் அந்த அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வரணி நியூ ஸ்ரார் விளயாட்டுக் கழகம் மோதியது. இதில் முதல் பாதியில் இரு அணியாலும் கோலெதையும் பதிவுசெய்ய இயலவில்லை. இரண்டாம் பாதியின் 23ஆவது நிமிடத்தில் விஜயதாஸ் நியூ ஸ்ராரின் முதல் கோலைப் பதிவு செய்தார். அதன்பின்னர் பிரதீஸ் 2 கோல்களையும், ரஜீவன் ஓர் கோலையும் பதிவுசெய்ய முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று முன்னேறியது நியூ ஸ்ரார் அணி. (ம-108)

கிறாஸ்கொப்பர்ஸ் பிறீமியர் லீக்

# வினோத்குமாரை 61ஆயிரம் ரூபாவுக்கு ஏலத்தில் எடுத்தது நோர்த் டிராகன்ஸ்




யாழ்ப்பாணம், ஜூன் 11

கிறாஸ்கொப்பர்ஸ் பிறீமியர் லீக் துடுப்பாட்டத் தொடருக்கான ஏலம் யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. தொடரில் பங்குபற்றும் அணிகளில் ஒன்றான நோர்த் டிராகன்ஸ் அணி எஸ். வினோத் குமாரை 61ஆயிரம் ரூபாவுக்கு ஏலத்தில் எடுத்தது.

கிறாஸ்கொப்பர்ஸ் பிறீமியர் லீக் துடுப்பாட்டத் தொடர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக்கான ஏலம் ரில்கோ விருந்தினர் விடுதியில் அண்மையில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட 23 கழகங்களில், 21 கழகங்களில் இருந்து தலா 4 வீரர்களும், கிறாஸ்கொப்பர்ஸ் கழகத்தில் இருந்து 6 வீரர்களும் என்று மொத்தம் 90 வீரர்கள் ஏலத்தில் விடப்பட்டனர். தொடரில் கலந்து கொள்ளவுள்ள 6 அணிகளுக்கும் தலா 8 வீரர்கள் என்ற அடிப்படையில் மொத்தம் 48 வீரர்கள் ஏலத்தில் எடுக்கப்பட்டனர்.

வினோத்குமாரை விட இரண்டாவது அதிகபட்சமாக டார்வின் 37ஆயிரம் ரூபாவுக்கு ஏலம் போனார். றொப் சலஞ்சர்ஸ் அணி அவரை ஏலத்தில் எடுத்தது.

சயன்ஸ் வேல்ட் கிங்ஸ், ரில்கோ ரைகர்ஸ், சிவன்வாரியர்ஸ், றொப் சலஞ்சர்ஸ், டைவர்ஸ், நோர்த் டிராகன்ஸ் என ஆறு அணிகள் தொடரில் பங்குபற்றவுள்ளன. சயன்ஸ் வேல்ட் கிங்ஸ் அணியின் முகாமையாளராக நேசறூபன், பயிற்றுநராக மதியழகன், ரில்கோ ரைகர்ஸ் அணியின் முகாமையாளராக கே.சுதாகரன் பயிற்றுநராக சுரேஸ் மோகன், சிவன் வாரியர்ஸ் அணியின் முகாமையாளராக க.சதீஸ், பயிற்றுநராக டி.எம்.வேதாபரணம், றொப் சலஞ்சர்ஸ் அணியின் முகாமையாளராக றூபேந்திரன், பயிற்றுனராக சகாயராஜா, டைவர்ஸ் அணியின் முகாமையாளராக குகதாசன் பயிற்றுநராக பத்மமுரளி நோர்த் டிராகன்ஸ் அணியின் முகாமையாளராக விஜயபாலன் பயிற்றுநராக லவேந்திரா ஆகியோர் கடமையாற்றவுள்ளனர். (ம-23)

# புறப்பட்டுச் சென்றார் அனித்தா

யாழ்ப்பாணம், ஜூன் 11

தாய்லாந்து சம்பியன்ஷிப் தடகளத் தொடரில் கலந்து கொள்வதற்காக புறப்பட்டுச் சென்றார் கோலூன்றிப் பாய்தலில் தனக்கென தனிமுத்திரை பதித்துள்ள வீராங்கனை அனித்தா.

இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்து தமிழ் வீராங்கனை ஜெ.அனித்தா கோலூன்றி பாய்தலில் களம் இறங்கவுள்ளார். 8 வீரர், வீராங்கனைகளைக் கொண்ட குழாமுக்கு பயிற்றுநராக மகாஜனக் கல்லூரி ஆசிரியர் சுபாஸ்கரன் சென்றுள்ளார். இவர்களுக்கான போட்டிகள் நாளை முதல் ஆரம்பமாகவுள்ளன. (ம-422)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நீலங்களின் போர்' துடுப்பாட்டத்தில்

## மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்னிலை பெற வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

'நீலங்களின் போர்' என வர்ணிக்கப்படும் தெல்லிப் பழை யூனியன் கல்லூரி அணிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையிலான துடுப்பாட்டத்தில், முதல் நாள் நிலவரத்தின்படி மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி முன்னிலை பெற வாய்ப்பு உள்ளது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் ஆட்டம் நடைபெற்று வருகிறது. முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப் பாய் இந்துக் கல்லூரி அணி 66.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 337 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கனிஸ்ரன் 103 ஓட்டங்களையும், துஸ்யந்தன் 46 ஓட்டங்களையும், அனோஜன் 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வாகீசன் 4 இலக்குகளையும், யதீசன் 2 இலக்குகளையும், தரன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி முதல் நாள் முடிவில் 20 பந்துப் பரிமாற்றங்களை எதிர்கொண்டு 6 இலக்குகளை இழந்து 69 ஓட்டங்களை பெற்றுத் தடுமாறுகிறது. டிலோயன் பெற்ற 16 ஓட்டங்களே அதிகபட்சம்.

பந்துவீச்சில் கனிஸ்ரன் 3 இலக்குகளையும், ரவீசன், விக்னேஷ், சுஜீவன் ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். (ம-422)

# இந்தியா - தென்னாபிரிக்கா அரையிறுதியில் எந்த அணி

மினி உலகக்கிண்ணத் தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியாவும் தென்னாபிரிக்காவும் மோதவுள்ளன. வாழ்வா, சாவா நிலையிலேயே இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

'பி' பிரிவில் இந்தியா, தென்னாபிரிக்கா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன. லீக் சுற்றில் மொத்தம் 3 ஆட்டங்கள். அனைத்து அணிகளும் தலா 2 ஆட்டங்களை நிறைவுசெய்துள்ளன. அனைத்து அணிகளும் தலா ஓர் வெற்றியைப் பெற்றுள்ளன. எனினும் சராசரியின் அடிப்படையில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. தென்னாபிரிக்கா இரண்டாவது இடத்தில் உள்ளது. இலங்கை மூன்றாவது இடத்திலும்; பாகிஸ்தான் நான்காவது இடத்திலும் உள்ளன. இதனால், இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி அரையிறுதிக்கு முன்னேறும்.




ஓவல் மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறுகிறது. ஓவல் மைதானம் திடீர் மேலெழும்பல் பந்துவீச்சுக்கு ஒத்துழைக்கிறது. எனவே இன்று இரு அணிகளிலும் அதிரடியான மாற்றங்கள் இருக்கலாம். இந்தியாவைப் பொறுத்தவரை யுவராஜ் அணியில் இருந்து நீக்கப்பட்டு அஸ்வின் அணியில் இடம்பிடிக்கலாம்.

அதேபோல் யாதவ் நீக்கப்பட்டு சமி உள்ளே வரவும் வாய்ப்புள்ளது. தென்னாபிரிக்காவும் பந்துவீச்சு வரிசையில் சில மாற்றங்களைச் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## இறுதியில் யாழ். பல்கலை

யாழ்ப்பாணம், ஜூன் 11

பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

மொறட்டுவ பல்கலைக் கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில், யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணியை எதிர்த்து ராஜரட்டை பல்கலைக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜரட்டை பல்கலைக்கழக அணி 49.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் செந்தூரன் 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி 35.4 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்று 7 இலக்குகளால் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. துவாரகசீலன் ஆட்டமிழக்காமல் 69 ஓட்டங்களைப் பெற்றார். (ம-422)

## இரண்டாவது ஆட்டம் இன்று

ஆப்கானிஸ்தான் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

முடிவடைந்த ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் வெற்றிபெற்ற காரணத்தால் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி மேற்கிந்தியத் தீவுகளுக்கு உண்டு. மாறாக இன்றும் ஆப்கானிஸ்தான் வெற்றிபெற்றால், தொடர் அந்த அணியிடம் சென்றுவிடும். எனவே சொந்த மண்ணில் தொடரை இழப்பதைத் தவிர்க்க இன்றைய ஆட்டம் தீவுகளுக்கு வாழ்வா சாவா ஆட்டமாக அமைந்துள்ளது. (ம)



## முர்ரேயை தோற்கடித்து இறுதிக்குள் வாவ்ரிங்கா

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதிக்குத் தகுதி பெற்றார் சுவிற்சர்லாந்து வீரர் வாவ்ரிங்கா.

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடரான பிரான்ஸ் தொடர், பாரிஸ் நகரில் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் சுவிற்சர்லாந்து வீரர் வாவ்ரிங்காவை எதிர்த்து பிரிட்டன் வீரர் முர்ரே மோதினார்.

ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் செற்றை 6:7 என்ற அடிப்படையில் வாவ்ரிங்கா இழந்தார். இரண்டாவது செற் 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வாவ்ரிங்காவின் வசமானது. மூன்றாவது செற்றை 7:5 என்ற அடிப்படையில் மீண்டும் கைப்பற்றினார் முர்ரே. அடுத்த இரு செற்களையும் முறையே 7:5, 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றார் வாவ்ரிங்கா. (ம)

# ஆப்கானிஸ்தானிடம் அதிர்ச்சி கண்டது மே.இ.தீவுகள் அதன் சொந்த மண்ணில் வைத்து பரிதாபத் தோல்வி

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்று ஆட்டங்களைக்கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது ஆட்டத்தில் வெற்றிபெற்றது ஆப்கானிஸ்தான். ஆப்கானிஸ்தான் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ளது. முதலாவது ஆட்டம் நேற்று அதிகாலை நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக ஜவீட் அஹமடி 81 ஓட்டங்களையும், நபி ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும், சென்வாரி 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நேர்ஸ் 2 இலக்குகளையும், கபிரியேல், கோல்டர், கம்மின்ஸ், ஜோசெப் நால்வரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தீவுகளை திண்டாட வைத்தார் ஆப்கானிஸ்தான் சுழல் பந்துவீச்சாளர் ரசிட் கான். ஆரம்ப வீரர் லுயிஸை நஜிப் வீழ்த்தியது தான் தாமதம் தீவுகளின் முன்வரிசை ரசிட் கானிடம் சரணாகதி அடைந்தது. கோப், மொகமட், சேஸ், கோல்டர், ஜோசெப், கம்மின்ஸ், நேர்ஸ் ஆகிய எழுவரையும் வீழ்த்தினார் ரசிட் கான். முடிவில் 149 ஓட்டங்களில் சுருண்டு 63 ஓட்டங்களால் தோல்வியடைந்தது மேற்கிந்தியத் தீவுகள்.

முன்னதாக நடைபெற்ற ரி- 20 தொடரை தீவுகள் முழுமையாகக் கைப்பற்றியது. இதனால் அந்த அணி ஒருநாள் தொடரிலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் முதலாவது ஆட்டத்தில் தீவுகளுக்கு அதிர்ச்சி கொடுத்தது ஆப்கானிஸ்தான். (ம)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மும்மடங்கு வருமானத்திற்கு புதிய ஐடியா !

ஜூஸ் பக்கெட் மெசின்




டீ,கோப்பி மெசின் பொப்கோர்ன் மெசின்



max adz

தமிழில் தொடர்பு கொள்ள

077 391 8870

WINRICH INTERNATIONAL(PVT)LTD

No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitiya,Colombo - 03



### வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் பிரபல வியாபார நிறுவனம் ஒன்றுக்கு காசாளர் மற்றும் வேலையாள்கள் உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
விரும்புவோர் 077 939 8876 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.



### தேவை

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் இயங்கும் முன்னணி நிறுவனம் ஒன்றுக்கு பட்டறிவுள்ள லேத் இயந்திர இயக்குநர் (Lathe Machine Operator) தேவை.

077 357 3000



### பிற்போடப்பட்டுள்ளது

இன்று (11.06.2017) ஞாயிற்றுக்கிழமைநீர்வேலி கலைமகள் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெறவிருந்த மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப் பட்டுள்ளது.

கலைமகள் சனசமூக நிலையத்தினர்.

(J/8725)(10)



## IELTS FREE SEMINAR

- IELTS, IELTS A1, B1 கற்பித்தலில் வடமாகாணத்தில் புகழ் பூத்த எமது கல்வி நிறுவனத்தின் 7ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு எதிர்வரும் 17.06.2017 மற்றும் 18.06.2017 ஆம் திகதி காலை 9 தொடக்கம் 11 வரை விசேட கருத்தரங்கு நடைபெறவுள்ளது.
- இதுவரை 1000இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு IELTS கற்பிக்கப்பட்டு ஒரே தரத்தில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்கு பயிற்சிகள் வழங்கப்பட்டது.
- Seminar இல் கலந்து கொள்ளும் மாணவர்கள் வகுப்புகளில் இணையும் பட்சத்தில் பரீட்சைக் கட்டணத்தில் 25% நிறுவனமே செலுத்தும்.
- ஒவ்வொரு மாணவர்கள் மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
- 7வருட காலமாக யாழ். மண்ணின் பிரபல IELTS விரிவுரையாளரான Mrs.R.ANUSHANTHI என்பவரால் கற்பிக்கப்படும்.

மேலதிக விபரங்கள் மற்றும் பதிவுகளுக்கு 076 419 0327/ 077 136 3389

Address : London metropolitan College
No.136,Palaly Road, Parameswara junction, Jaffna.
(ஜினேஸ் பேக்கரி கட்டடத் தொகுதி மேல்மாடி) Ph. Number : 021 753 8395



கனடாவில் நிரந்தர குடியேறல் வேலைவாய்ப்பு|கல்வி கருத்தரங்கு

குறுகிய காலத்தில் கனடா செல்ல

குறைந்த கட்டணத்துடன் சட்டபூர்வமாக குடும்பத்துடன் கனடாவில் குடியேறலாம்

நாள்-11-06-2017
ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி

முற்பதிவு அவசியம்
V2 Travels
0768226236
49 A சப்பல் லேன்
யாழ்ப்பாணம்



### உடனடி வேலைவாய்ப்பு

கடந்த 7வருடகாலமாக யாழ் மாணவர்களின் ஆங்கில புலமைக்கு தன்னிகரில்லா பங்களிப்பு செய்து வரும் எமது கல்வி நிறுவனத்தின் 7ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் மாதம் Dutch, French, Deutsch மொழி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
சர்வதேச மொழி கற்கை நெறிகளை கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை.
தாங்கள் CV இனை expojaffna@yahoo.com ஊடாக அனுப்பவும்.

விண்ணப்ப முடிவுத்திகதி 2017.06.17

உறுதிப்படுத்தல் மற்றும் மேலதிக தகவல்களுக்கு
Director: 077 13 633 89

Address: London metropolitan College
No 136, palaly Road, Parameswara junction jaffna.
(ஜினேஷ் பேக்கரி கட்டடதொகுதி மேல்மாடி)

021 753 8395



## இலவச அழுக்கலை பயிற்சி
(நிபந்தனைக்குட்பட்டது)

நிவித்ரா அழகுக்கலை நிலையத்தின் புதிய இலவச அழகுக்கலை பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன, இப்பயிற்சியில் இணைய விரும்புவோர் எமது அறிமுக வகுப்பில் கலந்து கொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும். உங்கள் விபரங்களை கீழ்வரும் இலக்கத்திற்கு SMS அனுப்பி முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.

**அறிமுக வகுப்பு விவரம்**

திகதி : 20.06.2017(செவ்வாய்க்கிழமை)
நேரம் : 10.00 மணி
இடம் : நிவித்ரா அழகுக்கலை மற்றும் பயிற்சி நிலையம்
இல.340 K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(இலங்கை புத்தகசாலை மற்றும் விஷ்ணுபவன் உணவகத்திற்கு நடுவில்)
தொடர்பு : 077 771 2604

**பயிற்சி நெறி விவரங்கள்**

Basic Certificate Course
Advance in Beauty Threapy & Hair Dressing
Diploma in Beauty Threapy & Hair Dressing
Flower Arrangement Course
Certificate in cake icing
Cookering course



## BBK PARTNERSHIP (PVT)LTD
## VACANCIES
## CUSTOMER CARE ASSISTANTS

Seeking suitable candidates for employment on a full time long term basis for a travel and tourism office in Jaffna operating on a 24/7 basis catering to international clients. Work entails direct worldwide customers' contact through various modes of communication. No previous experience required. Any age will be considered: 18 to 60 Training will be initially provided in colombo. Good spoken and written skills in English and computer literacy is required. Additional ability in European, Arabic, Indian languages is a bonus. Starting monthly salary will be Rs.24,000/= with increments based on performance, rising to above Rs.60,000/= plus bonuses. Should be willing to work on shifts including nights based on roster. Ladies : only day shifts. Please email your detailed CV to :- audrey@bbkca.com not later than 25 June 2017. Shortlisted candidates only will be interviewed 1st by phone and then in person in either of our offices in Colombo, Vavuniya or Jaffna.


# 45ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனை





## திருமதி
## சதாசிவம் இராசலட்சுமி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 21.05.1931 | 28.04.2017 |

இராசலட்சுமி என்னும் இராசகோபுரம்
28.04.2017இல் சிவப்பேறு பெற்ற
திருமதி சதாசிவம் இராசலட்சுமி அம்மையாரின்
45ஆம் நாள் பிரார்த்தனை (11.06.2017)

இராசகோபுரமாய் வானுயர் வாழ்ந்த இராசலட்சுமி
பாசமது துறந்து பரனடியே நினைந்து
பார்நீத்து பரமேஸ்வரனார் தாளினைச் சேர்ந்திட
வாசலிலே வானவரும் நாரதரும் வரவேற்க
வையக வாழ்வது போதுமென்ற நினைவுடனே
நேசமது நிறைந்த சுற்றமெலாம் வணங்கிட
நீறான நாற்பத்தைந்தாம் நாள் பிரார்த்தனை செய்வமே.

குடும்பத்தினர்.

இல.08, மாவடி வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.